# போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு

# 2018 ஆம் ஆண்டின் செயற்பாட்டு அறிக்கை

07 வது மாடி,
செத்சிறிபாய
கட்டம் II
பத்தரமுல்ல

2019 - மே

# தொலைநோக்கு

இலங்கைப் பிராந்தியத்தினுள் முன்னணி பொதுமக்கள் மையப் போக்குவரத்து திட்டத்தினைக் கொண்ட நாடாகத் திகழச் செய்தல்.

# பணிக்கூற்று

பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கு நவீன தொழில்நுட்ப மூலோபாயங்களை உபயோகித்து மிகவும் உயர் போக்குவரத்து உட்கட்டமைப்பு வசதிகளை செயற்படுத்துதல், மேம்பாடு மற்றும் நிலைபேறாக முன்னெடுத்துச் செல்லுதல்.

## உள்ளடக்கம்

### I வது பிரிவு


| | | | |
|---|---|---|---|
| 1. | **அறிமுகம்** | | **13** |
| 2. | **தாபனப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட கடமைப் பொறுப்பு** | | **14** |
| | 2.1 | 2018 ஆம் ஆண்டில் தாபன நிர்வாகப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள். | 14 |
| | 2.2 | உள்ளக தாபனப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள | 17 |
| | | 2.2.1 போக்குவரத்துப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள | 19 |
| | 2.3 | 2018 ஆம் ஆண்டில் காணிப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் | 19 |
| | 2.4 | 2018 ஆம் ஆண்டில் புகையிரத நிர்வாகப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் | 24 |
| | 2.5 | சட்டப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் | 28 |
| | 2.6 | அமைச்சரவைப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் | 29 |
| 3. | **2018 ஆம் ஆண்டில் திட்டமிடல் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள்** | | **31** |
| 4. | **நிதி முகாமைத்துவம் மற்றும் முன்னேற்றம்** | | |
| | 4.1 | கொள்முதல் குழு | 35 |
| | 4.2 | கணக்கு அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் விளைத்திறன் | 35 |
| 5. | **2018 ஆம் ஆண்டில் விமான சேவைகள் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள்** | | **43** |
| 6. | **2018 ஆம் ஆண்டில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் இடம்பெற்ற புலனாய்வுக் கடமைகள் தொடர்பிலான விபரப் பொழிப்பு** | | **46** |
| 7. | **புதிய புகையிரத மேம்பாட்டுப் பிரிவு** | | **47** |
| | 7.1 | மாத்தறை - கதிர்காமம் புதிய புகையிரத வீதி | 48 |
| | | 7.1.1 புகையிரத வீதி நிர்மாணிப்பினூடாக கிடைக்கப் பெற்ற சமூகப் பொருளாதாரப் பயன்கள் | 48 |
| | | 7.1.2 கருத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் | 49 |
| | | 7.1.3 உள்ளூர் நிதியங்களிலிருந்து கருத்திட்டத்தினூடாக இடம்பெற்ற பணிச் செயற்பாடுகள். | 49 |
| | | 7.1.4 நிதிசார் முன்னேற்றம் | 50 |
| | 7.2 | குருனாகல் - கபரண புதிய புகையிரத வீதி | 50 |
| | 7.3 | கொழும்பினை அண்டிய புகையிரதத்தினை மின்சாரப்படுத்தும் கருத்திட்டம் (CSRP) | 51 |
| | 7.4 | கொழும்பினை அண்டிய புகையிரதத்தினை வினைத்திறனாக மேம்படுத்தும் கருத்திட்டம் | 53 |
| | 7.5 | களனிப் பள்ளத்தாக்கு புகையிரத வீதி மேம்பாடு | 55 |
| | 7.6 | GPS தொழில்நுட்பம் பாவிக்கப்படும் புகையிரத செயலியக்கத் தகவல் திட்டத்தினை அமைத்தல் மற்றும் இலங்கை போக்குவரத்து ஆணைக்குழுவின் தகவல் திட்டத்துடன் தொடர்புபடுத்துதல். | 55 |

## II வது பிரிவு


| | | | |
|---|---|---|---|
| **1.** | **இலங்கை புகையிரத திணைக்களம்** | | **58** |
| | 1.1 | அறிமுகம் | 58 |
| | 1.2 | ஒட்டுமொத்த பகுப்பாய்வு | 58 |
| | 1.3 | உட்கட்டமைப்பு வசதிகள் | 60 |
| | | 1.3.1 புகையிரத வீதிகள், கட்டமைப்பு, பாலங்களை மேம்படுத்துதல் | 60 |
| | | 1.3.2 புகையிரத அணி | 61 |
| | | 1.3.3 சைகை மற்றும் தொலைத்தொடர்பாடல் முறைமை | 62 |
| | 1.4 | நிதிசார் முன்னேற்றம் | 62 |
| | 1.5 | சவால்கள் மற்றும் பிரச்சினைகள் | 63 |
| | 1.6 | புகையிரதச் சேவையின் தரம் மற்றும் நம்பக்கதன்மையினை மேம்படுத்துவதற்கு 2018 ஆம் ஆண்டில் அமுலாக்கப்பட்டதும் மற்றும் எதிர்வரும் காலங்களில் அமுலாக்குவதற்கும் எதிர்பார்த்துள்ள செயற்பாடுகள். | 63 |
| **2.** | **மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்** | | **64** |
| | 2.1 | அறிமுகம் | 64 |
| | 2.2 | திணைக்களத்தின் செயற்பாடுகள் | |
| | 2.3 | வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தின் மூலோபாயங்களை அமுலாக்குதலின் முன்னேற்றம் | 66 |
| | | 2.3.1 சாரதிகளை வலுவூட்டும் புள்ளி வழங்கும் திட்டத்தினை அமுலாக்குதல். | 66 |
| | | 2.3.2 ஈ - மோட்டரிங் கருத்திட்டம் | 67 |
| | 2.4 | பாதீட்டு ஒதுக்கீடுகளின் கீழ் அமுலாக்கப்பட்டு வரும் மூலதனக் கருத்திட்டங்களின் முன்னேற்றம், | 68 |
| | 2.5 | 2018 ஆம் ஆண்டின் செயற்திறன் | 69 |
| | 2.6 | 2018 ஆம் ஆண்டு தொடர்பில் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் மற்றும் உண்மையான வருமானம் | 70 |
| | 2.7 | 2019 ஆம் ஆண்டின் எதிர்பார்ப்புக்கள் | 71 |
| **3.** | **இலங்கை போக்குவரத்துச் சபை** | | **72** |
| | 3.1 | அறிமுகம் | 72 |
| | 3.2 | 2018 ஆம் ஆண்டில் பேருந்துக்களின் ஓட்டத்தினூடாக பெற்றுக் கொண்ட முன்னேற்றம் | 72 |
| | 3.3 | சமூகப் பயன்கள் தொடர்பில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பங்களிப்பு | 72 |
| | 3.4 | செயற்பாட்டு நிலைமை | 74 |
| | 3.5 | 2018 ஆம் ஆண்டில் சேவைகள் வழங்குவதை மேம்படுத்துவதற்கென உபயோகிக்கப்பட்ட புதிய கொள்ளைகள் மற்றும் நடவடிக்கைகள் | 74 |
| | 3.6 | நிதிசார் முன்னேற்றம் | 75 |
| | 3.7 | 2018 ஆம் ஆண்டில் பேருந்து அணியினை மேம்படுத்துதல் மற்றும் பேரூந்துக்களினைப் புனரமைத்தல். | 76 |
| | 3.8 | உட்கட்டமைப்பு வசதிகள் | 76 |
| | 3.9 | பிற அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள். | 77 |
| | 3.10 | 2018 இரண்டாவது அரையாண்டு மற்றும் 2019 ஆம் ஆண்டினுள் உத்தேசிக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் | 78 |

| | | |
|---|---|---|
| **4.** | **தேசியப் போக்குவரத்து ஆணைக்குழு** | **81** |
| 4.1 | அறிமுகம் | 81 |
| 4.2 | தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுவின் செயற்பாடுகள் மற்றும் அதன் முன்னேற்றம். | 81 |
| 4.3 | 2018 ஆம் ஆண்டில் கருத்திட்டங்களை அமுலாக்கிய வேளையில் முகங்கொடுத்துள்ள சவால்கள் | 89 |
| 4.4 | 2019 ஆம் ஆண்டின் எதிர்பார்ப்புக்கள் | 90 |
| **5.** | **தேசியப் போக்குவரத்து மருத்துவ நிறுவனம்** | **91** |
| 5.1 | அறிமுகம் | 91 |
| 5.2 | நோக்கங்கள் | 91 |
| 5.3 | நிறுவனத்தின் செயற்பாடுகள் | 91 |
| 5.4 | தற்போதைய செயற்திறன் | 92 |
| 5.5 | பிற அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | 93 |
| 5.6 | நிறுவனத்தின் நிதிசார் முன்னேற்றம் | 94 |
| 5.7 | 2018 ஆம் ஆண்டில் கருத்திட்டங்களை அமுலாக்கியவேளையில் 93முகங்கொடுத்துள்ள சவால்கள் | 94 |
| 5.8 | 2019 ஆம் ஆண்டின் எதிர்பார்ப்புக்கள் | 94 |
| **6.** | **இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை** | **96** |
| 6.1 | அறிமுகம் | 96 |
| 6.2 | செயற்திறன் - 2018 | 96 |
| | 6.2.1 இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் தொழில்நுட்பப் பிரிவுகள் | 96 |
| | 6.2.2 இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் தொழில்நுட்பம் சாரா பிரிவுகள் | 102 |
| | 6.2.3 இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் அலகுகள் | 104 |
| 6.3 | தற்போதைய நலன்புரிச் செயற்பாடுகள் | 108 |
| 6.4 | நிதிக் கூற்றுக்களைப் பகுப்பாய்வு செய்தல் | 109 |
| **7.** | **வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி** | **110** |
| 7.1 | அறிமுகம் | 110 |
| 7.2 | நிறுவனம்சார் செயற்பாடுகள் | 110 |
| 7.3 | 2018 ஆம் ஆண்டில் விமான நிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனியின் பௌதிக மற்றும் நிதிசார் முன்னேற்றம். | 110 |
| | 7.3.1 பௌதிக முன்னேற்றம் | 110 |
| | 7.3.1.1 பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் விமான நடமாட்டங்கள் | 110 |
| | 7.3.1.2 மத்தளை ராஜபக்ச சர்வதேச விமான நிலையத்தின் விமான நடமாட்டங்கள் | 110 |
| | 7.3.1.3 மட்டக்களப்பு விமான நிலையத்தினை மீளவும் அங்குரார்ப்பணஞ் செய்தல். | 111 |
| | 7.3.1.4 விமானப் போக்குவரத்து பொறியியல் கருத்திட்டம் | 111 |
| | 7.3.1.5 2030 ஆம் ஆண்டு வரைக்குமான இரத்மலான விமான நிலையத்தின் பிரதான திட்டம். | 112 |
| | 7.3.1.6 பயணிகளுக்கான அவசர பின்தொடர் திட்டம் மற்றும் முறைப்பாட்டு முகாமைத் திட்டம் | 113 |

7.3.1.7 சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்பின் பாதுகாப்புக் கண்காணிப்பு ஆய்வு 113
7.3.1.8 விமானப் போக்குவரத்து முகாமைப் பயிற்சி வசதிகளை மேம்படுத்துதல் 113
7.3.1.9 விமான நிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனியின் 35 வது ஆண்டு நிறைவு 114
7.3.1.10 புதிய விமான நிறுவனங்கள் சேவைகளை ஆரம்பித்தல் 114
7.3.1.11 அடிப்படையற்ற வியாபாரச் செயற்பாடுகளை வெளியாருக்கு வழங்குதல் 114
7.3.1.12 பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலுள்ள சுற்றுலாத் தகவல் நிலையத்தினை புனரமைத்தல் 115
7.3.1.13 2018 ஆம் ஆண்டில் வர்த்தகச் சிறப்பு வெள்ளி பதக்கங்களை வென்றெடுத்தல். 115
7.4 2018 ஆம் ஆண்டில் அமுலாக்கப்பட்ட கருத்திட்டங்கள் 115
7.4.1 பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் இரண்டாவது விமானப் பயணிகள் முனையக் கருத்திட்டம் 115
7.4.2 விமான நிலைய விடுதி 116
7.4.3 பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலுள்ள விமானப் பயணிகளின் முனையக் கட்டிடத்தினை (PTB) மீளமைத்தல் மற்றும் அதன் கட்டமைப்பினை மீளவும் புனரமைத்தல் 116
7.5 2018 ஜனவரி தொடக்கம் திசம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதி தொடர்பில் நிறுவனத்தின் நிதிசார் முன்னேற்றம் 117

**8. வரையறுக்கப்பட்ட லக்திவ பொறியியல் பிரத்தியேக நிறுவனம் 118**
8.1 அறிமுகம் 118
8.2 2018 ஆம் ஆண்டில் நிறுவனம் பெற்றுக் கொண்ட முன்னேற்றம் (பௌதிக மற்றும் நிதிசார்) 118
8.3 2018 ஆம் ஆண்டின் நிறுவனத்தின் செயற்திறன் 118
8.4 முன்னேற்றம் 119
8.5 2019 ஆம் ஆண்டில் முன்னெடுப்பதற்கு எதிர்பார்த்துள்ள கருத்திட்டங்கள் 119

**9. வீதிப் பாதுகாப்புத் தொடர்பிலான தேசிய சபை 120**
9.1 வீதிப் பாதுகாப்பு தொடர்பிலான தேசிய சபையின் நோக்கங்கள் 120
9.2 வீதிப் பாதுகாப்பு தொடர்பிலான தேசிய சபையின் பணிகள் மற்றும் அதிகாரங்கள் 120
9.3 2018 ஆம் ஆண்டில் வீதிப் பாதுகாப்பு தொடர்பிலான தேசிய சபையின் செயற்பாடுகள் 121

# I வது பிரிவு

## அமைச்சின் செயற்பாடு

## 1. அறிமுகம்

நாடொன்றின் அபிவிருத்தி என்பது அந்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தினை நிலைபேறாக உயர் மட்டத்தில் முன்னெடுத்துச் செல்லுதல் என இனங்காணப்பட்டுள்ளது. வாழ்க்கைத் தரத்தினை உயர் மட்டத்தில் முன்னெடுத்துச் செல்லுவதற்கு அவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு பொருத்தமான வாய்ப்புக்கள் பொருளாதாரத்தினூடாக உதயமாகுதல் வேண்டும். இந்த அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் பொறிமுறையின் வினைத்திறனினைத் தீர்மானிப்பதில் பிரதான சாதனமொன்றாகவிருப்பது அந்நாட்டின் போக்குவரத்துத் துறையாகும். இவ்வாறு நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் மீது நேரடியாகச் செல்வாக்குச் செலுத்தும் போக்குவரத்தினை, மக்கள் நட்புடன் முன்னெடுத்துச் செல்லுதல். பொதுமக்களுக்கு மிகவும் அருகிலுள்ள அமைச்சொன்றான போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அடிப்படைப் பொறுப்பாகும்.

இப் பொறுப்பினை நன்கு புரிந்து கொண்டுள்ள போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு, பிரத்தியேக மற்றும் பொதுப் போக்குவரத்து ஊடகங்களை மக்களுக்குச் சாதகமான வகையில் கையாளுவதற்கு கொள்கைகளைத் திட்டமிடுதல், கருத்திட்டங்களை அறிமுகம் செய்தல், செயலாக்குதல் மற்றும் பின்னூட்டதலினூடாக போக்குவரத்துத் துறையின் நோக்கங்களை விளைத்திறனாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கின்றது. குறிப்பாக, வீதியோரப் பயணிகள் போக்குவரத்து துறையில் பேரூந்துப் பயணிகள் போக்குவரத்துப் பிரிவு கீழ்நோக்கிச் செல்லும் சவாலுக்கு முகங்கொடுப்பதற்கு புகையிரதத் திணைக்களம் மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபையினை வலுப்படுத்தும் பல சாதகமான நடவடிக்கைகள் இதுவரை அமுலாக்கப்பட்டுள்ளது. அதேபோல அன்றாடம் அதிகரித்து வரும் வீதியோர விபத்துக்களை குறைப்பதற்கும், விமானப் பயணிகளுக்குப் பாதுகாப்பினை ஏற்படுத்துவதற்கும் பல்வேறான நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளன.

நம்பகம், தரம் மற்றும் சொகுசு வசதிகள் போன்ற தரநிலைகளை முன்னெடுத்து உயர் உற்பத்தித்திறன், விளைத்திறனான வளப்பயன்பாடு, உயர் சேவையினை பாதுகாப்பதனூடாக சமூகப் பயன்களினை பொதுமக்களுக்கு பெற்றுக் கொள்ளக்கூடிய போக்குவரத்துச் சேவையொன்றினை நிறுவுவதற்கு போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு, பல்வேறான நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குவதுடன், 2018 ஆம் ஆண்டில் அமுலாக்கப்பட்டுள்ள அவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்கள், இச் செயற்பாட்டு அறிக்கையினூடாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

## 2. தாபனப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட கடமைப் பொறுப்பு

**2.1 2018 ஆம் ஆண்டில் தாபன நிர்வாகப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள்.**
தாபன நிர்வாகப் பிரிவுக்கு, 2018 ஆம் ஆண்டில் சுமார் 2,500 கடிதங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், அது தொடர்பில் உரிய நிறுவனங்களுக்கு முன்வைத்து தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

I. மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்திற்கான நிறுவனம்சார் செயற்பாடுகள் மற்றும் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள் சரியான வகையில் இடம்பெற்றுள்ளதுடன், பின்வரும் செயற்பாடுகள் பிரதானமாக இடம்பெற்றுள்ளது.

- ➢ மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் மோட்டார் வாகனப் பரிசோதகர் பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கும் மற்றும் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் விசேட தரத்தின் மோட்டார் வாகனப் பரிசோதகர் பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- ➢ மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தில் கடமையாற்றும் திணைக்களம்சார் நியமனத்தினைப் பெற்றுள்ள சகல உத்தியோகத்தர்களினை இணைந்த சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்தல் தொடர்பில் அவ் உத்தியோகத்தர்களினால் நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதால் தற்காலிகமாக அச்செயற்பாடுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

- ➢ வாகன உமிழ்வு நம்பிக்கை நிதியத்தினை மூடுவதற்கு நிதி அமைச்சினால் சுற்றுநிரூபமொன்று வெளியிடப்பட்டுள்ளதுடன், அந்நிதியத்தினை மீளவும் அமைப்பதற்கு அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

- ➢ சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கான செய்முறைப் பரீட்சையினை வெளி நபர்களைக் கொண்டு நிறைவேற்றுவதற்குப் பொருத்தமான நபர்களை அடையாளங்காணுதல் தொடர்பில் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்டுள்ளதுடன், அது தொடர்பில் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அக்கருத்திட்டத்தினை அமுலாக்கும் முறைமை அமைச்சரவைக் குறிப்பொன்றினூடாக அமைச்சரவைக்கு முன்வைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அம்முறைமைக்கு எதிராக இது வரையில் நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

II. 2018 ஆம் ஆண்டில் இலங்கை போக்குவரத்துச் சபையுடன் தொடர்பான நிறுவனம்சார் செயற்பாடுகள் மற்றும் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள் சரியானவாறு முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், பின்வரும் செயற்பாடுகள் பிரதானமாக இடம்பெற்றுள்ளது.

- ➢ இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கான வர்த்தகத் திட்டத்தினைத் தயாரிப்பதற்கு மூலோபாய தொழில் முனைவோர் நிறுவனத்திற்கு (SEMA) கையளிக்கப்பட்டுள்ளதுடன், அது தயாரிக்கப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

- ➢ இலங்கை போக்குவரத்துச் சபையின் ஆட்சேர்ப்புத் திட்டம் தொடர்பில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் மற்றும் தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆளணிக் குழுவுடன் கலந்துரையாடி முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிரூப இலக்கம் 30 இல் குறிப்பிடப்பட்ட சம்பளக் கட்டமைப்பின் பிரகாரம், ஆரம்ப மட்ட தரத்தின்

பதவிகளினை (PL 1, PL 2, PL 3) அடிப்படையாகக் கொண்டு 2018.10.01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிரூபம் 02/2016 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படுத்துவற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

- இலங்கை போக்குவரத்துச் சபைக்கான சம்பளக் கட்டமைப்பினை 04 மாத காலப்பகுதியினுள் தயாரிப்பதற்கு ஆலோசகராக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன்னைநாள் பணிப்பாளராகிய திரு. வீ.டபிள்யு. தனசேன அவர்கள் 2018.10.12 ஆந் திகதி நியமிக்கப்பட்டுள்ளார்.

- இலங்கைப்போக்குவரத்துச்சபையின்மக்களுக்கு உரித்தானபேரூந்துநிறுவனங்களில் கடமைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பங்குகள் தொடர்பில் இழப்பீட்டு நிதியினை வழங்குவதற்கென அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று முன்வைக்கப்பட்டுள்ளதுடன், 2017.12.12 ஆந் திகதி அமைச்சரவைத் தீர்மானம் கிடைக்கப் பெற்றுள்ளது. அவ் அமைச்சரவை தீர்மானத்தினூடாக அறிவிக்கப்பட்ட அறிக்கை மற்றும் பங்கு உரிமையாளர்களின் பெயர்பட்டியல் 2018.09.13 ஆந் திகதி அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

- இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குத் தேவையான கனிய வளங்கள், சட்டரீதியான கூட்டுதாபனங்களிலிருந்து கொள்வனவு செய்யப்படும் எரிபொருள்களுக்கு 3% கழிவினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று முன்வைக்கப்பட்டது.

- இலங்கைப் போக்குவரத்துச் சபையின் டிப்போக்களில் உடைந்துபோன உதிரிப்பாகங்களை விற்பனை செய்வதற்கு அமைச்சின் பிரதிநிதியொருவரினை வழங்குதல்.

- இலங்கை போக்குவரத்துச் சபை தொடர்பில் கிடைக்கப் பெறும் முறைப்பாடுகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் தேவையான மேல் நடவடிக்கைகளை எடுத்தல்.

- யூலை பணிப் பகிஸ்கரிப்பு தொடர்பில் நிவாரணம் வழங்குவதற்கு ஊழியர் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு தலையிட்டு நடவடிக்கை எடுத்தல்.

III. 2018 ஆம் ஆண்டில் தேசியப் போக்குவரத்து மருத்துவ நிறுவனத்துடன் தொடர்பான செயற்பாடுகள் மற்றும் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள் சரியானவாறு இடம்பெற்றுள்ளதுடன், பின்வரும் செயற்பாடுகள் பிரதானமாக இடம்பெற்றுள்ளது.

- தேசியப் போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தின் பதவியணியினர் 2017.11.23 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், நிறுவனத்தின் ஆட்சேர்ப்புத் திட்டத்தினை அங்கீகரிக்கும் செயற்பாடுகள் இந்நாட்களில் இடம்பெற்று வருகின்றது.

- வரையறுக்கப்பட்ட பயிற்சியினை நிறைவு செய்துள்ள மருத்துவர்களினை, தேசியப் போக்குவத்து மருத்துவ நிறுவனத்தின் சேவைக்கு அனுப்புவதற்கு அமைச்சரவைக் குறிப்பு முன்வைக்கப்பட்டுள்ளது. அதன்பிரகாரம், சுகாதார அமைச்சின் மருத்துவர்களின் யாப்பினை ஆய்வு செய்து தேசியப் போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தின் மருத்துவர்கள் தொடர்பில் உன்னதமான யாப்பொன்றினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன.

- நிபுணத்துவம் பெற்ற மருத்துவர் ஒருவர், 60 வயதினைப் பூர்த்தி செய்துள்ள மருத்துவர்கள் மற்றும் 60 வயதினைப் பூர்த்தி செய்துள்ள மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்ப நிபுணர்களினை 2019 ஆம் ஆண்டு தொடர்பில் தேசியப் போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தின் சேவைக்கு ஈடுபடுத்துவதை ஒரு வருடத்திற்கு நீடிப்புச் செய்வதற்கு அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றினை முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

IV. லக்திவ பொறியியல் பிரத்தியேக நிறுவனத்துடன் தொடர்பான நிறுவனம்சார் செயற்பாடுகள் மற்றும் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள் சரியானவாறு இடம்பெற்றுள்ளதுடன், பின்வரும் செயற்பாடுகள் பிரதானமாக இடம்பெற்றுள்ளது.

- நிறுவனத்தின் அமைப்புக் கட்டமைப்பு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினூடாக அங்கீகரித்துக் கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன். உரிய ஆட்சேர்ப்புத் திட்டம் தொடர்பில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளுவதற்கு எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும்.

- வரையறுக்கப்பட்ட லக்திவ பொறியியல் (பிரத்தியேக) நிறுவனத்தின் செயற்பாடுகளை முறைசார் வகையில் முன்னெடுத்துச் செல்லுவதற்கு வெற்றிடம் நிலவும் சில பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

V. 2018 ஆம் ஆண்டின் வீதிப் பாதுகாப்புத் தொடர்பிலான தேசிய சபையுடன் தொடர்பான நிறுவனம்சார் செயற்பாடுகள் மற்றும் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள் சரியானவாறு இடம்பெற்றுள்ளதுடன் பின்னரும் செயற்பாடுகள் பிரதானமாக இடம்பெற்றுள்ளது.

- வீதிப் பாதுகாப்புத் தொடர்பிலான தேசிய சபையின் 2018 செயற்பாட்டுத் திட்டத்துடன் தொடர்பான வாகன விபத்துக்கள், வீதி விபத்துக்களினைத் தடுப்பதற்கு நாடுதழுவிய விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு அங்கீகாரத்தினை வழங்குதல்.

- வீதிப் பாதுகாப்புத் தொடர்பிலான தேசிய சபையினை ஆணைக்குழுவாக நியமிக்கும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றது.

- வீதிப் பாதுகாப்புத் தொடர்பிலான தேசிய சபை தொடர்பில் தரவுத் திட்டமொன்றினை தயாரிக்கும் செயற்பாடுகளினை, மொரட்டுவப் பல்கலைக்கழத்துடன் இணைந்து முன்னெடுத்துச் செல்லுதல்.

VI. 2018 ஆம் ஆண்டில் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் உத்தியோகத்தர்களினால் வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்கள் தொடர்பிலான முன்னேற்றம் பின்வருமாறு.

| | பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | கலந்துகொண்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| வெளிநாடு | 27 | 36 |
| உள்நாடு | 22 | 91 |

## 2.2 உள்ளக நிர்வாகப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள்.

| நிகழ்ச்சித் திட்டம் | செயற்பாடுகள் |
|---|---|
| 01. அன்றாடக் கடிதங்களைப் பேணுதல். | i. கடிதங்களினைக் கையேற்றல் மற்றும் பகிர்ந்தளித்தல்.<br>ii. முத்திரை எந்திரத்தினைப் பேணுதல். |
| 02. பிரத்தியேகக் கோவையினை பேணுதல். | i. சம்பள ஏற்றங்களை வழங்குதல்.<br>சிரேஸ்ட நிலைமட்டம் - 28<br>மூன்றாம்நிலை மட்டம் - 05<br>இரண்டாம்நிலை மட்டம் - 108<br>ஆரம்பநிலை மட்டம் - 45<br>ii. 2019.01.01 ஆந் திகதிக்கு மேற்குறிப்பிட்ட 186 உத்தியோகத்தர்கள் தொடர்பில் சம்பள மாற்றங்களைச் செய்தல்.<br>iii. இளைப்பாறுதல் மற்றும் இடமாற்றங்கள்<br>iv. சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பிரகடனங்கள்<br>v. வினைத்திறன் காண் தடை பரீட்சையினை நடாத்துதல்.<br>➢ சாரதிகள் தொடர்பிலான இரண்டாவது மற்றும் மூன்றாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சையும்<br>➢ அலுவலகப் பணியாளர் தொடர்பில் மூன்றாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையும் நடாத்தப்பட்டது. |
| 03. அக்ரகார காப்புறுதிச் செயற்பாடுகள். | i. அக்ரகார காப்புறுதிக் காப்பீட்டின் அங்கத்துவத்தினை வழங்குதல்.<br>ii. பயன்களைப் பெற்றுக் கொள்ளுவதற்கு கோரிக்கை விடுவித்தல். |
| 04. பற்றுச்சீட்டுக்களைச் செலுத்துதல். | i. தொலைபேசி, நீர், மின்சாரம், சுத்தஞ் செய்தல், செய்திப் பத்திரிகைகள் போன்ற பற்றுச்சீட்டுக்களுக்கான கொடுப்பனவு தொடர்பிலான செயற்பாடுகள் |
| 05. அடையாள அட்டைகள் மற்றும் பிரயாணச் சீட்டுக்கள் | i. ஊழியர் அடையாள அட்டைகள்<br>ii. இலவச பிரயாணச் சீட்டுக்கள்<br>iii. புகையிரத பருவகாலச் சீட்டுக்கள்<br>} சகல பதவயணிக்கும்வழஙகப்பட்டு ள்ளது |
| 06. விடுமுறை தொடர்பிலான செயற்பாடுகள். | i. விடுமுறை பதிவேட்டினை நாளதுவரைப்படுத்துதல்.<br>ii. மேலதிக நேர, பிரயாணச் செலவுகள், விடுமுறைப் புகையிரத ஆணைச்சீட்டுக்கள்.<br>iii. வெளிநாட்டு விடுமுறைகள் |
| 07. சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப் பத்திரங்களை வழங்குதல். | 88 அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. |

| நிகழ்ச்சித் திட்டம் | செயற்பாடுகள் |
|---|---|
| 08. கூட்டங்கள் மற்றும் வைபவத்தினை ஒருங்கிணைத்தல். | i. நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்களுக்கான கூட்டங்களை நடாத்துதல் - இதுவரை மாதாந்தோறும் நடாத்தப்பட்டுள்ளது.<br>ii. பிற கூட்டங்கள் மற்றும் வைபவத்தினை நடாத்துதல். |
| 09. தகவல் சட்டத்துடன் தொடர்பான செயற்பாடுகளை நிறைவேற்றுதல். | i. தகவல் கோரிக்கைகளைப் பதிவு செய்தல் - 102<br>ii. தகவல்களை வழங்குதல் - 63<br>iii. நிராகரித்தல் - 14<br>iv. பிற நிறுவனங்களுக்கு முன்வைத்தல் - 18<br>v. நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் - 07 |
| 10. அமைச்சின் பதவியணியினரின் தகவல்கள் | i. பதவியணியினரின் தகவல்களை நாளதுவரைப்படுத்துதல்<br>- மாதாந்தம் நாளதுவரைப்படுத்தப்படுகிறது.<br>- காலாண்டுக்கு ஒரு தடைவை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்படுகிறது.<br>ii. பதவிகளை அங்கீகரித்துக் கொள்ளுதல் - தேவையானவாறு இடம்பெற்றுவருகிறது. |
| 11. ஊழியர்களுக்குக் கடன்களை வழங்குதல். | i. இடர் கடன்<br>- கோரிக்கைப் படிவங்களின் எண்ணிக்கை - 102<br>- வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை - 59<br>- நிராகரிப்பு - 06<br>- நடவடிக்கை எடுக்கப்பட்டுவரும் - 37<br>ii. பண்டிகை முற்பணம், ஆதனக் கடன், விசேட முற்பணம். |
| 12. அமைச்சின் கீழுள்ள புகையிரதக் கருத்திட்டங்களின் ஆட்சேர்ப்புச் செயற்பாடுகளை முன்னெடுத்தல். | ➢ குருனாகல் ஹபரண புகையிரதக் கருத்திட்டத்தின் 03 பதவிகள் தொடர்பில் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், 5 பதவிகளுக்கு நேர்முகப் பரீட்சையினை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது<br>➢ கொழும்பினை அண்டிய புகையிரதக் கருத்திட்டம் தொடர்பில் 17 பதவிகளுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளது. |
| 13. புகையிரத சுற்றுலா விடுதிகளை ஒதுக்குதல். | கிடைக்கும் வேண்டுகோள்களுக்கமைய புகையிரதத் திணைக்களத்திற்கு உரித்தான சுற்றுலா விடுதிகளை ஒதுக்குதல் மற்றும் அது தொடர்பில் நிதியினை அறவிடுதல். |
| 14. தேர்தல் நடவடிக்கைகள் | தேர்தல் தொகை மதிப்பீடு தொடர்பிலான வேண்டுகோள் படிவங்களை தேர்தல்கள் திணைக்களத்திற்கு அனுப்புதல். |
| 15. கௌரவ அமைச்சர் மற்றும் கௌரவ பிரதியமைச்சரின் பதவியணியினர் தொடர்பான செயற்பாடுகள். | i. கௌரவ அமைச்சர் மற்றும் கௌரவர பிரதி அமைச்சரின் பதவியணியினரினை நியமித்தல், சேவையினை முடிவுறுத்துதல், சம்பள மாற்றச் செயற்பாடுகள்.<br>ii. ஊழியர் சேமலாப நிதியினைப் பெற்றுக் கொள்ளுவதற்குத் தேவையான நிறுவனம்சார் செயற்பாடுகள். |
| 16. வெளி நிறுவனங்களுடனான தொடர்புகள். | i. பல்வேறு துறைகளுடன் தொடர்புபட்ட வெளி நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.<br>ii. வெளி நிறுவனங்கள் தெரிவிக்கும் விடயங்கள் தொடர்பில் அமைச்சினை விழிப்புணர்வூட்டுதல். |

**2.2.1 போக்குவரத்துப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள்.**

- 2018 ஆம் ஆண்டில் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சுக்கு 71 வாகனங்களினைக் கொண்ட ஊர்தி அணியொன்று காணப்படுதல்.
- அந்த ஊர்தி அணியில் 2018 ஆம் ஆண்டில் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் கீழ் காணப்பட்ட வாகனங்கள் பின்வரும் முறையில் பல்வேறு நிறுவனங்களின் வேண்டுகோளுக்கமைய அந்நிறுவனங்களுக்கு உரிமையினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

| தொடர் இல. | ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் நிறுவனம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | இலங்கைப் போக்குவரத்துச் சபை | 02 (GQ-9674, JX-9999) |
| 2 | புகையிரதத் திணைக்களம் | 01 (GC-0341) |
| 3 | லக்திவ பொறியியல் நிறுவனம் | 02 (PB-3851, KH-7216) |
| 4 | ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம் | 01 (KA-6798) |

- அவ் ஊர்தி அணியில் 2018 ஆம் ஆண்டில் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் கீழுள்ள வாகனங்கள், பின்வருமாறு காடட்டப்பட்டுள்ள முறையில் பல்வேறு நிறுவனங்களின் வேண்டுகோளின் பிரகாரம் அந்நிறுவனங்களுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது.

| தொடர் இல. | ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் நிறுவனம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | இலங்கைப் போக்குவரத்துச் சபை | 01 (KA-6098) |
| 2 | இரத்தினபுரி மாவட்டச் செயலகம் | 01 (57-8178) |
| 3 | லக்திவ பொறியியல் நிறுவனம் | 02 (201-6138, YR-0224) |
| 4 | துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சு | 01 (KR-5682) |

- 11 வாகனங்களின் உரிமையினை ஒப்படைத்ததன் பின்னர் அமைச்சின் மொத்த ஊர்தி அணி 2019 ஆம் ஆண்டில் 60 ஆகும்.

- 2018 ஆம் ஆண்டில் அமைச்சுக்கு உரித்தான 11 வாகனங்கள் திடீர் விபத்துக்கு உட்பட்டு பழுதுபார்க்கப்பட்டுள்ளது. அந்த திடீர் விபத்துத் தொடர்பில் நி.பி. 104 இன் பிரகாரம் புலனாய்வுகள் இடம்பெற்று வருகிறது.

- 2017 ஆம் ஆண்டில் இடம்பெற்ற 9 திடீர் விபத்துக்களில் 7 விபத்துக்களின் புலனாய்வுச் செயற்பாடுகள் நிறைவு பெற்றுள்ளன.

**2.3 2018 ஆம் ஆண்டில் காணிப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள்.**

**01. புகையிரதத் திணைக்களத்திற்கு உரித்தான புகையிரத ஒதுக்கு நிலங்கள் தொடர்பிலான செயற்பாடுகள்.**

**i. புகையிரத ஒதுக்கு நிலங்களின் நிர்வாகச் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணித்தல்.**

புகையிரதத் திணைக்களத்திற்கு உரித்தான மொத்த புகையிரத ஒதுக்கு நிலங்களின் அளவு அண்ணளவாக 14,129 ஏக்கர் என்பதுடன், அதில் 8,756 ஏக்கர் வரையில் புகையிரத நிலையங்கள், வீதிகள், ஓடுபாதைகள், அலுவலகங்கள் மற்றும் திணைக்களத்தின் ஏனைய சேவைகளுக்கு 5,364 ஏக்கர் தீர்வை அடிப்படையின் கீழ் வழங்கக்கூடிய புகையிரத ஒதுக்கங்கள் என இனங்காணப்பட்டுள்ளன. எனினும் முறைசார் தீர்வையின் கீழ் பல்வேறான பங்குதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிலத்தின் அளவு 10% வரை மிகவும் குறைந்த சதவீதமாகும் என்பதுடன், பாரிய புகையிரத ஒதுக்கிடங்கள் சட்டவிரோதப் பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டுள்ளது, இச்சட்டவிரோதப் பயன்பாட்டாளர்களில் பெரும்பாலானோர் சாதாரண மக்களாவர்.

புகையிரத ஒதுக்கு இடங்கள் தொடர்பிலான வருடாந்த தீர்வை வருமானச் சேகரிப்பு ஒப்பீட்டளவில் குறைவான பெறுமதி நிலவுவதாக அவதானிக்கப்பட்டதன் கீழ் தீர்வைக்கு வழங்குதல் மற்றும் நிலுவைத் தீர்வைகளை சேகரிக்கும் திட்டத்தினை ஆய்வு செய்வதற்கு அமைச்சு கவனஞ் செலுத்தியுள்ளது. அதன் ஆய்வில் வணிக அதிகார சபையின் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் கடிதக் கோகைளின் தரவுகள், ICTA நிறுவனத்தினூடாக அறிமுகஞ் செய்யப்பட்ட கணனித் தரவுத் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது என அறிக்கையிடப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டில் புகையிரத வீதிகளினை கவனத்திற் கொண்டு இடம்பெற்ற இந்த ஆய்வில் மாவட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு காணப்படும் புகையிரத ஒதுக்கங்கள் மற்றும் அவ்வேளை 8,897 கோவைகள் தரவுகளினை உள்ளடக்கியபோதும் அதன் தரவுகள் நாளது வரைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

வர்த்தக அதிகார சபையிலிருந்து வழங்கப்பட்ட தரவுகளின் பிரகாரம் கோவைகளின் எண்ணிக்கை 5,977 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் 735 கோவைகள் வரி வழங்கப்பட்டது எனவும், 5,242 கோவைகள் வரி வழங்கப்படவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளது. இதில் ICTA கணனி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் வர்த்தக அதிகார சபையினூடாக வழங்கப்பட்ட தரவுகள் முரண்படுவதாகவும் அவதானிக்கப்பட்டது.

எனவே சட்டவிரோதத்தினை ஒழுங்குமுறை செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பயன்பாட்டாளர்களை இனங்காணும்போது இத் தரவுகளை நாளதுவரைப்படுத்துதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ii. **ஒப்பந்தத்தினைக் கொண்ட தீர்வை இடங்களின் நிலுவைத் தீர்வைகளை அறவீடு செய்வதை ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணித்தல்.**

மேற்குறிப்பிட்ட தீர்வை வழங்கப்படவில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ள 5,242 கோவைகளுடன் தொடர்பான நிலுவைகளை அறவீடு செய்வதை துரிதப்படுத்துவதற்கு 2018 பெப்ரவரி மாதம் கௌரவ அமைச்சர் மற்றும் செயலாளர் வழங்கிய ஆலோசனைகளின் கீழ் அமைச்சின் கண்காணிப்பின் கீழ் நிகழ்ச்சித் திட்டமொன்று அமுலாக்கப்பட்டது. அதில் அடிப்படைப் பகுதிகள் 03 (விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள், கிளைத் தலைவர்கள், உதவி வர்த்தக அத்தியட்சகர்கள்) இன் கீழ் பொறுப்பு ஒப்படைக்கப்படுவதற்கு இந்நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், 2018 மார்ச் மாதத்திலிருந்து மாவட்ட மட்டத்தில் நடமாடும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தி ரூபா. 12 மில்லியன் நிதி, நிலுவைத் தீர்வையாக அறவீடு செய்யப்பட்டுள்ளது.

அதற்கு மேலாக புகையிரத ஒதுக்கிடங்களைப் பயன்படுத்துவது தொடர்பில் அரச மற்றும் அரசுடன் இணைந்த நிறுவனங்களிடமிருந்து ரூபா. 493,033,577.01 நிதி அறவிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அந்த நிலுவை நிதியினை அறவிடுவதற்கு உரிய நிறுவனங்களின் உத்தியோகத்தர்களினை அழைத்து கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன. அக்கலந்துரையாடல்களில் வழங்கப்பட்ட

தீர்மானங்களின் பிரகாரம், புகையிரதத் திணைக்களத்தினால் நிலுவை நிதியினை அறவீடு செய்யும் மேல் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகிறது.

iii. **அரச மற்றும் அரசுடன் இணைந்த அல்லது பிற பங்குதாரர்களுக்கு புகையிரத ஒதுக்கங்களை விடுவித்தல் மற்றும் கையகப்படுத்துவற்கான செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணித்தல்.**

- ரஜரட்ட நவோதய - “பிபிதெமு பொலன்னறுவை” அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் நிதி நிலையத்தினை நிர்மாணிக்கும் கருத்திட்டத்திற்கு புகையிரத ஒதுக்கு இடங்களை விடுவித்தல்.

- நகர மறுமலர்ச்சி கருத்திட்டத்தின் கீழ் புகையிரத ஒதுக்கு இடங்களை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்குதல்.
  - 537 வத்த (தெமட்டகொட பொலிஸ் நிலையத்திற்கு எதிராக)
  - மாளிகாவத்த ஸ்ரீ சத்தர்ம மாவத்தையின் ஆரம்பத் திட்டம் கொழும்பு 9219 துண்டு இலக்கம் (1.3145 ஹெக்டயர்) மற்றும் ஆரம்பத் திட்டம் கொழும்பு 9294 (2.8390 ஹெக்டயர்)

- தாமரைக் கோபுரத் திட்டம் புகையிரத ஒதுக்கு இடங்களை விடுவித்தல்.

iv. **சட்டவிரோத பயன்பாட்டாளர்களை ஒழுங்குபடுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தீர்வை வழங்குதை ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணித்தல்.**

- புகையிரத ஒதுக்கங்கள் பாரியளவில் சட்டவிரோதப் பயன்பாட்டிற்கு உட்பட்டமையின் காரணத்தினால் திணைக்களத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானம் கிடைக்காமைக்கான தீர்வொன்றாக அரசுக்கு கிடைக்க வேண்டிய தீர்வைகளை அறவிடும் நோக்கத்தின் ஆரம்பமொன்றாக பொலன்னறுவை மற்றும் பதுளை மாவட்டங்களை உள்ளடக்குமாறு போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சினூடாக ஒருங்கிணைக்கப்பட்டு புகையிரத ஒதுக்கங்களின் சட்டவிரோத பயன்பாட்டாளர்களை ஒழுங்குபடுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்படுகின்றன.

- அந்நிகழ்ச்சித் திட்டங்களில் இனங்காண்பதற்கு முடியுமான பிரதேச செயலகங்கள் உறுதிப்படுத்தியுள்ள சட்டவிரோத பயன்பாட்டாளர்கள் தொடர்பிலான எண்ணிக்கைசார் தகவல்கள் பின்வருமாறாகும்.

| தொடர் இல. | மாவட்டம் | 10 வருடங்களுக்கும் அதிகமாகப் பயன்படுத்தும் பயன்பாட்டாளர்களின் எண்ணிக்கை | 10 வருடங்களினை விடக் குறைவாகப் பயன்படுத்தும் பயன்பாட்டாளர்களின் எண்ணிக்கை | மொத்தப் பயன்பாட்டாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | பொலன்னறுவை | 607 | 641 | 1,248 |
| 2. | பதுளை | 576 | 171 | 747 |

- அதன் பிரகாரம் பொலன்னறுவை மாவட்டத்துடன் தொடர்பான 1,248 விண்ணப்பங்களும், பதுளை மாவட்டம் தொடர்பிலான 747 விண்ணப்பங்களும் முன்வைக்கப்பட்டன. எனினும் புகையிரதத் திணைக்களத்திற்கு உரித்தான “நகரில் அமையப் பெற்ற உயர் பெறுமதியினைக் கொண்ட சட்டவிரோத நிர்மாணிப்பு

முன்னெடுக்கப்பட்டுள்ள காணி" என்ற தலைப்பில் 16/0512/709/028 என்ற இலக்க மற்றும் 2016.04.07 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய, பயன்படுத்திய காலப்பகுதி 10 வருடங்களைத் தாண்டிய பயன்பாட்டாளர்களுக்கு மாத்திரமே மேல் நடவடிக்கையினை எடுக்க முடியும்.

- பொலன்னறுவை மாவட்டத்துடன் தொடர்பான பயன்பாட்டுக் காலப்பகுதி 10 வருடங்களைத் தாண்டியுள்ளதாக குறிப்பிடப்பட்ட காணித்துண்டுகளை அளவிடுதல் மற்றும் மதிப்பீடு செய்து நிலுவை நிதியினை வரவழைத்தல் இடம்பெற்றுள்ளது. நிலுவை நிதியினை மதிப்பிடும்வேளையில் பயன்பாட்டு நிலைகள் வதிடம், வர்த்தகம், பயிர் வளர்ப்பு மற்றும் புண்ணிய பூமி என வெவ்வேறாக்கப்பட்டதுடன், அதனுடன் தொடர்புடைய மதிப்பீட்டுப் பெறுமதிகளும் வெவ்வேறாக்கப்பட்டது. அதன் பிரகாரம், வர்த்தக நோக்கங்களுக்கென பயன்படுத்தப்படும் குத்தகைக்காரர்களைத் தவிர்த்து ஏனைய பயன்பாட்டாளர்கள் உயர் வருமானமொன்று இல்லாது பயன்படுத்தி வருவதால் அவர்களுக்கு பாரிய நிதியினை நிலுவைப் பணமாக ஒரே தடவை கொடுப்பனவு செய்வதற்கு கடினமானது என அறிக்கையிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அதன் விடயம் அமைச்சரவையின் அவதானிப்புக்கு மீளவும் முன்வைக்கப்பட்டு அமப/17/1040/709/042 என்ற இலக்க மற்றும் 2017.07.07 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தினூ டாக இந்நிதியினை பகுதியளவில் அறவீடு செய்யும் முறைக்கு அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது. அதன் பிரகாரம், மீளவும் பற்றுச்சீட்டுக்கள் திருத்தஞ் செய்யப்பட்டு 97 பேருக்கு (ரூபா. 22,472,914.65) அனுப்பப்பட்டும் அதனூடாக அறவீடு செய்வது வெற்றியளிக்கவில்லை.

- அதன் பிரகாரம் மீளவும் அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் அவதானத்திற்கு முன்வைக்கப்பட்டு "இலங்கைப் புகையிரதத் திணைக்களத்திற்கு உரித்தான புகையிரத ஒதுக்கு இடங்களினை சட்டவிரோதமாகப் பயன்படுத்திவரும் பயன்பாட்டாளர்களிடமிருந்து நிலுவைப் பணத்தினை அறவீடு செய்தல்" என்ற தலைப்பில் அம்/18/0898/808/003 என்ற இலக்க மற்றும் 2018.05.23 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் கிடைக்கப் பெற்றதுடன் அதனூடாக உத்தியோகத்தர் குழுவொன்று நியமிக்கப்பட்டு விடயங்கள் ஆய்வு செய்யப்பட்டு புலனாய்வு அறிக்கையொன்று அமைச்சரவைக்கு முன்வைப்பதற்கு கட்டளைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த அறிக்கை இது வரையில் தயாரிக்கப்பட்டு நிறைவு பெற்று அங்கத்தவர்களுக்கு பரீட்சித்து ஒப்பமிடுவதற்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

- அதற்கு மேலாக "இலங்கைப் புகையிரதத்திற்கு உரித்தான புகையிரத ஒதுக்கு இடங்களில் வசிக்கும் புகையிரத ஊழியர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல்" என்ற தலைப்பில் அமப/18/0098/709/004 என்ற இலக்க மற்றும் 2018.02.15 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் கௌரவ அமைச்சர் அவர்களின் தலைமையில் அமைச்சரவைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### v. இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு உரித்தான காணிகள்

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு உரித்தான காணிகள், பின்வருமாறு காட்டப்பட்டுள்ள 7 முறைகளின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள காணிகள் என்பதுடன், இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு உரித்தான பிரதான அலுவலகம், 12 பிரதேச அலுவலகங்கள், 107 டிப்போக்கள், 13 உப டிப்போக்கள், 12 பிரதேச வேலைப் பட்டறைகள் மற்றும் 22 சாரதிகள் பயிற்சி கல்லூ ரிகள் இக்காணிகளில் அமையப் பெற்றுள்ளன.

அதன் பிரகாரம்,

- 1957 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் பேரூந்து நிறுவனங்களினை மக்கள்மயமாக்கும்போது அதன் சட்டத்தின் 20(1) பிரிவின் பிரகாரம் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு வர்த்தமானி அறிவத்தலினூடாக ஒப்படைக்கபட்டுள்ள காணிகள்.
- காணிகளை கையகப்படுத்தும் சட்டத்தின் கீழ் பிரத்தியேகப் உரிமையாளர்களுக்கு இலங்கைப் போக்குவரத்துச் சபையின் நிதி ஒதுக்கீடுகளினூடாக இழப்பீட்டினை வழங்கி கையகப்படுத்தப்பட்ட காணிகள்.
- இலங்கைப் போக்குவரத்துச் சபையின் செயற்பாடுகளுக்கென கையளிக்கப்பட்டுள்ள அரச காணிகள்
- காணிச் சீர்த்திருத்த ஆணைக்குழுவிடமிருந்து கொள்வனவு செய்யும் அடிப்படையின் கீழ் பெற்றுக் கொண்ட காணிகள்.
- புகையிரதத் திணைக்களத்தினால் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் செயற்பாடுகளுக்கென ஒப்படைக்கப்பட்ட காணிகள்.
- இலங்கை மகாவலி அதிகார சபையினால் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் செயற்பாடுகளுக்கென ஒப்படைக்கப்பட்ட காணிகள்.
- வெளிப்புற பிரத்தியேக பகுதியினரிடமிருந்து இலங்கைப் போக்குவரத்துச் சபையின் ஒதுக்கீடுகளினூடாக கொள்வனவு செய்யப்பட்ட காணிகள்.

இவ்வாறு கையகப்படுத்தப்பட்டுள்ள பல காணிகள், தொடர்ச்சியாக அனுபவித்து வரும் சில காணிகளுக்கு உரித்துக்களை உறுதிப்படுத்தும் உறுதிச் சான்றிதழ்கள் அல்லது சான்றிதழ்கள் வழங்கப்படாதிருத்தல் தற்போது இலங்கைப் போக்குவருத்துச் சபை முகங்கொடுத்துள்ள பாரிய பிரச்சினையொன்றாகவுள்ளது. அதன் பிரகாரம் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தேவைப்பாட்டினை அமைச்சுக்கு முன்வைக்கக்கூடியவாறு காணிகளைத் தீர்க்கும் செயற்பாடுகளுக்கு தலையிட்டுள்ளதுடன், அது தொடர்பில் அமைச்சின் பங்களிப்பு வழங்கப்பட்ட சில அடிப்படை நிகழ்வுகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

- இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் 40 வருடங்களுக்கும் அதிகமான காலம் தொடர்ச்சியாக அனுபவித்துள்ள தனியார் பட்டறை அமையப் பெற்ற காணி தொடர்பில் காணியினை கையகப்படுத்தும் சட்டத்தின் (460 வது அத்தியாயம்) 44 வது பிரிவின் கீழ் அதிகாரம் ஒப்படைக்கப்படும் சான்றிதழ் பெறப்பட்டதுடன், 2018.07.20 ஆந் திகதி அதன் காணியில் முன்னெடுக்கப்பட்ட களப் பரீட்சையின் பின்னர் முழுமையான காணியும் மீளவும் அளவீடு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- மட்டக்குளிய டிப்போ அமையப் பெற்ற அரச காணியினை, இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு இலவசக் கொடுப்பனவுப் படிவமொன்றினூடாக ஒப்படைப்பதற்கு இலங்கைப் போக்குவரத்துச் சபை ஒருங்கிணைப்புச் செயற்பாட்டினை முன்னெடுத்துள்ளதுடன், எதிர்வரும் காலங்களில் அக்கொடுப்பனவுப் படிவத்தினை இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு உரித்தான வெரகர காணியில் தற்போது பயன்படுத்தப்படும் பாதுகாப்பு அமைச்சு, மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம் உட்பட்ட பகுதியினருக்கு சட்டரீதியில் அக்காணித் துண்டுகளை வழங்குவதற்கு நில அளவைத் திணைக்களத்துடன் ஒருங்கிணைந்து அமைச்சின் முழுமையான கண்காணிப்பின் கீழ் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு தேவையான உதவி வழங்கப்பட்டுள்ளது.

- ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பில் இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் வழங்கப்பட வேண்டிய உண்மையான நிலுவைப் பங்களிப்பு நிதியினை வழங்குவதற்காக இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் இழப்பீடு மற்றும் வட்டி நிதி வழங்கப்பட்டிருந்தவேளையில் உரித்து ஒப்படைக்கப்படாத காணிகளுக்கு அதிகாரத்தினை வழங்கும் சான்றிதழினைப் பெற்றுக் கொள்ளுவதற்கும் மற்றும் இலவசக் கொடுப்பனவுப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளுவதற்கும் கலந்துரையாடல் நடாத்தப்பட்டு இடம் பரிட்சிக்கப்பட்டு உரிய நிறுவனங்களை ஒருங்கிணைத்து தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- அதேபோல இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு உரித்தான சகல தீர்க்கப்படாத காணிகள் இதுவரையில் ஆவணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன், அக்காணிகளை அளவீடு செய்து இலவசக் கொடுப்பனவுப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளுவதற்கு தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**2.4 2018 ஆம் ஆண்டில் புகையிரத நிர்வாகப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள்.**

- புகையிரதத் திணைக்களத்தின் சகல பதவிகள் மற்றும் ஊழியர்களுக்கு உரித்தான நியமிப்பிலிருந்து ஓய்வு பெறுதல் வரையான இடமாற்றங்கள், ஒழுக்காறு, கடமைகள், ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான கடமைச் செயற்பாடுகளை முன்னெடுத்தல் மற்றும் மீளவும் சேவையில் அமர்த்துவதற்கான கடமைச் செயற்பாடுகள் அமைச்சினூடாக உரிய வேறு நிறுவனங்கள் மற்றும் அரச சேவகள் ஆணைக்குழுவினூடாக நிறைவேற்றுதல்.

- வெளிநாட்டு விடுமுறைகள், திடீர் விபத்து விடுமுறைகள், திடீர் விபத்து இழப்பீடு தொடர்பில் கடமைகளை நிறைவேற்றுதல்.

- தொழிற்சங்க நடவடிக்கைகள் தொடர்பில் ஊழியர்களை விடுவித்தல், தொழிற் சங்க வேண்டுகோள்கள் மற்றும் மற்றும் பிற முறைப்பாடுகள் தொடர்பில் செயற்படுதல்.

- பாவனையிலிருந்து அகற்றப்பட்ட சக்கரங்கள், தண்டவாளங்கள் உட்பட உடைந்த பொருட்களை சலுகை விலைக்கு கொள்வனவு செய்வதற்கு பல்வேறான பகுதியினரினால் செய்யப்படும் வேண்டுகோள்கள் தொடர்பில் நடவடிக்கை எடுததல்.

- புகையிரதத் திணைக்களத்தில் கடமையில் ஈடுபட்டு அரசியல் பழிவாங்கல்களுக்கும் மற்றும் பணிப் பகிஸ்கரிப்புக்கும் உட்பட்டவர்கள் மேலும் செய்த வேண்டுகோள்கள் தொடர்பில் கடமைகளை நிறைவேற்றுதல்.

- புகையிரதத் திணைக்களத்துடன் தொடர்பான புதிய பதவியணி முகாமைத்துவச் சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் 2014.04.30 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கான ஆட்சேர்ப்புத்த திட்டங்கள் மற்றும் சம்பள அளவுத் திட்டங்கள் தொடர்பில் மேலும் திருத்தம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

- அமைச்சரவைச் செயலாளரின் அமப/ 15 / 0939 / 630 / 015-1 என்ற இலக்க மற்றும் 2015.06.24 ஆந் திகதி அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் புகையிரதத் திணைக்களம் உன்னத நிறுவனமொன்றாக கவனத்திற் கொண்டு புதிய பதவிகள் மற்றும் புதிய சம்பள அளவுத் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சரவையினால் உப குழுவொன்று அமைக்கப்பட்டு புதிய சம்பளக் கட்டமைப்பினைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- பின்வரும் பதவிகள் தொடர்பில் புதிய ஆட்சேர்ப்புத் திட்டங்கள் இதுவரையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது
    - சிரேஷ்ட நிறைவேற்றுச் சேவைத் தொகுதி
      மேலதிக பொது முகாமையாளர் (செயற்பாடுகள்)
    - கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் - விசேட தரம்
      புகையிரத சாரதி விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்
    - முகாமைத்துவ உதவியாளர் விசேட தரத்திற்கான சேவைத் தொகுதி
        - மாவட்டப் பரிசோதகர் (போக்குவரத்து மற்றும் வர்த்தகம்)
        - பயிற்சியளிக்கும் உத்தியோகத்தர்
        - ஆவணக் காப்புனர்
    - சட்ட உத்தியோகத்தர் பதவி
    - முகாமைத்துவ உதவியாளர் (விசேட தரம்) இலங்கைத் தொழில்நுட்பச் சேவை
        - திட்ட வல்லுனர் பதவி
    - முகாமைத்துவ உதவியாளர் III, II, I தரங்கள்
        - இலங்கை தொழில்நுட்பச் சேவையின் திட்ட வல்லுனர் பதவி
    - முகாமைத்துவ உதவியாளர் (விசேட தரம்)
        - இலங்கை தொழில்நுட்பச் சேவையின் ஆய்வு உதவியாளர் பதவி
    - முகாமைத்துவ உதவியாளர் III, II, I தரங்கள்
        - இலங்கை தொழில்நுட்பச் சேவையின் ஆய்வு உதவியாளர் பதவி
    - கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் - விசேட தரம்
        - மாவட்டப் பரிசோதகர் (எந்திரம்)
    - நிறைவேற்றுத்தரச் சேவைத் தொகுதி
        - அத்தியட்சகர், பிரதி அத்தியட்சகர், உதவி அத்தியட்சகர் (புகையிரதப் பாதுகாப்புச் சேவைகள்)
    - நிறைவேற்றுத்தரச் சேவைத் தொகுதி
        - உதவிப் போக்குவரத்து அத்தியட்சகர் (ஆற்றல் பாதுகாப்பு) மற்றும் உதவி அத்தியட்சகர் (எந்திரம்)
    - முகாமைத்துவ உதவித் தொழில்நுட்ப பிரிவு 03 சேவைத் தொகுதி
        - புகையிரத என்ஜின் சாரதி உதவியாளர்
    - கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பமற்ற
        - ஆலோசகர் பதவி
    - நிறைவேற்றுத்தர சேவைத் தொகுதி
        - உதவிப் பணிப்பாளர்/பிரதிப் பணிப்பாளர் (திட்டமிடல்)
        - உதவிப் பணிப்பாளர்/பிரதிப் பணிப்பாளர் (வர்த்தகம்/போக்குவரத்து)
        - உதவிப் பணிப்பாளர்/பிரதிப் பணிப்பாளர் (கிரயம்)

- பிரதி அத்தியட்சகர் (சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை)
- பிரதிப் பொதுமுகாமையாளர் (போக்குவரத்து)
- பிரதிப் பொதுமுகாமையாளர் (வர்த்தகம்)
- பிரதி அத்தியட்சகர் (போக்குவரத்து)
- அத்தியட்சகர் (வர்த்தகம்)
- பணிப்பாளர் (திட்டமிடல்)

- முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பமற்ற பிரிவு 02 சேவைத் தொகுதி,Wharf Clerk, வார்வ் நிர்வாகி, நுழைவுச்சீட்டினைச் சேகரிப்போர், சார்ஜென்ட், தூங்கும் இரயில் பெட்டி ஊழியர், பட்லர், ஷன்ரர், சமிக்ஞைகாட்டி, பொருட் பரிசோதகர், பிரயாணச்சீட்டுப் பரிசோதகர், பராமரிப்பு நிர்வாகி, பிரயாணச்சீட்டுப் பரிசோதகர் பதவிகள்.

பின்வரும் பதவிகளுக்கு அ.நி.சு. 6/2006 இன் பிரகாரம், இதுவரையில் புதிய ஆட்சேர்ப்புத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டபோதும், அத்திட்டங்கள் மேலும் திருத்தஞ் செய்யப்பட்டு வருகிறது.

- கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பமற்ற) உயர் வகுப்பு
  - புகையிரத நிலைய பொறுப்பு அதிகாரி சேவை
  - புகையிரத நிலைய பொறுப்பு அதிகாரி உயர் வகுப்பு

- கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம்
  - நிரந்தர வீதி பரிசோதகர் பதவி
  - கட்டிடப் பரிசோதகர் பதவி
  - பாலங்களின் பரிசோதகர் பதவி
  - எந்திரப் போமன் பதவி
  - ஓடுபாதை போமன் பதவி
  - சைகை மற்றும் தொலைத் தொடர்பு பதவி
  - புகையிரத சாரதி சேவை
  - புகையிரதப் பாதுகாப்புச் சேவை

- முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பப் பிரிவு 02 சேவைத் தொகுதி
  - புகையிரத என்ஜின் சாரதி (ஷன்ரின்)

- முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பப் பிரிவு 03 சேவைத் தொகுதி
  - புகையிரத தொழில்நுட்ப முகாமைத்துவ உதவியாளர் பதவிகள்

- முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பப் பிரிவு 02 சேவைத் தொகுதி
  - புகையிரத தொழில்நுட்ப முகாமைத்துவ உதவியாளர் பதவிகள்

- இணைந்த உத்தியோகத்தர் சேவைத் தொகுதி
  - கொள்முதல் உத்தியோகத்தர்
  - போக்குவரத்துக் கட்டண உத்தியோகத்தர்

- நிறைவேற்றுத்தர சேவைத் தொகுதி
  - பிரதி பொது அத்தியட்சகர் கொள்முதல்
  - அத்தியட்சகர் கொள்முதல்
  - உதவி அத்தியட்சகர் கொள்முதல்

இது வரையில் பின்வரும் பதவிகளின் ஆட்சேர்ப்புத் திட்டங்கள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு அங்கீகாரத்திற்கு முன்வைக்கப்பட்டது.

- ஆரம்ப தொழில்நுட்பமற்ற சேவைத் தொகுதி
  - ஆவண உதவியாளர்
  - ரயில்வே பணி உதவியாளர்
  - மகளிர் ஓய்வு விடுதியின் ஊழியர்
  - விடுதி/பங்களா உதவியாளர்

- ஏனைய பதவிகளில் 02 பதவிகள் தொடர்பில் ஆட்சேர்ப்புத் திட்டங்கள் வரைவுபடுத்தப்பட்டு தாபனப் பணிப்பாளர் நாயகத்தினதும் மற்றும் சம்பளங்கள் ஆணைக்குழுவின் செயலாளரினதும் பரிந்துரைகள் பெறப்பட்டுள்ளன. மேலும் 03 பதவிகளுக்கு தேசிய சம்பளங்கள் ஆணைக்குழுவின் செயலாளரினதும் மற்றும் தாபனப் பணிப்பாளர் நாயகத்தினதும் பரிந்துரைகளைப் பெற்றுக் கொள்ளுவதற்கு அனுப்பப்பட்டுள்ளது.

- ஆட்சேர்ப்புத் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ள சில பதவிகளுக்கு புதிதாக ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

- புகையிரதத் திணைக்களத்தின் ஏனைய பதவிகளுக்கு ஆட்சேர்ப்புத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகிறது.

- புகையிரத திணைக்களததின் 47 உத்தியோகத்தர்களின் பிணைப் பணத்தினை விடுவித்தல், சட்டமா அதிபரின் அதிகாரத்தினை இரத்துச் செய்தல் 153 இடம்பெற்றுள்ளது.

- புகையிரதத் திணைக்களத்துடன் தொடர்பான பின்வரும் கருத்திட்டங்கள் மற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் செயற்பாடுகளுடன் தொடர்பான வெளிநாட்டவர்களுக்கு பின்வருமாறு வீசா அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

| Institution /Project/Other | No. of Entry Visa Issued | No. of Residence Visa Issued | No. of Extension of Residence Visa |
|---|---|---|---|
| 1. Matara – Beliatta Rail Track (6859) | 04 | 04 | 53 |
| 2. Northern Province signaling & Telecommunication (6853) | 36 | 05 | 01 |
| 3. Madu – Taleimannar Rail Track (6822) | 11 | 44 | 20 |
| 4. Dimo | 01 | 01 | 11 |
| 5. SLTB | - | - | 02 |
| 6. Chinese Engineer of After Sale Service Work (7008) | - | - | 01 |
| 7. Visa Miscellaneous | 08 | 06 | - |

## 2.5 சட்டப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள்

**2018 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை - 42**
**தொடர்புபட்ட நிறுவனங்களின் பிரகாரம்,**

- மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம் - 12
- தேசியப் போக்குவரத்து ஆணைக்குழு - 04
- சிவில் விமான சேவைகள் அதிகார சபை - 02
- இலங்கை போக்குவரத்துச் சபை - 09
- இலங்கை புகையிரதத் திணைக்களம் - 01
- கௌரவ அமைச்சர் பதிலளிப்பவராக தொடுக்கப்பட்ட வழக்குகள் - 14

**மனித உரிமை முறைப்பாடுகளின் எண்ணிக்கை - 04**

**தொடர்புபட்ட நிறுவனங்களின் பிரகாரம்,**

- மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம் - 02
- இலங்கை புகையிரதத் திணைக்களம் - 01
- இலங்கைப் போக்குவரத்துச் சபை - 01

**சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை வரைவுபடுத்துதல் மற்றும் நிறைவேற்றுவதற்கான செயற்பாடுகள்.**

### 1. மோட்டார் வாகனச் சட்டங்களை திருத்தம் செய்தல்.

#### 1.1. சில கடுமையான தவறுகள் தொடர்பில் தண்டப் பணத்தினைத் திருத்துவதுடன் தொடர்பான சட்ட வரைவு

மேற்குறிப்பிட்ட விடயத்துடன் தொடர்பான மோட்டார் வாகனச் சட்டத்தினைத் திருத்தம் செய்வதற்கான சட்டவரைவு சட்டவரைஞரினால் இவ்அமைச்சுக்கு முன்வைக்கப்பட்டுள்ளதுடன், சட்டமா அதிபரின் இணக்கச் சான்றிதழும் கிடைக்கப் பெற்றுள்ளது. அதன் பிரகாரம், வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடுவதற்கும் மற்றும் பாராளுமன்றத்திற்கு முன்வைப்பதற்கு அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு அமைச்சரவைக்கு முன்வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் பிரகடனஞ் செய்யப்பட்ட ஒழுங்கு விதிகள் - 05

(i) மோட்டார் வாகன (தள அபராதம்) கட்டளைகள் :
இலக்கம் 2054/9 - 2018.01.15 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தல்

(ii) மோட்டார் வாகன (Cycle Flags) கட்டளைகள் :
இலக்கம் 2054/7 - 2018.01.15 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தல்

(iii) மோட்டார் வாகன (கட்டணங்கள்) கட்டளைகள் :
இலக்கம் 2054/6 - 2018.01.15 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தல்

(iv) மோட்டார் வாகன (அதிவேக வீதி) கட்டளைகள் :
இலக்கம் 2054/8 - 2018.01.15 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தல்

(v) மோட்டார் வாகன (பொதுச்சேவைகள்) மோட்டார் றைசிக்கிள் கட்டளைகள் : இலக்கம் 2081/44 - 2018.07.26 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தல்

- சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகள்

(i) மோட்டார் வாகன (திடீர் விபத்துக்களை அறிக்கையிடும்) கட்டளைகள் :

(ii) மோட்டார் வாகன (பாதுகாப்புக் கவசங்கள்) கட்டளைகள் :

(iii) மோட்டார் வாகன (மிகைக் கட்டணம்) கட்டளைகள் :

**2. 2005 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க இலங்கைப் போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 26 வது பிரிவினைத் திருத்தம் செய்வதற்கான சட்ட வரைவு.**

மேற்குறிப்பிட்ட சட்டத்தின் 26 வது பிரிவினைத் திருத்தம் செய்வதற்கான வரைவினைத் தயாரித்து சட்டவரைஞருக்கு முன்வைத்ததன் பின்னர் சட்ட வரைஞர் திணைக்களத்தினால் ஆரம்பச் சட்டவரைவொன்று தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது. அவ்வரைவுக்கு இலங்கைப் போக்குவரத்துச் சபையின் அவதானிப்புக்களைப் பெற்று சட்ட வரைஞருக்கு மீளவும் முன்வைக்கப்பட்டது.

## 2.6 அமைச்சரவைப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள்

### i. பாராளுமன்ற வினாக்கள் மற்றும் பாராளுமன்றத்தினை ஒத்திவைக்கும் பிரேரணைகள்

2018 ஆம் ஆண்டினுள் பாராளுமன்ற வாய்மூல வினாக்கள் 15 மற்றும் பாராளுமன்றத்தினை ஒத்திவைக்கும் பிரேரணைகள் 02 தொடர்பிலும் மறுமொழிகள் வழங்கப்பட்டுள்ளதுடன், சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள் தொடர்பில் 05 விவாதங்கள் நடாத்தப்பட்டன. அதற்கு மேலாக கணக்குகள் குழு 07 தொடர்பில் நடவடிக்கைகள் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டுள்ளன.

### ii. பொதுமக்கள் முறைப்பாட்டுக் குழு

2018 ஆம் ஆண்டில் பொதுமக்கள் முறைப்பாட்டுக் குழுக் கூட்டங்கள் 03 பாராளுமன்றத்தில் நடாத்தப்பட்டதுடன், அதில் கலந்துரையாடல்களுககு உட்படுத்தப்பட்ட பொதுமக்கள் முறைப்பாடுகள் 10 தொடர்பில் பணிச் செயற்பாடுகள் நிறைவு பெற்றுள்ளது. அதற்கு மேலாக 2018 ஆம் ஆண்டில் 20 புதிய பொதுமக்கள் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், அதற்கு முன்னர் கிடைக்கப் பெற்று நடவடிக்கை முடிவுறாது காணப்படும் முறைப்பாடுகளை உள்ளடக்கி உரிய சகல பொதுமக்கள் முறைப்பாடுகள் தொடர்பான அறிக்கைகள் உரிய நிறுவனங்களுக்கு முன்வைத்தல் மற்றும் அது தொடர்பிலான அறிக்கைகளை வரவழைத்தலினை ஒருங்கிணைப்புச் செய்தல் இடம்பெற்றுள்ளது.

### iii. துறைசார் கண்காணிப்புக் குழு

பாராளுமன்ற உறுப்பினர்களினால் அமைச்சின் விடயப் பரப்புத் தொடர்பில் முன்வைக்கப்பட்ட பொதுமக்களின் பிரச்சினைகள் மற்றும் பொதுப் பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களை ஒருங்கிணைத்து மறுமொழிகளை வழங்குதல் இடம்பெற்றுள்ளது.

### iv. அமைச்சரவை விஞ்ஞாபனங்கள்

2018 ஆம் ஆண்டில் 134 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் அமைச்சரவை அலுவலகத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளதுடன், அவ்விஞ்ஞாபனங்கள் தொடர்பில் கிடைக்கப் பெற்ற தீர்மானங்கள் உரிய நிறுவனங்கள்/பிரிவுகளுக்கு முன்வைக்கும் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

| # | நிறுவனம்/பிரிவு | அமைச்சரவை விஞ்ஞாபனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | இலங்கை புகையிரத திணைக்களம் | 58 |
| 2 | சிவில் விமான சேவைகள் அதிகார சபை | 21 |
| 3 | வரையறுக்கப்பட்ட விமானப் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் நிறுவனம் | 18 |
| 4 | மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் | 12 |
| 5 | இலங்கை போக்குவரத்துச் சபை | 12 |
| 6 | தேசியப் போக்குவரத்து ஆணைக்குழு | 07 |
| 7 | தேசியப் போக்குவரத்து மருத்துவ நிறுவனம் | 02 |
| 8 | அமைச்சு | 04 |
| | **மொத்தம்** | **134** |

### v. அமைச்சரவை அவதானிப்புக்கள்

2018 ஆம் ஆண்டில், ஏனைய அமைச்சுக்களினால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் 25 தொடர்பில் அவதானிப்புக்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

## 3. 2018 ஆம் ஆண்டில் திட்டமிடல் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள்.

1. புகையிரதத் திணைக்களம், இலங்கைப் போக்குவரத்துச் சபை, மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம், தேசியப் போக்குவரத்து ஆணைக்குழு, தேசியப் போக்குவரத்து மருத்துவ நிறுவனம், வீதிப் பாதுகாப்புத் தொடர்பிலான தேசிய சபை, சிவில் விமான சேவைகள் அதிகார சபை, வரையறுக்கப்பட்ட விமானப் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் (இலங்கை) நிறுவனம் மற்றும் லக்திவ பொறியியல் பிரத்தியேகக் கம்பனி போன்ற நிறுவனங்களுடன் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பில் ஒருங்கிணைப்புக் கூட்டங்களை நடாத்துதல் மற்றும் அது தொடர்பிலான செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

2. 2018 ஆம் ஆண்டு தொடர்பில் அமைச்சு மற்றும் உரிய நிறுவனங்களுடன் செயற்பாட்டுத் திட்டத்தினைத் தயாரிப்பதற்கு முன் வேலைத்திட்டங்களை நடாத்துதல் மற்றும் அச்செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல்.

3. 2018 ஆம் ஆண்டு தொடர்பில் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு அலுவலகத்தின் செயற்பாட்டுத் திட்டத்தினைத் தயாரித்தல் மற்றும் அமைச்சின் கீழுள்ள உரிய நிறுவனங்களின் கூட்டுத் திட்டத்தினைத் தயாரித்தல் தொடர்பில் பங்களிப்பினை வழங்குதல் மற்றும் உரிய ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

4. அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்துதல், அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் முன்னேற்ற மீளாய்வுச் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

5. 2018 ஆம் ஆண்டு தொடர்பில் பாதீட்டு மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு நிறுவனங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் அக்கலந்துரையாடல்களில் கலந்துகொண்டு கணக்குகள் பிரிவுடன் இணைந்து செயற்படுதல்.

6. போக்குவரத்து அமைச்சுடன் தொடர்பான கருத்திட்டங்களின் முன்னேற்றத்தினைக் கண்காணித்தல், அறிக்கைகளைத் தயாரித்தல், நிதி அமைச்சு, ஜனாதிபதி அலுவலகம் மற்றும் பிரதமர் அலுவலகத்திற்கு முன்வைத்தல்.

7. பாராளுமன்ற பாதீட்டுச் செயற்குழு சுற்றுக்கு முன்வைப்பதற்கு அமைச்சின் கீழுள்ள சகல நிறுவனங்களுடன் தொடர்பான முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் பாராளுமன்றத்திற்கு முன்வைத்தல்.

8. 2017 ஆம் ஆண்டு அமைச்சின் செயற்பாட்டு அறிக்கையினைத் தயாரித்து முன்வைத்தல்.

9. 2018 வறுமையினை ஒழித்தல் என்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஜனாதிபதி செயலகத்துடன் இணைந்து நிகழ்ச்சித் திட்டங்களை அமுலாக்குதல்.

10. ஜனாதிபதி செயலகத்தினூடாக ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டு வரும் கருத்திட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் தொடர்பில் தேவையான அறிக்கைகள், முன்வைப்புக்களைத் (presentation) தயாரித்தல் மற்றும் முன்வைத்தல்

11. 2018 ஆம் ஆண்டு தொடர்பில் செயற்பாட்டுத் திட்டம்/கொள்முதல் திட்டத்தினைத் தயாரிப்பதற்காக அமைச்சு உத்தியோகத்தர்கள் மற்றும் நிறுவனப் பிரதிநிதிகளின் பங்குகொள்ளலுடன் வேலைத்திட்டமொன்றினை நடாத்துதல்.

12. தேசியப் போக்குவரத்துக் கொள்கையினை நாளதுவரைப்படுத்துவதற்கு போக்குவரத்து மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பிலான பாராளுமன்ற துறைசார் கண்காணிப்புக் குழுவின் ஆலோசனைகளின் பிரகாரம் நாளதுவரைப்படுத்துவதற்கு தேவையான செயற்பாடுகளை பூர்த்தி செய்தல்.

13. வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினூடாக தொழில்நுட்ப உதவியின் கீழ் அமைச்சுக்கு வழங்கப்படும் விசேட கற்கை ஆய்வுகள் மற்றும் அமைச்சினூடாக இனங்காணப்படும் விசேட கருத்திட்டங்களைத் திட்டமிடுதல் மற்றும் ஒருங்கிணைத்தல்.

14. போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சுக்கு உரித்தான உத்தியோகபூர்வ இணையத் தளத்தினை நாளதுவரைப்படுத்துதல் மற்றும் முன்னெடுத்துச் செல்லுதல் (அமைச்சின் விசேட வைபவம், விவாதம் போன்ற தருணங்கள் தொடர்பில் விளம்பரங்கள் செய்தல், புகைப்படங்கள், வீடியோக்களை வெளியிடுதல், கொள்முதல், வர்த்தமானி அறிவித்தல் மற்றும் ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் தொடர்பிலான அறிவித்தல்களினை வெளியிடுதல்.)

15. தேசிய தகவல் மையத்துடன் (1919) ஒருங்கிணைந்து அமைச்சு மற்றும் அதனுடன் தொடர்பான நிறுவனங்களின் தகவல்களை வழங்குதல்.

16. இலங்கை தகவல் தொழில்நுட்ப பிரதிநிதித்துவ நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து அரச வலையமைப்பு LGN – ii வசதிகளைப் பெற்றுக் கொள்ளுதல்.

17. மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சுடன் இணைந்து போக்குவரத்துக் களத்துறையுடன் தொடர்பான சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பில் அமைச்சின் பங்களிப்பினை வழங்குதல்.

- ➢ Nationally Appropriate Mitigation Action Plan on Transport Section (NAMAs)
- ➢ போக்குவரத்துத் துறை தொடர்பில் தேசிய ரீதியில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புக்களினை (Nationally Determined Contributions - NDCs) தயாரித்தல்.
- ➢ போக்குவரத்து தரவுகளை அடிப்படையாகக் கொண்டு அளவீடு செய்தல், அறிக்கையிடுதல் மற்றும் விவேகத் திட்டமொன்றினை அமைத்தல் (Establishment of MRV System) - இக்கருத்திட்டத்தின் கீழ் 03 வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டு போக்குவரத்துக் களத்துறையுடன் தொடர்பான சகல பங்குதாரர்களும் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளனர்.
- ➢ Preparation of Fuel Quality Road Map
- ➢ Preparation of National Adaptation Plan
- ➢ Contribution to the Clean Air 2025 Programme
- ➢ காற்று மாசுபடுதல் மற்றும் காபன்டொக்சய்ட்டினைக் குறைப்பதற்கு சுற்றுச்சூழல் சாரதி பயிற்சிப் பாடநெறி நிகழ்ச்சித் திட்டங்கள் 4 குருனாகல், பொத்துகர, நாரகென்பிட்டி போன்ற இடங்களில் நடாத்தப்படுதல்.

18. ஏனைய நேர் அமைச்சுக்கள் மற்றும் பல்வேறான நிறுவனங்களினால் செயற்படுத்தப்படும் அபிவிருத்திச் செயற்பாடுகளின் உரிய கூட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் கலந்து கொண்டு தேவையான ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

19. ஜனாதிபதி செயலகத்தினூடாக முன்வைக்கப்படும் பொதுமக்கள் மனக் குறைகளினை தேவையான நிறுவனங்களுக்கு முன்வைத்தல் மற்றும் அவற்றிற்கு மறுமொழிகள் வழங்குதல்.

20. மாத்தறை கதிர்காமம் புகையிரத வீதியினை நிர்மாணிக்கும் கருத்திட்டத்துடன் தொடர்பான கருத்திட்ட அலுவலகங்கள், ஒருங்கிணைப்பினை முன்னெடுத்து அக்கருத்திட்டங்கள் அமுலாக்கும் செயற்பாடுகள் தொடர்பில் பின்தொடர் நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

21. இலங்கை அரசினால் அனுசரணை வழங்கப்படும் போக்குவரத்துத் துறையுடன் தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்தல்.
    - SAARC/UNESCAP/BIMSTEC/ACD/SASEC போன்ற சர்வதேச வேலைத்திட்டத்துடன் தொடர்பான போக்குவரத்துக் களத்துறையில் இலங்கையின் பிரதிநிதித்துவத்துடன் தொடர்பான செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

22. அமைச்சு, அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களுடன் தொடர்பான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களில் கலந்துகொள்ளுதல் மற்றும் தீர்மானங்களை அமுலாக்கும் பின்தொடர் நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

23. திட்டமிடல் பிரிவுடன் தொடர்பான அமைச்சரவை விஞ்ஞாபனங்களைத் தயாரித்தல் மற்றும் ஏனைய நேர் அமைச்சுக்களினூடாக முன்வைக்கப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்புக்களை வரைதல்.

24. அமைச்சுக்கு உரித்தான நிறுவனங்களின் தரவுகளைப் பெற்றுக்கொள்ளுதல், அத்தகவல்களினூடாக அமைச்சு இணையத் தளத்தில் புள்ளி விபர மெனுவினைப் புதுப்பித்தல் மற்றும் புள்ளி விபரங்களை உள்ளடக்கி சிறிய அறிக்கையொன்றினைத் தயாரித்தல்.

25. இவ்அமைச்சு மற்றும் அமைச்சுக்கு உரித்தான நிறுவனங்களினூடாக அமுலாக்கப்படும் கருத்திட்டங்கள் தொடர்பிலான அறிக்கைகளை, கோரிக்கையின் கீழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களுக்கு முன்வைத்தல்.

26. மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினூடாக அமுலாக்கப்படும் கருத்திட்டங்களுக்கு இவ் அமைச்சின் மற்றும் அதற்கு உரித்தான நிறுவனங்களின் உத்தியோகத்தர்களின் பங்களிப்பினை வழங்குதல்.

27. அநர்த்த முகாமைத்துவ அமைச்சின் தேசிய அநர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புக் குழு தொடர்பில் அமைச்சினைப் பிரதிநிதித்துவப்படுத்துதல்.

28. வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தான வடக்கு வீதி இணைப்புக்கள் கருத்திட்டத்தின் பங்குதாரர் நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்திற்கு அமைச்சினைப் பிரதிநிதித்துவப்படுத்துதல்.

29. நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சின் ஒருங்கிணைப்பில் மொனராகல மாவட்டத்தில் ஆகஸ்டு மாதம் 30,31 மற்றும் செப்ரெம்பர் 01 ஆந் திகதிகளில் நடாத்தப்பட்ட V 2025 என்டபிரய்ஸ் இலங்கைக் கண்காட்சிக்கு, அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் செயலூக்கமான பங்களிப்புடன் கவர்ச்சிகரமான கண்காட்சி விற்பனை நிலையங்களினை நிர்மாணித்து மக்களினை விழிப்புணர்வூட்டுதல்.

30. கொழும்பு கொட்டுவவிலிருந்து பத்தரமுல்ல வரை பேரூந்து முன்னுரிமைப் பாதையினை அமைப்பதுடன் தொடர்பான தேசிய திட்டமிடல் திணைக்களம், கொழும்பு மாநகர சபை, இலங்கை பொலிஸ் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளை முன்னெடுத்தல், குழுக் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்.

31. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரதிநிதித்துவ நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு பிரதான புத்தாக்க உத்தியோகத்தர் (Chief Innovation Officer) என்றவாறு அமைச்சினைப் பிரதிநிதித்துவப்படுத்தி குழுக் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்.

32. பாதீட்டு உரையினை அடிப்படையாகக் கொண்டு பாதீட்டுத் திணைக்களத்தினால் முன்மொழியப்படும் கருத்திட்டங்களை அமுலாக்குதல் தொடர்பில் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளை நிறைவேற்றுதல்.

33. கௌரவ அமைச்சர் மற்றும் கௌரவ பிரதி அமைச்சர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு முன்வைத்தல் மற்றும் விரிவுரைகளைத் தயாரித்தல்.

34. கடற்கரைப் பாதுகாப்பு மற்றும் சுற்றுலாத் துறையுடன் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு அமைக்கப்பட்ட பாராளுமன்ற உப செயற்குழு தொடர்பில், புகையிரத திணைக்களத்துடன் தொடர்பான விடயங்களைக் கலந்துரையாடலுக்கு உட்படுத்தும் கூட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துதல்.

35. விபத்துக்கள் மற்றும் வீதி நெரிசலினைத் தடுப்பதற்கு CCTV Operation System த்தினை அறிமுகஞ் செய்து ICTA நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடாத்தப்பட்ட பாராளுமன்றத்தின் சபைக் கூட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துதல்.

36. கடற்படை, இராணுவம் மற்றும் பொலிசுக்கு வழங்கப்படும் இலவசப் பயணச் சீட்டுக்களின் கட்டண அறவீடு தாமதமாகுதல் தொடர்பில் உரிய நிறுவனங்களுடன் கலந்துரையாடி தீர்வுகளை வழங்குதல்.

37. Millennium Challenge Cooperation நிறுவனம் மற்றும் பிரதமரின் அலுவலகத்துடன் இணைந்து பேரூந்துத் துறையினை நவீனமயமாக்கும் நிகழ்ச்சித்திட்டம் (Bus Sector modernization) தொடர்பில் பங்களிப்பினை வழங்குதல்

38. அமைச்சினால் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள் இடம்பெற்று வரும் பல்வேறு குழுக்கள் தொடர்பில் பங்களிப்பினை வழங்குதல்.
    - அலுவலகப் பயணிகள் போக்குவரத்து பேரூந்துக்களை ஒழுங்குபடுத்தும் குழு.
    - பாடசாலை வான் மற்றும் முச்சக்கர வண்டிகளை ஒழுங்குபடுத்தும் குழு

39. கருத்திட்ட எண்ணக்கருப் பத்திரங்களை தேசியத் திட்டமிடல் திணைக்களம் மற்றும் தேசியப் பாதீட்டுத் திணைக்களத்திற்கு முன்வைத்தல்.

40. களச் சுற்றுலாக்களை ஒருங்கிணைத்தல் மற்றும் அதனூடாக அமைச்சு உத்தியோகத்தர்களின் அறிவினை மேம்படுத்துதல்

41. அமைச்சு உத்தியோகத்தர்களின் திறன் விருத்தி பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்தல்.

## 4. நிதி முகாமைத்துவம் மற்றும் முன்னேற்றம்

### 4.1 கொள்முதல் குழு

| தொடர் இல. | கொள்முதல் குழுவின் பெயர் | அமுலாக்கப்பட்ட கொள்முதல்களின் எண்ணிக்கை | நிறைவு செய்யப்பட்ட கொள்முதல்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கொள்முதல் குழு | 51 | 12 |
| 02 | அமைச்சு கொள்முதல் குழு | 56 | 30 |

### 4.2 கணக்கு அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் வினைத்திறன்

| தொடர் இல. | செயற்பாடுகள் | எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|
| 01 | 2018 ஆம் ஆண்டின் கணக்கு அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் திறைசேரியுடன் ஒப்புரவு செய்தல். | சகல அறிக்கைகளும் தயாரிக்கப்பட்டு திறைசேரிப் புத்தகங்களுடன் ஒப்புரவு செய்யப்பட்டுள்ளது. |
| 02 | வினைத்திறனினை அதிகரிப்பதற்கு செய்த செயற்பாடுகள் | உத்தியோகத்தர்கள் வினைத்திறனுடன் கடமைச் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளதுடன், பயிற்சி தேவையான உத்தியோகத்தர்கள் அது தொடர்பில் அனுப்பப்படுகின்றனர். |

## EXPENDITURE REPORT As At 31.12.2018

| | | | | |
|---|---|---|---|---|
| Head | - | 114 | - | Ministry of Transport & Civil Aviation |
| Programme | - | 01 | - | Operattional Activities |
| Project | - | 01 | - | Minister's office |

| Sub Project | Object Code | Category/ Object Title | Total Net Provision | Total Actual Expenditure end of Desember | % Expenditure |
|---|---|---|---|---|---|
| 0 | | **Recurrent Expenditure** | **49,600,000.00** | **43,131,140.72** | **86.96** |
| | | **Personal Emuluments** | **24,100,000.00** | **20,677,451.65** | **85.80** |
| | 1001 | Salaries & Wages | 13,800,000.00 | 11,732,478.51 | **85.02** |
| | 1002 | Overtime and Holiday payments | 5,500,000.00 | 4,952,423.67 | **90.04** |
| | 1003 | Other Allowances | 4,800,000.00 | 3,992,549.47 | **83.18** |
| | | **Travelling Expences** | **3,300,000.00** | **2,425,553.85** | **73.50** |

| Sub Project | Object Code | Category/ Object Title | Total Net Provision | Total Actual Expenditure end of Desember | % Expenditure |
|---|---|---|---|---|---|
| | 1101 | Domestic | 2,300,000.00 | 2,300,000.00 | **100.00** |
| | 1102 | Foreign | 1,000,000.00 | 125,553.85 | **12.56** |
| | | **Suppliers** | **9,900,000.00** | **8,267,890.43** | **83.51** |
| | 1201 | Staionery & Office Requisites | 800,000.00 | 800,000.00 | **100.00** |
| | 1202 | Fuel | 9,000,000.00 | 7,404,249.43 | **82.27** |
| | 1203 | Diets & Uniform | 100,000.00 | 63,641.00 | **63.64** |
| | | **Maintanance Expenditure** | **8,600,000.00** | **8,283,204.57** | **96.32** |
| | 1301 | Vehicles | 8,000,000.00 | 7,995,972.56 | **99.95** |
| | 1302 | Plant Machinery & Equipment | 500,000.00 | 236,367.01 | **47.27** |
| | 1303 | Building & Structures | 100,000.00 | 50,865.00 | **50.87** |
| | | **Services** | **3,700,000.00** | **3,477,040.22** | **93.97** |
| | 1401 | Transport | 500,000.00 | 500,000.00 | **100.00** |
| | 1402 | Postal & Communication | 2,200,000.00 | 2,082,417.22 | **94.66** |
| | 1409 | Other | 1,000,000.00 | 894,623.00 | **89.46** |
| | | **Capital Expenditure** | **5,000,000.00** | **2,976,209.30** | **59.52** |
| | | **Rehabilitation and Improvement of Capital Assets** | **3,000,000.00** | **1,002,404.30** | **33.41** |
| | 2001 | Building & Structures | 500,000.00 | 0.00 | **0.00** |
| | 2002 | Plant Machinery & Equipment | 200,000.00 | 0.00 | **0.00** |
| | 2003 | Vehicles | 2,300,000.00 | 1,002,404.30 | **43.58** |
| | | **Acuisition of Capital Assets** | **2,000,000.00** | **1,973,805.00** | **98.69** |
| | 2102 | Funiture & office Equipment | 1,000,000.00 | 999,130.00 | **99.91** |
| | 2103 | Plant Machinery & Equipment | 1,000,000.00 | 974,675.00 | **97.47** |
| | | **Project Total** | **54,600,000.00** | **46,107,350.02** | **84.45** |

# EXPENDITURE REPORT As At 31.12.2018

| | | | | |
|---|---|---|---|---|
| Head | - | 114 | - | Ministry of Transport & Civil Aviation |
| Programme | - | 01 | - | Operattional Activities |
| Project | - | 2 | - | Administration & Establishment Services |

| Sub Project | Object Code | Category/ Object Title | Total Net Provision | Total Actual Expenditure end of Desember | % Expenditure |
|---|---|---|---|---|---|
| 0 | | **Recurrent Expenditure** | **243,600,000.00** | **228,650,548.61** | **93.86** |
| | | **Personal Emuluments** | **112,900,000.00** | **108,305,996.04** | **95.93** |
| | 1001 | Salaries & Wages | 72,500,000.00 | 71,902,376.05 | 99.18 |
| | 1002 | Overtime and Holiday payments | 4,400,000.00 | 4,317,747.98 | 98.13 |
| | 1003 | Other Allowances | 36,000,000.00 | 32,085,872.01 | 89.13 |
| | | **Travelling Expences** | **9,700,000.00** | **9,314,654.41** | **96.03** |
| | 1101 | Domestic | 1,400,000.00 | 1,073,483.29 | 76.68 |
| | 1102 | Foreign | 8,300,000.00 | 8,241,171.12 | 99.29 |
| | | **Suppliers** | **13,100,000.00** | **12,010,052.20** | **91.68** |
| | 1201 | Staionery & Office Requisites | 4,900,000.00 | 4,332,133.70 | 88.41 |
| | 1202 | Fuel | 8,000,000.00 | 7,479,295.50 | 93.49 |
| | 1203 | Diets & Uniform | 200,000.00 | 198,623.00 | 99.31 |
| | | Maintanance Expenditure | 15,300,000.00 | 14,752,318.87 | 96.42 |
| | 1301 | Vehicles | 12,000,000.00 | 11,889,295.07 | 99.08 |
| | 1302 | Plant Machinery & Equipment | 3,000,000.00 | 2,703,753.80 | 90.13 |
| | 1303 | Building & Structures | 300,000.00 | 159,270.00 | 53.09 |
| | | **Services** | **90,800,000.00** | **82,649,416.83** | **91.02** |
| | 1401 | Transport | 7,100,000.00 | 6,973,719.49 | 98.22 |
| | 1402 | Postal & Communication | 3,500,000.00 | 3,442,653.79 | 98.36 |
| | 1403 | Electricity & Water | 10,000,000.00 | 8,558,775.27 | 85.59 |
| | 1404 | Rents and Local Taxes | 63,000,000.00 | 57,863,849.22 | 91.85 |

| Sub Project | Object Code | Category/ Object Title | Total Net Provision | Total Actual Expenditure end of Desember | % Expenditure |
|---|---|---|---|---|---|
| | 1409 | Other | 7,200,000.00 | 5,810,419.06 | 80.70 |
| | | **Transfers** | **1,800,000.00** | **1,618,110.26** | **89.90** |
| | 1506 | Property Loan Interest to Public Servents | 1,800,000.00 | 1,618,110.26 | 89.90 |
| | | **Capital Expenditure** | **11,300,000.00** | **6,037,987.40** | **53.43** |
| | | **Rehabilitation and Improvement of Capital Assets** | **5,300,000.00** | **1,210,890.48** | **22.85** |
| | 2001 | Building & Structures | 1,000,000.00 | 311,400.00 | 31.14 |
| | 2002 | Plant Machinery & Equipment | 300,000.00 | 0.00 | 0.00 |
| | 2003 | Vehicles | 4,000,000.00 | 899,490.48 | 22.49 |
| | | **Acquisition of Capital Assets** | **4,800,000.00** | **3,710,596.92** | **77.30** |
| | 2102 | Furniture & office Equipment | 4,000,000.00 | 3,670,046.92 | 91.75 |
| | 2103 | Plant Machinery & Equipment | 800,000.00 | 40,550.00 | 5.07 |
| | | **Capacity Building** | **1,200,000.00** | **1,116,500.00** | **93.04** |
| | 2401 | Staff Training | 1,200,000.00 | 1,116,500.00 | 93.04 |
| | | **Other Capital Expenditure** | | **0.00** | |
| | | **Project Total** | **254,900,000.00** | **234,688,536.01** | **92.07** |

# EXPENDITURE REPORT As At 31.12.2018

| | | | | |
|---|---|---|---|---|
| Head | - | 114 | - | Ministry of Transport & Civil Aviation |
| Programme | - | 02 | - | Development Activities |
| Project | - | 3 | - | Development of Road Transport |

| Sub Project | Object Code | Category/Object Title | Total Net Provision | Total Actual Expenditure end of Desember | % Expenditure |
|---|---|---|---|---|---|
| | | **Recurrent Expenditure** | **12,049,687,000.00** | **11,627,440,175.50** | **96.50** |
| **1** | | **Sri Lanka Transport Board** | **11,493,000,000.00** | **11,223,440,175.50** | **97.65** |
| | 1503 | **Public Institution** | **11,004,000,000.00** | **11,004,000,000.00** | **100.00** |
| | | School & Higher Edication Season Ticket Subsidy | 5,000,000,000.00 | 5,000,000,000.00 | 100.00 |
| | | Grants to SLTB - Operating on Unremunerative Routes | 5,004,000,000.00 | 5,004,000,000.00 | 100.00 |
| | | Financial Assistance to SLTB | 1,000,000,000.00 | 1,000,000,000.00 | 100.00 |
| | **1504** | **Development Subsidies** | **489,000,000.00** | **219,440,175.50** | **44.88** |
| | | Armed Forces - Bus Passes | 489,000,000.00 | 219,440,175.50 | 44.88 |
| **2** | | **National Transport Commission** | **535,787,000.00** | **400,000,000.00** | **74.66** |
| | 1503 | Public Institution | | | |
| | | Contribution of Socially obligatory obligatory Bus Services | 535,787,000.00 | 400,000,000.00 | 74.66 |
| **3** | | **Lakdiva Engineering Company (Pvt.) Ltd.** | **20,900,000.00** | **4,000,000.00** | **19.14** |

| Sub Project | Object Code | Category/Object Title | Total Net Provision | Total Actual Expenditure end of Desember | % Expenditure |
|---|---|---|---|---|---|
| | 1503 | Public Institution | 20,900,000.00 | 4,000,000.00 | 19.14 |
| | | **Capital Expenditure** | **2,396,213,000.00** | **2,395,762,999.78** | **99.98** |
| **1** | | **Sri Lanka Transport Board** | **2,396,213,000.00** | **2,395,762,999.78** | **99.98** |
| | 2201 | **Public Institution** | | | |
| | | Purchase of New Buses/Engine kits | 1,000,000,000.00 | 999,991,988.00 | 100.00 |
| | | Bus Fleet Augmentation, Institutional Development and Capacity Building | 1,350,000,000.00 | 1,349,558,142.98 | 99.97 |
| | | Purchase of New Buses/Engine kits | 46,213,000.00 | 46,212,868.80 | |
| | | **Project Total** | **14,445,900,000.00** | **14,023,203,175.28** | **97.07** |

## EXPENDITURE REPORT As At 31.12.2018

| | | | | |
|---|---|---|---|---|
| Head | - | 114 | - | Ministry of Transport & Civil Aviation |
| Programme | - | 02 | - | Development Activities |
| Project | - | 4 | - | Development of New Railroad |

| Sub Project | Object Code | Category/Object Title | Total Net Provision | Total Actual Expenditure end of Desember | % Expenditure |
|---|---|---|---|---|---|
| | | **Capital Expenditure** | **7,260,000,000.00** | **4,940,894,455.99** | **68.06** |
| 1 | | **Matara - Beliatta-Kataragama New Railline** | **5,550,000,000.00** | **3,933,575,907.68** | **70.88** |
| | 2104 | Building & Structures | 5,500,000,000.00 | 3,920,141,141.69 | 71.28 |
| | | | 5,000,000,000.00 | 3,731,176,730.09 | 74.62 |
| | | | 500,000,000.00 | 188,964,411.60 | 37.79 |
| | 2105 | Lands and Land Improvements | 50,000,000.00 | 13,434,765.99 | 26.87 |
| | | Lands Acquisition & Payment of Compensation | 50,000,000.00 | 13,434,765.99 | 26.87 |
| | | Signaling & Telecommunication System | 0.00 | | |

| Sub Project | Object Code | Category/Object Title | Total Net Provision | Total Actual Expenditure end of Desember | % Expenditure |
|---|---|---|---|---|---|
| 5 | | **Kurunegala - Habarana Rail track project** | **80,000,000.00** | **56,074,796.47** | **70.09** |
| | 2105 | Lands and Land Improvements | 80,000,000.00 | 56,074,796.47 | 70.09 |
| 10 | | **Transport Project Preparatory Facility(GOSL/ ADB)** | **1,300,000,000.00** | **944,881,021.40** | **72.68** |
| | 2105 | Lands and Land Improvements | | 0.00 | |
| | | | 450,000,000.00 | 251,432,021.40 | 55.87 |
| | | | 850,000,000.00 | 693,449,000.00 | 81.58 |
| **11** | | **Colombo SuburbanRailway Project(GOSL/ ADB)** | **300,000,000.00** | **0.00** | **0.00** |
| | 2104 | Lands and Land Improvements | | 0.00 | |
| | | | 300,000,000.00 | 0.00 | 0.00 |
| **12** | | **Implimentation of Global Positioning Systerm based TOIS in Srilanka Railways** | **30,000,000.00** | **6,362,730.44** | **21.21** |
| | 2103 | Plant Machinery & Equipment | 30,000,000.00 | 6,362,730.44 | 21.21 |
| | | **Project Total** | **7,260,000,000.00** | **4,940,894,455.99** | **68.06** |

# EXPENDITURE REPORT As At 31.12.2018

Head - 114 - Ministry of Transport & Civil Aviation
Programme - 02 - Development Activities
Project - 5 - Development of Aviation

| Sub Project | Object Code | Category/Object Title | Total Net Provision | Total Actual Expenditure end of Desember | % Expenditure |
|---|---|---|---|---|---|
| **10** | | **Bandaranayaka International Airport Development Project -(Phase II)** | **200,000,000.00** | **0.00** | **0.00** |
| | 2104 | Building & Structures | 200,000,000.00 | 0.00 | 0.00 |
| | | **Project Total** | **200,000,000.00** | **0.00** | **0.00** |
| | | **HEAD RECCURENT TOTAL** | **12,342,887,000.00** | **11,899,221,864.83** | **96.41** |
| | | **HEAD CAPITAL TOTAL** | **9,872,513,000.00** | **7,345,671,652.47** | **74.41** |
| | | **HEAD TOTAL** | **22,215,400,000.00** | **19,244,893,517.30** | **86.63** |

## 5. 2018 ஆம் ஆண்டில் விமான சேவைகள் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள்.

1. விமான சேவைகள் துறையின் மேம்பாட்டுக்கென அது தொடர்பிலான சகல செயற்பாடுகளையும் வினைத்திறனாகவும் மற்றும் விளைத்திறனாகவும் (சர்வதேச அங்கீகாரத்திற்காக) நிறைவேற்றும்போது தேவையான சட்ட ஒழுங்கு விதிகளைத் தயாரித்தல், நாளதுவரைப்படுத்துதல் மற்றும் அமுலாக்குவதற்குத் தேவையான பங்களிப்பினை வழங்குதல்.

2. இவ் வருடத்தில் சர்வதேச அளவில் பயன்மிக்க விமானப் பயணங்கள் அதேபோல பயன்மிக்க விமானப் பயணத் தடைவைகளை அதிகரிப்பதற்கு அந்தந்த நாடுகளுடன் இருதரப்பு விமான சேவை கலந்துரையாடல்களை நடாத்துதல் மற்றும் உடன்படிக்கைக்கு வருதல்.

**உடன்படிக்கையினை நாளதுவரைப்படுத்திய நாடுகள்**

- தாய்லாந்து, கெலனிக் இராச்சியம் (கிரீஸ்), இத்தாலி, லக்சம்பர்க் - அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது.
- அப்கனிஸ்தான், கட்டார் இராச்சியம், சிம்பாபே, இஸ்ரேல் - அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

3. 2018 திசம்பர் மாதத்தில் கென்யாவின் நய்றோபி நகரில் நடாத்தப்பட்ட சர்வதேச சிவில் விமான சேவைகள் கலந்துரையாடல் உச்சி மாநாட்டில் (ICAN) கயனா மற்றும் போர்த்துக்கல்லுடன் இருதரப்பு விமான சேவைக் கலந்துரையாடல் நடாத்தப்பட்டு புதிய உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது.

4. கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஓடுபாதையினை மீளவும் அமைத்தல் மற்றும் அது தொடர்பிலான செயற்பாடுகளினை 2018 மே மாதத்தில் முடிவுறுத்தல்.

**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் 02 வது பயணிகள் முனையத்தினை நிர்மாணித்தல் (A பக்கேஜ்) - இது தொடர்பில் அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று முன்வைக்கப்பட்டுள்ளதுடன், அமைச்சரவைக் கொள்முதல் குழுவின்** (CAPC) பரிந்துரையின் பிரகாரம் அது தொடர்பிலான அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்காமையினால் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய நீண்டதூர வானூர்திகளை நிறுத்தும் ஓடுபாதை மற்றும் ரக்சி ஓடுபாதையினை நிர்மாணித்தல் (B பக்கேச்)**
2018 திசம்பர் நிறைவில் 17% முன்னேற்றமொன்று சுவீகரிக்கப்பட்டுள்ளது.

5. சிவில் விமான சேவைகள் அதிகார சபை, கட்டுநாயக்க - நய்கந்தவில் அமையப் பெற்ற புதிய நிர்வாகக் கட்டிடம் 2018 ஜனவரி மாதம் 16 ஆந் திகதி ஸ்தாபிக்கப்பட்டது.

6. மட்டக்களப்பு சர்வதேச விமான நிலையம் சாதாரண விமான சேவைகள் தொடர்பில் 2018 மார்ச் மாதம் 25 ஆந் திகதி மீளவும் அங்குரார்ப்பணஞ் செய்யப்பட்டது.

7. இரத்மலான விமான நிலையத்தின் நிர்வாகக் கட்டிடத்துடன் கோபுரத்தினை நிர்மாணிப்பதற்கும், ஓடுபாதையினை மேலும் விரிவுபடுத்தி ஓடுபாதையில் தென் திசையிலுள்ள இலங்கை விமானப் படை வசதிகளினை, வட திகைச்கு கொண்டு செல்லுவதற்கு மதிப்பிடப்பட்ட செலவு ரூபா. 650,000,000/= ஆகும் என்பதுடன், அதன் பிரகாரம், அச்செயற்பாடுகள் தொடர்பில் இரத்மலான விமான நிலையம் "பிரதான திட்டத்திற்கு" 2018 பெப்ரவரி 21 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. இச் செயற்பாடு சிவில் விமான சேவைகள் அதிகார சபையினால் இடம்பெற்றுள்ளதுடன், எமது அமைச்சினால் அங்கீகாரத்தினை வழங்குதல் இடம்பெற்றுள்ளது.

8. பலாலி விமான நிலையத்தினை மேம்படுத்துதல் (பிரதேச மற்றும் வர்த்தக விமானப் பயணங்களைச் செயற்படுத்துதல்) தொடர்பில் 2018.08.17 ஆந் திகதி புதிய அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று முன்வைக்கப்பட்டது. இதன் அடிப்படைத் திட்டத்தின் பிரகாரம் ஓடுபாதையினை நிர்மாணிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட செலவு ரூபா. 1,950 மில்லியனாகும்.

9. திகன, மாபேரியதன்ன புதிய உள்ளக விமான நிலையத்தினை நிர்மாணிப்பதற்கான சாத்தியவளக் கற்கை ஆய்வொன்றினை முன்னெடுப்பதற்கு 2018.08.15 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், இத்தீர்மானம், மேல் நடவடிக்கைக்கு சிவில் விமான சேவைகள் அதிகார சபைக்கு முன்வைக்கப்பட்டது.

10. பண்டாரவளை உள்ளக விமான நிலையமொன்றினை நிர்மாணிப்பதுடன் தொடர்பான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையினை முன்வைப்பதற்கு பொறியியல் ஆலோசனை பணியகத்திற்கு கையளிக்கப்பட்டது.

11. கிங்குரக்கொட உள்ளக விமான நிலையத்தின் சிவில் விமான செயல் நடவடிக்கைகள் தொடர்பிலான மேம்பாடு, பாதுகாப்பு அமைச்சின் செயற்பாட்டுடன் இடம்பெற்றதுடன், அது தொடர்பிலான தேவையான மதிப்பீடு சிவில் விமான சேவைகள் அதிகார சபையினால் அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது.

12. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் மின்சார நுழைவாயில் (e – Gate System) திட்டமொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கு 2018.09.18 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், அது, மேல் நடவடிக்கையினை எடுக்கும் பொருட்டு கொள்முதல் பிரிவுக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

13. மத்தளை ராஜபக்ச சர்வதேச விமான நிலையத்தின் இயக்கச் செயற்பாடுகளை முன்னெடுத்தல், இந்திய விமானநிலைய அதிகார சபையுடன் இணைந்து முன்னெடுத்தல் தொடர்பில் விடயங்களைக் கலந்துரையாடுவதற்கு கலந்துரையாடல் சமரசக் குழுவொன்று (CANC) மற்றும் கருத்திட்டக் குழுவொன்று (PC) அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டுள்ளதுடன், உரிய கருத்திட்டகுழுவின் அறிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

14. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் பாதுகாப்புச் செயற்பாடுகளுக்கு Sniffer வகையினைச் சேர்ந்த நாய்க்குட்டிகளைப் பெற்றுக் கொள்ளுவதற்கு, அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

15. விமான நிலையம் மற்றும் விமான சேவை (இலங்கை) நிறுவனத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்களுக்கு பயிற்சியளிப்பதற்கு இரத்மலானையில் அமையப் பெற்ற சிவில் விமான சேவைகள் பயிற்சி நிலையம் புனர்நிர்மாணஞ் செய்யப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் செலவு செய்யப்பட்ட நிதி ரூபா. 309 மில்லியனாகும்.

## 16. சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள்

1. விமானப் போக்குவரத்துச் சட்டம் - 2018.09.18 ஆந் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதுடன், அதனை சர்வதேச ரீதியில் அமுலாக்குவதற்கு சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்புக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

2. கேப் ரவுன் உடன்பாடு - சட்டதிட்டச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

3. பீஜிங் உடன்பாடு - சட்டதிட்டச் செயற்பாட்டு வரைவுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

4. ஆகாய விமான நிலையங்களை வகைப்படுத்தும் ஒழுங்கு விதிகள் - அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் 2018.09.06 ஆந் திகதி வெளியிடப்பட்டது.

5. நீரியல் ஊடுருவல் இயந்திர விதிமுறைகள் - சட்டதிட்டச் செயற்பாட்டு வரைவுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

6. சிவில் விமான சேவைகள் பாதுகாப்பு ஒழுங்கு விதிகள் - சட்ட வரைஞருக்கு அங்கீகாரத்திற்காக முன்வைக்கப்பட்டுள்ளது.

7. வானூர்தி மற்றும் பதிவுகளை அடையாளமிடும் ஒழுங்கு விதிகள் - சட்ட வரைஞருக்கு அங்கீகாரத்திற்காக முன்வைக்கப்பட்டுள்ளது.

8. வானூர்தி விபத்துக்கள் புலனாய்வுப் பணியகம் - சட்ட வரைவு தொடர்பில் சட்டதிட்டச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

17. சிவில் விமான சேவைகள் கொள்கையினைத் தயாரித்து அங்கீகாரத்திற்கென அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று, அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

18. தேசிய விமானப் போக்குவரத்து வசதிகளை வழங்கும் ஆணைக்குழுவொன்று மற்றும் தேசிய விமானப் போக்குவரத்து வசதிகளை வழங்கும் நிகழ்ச்சித் திட்டமொன்றினை அமைப்பதற்கு அங்கீகாரத்திற்கென அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

19. விமானக் காப்பீடு மற்றும் பாதுகாப்புத் தொடர்பில் அரசின் பொறுப்புக்கள் மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு 60 வயதினைப் பூர்த்தி செய்துள்ள நபர்களை தொழில்நுட்பப் பதவிகளில் கடமையில் ஈடுபடுத்துவதற்கு அங்கீகாரத்திற்கென அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்டது.

20. உலகப் பாதுகாப்புத் தொடர்பிலான கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் இலங்கை ஜனநாயகச் சோசலிசக் குடியரசு மற்றும் சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்புக்கிடையே புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றினை கைச்சாத்திடுதல் - தொடர்ச்சியான கண்காணிப்பு அணுகுமுறை (USAP-CMA) அங்கீகாரத்திற்காக அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்டது.

## 6. 2018 ஆம் ஆண்டில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் இடம்பெற்ற புலனாய்வுக் கடமைகள் தொடர்பிலான விபரப் பொழிப்பு

| நிறுவனம் | இடம்பெற்ற பரிட்சிப்புக்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1. போக்குவரத்து அமைச்சு | 09 |
| 2. புகையிரதத் திணைக்களம் | 06 |
| 3. மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம் | 01 |
| 4. இலங்கை போக்குவரத்துச் சபை | 07 |
| 5. இலங்கை போக்குவரத்து ஆணைக்குழு | 03 |
| 6. தேசியப் போக்குவரத்து மருத்துவ நிறுவனம் | 03 |
| 7. லக்திவ பொறியியல் பிரத்தியேக நிறுவனம் | 03 |
| 8. லக்திவ பொறியியல் பிரத்தியேக நிறுவனத்தின் பணிக்கொடை பரிட்சிப்பு | File-110 |
| 9. வீதிப் பாதுகாப்புத் தொடர்பிலான தேசிய சபை | 04 |
| 10. பொதுமுயற்சியாண்மை குழு தொடர்பிலான முன் ஆயத்தக் கூட்டங்கள் | 03 |
| 11. அரச கணக்குகள் குழு தொடர்பிலான முன் ஆயத்தக் கூட்டங்கள்<br>மோடடார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்<br>புகையிரதத் திணைக்களம் | <br><br>03<br>01 |
| 12. கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள்<br>போக்குவரத்து அமைச்சு<br>புகையிரதத் திணைக்களம்<br>மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்<br>இலங்கை போக்குவரத்துச் சபை<br>லக்திவ பொறியியல் பிரத்தியேக நிறுவனம்<br>வீதிப் பாதுகாப்பு தொடர்பிலான தேசிய சபை<br>தேசியப் போக்குவரத்து ஆணைக்குழு<br>தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம்<br>இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை<br>விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை நிறுவனம் | <br>03<br>02<br>02<br>01<br>03<br>03<br>02<br>01<br>01<br>01 |
| 13. கணக்காய்வாளர் அதிபதித் திணைக்களத்தின் விசேட புலனாய்வுப் பிரிவினூடாக முன்வைக்கப்பட்ட கணக்காய்வு விசாரணைகள் தொடர்பில் விடைகளைத் தயாரித்தல் தொடர்பில் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்கள் (புகையிரத திணைக்களம்) | 1 |
| 14. சேவா வனித்த சங்கத்தின் வருடாந்தக் கணக்குகளைப் பரிட்சித்தல் | 1 |
| 15. நலன்புரிச் சங்கத்தின் வருடாந்தக் கணக்குகளைப் பரிட்சித்தல் | 1 |

## 7. புதிய புகையிரத வீதிகள் மேம்பாட்டுப் பிரிவு

பொதுமக்களுக்கு விளைத்திறன் மற்றும் இலாபகரமான போக்குவரத்துச் சேவையொன்றினை வழங்குவதற்கு நிலைபேறான கொள்கையொன்றாக போக்குவரத்துத் துறையினைக் கட்டியெழுப்பும் தேவையினை இனங்கண்டு, பொதுப் போக்குவரத்து சேவைகளுக்கு முன்னுரிமையினை வழங்கி அதிகளவில் பெருந்தெருக்கள் திட்டத்தினூடாக இடம்பெறும் பயணிகள் மற்றும் சரக்குப் பொருட்கள் போக்குவரத்து, புகையிரதச் சேவைக்கு நாட்டத்தினைக் கொள்ளச் செய்யும் எதிர்பார்ப்புடன், தற்போதுள்ள புகையிரத வீதிகள் திட்டத்தினை மேம்படுத்துவதுடன் புதிய புகையிரத வீதிகளை மேம்படுத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

அதன் பிரகாரம் புதிய புகையிரத கருத்திட்டங்கள் தொடர்பிலான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| # | கருத்திட்டம் | மதிப்பிடப்பட்ட செலவு (அ. டொ.மி.) | கருத்திட்டக் காலப்பகுதி |
|---|---|---|---|
| 01 | மாத்தறை - பெலிஅத்த புதிய புகையிரத வீதி (27 கி.மீ.) | 278.02 | 2013 - 2019 |
| 02 | குருனாகல் - ஹபரண புகையிரத வீதி (84 கி.மீ.) | 943 | 4 வருடங்கள் |
| 03 | கொழும்பினை அண்டிய புகையிரதக் கருத்திட்டம் (ஆசிய அபிவிருத்தி வங்கி ஒதுக்கீடுகளின் கீழ் அமுலாக்கம்)<br>i. கொழும்பினை அண்டிய புகையிரதத்தின் விளைத்திறன் - மேம்பாட்டுக் கருத்திடடம் | 160 | 2018 ஆம் ஆண்டிலிருந்து கருத்திட்டம் அமுலாக்கம் |
| | ii. புகையிரத பிரதான திட்டம் (Master Plan) தயாரிப்பு (புகையிரத திட்டம் மற்றும் முன்னெடுக்கவுள்ள மேம்பாடுகளைக் கவனத்திற் கொண்டு) | 1.0 | 2018 ஏப்ரலிலிருந்து கருத்திட்டம் அமுலாக்கம் |
| | iii. கண்டியினை அண்டிய புகையிரதக் கருத்திட்டம் | 9.00 | 2019 மார்ச் மாதத்திலிருந்து கருத்திட்டத்தினை அமுலாக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| | iv. களனிப் பள்ளத்தாக்கு புகையிரத மேம்பாட்டுக் கருத்திட்டம் கொழும்பு - பாதுக்க மற்றும் பாதுக்க அவிசாவளை 64 கி.மீ. | 1400.00 | |
| | v. பிரதான வீதி, கடலோர வீதி, நீர்கொழும்பு வீதி (3 வீதிகள்) மேம்பாடு கொழும்பு - ரம்புக்கன, கொழும்பு - களுத்துறை மற்றும் இராகம - நீர்கொழும்பு 135 கி.மீ. பிரிவு | 1100.00 | 2019 ஜனவரியிலிருந்து கருத்திட்டம் அமுலாக்கம். |

## 7.1 மாத்தறை - கதிர்காமம் புதிய புகையிரத வீதி

பின்வரும் வகையில் மூன்று கட்டங்களின் கீழ் நிர்மாணிப்புப் பணிகளை நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட இவ்வீதியின் மொத்த நீளம் 115 கி.மீ. ஆகும்.

| கட்டம் | தூரம் (கி.மீ.) |
|---|---|
| I. மாத்தறையிலிருந்து பெலிஅத்த வரை | 27<br>(தற்போது 95.1% மான பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது) |
| II. பெலிஅத்தவிலிருந்து ஹம்பாந்தோட்டை வரை | 48<br>(நிர்மாணிப்பு, ஓட்டம், மீளவும் கையளிப்பினை அடிப்படையாகக் கொண்ட நிர்மாணிப்பு தொடர்பில் அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது.) |
| III. ஹம்பாந்தோட்டையிலிருந்து கதிர்காமம் வரை | 40<br>(இது வரையில் தீர்மானம் எடுக்கப்படவில்லை.) |

### 7.1.1 புகையிரத வீதியினை நிர்மாணிப்பதனூடாக கிடைக்கப் பெற்ற சமூக மற்றும் பொருளாதாரப் பயன்கள்

- மாத்தறை கதிர்காமம் புதிய புகையிரத வீதியினை நிர்மாணிப்பதனூடாக நாட்டின் புகையிரதப் போக்குவரத்துத் துறையில் ஏற்படும் மேம்பாட்டினூடாக, கொழும்பு, காலி, மாத்தறை போன்ற நகரப் பிரதேசங்களுடன் விரைவில் தொடர்புகொள்ள முடியும், ஹம்பாந்தோட்டை மற்றும் மொனராகல மாவட்டத்தின் மக்களுக்கு உதவி கிடைத்தல் மற்றும் அதனூடாக அப்பிரதேசங்களில் துரித பொருளாதார மேம்பாடொன்றினை எட்டச் செய்தல்.
- மணித்தியாலத்திற்கு 120 மைல்கள் வேகத்தினைக் கொண்ட புகையிரத வீதியொன்றினை நிர்மாணிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதால், இதனூடாக நகர மற்றும் கிராம பிரதேசங்களுக்கிடையே நேரடி மற்றும் விரைவான தொடர்பொன்று ஏற்படுதல்
- விவசாயப் பிரதேசங்களான, ஹம்பாந்தோட்டை, மொனராகல போன்ற மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் இப்புகையிரத வீதி, அப்பிரதேசங்களின் விவசாயம், மீன்பிடி மற்றும் பால் உற்பத்தியினை மிகவும் இலகுவில் கொழும்பு, காலி, மாத்தறை போன்ற நகரப் பிரதேசங்களுக்குக் கொண்டு செல்லுதல் மற்றும் நகரப் பிரதேசங்களிலிருந்து மாத்தறை, ஹம்பாந்தோட்டை, மொனராகல பிரதேசங்களுக்கு இலகுவாக பொறித் தொகுதிகள், உரம் மற்றும் கனிய வளங்களைக் கொண்டு செல்லும் சாதனமொன்றாகப் பயன்படுத்துதல்.
- ஏனைய போக்குவரத்துச் சாதனங்களுடன் ஒப்பிடும்போது, புகையிரதச் சேவையினூடாக எரிபொருள் சிக்கனத்துடன் சிநேகபூர்வமான சூழலில், மிகவும் குறைந்த செலவின் கீழ் போக்குவரத்துச் சேவையொன்றினை மக்களுக்கு வழங்க முடியும். அதனூடாக நுகர்வுப் பொருட்களின் விலை அதிகரிப்பின் காரணமாக ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வொன்றாக பயன்படுத்த முடிதல்.
- ஹம்பாந்தோட்டை துறைமுகம், மத்தள சர்வதேச விமான நிலையம், ஹம்பாந்தோட்டை எரிபொருள் நிரப்பு நிலையம், சர்வதேச கொள்கலன் நிலையம், மிரிஜ்ஜவில கைத்தொழில் நகரம் மற்றும் ஹம்பாந்தோட்டை நிர்வாகத் தொகுதிக்கு புகையிரதப் போக்குவரத்து வசதிகளை வழங்குவதனூடாக பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்திச் செயற்பாட்டின் மைய போக்குவரத்து வலையமைப்பாக புகையிரதப் போக்குவரத்தினை உருவாக்குதல்.

- வணக்கத்திற்குரிய இடங்கள், பொழுதுபோக்கிடங்கள், சுற்றுலா இடங்கள் எனப் பாரியளவில் அமைக்கப்பட்டுள்ள இப்பிரதேசங்களினை நோக்கி வெளிநாட்டு உல்லாசப் பயணிகள், புகையிரதப் போக்குவரத்து வசதிகளினூடாக விரைவில் சென்றடைவதற்கு இயலுமாகவுள்ளதால், பிரதேசங்களின் பொருளாதார அபிவிருத்தியினை மேம்படுத்த இயலுதல்

### 7.1.2 கருத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம்

- முதலாவது கட்டமாக மாத்தறையிலிருந்து பெலிஅத்த வரையான பகுதியினை நிர்மாணிப்பதற்கு சீனக் கம்பனியுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன், அது தொடர்பில் தேவையான நிதி சீன எக்சிம் வங்கயின் வரணிய கடன் திட்டத்தின் கீழ் பெற்று, அதன் பிரகாரம் நிர்மாணிப்புப் பணிகள் இடம்பெறுகின்றது. முதலாவது கட்டத்திற்கு (மாத்தறையிலிருந்து பெலிஅத்த வரை) உரிய காணிகள் அனைத்தும் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், இழப்பீடு வழங்கும் செயற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.
- புகையிரத வீதியின் நீளம் - 26.75 கி.மீ. (மாத்தறையிலிருந்துபெலிஅத்த வரை)
- ஒப்பந்தக்காரர் - சீ.எம்.சீ. கம்பனி - சீனா
- ஆலோசனை சேவை - மத்திய பொறியியல் சேவைகள் ஆலோசனைப் பணியகம்.
- கருத்திட்டக் காலப்பகுதி - 2013.08.01 - 2018.12.31
- கருத்திட்டத்தின் மொத்தச் செலவு - டொலர் 278.2 மில்லியன்
- புகையிரத நிலையங்கள் - கக்குணதுர, பம்பரந்த, வவுறுகந்தல, பெலிஅத்த
- உப புகையிரத நிலையங்கள் - பிலதுவ, வெகெரகேன
- புகையிரப் பாலங்களின் முழுமையான நீளம் - 3.754 கி.மீ.
- சதுர வடிவ மதகுகளின் எண்ணிக்கை - 49
- நிலக்கீழ் வீடுகள் - நீளம் 610 மீற்றர் மற்றும் 268 மீற்றருடனான 2 நிலக்கீழ் வீடுகள்

கருத்திட்டத்தின் கீழ் ஒப்பந்தக் கம்பனியினால் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ள பணிச் செயற்பாடுகள். இதுவரையில் மொத்தப் பணிகளில் 95.1% பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், சைகை மற்றும் தொலைத் தொடர்பு திட்டத்தினை உள்ளடக்கிய மொத்தக் கருத்திட்டச் செயற்பாடுகளையும் 2019 ஆம் ஆண்டின் மார்ச் மாத நிறைவில் நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 7.1.3 உள்ளூர் நிதியங்களிலிருந்து கருத்திட்டத்தினூடாக இடம்பெற்ற பணிச் செயற்பாடுகள்.

2018 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட நிதி ரூபா. 550 மில்லியனாகும்.

1. ஒப்படைக்கப்பட்ட காணிகளில் 100% இழப்பீடு வழங்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது.
2. இழப்பீட்டிற்கு தற்போது கொடுப்பனவு செய்யப்பட்ட மொத்த நிதி ரூபா 991 மில்லியனாகும்.
3. மாத்தறை நில்வள கங்கையினூடாக 100 மீற்றர் நீளத்தினைக் கொண்ட பாலத்தினை நிர்மாணித்தல் நிறைவு பெற்றுள்ளது.
4. முதலாவது கட்டத்தில் ஒப்படைக்கப்பட்ட காணிகளின் உரித்தினைக் கையளித்தல் நிறைவு பெற்றுள்ளது.
5. மாற்றிடங்களில் மீள் குடியேற்றம் மற்றும் காணியினை மேம்படுத்துதல் நிறைவு பெற்றுள்ளது.
6. இதுவரையில் 95.1% நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

### 7.1.4 நிதிசார் முன்னேற்றம்

இக்கருத்திட்டம் தொடர்பில் 2018 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ள வெளிநாட்டு நிதி ரூபா. 5,000.00 மில்லியனாகும். உள்ளூர் ரீதியில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ரூபா. 550.00 மில்லியனாகும். 2018.12.31 ஆந் திகதி வரையில் வெளிநாட்டு ரீதியில் ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து ரூபா. 2,680.4 மில்லியன் செலவு செய்யப்பட்டதுடன், அது வெளிநாட்டு ஒதுக்கீடுகளில் 53.61% வரையாகும். ஒதுக்கப்பட்டுள்ள வெளிநாட்டு நிதியிலிருந்து 2018.12.31 ஆந் திகதி வரையில் செலவு செய்யப்படட நிதி ரூபா. 201.00 மில்லியனாகும். அது சதவீதத்தில் 64.35% ஆகும்.

மாத்தறை கதிர்காமம் புதிய புகையிரத வீதியினை நிர்மாணிப்பதற்கு மேலாக இப்பிரிவினூடாக எதிர்வரும் காலங்களில் செயற்படுத்துவதற்கு இனங்காணப்பட்டுள்ள புதிய புகையிரத வீதிகள் மற்றும் அதன் தற்போதைய முன்னேற்றம் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

### 7.2 குருணாகல் - ஹபரன புதிய புகையிரத வீதி

இவ்வீதியின் மொத்த நீளம் 84 கி.மீ. ஆகும். புதிய புகையிரத வீதி தொடர்பில் சாத்தியவளக் கற்கை ஆய்வு பொறியியல் பணிகள் தொடர்பிலான மத்திய ஆலோசனைப் பணியகத்தினால் இடம்பெற்றுள்ளது. இதுவரையில் சுற்றுச்சூழல் கற்கை ஆய்வு மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. கருத்திட்டத்தினைச் செயற்படுத்திக் கொண்டு செல்லுவதற்கு தேவையான பதவியணியினை ஆட்சேர்ப்புச் செய்தல், கருத்திட்ட முகாமைத்து அலகினை ஆரம்பித்தல் மற்றும் கருத்திட்டம் தொடர்பில் காணிகளைக் கையகப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகரித்துள்ளவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏனைய பதவியணியினை ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான செயற்பாடுகள் இடம்பெற்று வருகிறது. அளவைச் செயற்பாடுகள் மற்றும் நிலப் பரிசோதனைப் பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

**தற்போதைய முன்னேற்றம்**

கருத்திட்டத்தின் ஆரம்ப அளவைச் செயற்பாடுகள், மண் பரிசோதனைப் பணிகள் மற்றும் நீரியல் கற்கை ஆய்வுப் பணிகள் தற்போது நிறைவு பெற்றுள்ளதுடன், சுற்றுச்சூழல் கற்கை ஆய்வுப் பணிகளும் நிறைவு பெற்று அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. சகல பிரதேச செயலகங்களுடன் தொடர்பான 2 வது பிரிவு விதிமுறைகளுக்கமைய வழங்கப்பட்டுள்ள காணிகளை ஒப்படைத்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இக்கருத்திட்டம் தொடர்பில் China Exim Bank நிதியினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டு ஆரம்ப வடிவமைப்பு (Preliminary Design) தயாரிக்கப்பட்டதன் பின்னர் அதன் பிரகாரம் நிர்மாணிக்கப்பட்ட கருத்திட்டப் பிரேரணை ஆலோசனைசார் சேவை நிறுவனத்தினாலும் மற்றும் கருத்திட்டக் குழுவினாலும் பகுப்பாய்வு செய்யப்பட்டு அமைச்சரவைக்கு முன்வைத்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டது. மேலும் அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் உரிய கருத்திட்டப் பிரேரணை நிறுவனத்துடன் ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திட்டு China Exim Bank இல் இருந்து நிதியினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுத்தல் இது வரையில் வெளிநாட்டு வளத் திணைக்களத்திற்கு அனுப்பி வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இக்கருத்திட்டம் தொடர்பில் உள்ளூர் நிதியங்களிலிருந்து 2018 ஆம் ஆண்டு தொடர்பில் ரூபா. 80 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 2018.12.31 ஆந் திகதி வரையில் இந்நிதியங்களிலிருந்து ரூபா. 55 மில்லியன் செலவு செய்யப்பட்டது. அது சதவீதமாக 68.71% ஆகும்.

## 7.3. கொழும்பினை அண்டிய புகையிரதத்தினை மின்சாரப்படுத்தும் கருத்திட்டம் (CSRP)

### அறிமுகம்

இக்கருத்திட்டம், போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயற்பாட்டுடன், இலங்கை புகையிரதச் சேவையுடன் இணைந்து ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் உதவியின் கீழ் அமுலாக்கப்படுகின்றது. இது வரையில் கருத்திட்டத்தின் ஆரம்ப கற்கை ஆய்வுகள் நிறைவு பெற்று அதன் விரிவான திட்டத்தினை தயாரித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

### கருத்திட்ட திட்டங்களைத் தயாரித்தல்.

- எதிர்வரும் காலங்களில் மின்சாரப் புகையிரதத்தினை சேவையிலீடுபடுத்துவதை நோக்காகக் கொண்டு புதிய இணை புகையிரதப் பாதைகளை நிர்மாணிப்பதற்கும் மற்றும் தற்போதுள்ள புகையிரதப் பாதைகளைப் புதுப்பிப்பதற்கும் தேவையான விரிவான திட்டங்களை தயாரித்தல் மற்றும் அதன் பிரகாரம் வீதி ஓடுபாதைகளுக்கு உரித்தான நிலக்கோடுகளைத் தீர்மாணித்தல்.
- கருத்திட்டத்தின் தாக்கத்திற்குள்ளாகும் பிரதேசங்களில் வாழும் சகல குடியிருப்பாளர்களின் சமூக மற்றும் பொருளாதார நிலபரங்கள் மற்றும் தற்போதுள்ள சொத்துக்கள் தொடர்பில் ஆய்வொன்றினை முன்னெடுத்தல்.
- கருத்திட்டத்தின் தாக்கத்திற்கு உள்ளாகுபவர்களை மீளக் குடியமர்த்துவதற்கும் மற்றும் இழப்பீடுகளை வழங்குவதற்கும் திட்டங்களைத் தயாரித்தல்.
- கருத்திட்டத்திற்கு உரித்தான பிரதேசங்களின் சுற்றுச்சூழல் மதிப்பீட்டினை முன்னெடுத்தல்.

### காணியினை கையகப்படுத்தும் செயற்பாடு

இணை புகையிரதப் பாதைகளை நிர்மாணித்தல் மற்றும் தற்போதுள்ள புகையிரதப் பாதைகளைப் புதுப்பித்தல், புகையிரதத் திணைக்களத்திற்கு உரித்தான சாலையோர ஒதுக்குப் புறங்களில் முன்னெடுப்பதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அத்தியாவசியமான வேளைகளில் மட்டுமே பிரத்தியேக் காணிகளைச் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இழப்பீடு வழங்கும் மற்றும் மீளக்குடியேற்றும் நடைமுறை.

- புகையிரத சாலையோர ஒதுக்குப்புறம் மற்றும் அதனுடன் தொடர்பான புகையிரதத் திணைக்களத்திற்கு உரித்தான காணிகளில் குடியிருப்பவர்களை, நிரந்தர உரித்தினைக் கொண்ட வீட்டு அலகுகளில் குடியமர்த்துதல் அல்லது இழப்பீடு வழங்குவதனூடாக உயர் வாழ்க்கைத் தரமொன்றினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
- பாதிப்புக்குள்ளான சொத்துக்கள் தொடர்பில் சந்தைப் பெறுமதியினை அடிப்படையாகக் கொண்டு உரிய பகுதியினருக்கு இழப்பீடுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
- மீளக் குடியமர்த்தும் செயற்பாட்டில் பாதிப்புக்குள்ளான பகுதியினரின் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளைக் கவனத்திற் கொண்டு தேவையான திட்டங்கள் தயாரிக்கப்படும்.

### கருத்திட்டச் செயற்பாடுகள்

- மின்சாரப் புகையிரதத்தினைச் சேவையிலீடுபடுத்துவதை நோக்காகக் கொண்டு தற்போதுள்ள புகையிரப் பாதைகளை புதுப்பித்தல், இணை புதிய புகையிரதப் பாதைகளை நிர்மாணித்தல் மற்றும் அதனுடன் தொடர்பான புகையிரத நிலையங்களைப் புதுப்பித்தல், அதன் கீழ்,

1. களனிப்பள்ளத்தாக்கு புகையிரதப் பாதையினை, மருதானையிலிருந்து பாதுக்க வரை இரட்டைப் புகையிரதப் பாதையொன்றாக நிர்மாணித்து பாதுக்கவிலிருந்து அவிசாவளை வரை காணப்படும் புகையிரத வீதியினைப் புதுப்பித்தல்
2. பிரதான பாதையின் மருதானையிலிருந்து இராகம வரை காணப்படும் மூன்று பாதையினை, 4 பாதைகளினைக் கொண்டும், இராகமவிலிருந்து வெயங்கொடவரையான இரட்டைப் பாதையினை, 03 பாதைகளைக் கொண்டும் நிர்மாணிக்கப்படுவதுடன், வெயங்கொடவிலிருந்து ரம்புக்கன வரையான இரட்டை வீதியினைப் புதுப்பித்தல்.
3. கடலோர வீதியின் கொழும்பு கொட்டுவவிலிருந்து பாணந்துறை வரை காணப்படும் இரட்டை வீதியினை 3 பாதைகளைக் கொண்ட வீதியொன்றாக நிர்மாணிக்கப்படுவதுடன், பாணந்துறையிலிருந்து களுத்துறை வரை காணப்படும் இரட்டை வீதியினைப் புதுப்பித்தல்.
4. புத்தளம் வீதியின் இராகமவிலிருந்து நீர்கொழும்பு வரை காணப்படும் இரட்டை வீதியினை மேம்படுத்துதல் மற்றும் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துடன் புகையிரதப் பாதையினைத் தொடர்புபடுத்துதல்.

மேற்குறிப்பிட்ட புதிய நிர்மாணிப்புக்கள் மற்றும் புத்துப்பிப்பதுடன் தொடர்பான நிர்மாணிப்புக்கள் மற்றும் திட்டங்களைத் தயாரித்தல் இடம்பெறும்வேளையில் பின்வரும் குறுகிய காலக் கருத்திட்டச் செயற்பாடுகளை முன்னுரிமைப் பணிகளாகக் கவனத்திற்கொண்டு துரிதமாக செயற்படுத்துவதள்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன் கீழ்,

1. புதிய புகையிரத தொலைத்தொடர்புத் திட்டமொன்றினை அமைத்தல்.
2. மருதானை மற்றும் மாளிகாவத்தைக்கிடையே மேலதிக வீதிகளை நிர்மாணித்தல்.
3. நவீன நுழைவு அட்டைகளை வழங்கும் திட்டமொன்றினை அமைத்தல்.
4. இரத்மலானையில் அமையப் பெற்ற புகையிரதத் தொழில்நுட்பப் பயிற்சி நிலையக் கருத்திட்டத்தினூடாக அறிமுகப்படுத்தப்பட்ட புதிய தொழில்நுட்ப பயிற்சியளிக்கும் நிலையமொன்றாக மேம்படுத்துதல்.

**கருத்திட்டத்தின் பயன்கள்**

- விளைத்திறன் மற்றும் குறைந்த செலவினைக் கொண்ட போக்குவரத்து சேவையொன்றினை அமைப்பதனூடாக பயணிகளுக்கு புகையிரதப் போக்குவரத்தில் அதிக வாய்ப்புக்களை வழங்குதல்.
- கொழும்புக்கு தினசரி வருகைதரும் ஊர்தி வாகனங்களின் அளவினைக் குறைப்பதனூடாக வாகன நெரிசலுக்கு தீர்வுகளை வழங்குதல்.
- புகையிரதக் குறுக்கு வீதிகளின் காரணமாக இடம்பெறும் விபத்துக்கள் மற்றும் வாகனங்களின் நெரிசலினைக் குறைத்தல்.
- நவீனமயப்படுத்தப்படுகின்ற புகையிரத நிலையங்களில் பயணிகளுக்கு அதிக வசதிகளை வழங்குதல் மற்றும் அதன் கீழ் பெண்களுக்கும் மற்றும் விசேட தேவைகளைக் கொண்ட நபர்களுக்கும் குறிப்பிட்ட வசதிகளை வழங்குதல்.
- புகையிரதப் பயணிகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல்.
- புகையிரதங்களில் ஏற்படக்கூடிய விபத்துக்களை குறைத்தல்.

இக்கருத்திட்டம் தொடர்பில் ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கும் நிதி பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

1. சாத்தியவளக் கற்கை ஆய்வு தொடர்பிலான ஆலோசனைசார் சேவைகளுக்கு அ.டொ. மி. 1 உதவி
2. திட்டமிடல் மற்றும் கொள்முதல் ஆலோசனைசார் சேவைகளுக்கு அ.டொ.மி. 10
3. கருத்திட்டத்தினை அமுலாக்குவதற்கு அ.டொ.மி. 300 (முதலாவது கட்டம்)
4. கருத்திட்டத்தினை அமுலாக்குவதற்கு அ.டொ.மி. 300 (இரண்டாவது கட்டம்)

**கருத்திட்டத்தின் பௌதிக மற்றும் நிதிசார் முன்னேற்றம்.**

- இக்கருத்திட்டம் தற்போது ஆரம்பச் சாத்தியவளக் கற்கை ஆய்வுக் கட்டத்தினைக் கடந்து சாத்தியவளக் கற்கை மற்றும் விரிவான வடிவமைப்பினைத் தயாரிக்கும் (Detailed Design) கட்டம் வரை பயணித்துள்ளது. விரிவான வடிவமைப்புத் தயாரிக்கும் செயற்பாடுகள் 2018 ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- மருதானையிலிருந்து கோமாகம வரை ஐக்கிய நாடுகளின் மனிதக் குடியேற்ற அலுவலகம் (UN – Habitat) ஊடாக இடம்பெறும் சமூகப் பொருளாதார ஆய்வு இதுவரையில் நிறைவு பெற்றுள்ளதுடன், கோமாகமவிலிருந்து அவிசாவளை வரையான சமூகப் பொருளாதார ஆய்வினை முன்னெடுப்பதும் நிறைவு பெற்றுள்ளது. கொழும்பு - ரம்புக்கனவுக்கிடையேயான பகுதியின் சமூகப் பொருளதார ஆய்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ் ஆய்வு 50% வரை இதுவரையில் நிறைவு பெற்றுள்ளது.
- கருத்திட்ட அதிகாரப் பிரதேசத்தினுள் (210 கி.மீ.) புகையிரதத் திணைக்களத்திற்கு உரித்தான சகல புகையிரதக் காணிகளினை அளக்கும் செயற்பாடுகள் நிறைவு பெற்றுள்ளன.
- இக்கருத்திட்டம் தொடர்பில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நிதியங்களிலிருந்து 2018 ஆம் ஆண்டு தொடர்பில் ரூபா. 1,630 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 2018 திசம்பர் அளவில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியங்களிலிருந்து ரூபா. 371 மில்லியன் (82.4%) செலவு செய்யப்பட்டுள்ளதுடன், உள்நாட்டு நிதியங்களிலிருந்து ரூபா. 619.08 மில்லியன் (81.5%) செலவு செய்யப்பட்டது.

### 7.4 கொழும்பினை அண்டிய புகையிரதத்தினை வினைத்திறனாக மேம்படுத்தும் கருத்திட்டம்

இக்கருத்திட்டம் 2018 பெப்ரவரி மாதமளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், 32 அபிவிருத்திச் செயற்பாடுகள் (கொள்வனவு செய்தல் மற்றும் நிர்மாணிப்பு) இனங்காணப்பட்டுள்ளன. இச்செயற்பாடுகளிலிருந்து 28 தொடர்பில் இதுவரையில் கொள்வனவு செய்யும் ஆவணத் (Tender Document) தயாரிப்பு நிறைவு பெற்றுள்ளது. பிரதான அபிவிருத்திச் செயற்பாடுகள் (Sri Lanka Railway Island wide Radio Telecommunication System) மற்றும் (Sri Lanka Railway Island wide Ticketing & Seat reservation system) தொடர்பில் ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. இக்கருத்திட்டம் தொடர்பில் 2019 ஆம் ஆண்டில் அ. டொ.மி. 160 நிதியுதவிகள் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கிடைக்கப் பெற்றுள்ளது. இவ் அபிவிருத்திச் செயற்பாடுகள் பின்வருமாறு.

1. Island wide Railway Ticketing and Seat Reservation System (RTRS):- ஒப்பந்தங்கள் கோரப்பட்டுள்ளன. இத்திட்டத்தினை அமைப்பதுடன் புகையிரத நுழைவுச் சீட்டுக்களை விளைத்திறனாக வழங்குவதற்கு முடியும் என்பதுடன், புகையிரத வருமானத்தினை அதிகரிப்பதற்கும் முடியும். இதில் புகையிரத நுழைவுச் சீட்டுக்களை கொள்வனவு செய்யும் திட்டங்கள் (Ticketing Methods) 5 பொதுமக்களுக்கு ஆரம்பிக்கப்படும் என்பதுடன் 3 நிதிக் கொடுப்பனவு முறைமைகளும் காணப்படுகின்றன..

2. Island wide Radio Telecommunication System ( IRTS):- 1985 ஆம் ஆண்டிலிருந்து புகையிரதச் சேவையிடம் காணப்பட்ட புகையிரத தொலைத்தொடர்பாடல் திட்டம் இதுவரையில் முற்றிலும் செயலிழந்துள்ளதுடன், இக் கொள்வனவினூடாக இலங்கையின் தொலைத்தொடர்பாடல் சேவைகளை வழங்கும் நிறுவனங்களினூடாக புதிய LTE தொழில்நுட்பம் பாவிக்கப்படும் தொலைத்தொடர்பாடல் திட்டமொன்று ஸ்தாபிக்கப்படும். இதனூடாக புகையிரத இயக்கச் செயற்பாடுகளில் கலந்துகொள்ளும் சகல பதவியணியினருக்கும் தொலைபேசிகள் மற்றும் தரவுகளைப் பரிமாறிக் கொள்ளும் வசதிகள் வழங்கப்படும்.

3. கொழும்பு புகையிரதக் கட்டுப்பாட்டு நிலையம் (CTCC) புகையிரத செயலியக்க நிலையத்தினை நிர்மாணித்தல்- கொழும்பு எல்பின்ஸ்ரன் திரையரங்குக்கு எதிரே 10 மாடியினைக் கொண்ட கட்டிடத்தில் புதிய புகையிரதக் கட்டுப்பாட்டு நிலையங்கள் 03, உபகரணங்களைப் பொருத்துவதற்கு 2 மாடிகள் மற்றும் பராமரிப்பு மற்றும் புகையிரத இயக்கச் செயற்பாடுளுக்கு இடம் ஒதுக்கப்படும். இந்நிலையம் எதிர்வரும்காலங்களில் இலங்கையில் நிர்மாணிக்கப்படும் உயர் தொழில்நுட்பத்தினைக் கொண்ட கட்டிடமொன்றாக விளங்கும்.

4. மாளிகாவத்தையில் அமையப் பெற்ற School Lane Bridge ஐ மீளவும் நிர்மாணித்தல். - சுமார் 100 வருடங்கள் பழைமைவாய்ந்த இப்பாலம் மேலும் 3 புகையிரதப் பாதைகள் என அதன் கீழ் நிர்மாணிப்பதற்கு இயலுமான வகையில் மீளவும் நிர்மாணிக்கப்படுவதுடன், 2 திசைகளுக்கும் வாகனங்கள் பிரயாணிக்கக்கூடியவாறு நிர்மாணிக்கப்படும். இப்பாலத்தினூ டாக நடந்து பயணிப்பதற்கு முடியுமாக இரண்டு பாதைகளும் நிர்மாணிக்கப்படும். இது தொடர்பில் ஒப்பந்தத்தினைக் கோருவதற்கு ஆயத்தமாகவுள்ளது.

5. மாலபல்ல புகையிரத இடத்தில் நிர்மாணிக்கப்படும் 10 மாடிகளைக் கொண்ட 108 வீடுகளினைக் கொண்ட குடியிருப்புத் தொடர் - இதன் நிர்மாணப் பணிகள் நகர அபிவிருத்தி அதிகார சபையினூடாக இடம்பெற்றுள்ளதுடன், இவ் இல்லங்களில் அவ்வீட்டுத் தொடரினைச் சுற்றி புகையிரதப் பாதைக்குப் வழங்கப்படும் காணிகளில் வாழும் மக்கள் குடியேற்றப்படுவர். இதனூடாக இரட்டைப் புகையிரத வீதிக்குத் தேவையான இடம் பெறப்படும். இது தொடர்பில் ஒப்பந்தத்தினைக் கோருவதற்கு ஆயத்தமாகவுள்ளது.

6. இரத்மலான புகையிரதப் பயிற்சி நிலையத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகள். :
இதில் பயிற்சி நிலையம் தொடர்பில் புதிய 4 ஆய்வகங்கள் மற்றும் பயிற்சித் தொழில்நுட்ப மண்டபங்களைக் கொண்ட கட்டிடமொன்று நிர்மாணிக்கப்படும் என்பதுடன், கேட்போர்கூடம் மற்றும் விடுதிக் கட்டிடமொன்றும் நிர்மாணிக்கப்படும். இதனூடாக பயிற்சிப் பாடசாலையின் புகையிரத வீதிகள், ஓடுபாதைகள், தொலைத்தொடர்புகள், கணனி முகாமைத்துவம் மற்றும் புகையிரதச் செயற்பாட்டுக் கற்றல் மற்றும் பயிற்சிகளுக்கு இட வதிகள் கிடைக்கும். இதுவும் ஒப்பந்தக் கோருவதற்கு தயாராகவுள்ளது.

7. அதற்கு மேலாக பயிற்சி நிலையத்தில் தற்போது பாவிக்கப்படும் சுமார் 30 வருடங்கள் வரையான தொன்மைவாய்ந்த பயிற்சிகளுக்குப் பாவிக்கப்படும் சகல பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களை அகற்றி, நவீன தொழில்நுட்பம் பாவிக்கப்படும் பொறித்தொகுதிகள் மற்றும் பயிற்சி உபகரணங்கள் வழங்கப்படும்.

8. ரத்மலான பிரதான எந்திரப் பொறியியல் திணைக்களம் தொடர்பில் புதிய தொழில்நுட்ப மண்டபம் ஒன்று, 2 களஞ்சியசாலைகளை நிர்மாணித்தல் மற்றும் எந்திரப் பொறித்தொகுதிகளை கொள்வனவு செய்வதற்கு ஆக்கபூர்வமான திட்டங்களை தயாரிக்கும் செயற்பாடுகள் நிறைவு பெற்று வருகின்றன.

9. புகையிரத வீதிகள் மேம்பாடு தொடர்பில் தேவையான எந்திரப் பொறித்தொகுதிகளை கொள்வனவு செய்தல் :
இது தொடர்பல் தேவையான Bid Documents ஒப்பந்தச் சபைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. இதனூடாக Tamping Machine ஒன்று மற்றும் Ballest Regulator ஒன்றும் கொள்வனவு செய்யப்படும்.

10. ரம்புக்கன - மாத்தளை - கம்பொள பகுதியில் புகையிரத வீதிகளை மேம்படுத்தி விரிவான வடிவமைப்பினை (Detailed Design) தயாரிப்பதற்கு ஆலோசனைசார் சேவையொன்றினைப் பெற்றுக் கொள்ளுதல்:
இதில் ரம்புக்கனயிலிருந்து கடுகண்ணாவ வரையான பகுதியின் ஆரம்ப சாத்தியவளக் கற்கை, கடுகண்ணாவவிலிருந்து மாத்தளை வரையான பகுதியின் சாத்திய வளக்கற்கை மற்றும் Detailed Design தயாரிப்பு, பேராதெனியா கம்பொளவிற்கிடையேயான பகுதியின் ஆரம்ப சாத்திய வளக்கற்கை இடம்பெற்றுள்ளது. இந்த ஆலோசனை சார் சேவை 2019 பெப்ரவரி மாதத்தில் ஆரம்பிக்கப்படும்.

### 7.5 களனிப் பள்ளத்தாக்கு புகையிரத வீதிகளை மேம்படுத்துதல். :-

இதுவரை களனிப்பள்ளத்தாக்கு வீதியின் விரிவான வடிவமைப்பினைத தயாரிக்கும் பணிகள் 95% நிறைவு பெற்றுள்ளது. 2019 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் இக்களனிப் பள்ளத்தாக்கு வீதிகளை நிர்மாணிப்பதற்கு ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. இதில் மருதானயிலிருந்து மாக்கும்புறு (20 கி.மீ) வரையான பகுதியின் பிரதான மற்றும் பல் வாகன குறுக்கு வீதிகள் 54 உள்ளன என்பதுடன் காணிகளை கையகப்படுத்தும் வேளையில் மக்களுக்கு ஏற்படும் பாதிப்பினைக் குறைத்து இழப்பீடுகளை வழங்குவதற்கான செலவினைக் குறைத்துக் கொள்ளுவதற்கு, இப்பகுதியின் தூண்களினூடாக இரட்டை வீதியாக நிர்மாணிக்கப்படும் என்பதுடன், மாலபல்ல விலிருந்து பாதுக்க வரையான பகுதி நிலத்தில் நிர்மாணிக்கப்படும் இரட்டை வீதியாக மேம்படுத்தப்படும். மருதான பாதுக்க பகுதி இக்கருத்திட்டத்தின் ஆரம்பக் கட்டமாக மேம்படுத்தப்படும் என்பதுடன், பாதுக்க - அவிசாவளை பகுதி தனிப் புகையிரத வீதியாக எதிர்வரும் காலங்களில் மேம்படுத்தப்படும். இது தொடர்பிலான நிர்மாணிப்பு 2020 ஆம் ஆண்டின் ஆரம்ப அரையாண்டில் ஆரம்பிக்கும் நோக்குடன் அது தொடர்பிலான ஒப்பந்தப் பணிகள் இவ்வருடத்தில் (2019) நிறைவு பெற்றும். புகையிர வீதி மேம்பாட்டுடன், புகையிரத வீதிகளின் இருமருங்கிலுமுள்ள நிலத்தினை, புகையிரத திணைக்களத்திற்கு வருமானத்தினை ஈட்டித்தரும் அபிவிருத்திகளுக்கு பயன்படுத்துவதற்கு ஆலோசனைசார் சேவையொன்றினை பெற்றுக் கொள்ளுவதற்கு உரிய செயற்பாடுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

### 7.6 GPS தொழில்நுட்பம் பாவிக்கப்படும் புகையிரத செயலியக்கத் தகவல்கள் திட்டத்தினை நிறுவுதல், இலங்கை போக்குவரத்துச் சபையின் தகவல்கள் திட்டம் மற்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தகவல்கள் திட்டத்துடன் தொடர்புபடுத்துதல்.

அமைச்சரவையின் அங்கீகாரம் மற்றும் ஆலோசனைகளுக்கமைய இந்த நவீன உலக அமைவிட தொழில்நுட்பம் பாவிக்கப்படும் திட்டம் பாதுகாப்பு அமைச்சின் கீழுள்ள ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தினால் மேம்படுத்தப்பட்டு பொருத்தபட்டுள்ளதுடன், இதனூடாக மிகவும் சரியான புகையிரத ஓட்டத்தின் பாதுகாப்பிற்கு பொருந்தக்கூடிய வகையில் புகையிரத ஓட்டத் தகவல்கள் வழங்கப்படும். புகையிரத ஓட்டத்தின் பாதுகாப்பு, புகையிரத கட்டுப்பாட்டு அலுவலகத்தின் வினைத்திறன், புகையிரத நேரசூசிகளை உருவாக்குவதன் துல்லியம் மற்றும் புகையிரத பதவியணியினருக்கு தேவையான புகையிரத ஓட்டத் தகவல்களை இதனூடாக வழங்குவற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

SLTB மற்றும் NTC திட்டத்துடன் தொடர்புபடுவதனூடாக பயணிகளுக்கு தமது பயணங்களைத் திட்டமிடுதல், பேரூந்து அல்லது புகையிரதம் வரும் வரை வீதிக்கருகாமையில் அல்லது புகையிரத நிலையங்களினுள் நிறுத்தும் தேவையில்லாமையினால் உரிய தகவல்களை மக்களுக்கு வழங்குதல் இடம்பெறும். இத்திட்டம், 2019 பெப்ரவரி மாதத்திலிருந்து முறைசார் வகையில் புகையிரத திட்டத்திற்கு ஒன்றுசேர்க்கப்படும்.

# II வது பிரிவு

## அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் செயற்பாடு

(1)

## இலங்கை புகையிரத திணைக்களம்

### 1.1 அறிமுகம்

2018ம் வருடத்திலும் தேசிய போக்குவரத்து கட்டமைப்பின் கீழ் பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்தில் ஈடுபட்டு தொடராக போக்குவரத்து சேவையை வழங்கி இலங்கை புகையிரத சேவை தேசிய போக்குவரத்து கட்டமைப்பின் சிறந்த முன்னேற்றத்திற்கான பங்களிப்பை வழங்கி திருப்திகரமான சேவையை வழங்கியுள்ளது.

**நோக்கு**

“தெற்காசியாவில் மிகவும் விணைத்திறன் மிக்க புகையிரத போக்குவரத்து வழங்குனராக திகழ்தல்.”

**இலட்சியம்**

பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்திற்காக பாதுகாப்பானதும் விசுவாசமுடையதும் குறித்த நேரத்திற்கு பயணிக்கும் சிக்கனமானதும் விணைத்திறன் மிக்க புகையிரத சேவையை வழங்குதல்.

### 1.2 பொதுவான விளக்கம்

பிரதான போக்குவரத்து வழங்குனரான இலங்கை புகையிரத சேவை 2018ம் வருடத்திலும் தேறிய பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்து தமது சேவை நடவடிக்கைகளை தொடராக மேற் கொண்டது. இதற்காக வேண்டி புகையிரத தொடரணிகொள்வனவு செய்தல், புகையிரத பாதையை உரிய முறையில் பராமரிப்பு செய்தல்,புகையிரத இயக்க நடவடிக்கைகனள வினைத்திறனுடன் மேற் கொள்ளல்,சமிக்கை மற்றும் தொலைத் தொடர்பு கட்டமைப்பின் பராமரிப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் போன்றவையும் குறித்த பகுதியினால் தொடராக மேற் கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளும் இப்பங்களிப்புக்கு நேரடியாக உதவியது. 2018ம் வருட இறுதி வரை மேற் கொள்ளப்பட்ட பிரதான செயற்பாடுகளுக்கிடையில் இந்திய நிதி உதவியின் கீழ் புதிய புகையிரத தொடரணியை கொள்வனவு செய்தல் நடவடிக்கை தொடராக மேற் கொள்ளப்பட்டது. மேலும் அதன் கீழ் புதிய பவர் செட் ஒன்றும் புகையிரத என்ஜின் ஒன்றும் 2018ம் வருட இறுதியில் கொள்வனவு செய்யப்பட்டது. தேற்கு பயாகலவிலிருந்து அலுத்கமை வரையிலான புனைகயிரத ,ரட்டைப் பாதையை நிர்மாணிக்கும் கருத்தழட்டத்தின் ஆரம்ப நடவடிக்கைகளை ஆரம்பித்தல். பயணிகள் பெட்டி 200 புணரமைப்பு செய்வதற்கு நடவடிக்கை மேற் கொள்ளல். இதன் கீழ் 52 பெட்டிகள் புணரமைப்பு செய்து சேவைக்கு வழங்கபட்டுள்ளது. பாதுகாப்பான புகையிரத கடவைகள் 200 புணரமைப்பு செய்தலும் அதன் கீழ் 2018ம் வருட இறுதிக்குள் பாதுகாப்பான புகையிரத கடவை 85 நிர்மானித்தல் நிறைவு பெறல் போன்ற பல்வெறு நடவடிக்கைகள் செயற்படுத்த முடிந்துள்ளது. மேலும் மலைநாட்டு பாதையின் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக என்ஜின் 12உம் பவர்செட்09உம் கொள்வனவு செய்தல் நடவடிக்கை தொடராக மேற் கொள்ளப்பட்டது. இதற்கு மேலதிகமாக பொல்கஹவெலவிலிருந்து குருநாகல் வரை புகையிரத இரட்டைப் பாதை நிர்மானிப்பை ஆரம்பித்தல், மாஹோவிலிருந்து ஓமந்தை வரை புகையிரத பாதையையும் சமிக்ஞை கட்டமைப்பையும் புணரமைப்புச் செய்யும் கருத்திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கைகளை மேற் கொள்ளல் போன்றவை இவற்றில் பிரதானமானவையாகும்.

2018ம் வருடத்தின் முழு வருமானம் ரூபா மில்லியன் 7406.33 ஆக காணப்பட்டதுடன் அது 2017ம் வருடத்தில் ரூபா மில்லியன் 6477.11 ஆக இருந்தது. இதை 2017ம் வருடத்துடன் ஒப்பிடும் போது 14% வீத முன்னேற்றத்தை கான்பிக்கின்றது. 2018ம் வருடம் ஒக்டோபர் 01 ம் திகதியிலிருந்து புகையிரத கட்டணம் கூட்டப்பட்டமை இதற்கான பிரதானமான காரணமாகும். பயணிகள்

தொகை 2017ம் வருடத்துடன் ஒப்பிடும் போது 0.7% வீதத்தினால் கூடிக் கானப்படுவதுடன் 2017ம் வருடத்தில் மில்லியன் 136.66 ஆக கானப்பட்டதுடன் 2018ம் வருடத்தில் மில்லியன் 137.51 ஆகும். 2018ம் வருட இறுதியில் பொருட்கள் போக்குவரத்து வருமானத்தையும் பொருட்கள் டொன் அளவினையும் கருதும் போது குறைவை காட்டுவதுடன் அக்காலத்தில் முறையே பொருட்கள் போக்குவரத்தின் வருமானம் ரூபா மில்லியன் 429.11,ரூபா மில்லியன் 418.22 வரையிலும் பொருட்கள் டொன் மில்லியன் 1.99 - 1.89 (மதிப்பிடப்பட்ட தொகை) வரையிலும் குறைந்து காணப்படுகின்றது. எரிபொருள் போக்குவரத்திற்காக போதுமானளவு புகையிரத என்ஜின் இல்லாத காரணத்தினால் நிலக்கரி போக்குவரத்து நடவடிக்கை மேற் கொள்ளப்படாததால் பொருட்கள் போக்குவரத்து குறைவதற்கு தாக்கத்தை ஏற்படுத்திய பிரதானமான காரணமாகும். இக்காலவெல்லையில் பயணிகள் கி.மீ அளவு 2017ம் வருட இறுதியில் ரூபா மில்லியன் 7495.06 வும், 2018ம் வருட ,றுதியில் ரூபா மில்லியன் 7709.52 வரை 2.8% வீதத்தினால் கூடியுள்ளதுபாருட்கள் டொன் கி.மீ அளவு 2017ம் வருடத்தில் சிறிது குறைவை காட்டுவதுடன் அது 2017 ம் வருடத்தில் டொன் கி.மீ 144.79 வும், 2018ம் வருட இறுதியில் டொன் கி.மீ மில்லியன் 127.35 (மதிப்பிடப்பட்ட தொகை) ஆன அளவை காட்டுகின்றது. பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்து குறைவதற்கு காரணமாக அமைந்தது 2018ம் வருடம் ஆகஸ்ட் மாதம் மேற் கொள்ளப்பட்ட புகையிரத ஊழியர் பணி பகிஷ்கரிப்பு நடவடிக்கையினாலாகும்.

2018ம் வருட இறுதியில் மொத்த செலவு ரூபா மில்லியன் 29629.18 ஆக காணப்பட்டதுடன், இதனுல் ரூபா மில்லியன் 14380.54 மீண்டுவரும் செலவினமும் ரூபா மில்லியன் 15248.63 ஆன தொகை மூலதன செலவினமாகவும் உள்ளடக்கப்பட்டிருந்தது. 2017ம் வருடத்தில் மூலதனச் செலவு ரூபா மில்லியன் 12888.87 ஆனதுடன் இது கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது மூலதனச் செலவில் 18% வீதமான அளவு கூடிக் காணப்படுகின்றது. புகையிரத தொடரணியை கொள்வனவு செய்தல் கருத்திட்டத்தின் ஆரம் கட்ட கொடுப்பனவு மேற் கொள்ளல் மூலதனச் செலவில் கூடுவதற்கு பிரதான காரணமாக குறிப்பிடலாம்.2018ம் வருடத்தில் மீண்டுவரும் செலவினம் ரூபா மில்லியன் 14380.54 வாக காணப்பட்டதுடன் 2017ம் வருடத்தில் அது ரூபா மில்லியன் 14080.65 வாக நிலவியது.

அன்மித்த பிரதேச புகையிரத சேவையை அபிவிருத்தி செய்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியின் கீழ் மேற் கொள்ளப்படும் கொழும்பை அன்மித்த புகையிரத கருத்திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இக் கருத்திட்டத்தின் கீழ் பிரதான பாதையில் றம்புக்கன வரையிலும் புத்தளம் பாதையில் நீர்கொழும்பு வரையிலும் கரையோர பாதையில் பானந்துறை வரையிலும் களணிவெளி பாதையில் அவிஸ்ஸாவெல்ல வரையிலும் புகையிரத உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்ய எதிர் பார்க்கப்பட்டுள்ளது. மேலும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியின் கீழ் புகையிரத திணைக்களத்தின் பிரதான திட்டமிடலை (Railway Master Plan) தயாரித்தல் நடவடிக்கையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2018ம் வருட இறுதியில் புகையிரத சேவையின் சிறப்புத் தன்மையை மேம்படுத்துவதற்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள படிமுறைகள் மேற் கொள்ளப்படடுளளது.

- ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியின் கீழ் கொழும்பை அன்மித்த புகையிரத கருத்திட்டத்தின் ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்தல
- புகையிரத தொடரணியை கொள்வனவு செய்தல்

(அ). இந்திய கடண் உதவியின் கீழ் புகையிரத தொடரணியை கொள்வனவு செய்தலின் கீழ் பயணிகள் பெட்டி160 உம், பவர்செட் தொகுதி 06 உம் புகையிரத என்ஜின் 10 உம் எரிபொருள் தாங்கி 30உம் கன்டேனர் ப்பிளேட் வெகன் 20 உம் கொள்வனவு செய்யப்படும்.

(ஆ). உள்நாட்டு நிதியின் கீழ்

- மலை நாட்டு புகையிரத பாதைக்கான புகையிரத தொடரணியை கொள்வனவு செய்தல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அதன் கீழ் புகையிரத என்ஞின் 12 உம், பவர்செட் டிாகுதி 09 உம் கொள்வனவு செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது.
- 2018ம் வருட இறுதியில் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு திட்டம் தயாரித்தல் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளதுடன் சில பிரிவுகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளது.
- ஹங்கேரி நாட்டு கடன் உதவியின் கீழ் 250 புகையிரத பாதுகாப்பு கடவை நிறுவுதல்.
- மாஹோ - ஓமந்தை புகையிரத பாதையையும் சமிக்கை மற்றும் தொலைத் தொடர்பு கட்டமைப்பையும் புணரமைப்பு செய்யும் ஆரம்ப நடவடிக்கைகளை மேற் கொள்ளல்
- 200 பயணிகள் பெட்டிகளை புணரமைப்புச் செய்து அதன் மூலம் பயணிகள் சேவையை விரிவுபடுத்தல்.
- பயணிகள் வசதி கருதி 2018ம் வருடத்தில் புகையிரத நிலைய சூழலில் ATM இயந்திரம் 14 நிறுவுதல், புகையிரத நிலையங்கள் 04 ல் போசனசாலை ஆரம்பித்தல் மற்றும் நீண்ட தூர பயண புகையிரதங்களில் உணவு வண்டிள் 08 நிறுவுதல்.
- பொல்கஹவெல - குருநாகல் இடையில் புகையிரத இரட்டைப் பாதையை நிறுவுதல் ஆரம்ப நடவடிக்கைகளை மேற் கொள்ளல்.

## 1.3 உட்கட்டமைப்பு வசதி

### 1.3.1 புகையிரத பாதை, கட்டிடம், பாலம் மேம்படுத்தல்

2018ம் வருட நிரந்தர பாதை கட்டமைப்பின் பராமரிப்பு, நடவடிக்கைகளும் மேம்படுத்தலும் தொடராக மேற் கொள்ளப்பட்டதுடன் அதற்காக வேண்டி தண்டவாளம், கொங்கிரீட் சில்பர், மர சில்பர் குற்றி, கல் பரவுதல் உரிய முறையில் மேற் கொள்டு பாதை கட்டமைப்பை சிறந்த முறையில் பேனுகை செய்வதற்காக வேண்டி நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது. சிறப்பு தமற்றும் பாதுகாப்புத் தன்மையுடைய புகையிரத சேவையை மேற் கொண்டு செல்வதற்காக வேண்டி இந் நடவடிக்கைகள் மிகவும் தேவையுடையதாக இருப்பதுடன் இந் நடவடிக்கைகளுக்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள படி பொருட்கள் பயன் படுத்தப்பட்டுள்ளது

| பயன்படுத்திய பொருட்கள் | அளவு |
|---|---|
| தண்டவாளம் அடி | 94,907 |
| மர சில்பர் குற்றி | 65,026 |
| உருக்கு சில்பர் | 3,654 |
| கொங்கிரீட் சில்பர் | 74,593 |
| கல் க்கியூப் | 13,913 |

பயணிகள் வசதி மற்றும் பாதுகாப்பு கருதி புகையிரத மேடைகளை உயர்த்துதல் மற்றும் நீட்டுதல் நடவடிக்கையும் முடிவு பெற்றுள்ளது. இதன் படி பண்ணிபிட்டிய ,மொரகொல்லாகம,ஹிங்குராகொடை, கந்தளை, கெக்ககிராவ, கல்ஓய, வில்வத்தை,வட்ககு களுத்தறை, மற்றும் வெள்ளவத்தை போன்ற புகையிரத நிலையங்களில் புகையிரத மேடை நீட்டுதல் மற்றும் உயர்த்துதல் நடவடிக்கை முடிவு பெற்றுள்ளதுடன் கஹவ மற்றும் வெல்லவ புகையிரத நிலையங்களில் பயணிகள் பாலம் நிர்மாணிப்பு முற்றுப் பெற்றுள்ளது.

மேலும் பாதை கட்டமைப்புக்குள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளும் 2018ம் வருடத்திற்குள்

மேற்கொள்ளப்படுகின்றது.

- புகையிரத நிலைய கட்டிடம் நிர்மானித்தல் மற்றும் பலுதுபார்ப்பு
- புகையிரத பாதை கட்டமைப்புக்கு தேவையான தண்டவாளம் மற்றும் சில்பர் கொள்வனவு செய்தல்
- கண்டி பேராதெனிய, கடுகன்னாவ, இடையில் புகையிரத இரட்டைப் பாதையை அமைத்தல்
- கட்டுநாயக்க - நீர்கொழும்பு புகையிரத இரட்டைப் பாதையை நிர்மானித்தல் தொடராக மேற்கொள்ளல்.
- புகையிரத பாலம் பராமரிப்பு, புகையிரத நிலையங்களில் மலசலகூட வசதிகளை வழங்குதல் போன்ற நடவடிக்கைகளும் தொடராக மேற் கொள்ளப்பட்டது.
- போலகஹவெல விலிருந்து குருநாகல் வரை புகையிரத இரட்டைப் பாதையை நிர்மாணிக்கும் கருத்திட்டத்தின் ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்தல் மற்றம் அதன் கீழ் மதிப்பிடல் இகேள்விமனு, தயாரித்தலுக்காக பொறியியலாளர் செயற்பாடுகள் சம்பந்தமான உபதேச பகுதிக்கு வழங்குதல்.
- தேற்கு பயாகல மற்றும் அலுத்கம வரை புகையிரத இரட்டைப் பாதையை நிர்மானித்தல் ஆரம்ப நடவடிக்கைகளை ஆரம்பித்தல்
- மாஹோ விலிருந்து ஓமந்தை வரை புகையிரத பாதையை புனரமைப்புச் செய்தல் கருத்திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கைகளை ஆரம்பித்தல். இதன் ஏலமதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றது.

### 1.3.2 புகையிரத தொடரணி

இதன் கீழ் புகையிரத தொடரணியின் சிறப்புத் தன்மையை கூட்டிக் கொள்வதற்காக வேண்டி அடிக்கடி தொடராக பராமரிப்பு நடவடிக்கை மேற் கொண்டு 2018ம் வருட இறுதி வரையில் சிறிய பலுதுபார்ப்புகள் 33525 யும் பிரதான பலுதுபார்ப்புகள் 1842யும் பயணிகள் பெட்டி10மாக புகையிரத தொடரணியின் பரமரிப்பு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது. தற்போதுள்ள புகையிரத தொடரணியில் புகையிரத என்ஜின் 50 யும் பவர்செட் தொகுதி 60யும் சமமான மட்டத்தில் சேவைக்காக ஈடுபடுத்தப்பட்டது. வேளி பிரிவினருடன் இணைந்து செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் படி மேற் கொள்ளப்படும் பயணிகள் பெட்டி 200 புனரமைப்பச் செய்யும் கருத்திட்ட நடவடிக்கை இது வரையில் மேற் கொள்ளப்படுவதுடன் வருட இறுதிற்குள் பயணிகள் பெட்டி 68 புனரமைப்பு செய்தல் நடவடிக்கை முடீவு செய்ய முடிந்துள்ளது. இதில் பெட்டி 52 இது வரையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

மேலும் இந்திய கடன் உதவியின் கீழ் புகையிரத தொடரணியை விரிவுபடுத்துவதற்காக வேண்டி கீழ் குறிபிடப்ட்டுள்ளபடி கொள்வனவு செய்வதற்கு சகல நடவடிக்கைகளும் தயார் படுத்தப்பட்டுள்ளதுடன் அதன் கீழ் முதலாவது பவர்செட் தொகுதியும் என்ஜின் ஒன்றும் இவ்வருட இறுதிக்குள் கொள்ளவனவு செய்ய முடிந்தது.

| இல | வகை | மதிப்பீட்டு தொகை (அ.டொ.மி) | தற்போதைய முன்னேற்றம் |
|---|---|---|---|
| 01 | புகையிரத என்ஜின்10 (இந்திய கடன் உதவியின் கீழ்) | 42.5 | ஒரு என்ஜின் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது |
| 02 | பவர்செட் தொகுதி 06 (இந்திய கடண் உதவியின் கீழ்) | 58.04 | ஒரு பவர்செட் தொகுதி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. |
| 03 | பயணிகள் பெட்டி 160 (இந்திய கடண் உதவியின் கீழ்) | - | ரயிட்ஸ் கம்பனியின் ஏலம் கிடைத்துள்ளது. நானயக் கடிதம் திறத்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

| இல | வகை | மதிப்பீட்டு தொகை (அ.டொ.மி) | தற்போதைய முன்னேற்றம் |
|---|---|---|---|
| 04 | எரிபொருள் தாங்கி 30யும் கன்டேனர் ப்ளேட் வெகன் 20 (இந்திய கடண் உதவியின் கீழ்) | 4.26 | வெகன் பார்வையிடுவதற்காக சென்றுள்ளனர். திசம்பர் மாதம் சில வெகன் கிடைக்கவுள்ளது |
| 05 | மலைநாட்டு புகையிரத பாதைக்காக பவர்செட் தொகுதி 09 கொள்வனவு செய்தல் | 93.86 | திட்டம் அனுமதிக்கப்பட்டுள்ளது. முற்பணத்தின் 15% வீதம் வழங்கப்பட்டுள்ளது. |
| 06 | மலைநாட்டு புகையிரத பாதைக்காக புகையிரத என்ஜின் 12 கொள்வனவு செய்தல் | - | அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப்பட்டுள்ளது. |

### 1.3.3 சமிக்கை மற்றும் தொலைத் தொடர்பு கட்டமைப்பு

2018ம் வருடத்திலும் சமிக்கை கட்டமைப்பில் மேம்படுத்துகையும் பராமரிப்பு நடவடிக்கை தொடராக மேற் கொள்ளப்பட்டு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் செயற்படுத்தப்படுகின்றது.

- ➢ புகையிரத பாதுகாப்பு கடவை 200 பொருத்துதல் டிதன் கீழ் 2018ம் வருட இறுதியில் புகையிரத பாதுகாப்பு கடவை 85 புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் புகையிரத கடவை 48 பலுதுபார்க்கப்பட்டுள்ளது.
- ➢ கரையோர புகையிரத பாதையில் சமிக்கை மற்றும் தொலைத் தொடர்பு கட்டமைப்பை மேம்படுத்தல்
- ➢ சீதுவை - கட்டுநாயக்க இடையில் புகையிரத பாதையின் சமிக்கை கட்டமைப்பை நிறுவுதல்
- ➢ சீதுவை - கட்டுநாயக்க புகையிரத இரட்டைப் பாதையை நிறுவுவதோடு சீதுவை கட்டுநாயக்க புகையிரத யாட்கிளல் சமிக்கை கட்டமைப்பை மேம்படுத்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் அதனோடு இனைந்து புகையிரத இரட்டைப் பாதைக்கு உகந்த வகையில் சீதுவை கட்டுநாயக்கவுக்கிடையில் உள்ள புகையிரத கடவைகளில் சகல பாதுகாப்பு கட்டமைப்புகளையும் மேம்படுத்தல்.

## 1.4 நிதி முன்னேற்றம்

| வருமானம்/செலவு | 2017 (ரூபா.மி) | 2018 (ரூபா.மி) |
|---|---|---|
| (i) **வருமானம்** | | |
| பொது பிரவேசப்பத்திரம் | 4261.22 | 4988.20 |
| வார பிரவேசப் பத்திரம் | 1075.47 | 932.15 |
| பார்சல் மற்றும் கடிதம் | 170.93 | 209.82 |
| பொருட்கள் மற்றும் கால்நடை வளம் | 429.11 | 418.22 |
| வேறு | 518.80 | 857.92 |
| **மொத்தம்** | **6455.53** | **7406.31** |
| (ii) **செலவு** | | |
| மீண்டுவரும் செலவினம் (ரூபா.மி) | 14080.65 | 14380.54 |
| மூலதனச் செலவு (ரூபா.மி) | 12888.87 | 15248.63 |
| **மொத்தம்** | **26969.52** | **29629.17** |

**1.5 சவால்களும் முரன்பாடுகளும்**

1. அனைத்து புகையிரத பாதைகளிலும் நிலவும் பாதுகாப்பற்ற புகையிரத கடவைகளின் தொகை கூடிய பெறுமானத்தில் நிலவுதல்.
2. பழைய புகையிரத என்ஜின்களின் தொகையும் அவற்றை சேவையில் ஈடுபடுத்தும் போது எப்பொழுதும் பலுதுபார்ப்பு நடவடிக்கை தேவைப்படல்
3. சமிக்கை மற்றும் தொலைத் தொடர்பு கட்டமைப்பு மிகவும் பழமையுடையதாக காணப்படல்.
4. பயிற்சி உழைப்பு பற்றாக்குறை.
5. புகையிரத தொடரணியும் உட்கட்டமைப்பு வசதிகளும் பற்றாக்குறையாக உள்ள காரணத்தினால் புகையிரத திணைக்களத்தின் கொள்ளவை கூட்டிக் கொள்வதில் சிக்கல்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்தமை.
6. புகையிரத காணிகளில் அனுமதியற்ற வதிவாளர்கள்
7. காணி முகாமைத்துவம், இயக்க முகாமைத்துவம், தொகை கட்டுப்பாடு, மணித வள முகாமைத்துவம் பராமரிப்பு நடவடிக்கை போன்ற பிரிவுகளில் நிலவும் தகவல் தொழில் நுட்ப எல்லைகள்.
8. மீண்டுவரும் செலவினம் மேலுயர்ந்து காணப்படல்

**1.6 புகையிரத சேவையின் சிறப்புத் தன்மையையும் விசுவாசத் தன்மையையும் மேம்படுத்துவதற்காக 2018ம் வருடத்தில் மேற் கொள்ளப்பட்ட மற்றும் எதிர்காலத்தில் மேற் கொள்ள எதிர்பார்க்கப்படும் விடயங்கள்.**

- பயணிகள் பெட்டி 200 புணரமைப்புச் செய்தல்
- தெற்கு பயாகல - அலுத்கம வரையில் புகையிரத இரட்டைப் பாமையை அமைத்தல்
- ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியின் கீழ் மேற் கொள்ளப்படும் அன்மித்த புகையிரத கருத்திட்டம்
- புகையிரத தொடரணியை கொள்வனவு செய்தல் நடவடிக்கையை தொடராக மேற்கொள்ளல்
- மாஹோ ஓமந்தை வரையிலான புகையிரத பாதையை புனரமைப்புச் செய்யும் நடவடிக்கையின் ஆரம்ப கட்ட வெலைகளை ஆரம்பித்தல்.
- பொல்கஹவெல இலிருந்து குருநாகல் வரை புகையிரத இரட்டைப் பாதை அமைத்தல் நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.
- புத்தளம் புகையிரத பாதையில் சீதுவையிலிருந்து கொச்சிக்கடை வரை புகையிரத இரட்டைப் அமைத்தல் நடவடிக்கைகளை ஆரம்பித்தல
- ஹங்கேரி நாட்டு கடண் உதவியின் கீழ் புகையிரத பாதுகாப்பு கடவை நிறுவுதல்
- புதிய களணி பாலத்தை நிர்மாணித்தல்.
- புகையிரத சேவைக்கான பிரதான திட்டத்தை தயாரித்தல்.

(2)

# மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம்

## 2 .1 அறிமுகம்

இலங்கையில் பதிவு செய்யப்படாத மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்வதற்கு 1928 சனவரி மாதம் 01 ஆம் திகதி மோட்டார் வாகன போக்குவரத்து பதிவாளர் அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டதுடன், அது 1951 இலக்கம் 14ஐக் கொண்ட மோட்டார் வாகன சட்டத்தின் மூலம் திணைக்களமாக தாபிக்கப்பட்டது. இந் நாட்டில் மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்தல்,கண்காணித்தல்,சாரதி அனுமதிப்பத்திரங்களை விநியோகித்தல்,வீதிப் பாதுகாப்பு மற்றும் சுற்றாடலுக்கு நலன் பயக்கும் வகையிலான வினைத்திறன் வாய்ந்ததும்,பயனுறுதி வாய்ந்ததுமான சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது இலங்கையில் வாகனப் பயன்பாடுகள் துரிதகதியில் அதிகரித்துக் காணப்படுவதுடன், பரந்துபட்ட திணைக்கள பணிகளின் அளவு மற்றும் தரமான வகையில் பூர்த்தி செய்வது தொடர்பாகவும் நாராஹேன்பிட்டியில் அமைந்துள்ள பிரதான அலுவலகத்தை மையமாக கொண்டு, செயற்பட்டு வருகின்றது.

### தொலைநோக்கு

“சிறந்த மோட்டார் வாகனப் போக்குவரத்துச் செயற்பாடொன்றின் மூலம் மக்களின் உயர் அபிமானத்தை வென்றெடுத்தல்”

### திணைக்களத்தின் பணிநோக்கு

“தன்முனைப்பாற்றலுடன் கூடிய பணியாட்தொகுதியின் ஒன்றிணைந்த முயற்சியினூடாகவும்,போக்குவரத்துச் சட்டம் மற்றும் ஏனைய சட்ட ஏற்பாடுகள் என்பனவற்றை நடைமுறைப்படுத்துவதன் ஊடாகவும் மக்களுக்கு அர்ப்பணிப்புடனும், நவீன தொழிநுட்பத்துடன் கூடியதுமான மோட்டார் வாகனப் போக்குவரத்துச் சேவையை வழங்குதல்”

## 2.2 திணைக்களத்தின் செயற்பாடுகள்

### 1. ஓட்ட நிலையிலுள்ள மோட்டார் வாகனங்களது புதிய பதிவு மற்றும் சாரதி அனுமதிப் பத்திரங்ளை வழங்குதல்

இந்த வருடத்தில் (2018.12.31ஆந் திகதியில்) பதிவுசெய்யப்பட்ட வாகனங்களது எண்ணிக்கை 479,340ஆக் காணப்பட்டதுடன், அக்காலப்பகிதியில் வாகன உரிமை மாற்றம் செய்யப்பட்ட வாகனங்களது எண்ணிக்கை 666,752 ஆகும். அக்காலப்பகுதியில் வழங்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை 806,600 ஆகும்.

### 2. சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் சேவை

திணைக்களம் ஆரம்பத்தில் இருந்தே சாரதி அனுமதிப்பத்திர விநியோக செயற்பாடுகளில் வளர்ச்சி கண்டு, தற்போது விநியோகிப்படுகின்ற சர்வதேச தரநிர்ணயங்களுக்கு அமைவான,புதிய ஸ்மார்ட் அட்டை சாரதி அனுமதிப் பத்திரம் வரை பரிணாம வளர்ச்சி கண்டுள்ளது. சர்வதேச தரநிர்ணயங்களுக்கு அமைவான புதிய ஸ்மார்ட் சாரதி அனுமதி அட்டை போலியாக அச்சிடப்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு உயர் தரத்திலான பாதுகாப்பு மூலோபாயங்கள் கையாளப்பட்டுள்ளதுடன், இங்கு அனுமதி அட்டையினைப் பெறுகின்றவரின் இரத்த மாதிரியும் உள்ளடக்கப்பட்டுள்ளது. வேரஹர அலுவலகத்தை மையமாகக் கொண்டு ஏனைய மாவட்ட அலுவலகங்களின் மூலம் சாரதி அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்படும் போது, இரண்டு பிரதான முறைகள் கையாளப்படுகின்றன.

அவையாவன,

1. Online **(ஆன்லைன்)**

வேரஹெர அலுவலகத்தை மையமாக கொண்டுஅம்பாந்தோட்டை, அநுராதபுரம், கம்பஹா, களுத்துறை, குருணாகல், மொனறாகலை, யாழ்ப்பாணம் மற்றும் கண்டி ஆகிய மாவட்ட அலுவலகங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

2. Off Line **(ஆ/ப்லைன்)**

ஏனைய மாவட்ட அலுவலகங்களில், சாரதி அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கும்போது இத்திட்டம் கடைப்பிடிக்கப்படுகின்றன.

வேரஹெர அலுவலகத்தின் சாரதி அனுமதிப்பத்திரங்களை அச்சிடுவதற்கு மேலதிகமாக ஹம்பாந்தோட்டை மற்றும் அநுராதபுர மாவட்ட அலுவலகங்களில் சாரதி அனுமதிப்பத்திரங்களை அச்சிடும் பொறிமுறையொன்று தாபிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் தகவல் தொழிநுட்பத்தின் துணையுடன் இன்னுமொரு துறையில் கால் பதித்துள்ளது. சாரதி அனுமதிப்பத்திர எழுத்துமூலப் பரீட்சையை கணனியின் துணையுடன் (Touch Screen) செயற்படுத்து முகமாக புதிதாக வடிவமைக்கப்பட்ட கணனிமயப்படுத்தப்பட்ட பரீட்சையானது சேவை பெறுநர்களுக்காக 2018 ஜூலை மாதம் 12 ஆந் திகதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

திணைக்களத்தின் பணிகளை வினைத்திறன் வாய்ந்த வகையிலும் துரிதமாகவும் நிறைவேற்றுவது போன்றே மிக்க வெளிப்படைத்தன்மையுடன் பரீட்சைகளை நடாத்துவதற்காக எடுக்கப்பட்ட ஒரு நடவடிக்கையாக இதனைக் குறிப்பிடலாம். இதன்போது குறித்த பரீட்சார்த்தி கணனித் திரையில் (Touch Screen) காணப்படும் வினாக்களுக்கு விடையளித்ததன் பின்னர் அக்கணமே தமது பெறுபேறினை கணனியின் மூலம் உடனடியாக தாம் அறிந்து கொள்ளக் கூடிய ஒரு விசேடமான முறை இதுவாகும். தொடர்ந்தேர்ச்சையாக இம் முறைமையை அனைத்து மாவட்ட அலுவலகங்களுக்கும் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

அவ்வாறே, அமைச்சரவைத் தீர்மானத்தின் அடிப்படையில் சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குதலுடன் தொடர்புடைய செயன்முறைப் பரீட்சைகளை, தகைமை பெற்ற வெளியார் தரப்பினர்களான இலங்கை போக்குவரத்து சபை மற்றும் இலங்கை ஓட்டோமொபைல் அசோசியேசன் நிறுவனத்தினால் நிறைவேற்றிக்கொள்வதற்குப் பொருத்தமான முறைமைகளை உள்ளடக்கிய வரைவொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

3. **புகை தர நிர்ணய பரிசோதனைகளைக் கண்காணித்தல் (சுற்றாடலைப் பாதுகாக்கும் நோக்குடன்)**

சுற்றாடல் மாசடைவதைத் தவிர்த்து,வாகனங்களில் இருந்து வெளியேற்றப்படுகின்ற சுற்றாடல் மாசடையக் கூடியவாறான புகையைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் 2008 சனவரி மாதம் 25 ஆந் திகதி வெளியிடப்பட்ட இல. 1533/17 ஐக் கொண்ட அதிவிசேட வர்த்தமானியின் கட்டளை மற்றும் 2009 ஆண்டின் 08 ஆம் இலக்கமுடைய மோட்டார் வாகன (திருத்தப்பட்ட) சட்டத்திற்கு அமையவும்,இல. 1557/14 தேசிய சுற்றாடல் குறித்த (புகை தரநிர்ணய எரிபொருள் மற்றும் வாகன இறக்குமதி நியமங்கள்) அதி விசேட வர்த்தமானிக்கமைய 2008 நவம்பர் மாதம் 17 ஆந் திகதியில் இருந்து நடைமுறைப்படுத்தப்படும் வகையில் புகை தரநிர்ணய பரிசோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. அவ்வாறே புதிய தரநியமங்கள் 2014.11.05 ஆந் திகதி வெளியிடப்பட்டதுடன்,அத் தரநியமங்கள் 2016 செப்தெம்பர் 15 ஆந் திகதியில் இருந்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.அத்துடன் அவை பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன் மக்களுக்கும் அது குறித்து விழிப்பூட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன.

அவ்வாறே, நடமாடும் புகை தரநிர்ணய பரிசீனை உபகரணங்கள் தொடர்பான பெறுகை

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன்,பேராதனை மற்றும் மொரட்டுவ பல்கலைக்கழகங்கள், மற்றும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்துடன் புகை தரநிர்ணய அளவீடு மற்றும் அது குறித்த ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இலங்கை போக்குவரத்துச் சபையினால் வாகன பரிசீலனை தொடர்பாக 10 புகை தரநிர்ணய உபகரணங்கள் பெறப்பட்டுள்ளதுடன்,அவ்வுபகரணங்கள் பகிர்ந்தளிப்பதற்கும்,அப்பரிசீலனைத் தரவுகளை வலையமைப்பில் தரவேற்றம் செய்வதற்கும்,தகுந்த டிப்போக்கள் மற்றும் அச் செயன்முறை தொடர்வதற்கு தகுதி வாய்ந்த அலுவலர்களைப் பயிற்றுவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

வீதிகளில் ஓட்டிச் செல்லப்படுகின்ற வாகனங்களைப் பரீட்சிப்பதற்காக குழுக்களாக இணைந்து வீதிப் பரிசோதனை மற்றும் ஸ்தலப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும். அதன்போது 4,518 வீதிப் பரிசோதனைகள், இவ்வாண்டின் சனவரி மாதத்தில் இருந்து டிசம்பர் 31 வரை மேற்கொள்ளப்பட்டுள்ளன. அக் காலப்பகுதியில் 1834 புகை கசியும் வாகனங்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன், அது தொடர்பில் உரிமையாளர்கள் அறிவுறுத்தப்பட்டு, அவற்றை பரிசீலனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. அவ்வாறே, அதே இடத்திலான புகைப் பரிசோதனைகள் 3015உம் இக்காலப்பகுதியுள் மேற்கொள்ளப்பட்டுள்ளது

அதற்கு மேலதிகமாக புகை தரநிர்ணய பரிசோதனை தரவு முகாமைத்துவம் தொடர்பாக online தரவு திரட்டல் முறைமையை வலுவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அத் தரவுகளில்e–revenue license ஐப் பெற்றுக் கொள்வதற்கு முடியும். மேலும்,வாகன புகை தரநிர்ணய பரிசோதனை நிலையங்களினால் 2018.01.01 இலிருந்து 2018.12.31ஆந் திகதியளவில் க்லின்கோ லங்கா மற்றும் லாப் கோ இரீ ஆகிய இரு நிறுவனங்களின் மூலம் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் வாயு தரநிர்ணயப் பிரிவின் கண்காணிப்பின் கீழ் 431 நிலையங்களில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

அவ்வாறே, வாயு சுற்றோட்ட நிலைமைகளைப் பரசோதிப்பதற்கான உபகரணம் தொடர்பான கேள்வி நடைமுறைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன், அவ்வாயு சுற்றோட்ட நிலைமைகளை அளவிடும், நிலையான 02 மத்திய நிலையங்கள், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் வளாகத்தில் நிறுவப்பட்டுள்ளதுடன், வாயு நிலைமைகளை அளவிடுவதற்கான நடமாடும் அலகொன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது. அவ்வுபகரணங்களின் ஊடாக வாயு நிலைமைகளை அளவிடுவதற்காக, மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு அவ்வுபகரணங்ளை உரிய முறையில் ஒப்படைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வுபகரணங்கள் ஊடாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளை, வாகன புகைப் பரிசோதனை கருத்திட்டத்தின் விளைவுகளை ஆய்வுசெய்வதற்குப் பயன்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

### 4. வீதிப் பாதுகாப்பு தொடர்பான பணிகள்

திணைக்களத்தின் பிரதான பணிகளுக்கு மேலதிகமாக வீதிப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் பொருட்டு வெளி நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கமைய இதுவரை பிரதான பல முன்னோடிச் செயற்திட்டங்கள் பேணப்பட்டு வருகின்றன.

## 2.3 வருடாந்த செயலாற்றத் திட்டத்தின் மூலோபாய செயற்பாடுகளின் முன்னேற்றம்

### 2.3.1 சாரதிகளுக்கான முன்னேற்ற புள்ளி முறைமையை அமுல்படுத்தல்

2017ஆம் ஆண்டு 18ஆம் இலக்க மோட்டார் வாகன (திருத்தப்பட்ட) சட்டத்தின் மூலம் சாரதி முன்னேற்ற புள்ளி வழங்கல் முறையின் பெயரானது,“சாரதி தேர்ச்சியின்மைக்கான புள்ளி வழங்கல்” என திருத்தப்படுதல், மற்றைய தண்டனைகளுக்குப் புறம்பாக தேர்ச்சியின்மைப் புள்ளிகளை உள்ளடக்குவதற்கு கட்டளை வழங்கும் குறித்த ஏற்பாடுகளை கௌரவ

நீதவான்களுக்கு வழங்குதல் மற்றும் தேர்ச்சியின்மை புள்ளிகளை உள்ளடக்கும் அதிகாரத்தை பொலிஸ் மாஅதிபர் ஊடாக பொலிஸ் அலுவலர்களிடம் ஒப்படைப்பதற்கு இயலுமான வகையில், மோட்டார் வாகன சட்டத்தின் 133 “அ” மற்றும் “ஆ” பிரிவுகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

சாரதி தேர்ச்சியின்மை புள்ளி வழங்கல் முறையை பிரயோக ரீதியாக நடைமுறைப்படுத்துவதற்கு, இலங்கைப் பொலிசுக்கு அப்புள்ளிகளை உள்ளடக்கக் கூடிய வகையில் குறித்த கணனி நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைக்க வேண்டியுள்ளது. இவை போதைப்பொருள் கட்டுப்பாடு மற்றும் ஆபத்துக்களைக் குறைப்பது தொடர்பான, அதிமேதகு சனாதிபதியின் தலைமையில் இடம்பெறுகின்ற கூட்டங்களின் போது பரிசீனைக்குட்படுத்தப்படுவதால், அது தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினரது பங்கேற்றலுடன், போக்குவரத்து மற்றும் சிவில் விமானப்போக்குவரத்து அமைச்சின் செயலாளரது தலைமையில் 2018.12.07ஆந் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், “வாகன குற்றங்கள் தொடர்பான தரவுகள், தகவல் முகாமைத்துவம், உடனடி தண்டப்பணம் சேகரித்தல் மற்றும் சாரதி தேர்ச்சியின்மை புள்ளி வழங்கல் முறையை நடைமுறைப்படுத்துவதற்காக விரிவான ஒருங்கிணைந்த இலத்திரனியல் தீர்வொன்றை நடைமுறைப்படுத்துதல்” என்ற தலைப்பில் அரச பாதுகாப்பு அமைச்சின் ஊடாக அமைச்சரவைப் பத்திரமொன்று தாக்கல் செய்யப்படவுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. அதன் பின்னர் சாரதி அனுமதிப்பத்திரங்கள் தொடர்பாக அந்நிலைக்கு இணையொத்த புள்ளிகளை உள்ளடக்குதல் மற்றும் அது சம்பந்தமான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக இல. 1726/12 மற்றும் 2011.01.05 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட சாரதி முன்னேற்ற புள்ளி வழங்கும் கட்டளைகளை திருத்தியமைப்பதற்காக போக்குவரத்து அமைச்சு, இத்திணைக்களம், இலங்கை பொலிஸ் உத்தயோகத்தர்களின் பங்கேற்றலுடன் ஆரம்ப கட்ட கலந்துரையாடலொன்றை நடாத்தி அடிப்படை வரைவொன்றைத் தாயாரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

### 2.3.2 ஈ - மோட்டரிங் செயற்றிட்டம்

வாகனங்களைப் பதிவு செய்யும் பணிகள் தொடர்பாக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம் கையாளப்பட்டு மிகச் சிறந்த துரித சேவைகளை வழங்குவது ஈ -மோட்டரிங் செயற்திட்டத்தின் பிரதான குறிக்கோளாகும். இது தொடர்பான செயற்பாட்டினை மீளுருவாக்கும் செயற்திட்டம் ((Business process Re-engineering - BPR) நிறைவு செய்யப்பட்டதுடன்,அதன்போது இனங்காணப்பட்ட புதிய செயற்பாடுகளுக்கு அமைய ஈ - மோட்டரிங் செயற்திட்டத்தை உருவாக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மீளுருவாக்கப்பட்ட புதிய செயற்திட்டங்கள் பின்வருமாறு.

1. வாகன இறக்குமதியாளர்கள், வாகன உற்பத்தியாளர்கள் மற்றும் வாகனப் பதிவு
2. வாகனத்தின் முதலாவது உரிமையாளர் பதிவு
3. வாகன உரித்து மாற்றல் மற்றும் வாகனத்தின் ஏனைய மாற்றல்களுக்கான பதிவு
4. வாகன வரி திரட்டல் நிறுவனம் மற்றும் சேவை வழங்குநர்களை நெறிப்படுத்தல்.
5. முறைப்பாடுகளை விசாரணை செய்தல் மற்றும் எதிர்ப்புக்களை நெறிப்படுத்தும் செயன்முறை
6. ஆவண முகாமைத்துவ செயன்முறை.

இதற்கு உரிய பணிகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன், 2018.05.20 ஆந் திகதி செயற்திட்டத்தைத் தெரிவு செய்த மெட்ரோபொலிடன் எட்வான்ஸ் ரெக்னொலொஜி தனியார் கம்பனிக்கு வழங்குவது தொடர்பாக அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன், தெரிவு செய்யப்பட்ட கம்பனிக்கு செயற்திட்ட முறைமையாக்கப் பத்திரம் 2018.05.31 ஆந் திகதி வெளியிடப்பட்டது. அவ்வாறே தற்போது செயற்திட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

2018 ஒகஸ்ட் 15ஆந் திகதி தொடக்கம் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் மெட்ரோபொலிடன் நிறுவனத்தின் தரவுத்தளத்தை அபிவிருத்தி செய்யும் உத்தியோகத்தர்களிடையே,BPR (Business Process Reengineering) அடிப்படையில் புதிய மென்பொருள் கட்டமைப்பொன்று தயாரிக்கப்பட வேண்டிய விதம் தொடர்பான கலந்துரையாடலொன்று நடாத்தப்பட்டது. மீசு அடிப்படையில் புதிய மென்பொருள் கட்டமைப்பின் அனைத்து செயற்பாடுகளும் 06 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதுடன், அந்த ஒவ்வொரு பகுதிகளையும் அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான விடயங்கள் மற்றும் விளக்கங்கள் என்பன திணைக்கள உத்தயோகத்தர்களால் மெட்ரோபொலிடன் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

## 2.4 வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகளின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்ட மூலதனச் செயற்திட்டங்களின் முன்னேற்றம்

- **வேரஹர உப அலுவலகத்தின் நிர்மாணப் பணிகள்**

சாரதி பயிற்சி ஓடுபாதையின் பணிகள் முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன் அதன் வெளியே பாதுகாப்பு கமெரா முறைமை (CCTV Camera) மற்றும் பிரதான கட்டுப்பாட்டு மையம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

- **வேரஹர ஆவணவகத்தில் நவீன வசதிகளையுடைய "ரெக்" பொருத்துதல்**

நிர்மாணிக்கப்பட்ட ஆவணவகத்தில் நவீன வசதிகளையுடைய "ரெக்" பொருத்தும் பணிகள் முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன், உறைகளில் வைக்கப்பட்டுள்ள ஆவணங்களை இலகுவாக கண்டு பிடிப்பதற்கு முடியுமானவாறு இலக்கமிட்டு, பொருத்தப்பட்டுள்ள "ரெக்கில் ஆவணங்களை பரப்பும் வேலைகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- **மாவட்ட அலுவலகங்களில் நிருமாணிப்புப் பணிகள்**

திணைக்களத்தினது மாவட்ட அலுவலகங்களின் மூலம் பிரதானமாக, சாரதி அனுமதிப் பத்திரங்களை பொறுப்பேற்றல், அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு உரிய எழுத்துமூல மற்றும் பிரயோக ரீதியான பரீட்சைகள் நடாத்தப்படுகின்றன. குருனாகலை, கம்பஹா, களுத்துறை, ஹம்பாந்தோட்டை, அநுராதபுரம், மொனராகலை, யாழ்ப்பாணம், கண்டி ஆகிய மாவட்ட அலுவலகங்களின் மூலம், Online வசதியின் கீழ் சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கான பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. பிற மாவட்ட அலுவலகங்களில அனுமதிப்பத்திரம் வழங்கலின் போது Offline முறை கடைப்பிடிக்கப்படுகின்றன

- **சனாதிபதியின் உத்தியோகபூர்வ மக்கள் சேவையின் கீழ் திணைக்களத்தின் பங்களிப்பு**

சனாதிபதியின் உத்தியோகபூர்வ மக்கள் சேவையின் கீழ் வட மாகாணத்திலுள்ள பிரதேச செயலகங்களை உள்ளடக்கிய வகையில் நடமாடும் சேவைகள் பல நடாத்தப்பட்டன.

அவ்வாறே நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் வழிகாட்டலின் கீழ் மொணறாகலையில் நடாத்தப்பட்ட V2025 Enterprises Sri Lanka கண்காட்சியின் போது இத்திணைக்களத்தின் கண்காட்சிக் கூடமொன்றும் அமைக்கப்பட்டது.

- **மனிதவள முகாமைத்துவம் தொடர்பாக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.**

திணைக்களத்தில் பணியாற்றுகின்ற அலுவலர்களின் வினைத்திறனையும், உற்பத்தித்திறனையும் மேலும் வலுவூட்டும் பொருட்டு இவ் ஆண்டில் ரூபா 2 மில்லியன் ஒதுக்கீடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், 2018.12.31ஆந் திகதியளவில் 1.85 மில்லியன்கள் செலவிடப்பட்டுள்ளன. இதன்போது அலுவலர்கள் உள்நாட்டு, வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வெளிச்

செயற்பாடுகளுடன் கூடிய பயிற்சிப் பட்டறைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அதற்கமைய ஆகஸ்ட் மாத இறுதியளவில் வெளிநாட்டுப் பயிற்சி தொடர்பாக 04 அலுவலர்களும், தரமிக்கே பணிச் சூழலொன்று தொடர்பான தொழிற்சார் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றே அலுவலக உதவியாளர் மற்றும் சாரதிகள் 90 பேருக்கு, பத்தரமுல்லையில் அமைந்துள்ள தேசிய தொழிற்கல்வி நிறுவகத்தில் நடாத்தப்பட்டது.

மேலும், அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் திணைக்கள எழுதுநர்கள் 100 பேருக்கு வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்கான ஆரம்பச் செயலமர்வுகளும் நடாத்தப்பட்டன.
350 சாரதி ஆலோசகர்களை பதிவு செய்வது தொடர்பாக ஒரு மாதகாலம் வேரஹர மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் அலுவலக வாளாகத்தில் பயிற்சி செயலமர்வு நடாத்தப்பட்டது.

திறன் விருத்தி அதிகார சபையின் ஊடாக நடாத்தப்பட்ட தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் தொடர்பான பாடநெறியிலும், தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட தமிழ்மொழி பயிற்சி பாடநெறியிலும், இத்திணைக்கள உத்தயோகத்தர்கள் பங்குபற்றியுள்ளார்கள்.

மேலும், "How to keep your start hapy" என்ற தலைப்பின் கீழ் Colombo School of Business Management நிறுவனத்தில் ஒரு செயலமர்வு நடாத்தப்பட்டது. இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தில் (SLIDA) திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் 200பேருக்கு அலுவலக கடமைகளை மேற்கொள்ளும் போது, அதன் சட்டரீதியான தன்மை, தொழிநுட்ப அறிவு, மனப்பாங்கு விருத்தி என்பனவற்றை நோக்காகக் கொண்டதும், கணக்காய்வு சட்டம் தொடர்பானதும் இலஞ்ச ஊழல் சட்டத்தின் ஏற்பாடுகள் தொடர்பிலும் செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

## 2.5 2018 ஆம் வருடத்திற்கான செயற்றிறன் முன்னேற்றம்

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் நடைமுறைப்படுத்தப்படும் பணிகளின் தற்போதைய நிலை

- **மோட்டார் வாகன சட்டத்தை திருத்தியமைத்தல்.**

மோட்டார் வாகன சட்டத்தில் துரிதமாக திருத்தம் செய்ய வேண்டுமென இனங்காணப்பட்ட திருத்தங்கள் உள்ளடங்கிய சட்டம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டு 2017.10.03 திகதி அது அங்கீகரிக்கப்பட்டது. அது 2017 இல் 18 ஐக் கொண்ட மோட்டார் வாகன (திருத்தம்) சட்டமாக அது பிரகடனப்படுத்தப்பட்டது.

மோட்டார் வாகன சட்டத்தின் கீழ் வாகன குற்றங்களுக்கான தண்டப்பண திருத்தத்தின் கீழ் மோட்டார் வாகன சட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள் பற்றிய சட்டத்தின் 4 ஆம் பந்தியின் கீழ் மேம்பாடு அறிக்கையிடப்பட்டுள்ளது.

- **புதிய வீதி சமிக்ஞைகளை அறிமுகப்படுத்தல்.**

2015.11.12 ஆந் திகதிய மற்றும் 1940/21ஆம் இலக்க, 2015ஆம் ஆண்டு 02ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள (மோட்டார் வாகன வீதி மற்றும் அடையாளங்கள், சைகைகள்) கட்டளைகள் ஊடாக புதிய வீதி சைகைகள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. அதற்குப் பின்னர் அது தொடர்பில் திருத்தங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

- **மோட்டார் வாகன சட்டத்தின் கீழ் வாகன குற்றங்கள் தொடர்பான தண்டப் பணத்தில் திருத்தம் மேற்கொள்ளல்**

மோட்டார் வாகனச் சட்டத்தின் தண்டப் பண திருத்தம் சம்பந்தமாக பரிசீலித்து சிபார்சு செய்வதற்கு அதிதேகு சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட குழுவின் சிபார்சுகளுக்கு அமைய

கௌரவ போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அது தொடர்பாக பெறப்பட்ட அமைச்சரவை அங்கீகாரத்திற்கமைய அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டு,

i. 2017 இல 18 ஐக் கொண்ட மோட்டார் வாகன (திருத்த) சட்டத்தின் ஒதுக்கீட்டுக்கமைய 11 ஆக அட்டவணைப்படுத்தப்பட்ட குற்றங்கள் தொடர்பாக அத்தலத்திலேயேயான தண்டப் பணம் 208.01.15 ஆந் திகதிய மற்றும் 2054/9 ஐக் கொண்ட அதிவிசேட வர்த்தாமனியில் பிரசுரிக்கப்பட்டுள்ள 2018 இல. 01 ஐக் கொண்ட ஸ்தல தண்ட கட்டளைகள் மூலம் வெளியிடப்பட்டுள்ளதுடன், அக் கட்டளைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

ii. மேலே குறிப்பிடப்பட்ட சிபாரிசுகள் மற்றும் அமைச்சரவையின் அங்கீகாரத்தின் கீழான பாரிய குற்றங்கள் தொடர்பான தண்டப் பண திருத்தம் குறித்த சட்ட வரைவு, சட்ட வரைஞர் திணைக்களத்தினூடாக தயாரித்து, கௌரவ சட்டமா அதிபரினால் இணக்கச் சான்றிதழ் வழங்குகையில், அறிக்கையிடப்பட்டுள்ள திருத்தங்கள் தொடர்பான விளக்கமளிப்பு கௌரவ சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதற்கமைய குறித்த இணக்கச் சான்றிதழ் கௌரவ சட்டமா அதிபரிடமிருந்து பெறப்பட்டதன் பின்னர் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக அனுப்ப வேண்டியுள்ளதுடன், அவ் அனுமதி பெறப்பட்டதன் பின்னர் பாராளுமன்றத்திற்கு அதனை சமர்ப்பித்தல் வேண்டும்.

**2.6 2018 ஆண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் உள்ளபடி வருமானம்**

| வருமான விபரம்.·. வருமானத் தலைப்பு | 2018 இல் மதிப்பிடப்பட்ட வருமானம்'ரூ.மி. | 2017.12..31 இல் உள்ளபடி வருமானம் 'ரூ.மி. | 2018.12.31 இல் உள்ளபடி வருமானம் 'ரூ.மி. |
|---|---|---|---|
| சொகுசு மோட்டார் வாகன வரி | 1,600.00 | 1,286.9 | 1,036 |
| மோட்டார் வாகன விற்பனை வரி | 80.00 | 69.5 | 93.2 |
| மோட்டார் வாகன போக்குவரத்துச் சட்டத்தின் கீழ் அறவிடப்படும் கட்டணம் | 9,800.00 | 9,171.9 | 10,432.6 |
| தீர்வை சலுகை அனுமதிப்பத்திரத்தின் கீழ் அறவிடப்படும் கட்டணம் | 100.00 | 132.6 | 40 |
| **மொத்த வருமானம்** | **11,580.00** | **10,660.9** | **11,601.8** |

மூலம் : மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்

செலவு

| செலவு விபரம் /செலவுத் தலைப்பு | 2018 இல் மதிப்பிடப்பட்ட செலவு ரூ.மி. | 2017.12..31 இல் உள்ளபடி செலவு ரூ.மி. | 2018.12.31 இல் உள்ளபடி செலவு ரூ.மி. |
|---|---|---|---|
| **மீண்டுவரும் செலவினம்** | 2,142.7 | 1,968 | 2,100.2 |
| **மூலதனச் செலவினம்** | 1,189 | 1,218.7 | 1,182.6 |
| **மொத்தச் செலவு** | 3.331.7 | 3,186.7 | 3,282.8 |

## 2.7 2019ஆம் வருடத்திற்கான எதிர்பார்ப்புக்கள்

- தற்போது ஒன்லைன் தொடர்புகள் அற்ற மாவட்ட அலுவலகங்களுக்கு அவற்றை வழங்குதல் மற்றும் நவீனமயப்படுத்துதல்.

- கண்டி ,மொணறாலை, அம்பாறை மற்றும் பதுளை மாவட்டங்களை உள்ளடக்கும் விதத்தில், மீகஹகிவுல பிரதேச செயலகப் பிரிவில் மாதிரி சாரதி பயிற்சி ஓட்டப்பதை மற்றும் நவீன வசதிளைக் கொண்ட பயிற்சி நிலையமொன்றை நிருமாணித்தல்.

- ஈமோட்டரிங் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்
- கருத்திட்டத்திற்குரிய மென்பொருளை அபிவிருத்தி செய்தல், வன்பொருள் மற்றும் பயோமெட்றிக் உபகரணங்கள் Biometric Accessories மற்றும் கணணி இயந்திரங்ளைப் பொருத்துதல் மற்றும் அத்தோடு ஈ - மோட்டரிங் செயற்படுத்தப்படும் திணைக்களங்களில் புதிய பிரிவுகளை ஆரம்பித்து கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.

- கம்பஹா, குருணாகல் மாவட்ட அலுவலங்களில் மாதிரி சாரதி பயிற்சி ஓட்டப் பாதையைத் தயாரித்தல்.

(3)

# இலங்கை போக்குவரத்துச் சபை

## 3.1 அறிமுகம்

1957 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் கீழ் 1958 ஆம் ஆண்டு யனவரி மாதம் முதலாம் திகதி அவ்வமயம் தாபிக்கப்பட்டிருந்த பஸ் கம்பனிகள் தேசிய மயமாக்கப்பட்டதன் மூலம் இலங்கை போக்குவரத்துச் சபை தாபிக்கப்பட்டது. அதன் பின்னர்பலமாற்றங்களின்பின்னர் 2005 ஆம்ஆண்டின் 27 ஆம்இலக்கஇலங்கைப்போக்குவரத்து ச்சபைச்சட்டத்தின்மூலம்இலங்கைப்போக்குவரத்துச்சபை (இ.போ.ச) தாபிக்கப்பட்டது.

**தொலை நோக்கு**

“பிராந்தியத்தின் அதி சிறந்த பயணிப் போக்குவரத்தாளர்”

**குறிக்கோள்**

“பொது மக்களுக்கு பாதுகாப்பான, நம்பத்தகுந்த, வசதிகளுள்ள வீதிப்பயணிப் போக்குவரத்துச் சேவையை நியாயமான கட்டண முறையின் கீழ் சேவை அர்ப்பணிப்புடன் செயலாற்றும் உற்பத்திவளமிக்க பணியாளரின் மூலம், சகல வளங்களையும் உச்ச நிலையில் பயன்படுத்தி பெற்றுக்கொடுத்து, பொருளாதார ரீதியில் சமநிலையைப் பேணும் நிறுவகமாக இயங்கல்.”

## 3.2 2018 ஆம் ஆண்டில் பஸ் செயலாற்றலில் ஏற்பட்ட முன்னேற்றம்

கடந்த சில மாதங்களில் செயலாற்றலுக்க விடுவிக்கப்பட்ட பஸ்களின் தொகை 5,963 ற்கு அதிகமாயுள்ளதுடன் தற்போதைய பஸ் அணியை பயன்படுத்தி இந்நிலை பேணப்பட்டதாயினும், இப் பஸ் அணிக்கு புதிய பஸ்களைச் சேர்க்கும் சார்பு குறைந்துள்ளமையாலும் பழைய பஸ்கள் கழிக்கப்படுகின்றமையாலும் இங்ஙனம் தொடர்ந்து செயலாற்றல் நடைபெறுகிறது.

2018 ஆம் ஆண்டில் சராசரியாக நாளென்றுக்கு 5,242 பஸ்களிற்கு கூடுதலாக செயலாற்றப் பட்டிருப்பதுடன், இத்தொகை செயலாற்றலுக்கு அளிக்கப்படும் பஸ்களில் 88% ஆக பேணுவதற்கு எம்மால் முடிந்துள்ளது.

2018 ஆம் ஆண்டில் 5,242 பஸ்கள் அளவில் ஈடுபடுத்தி 446 மில்லியன் கி.மீ செயலாற்றப்பட்டிருப்பதுடன், இது நாளொன்றுக்கு 1.2 மில்லியன் கி.மீற்றரைக் குறிக்கிறது. இதற்கேற்ப எமது பஸ்கள் நாளொன்றுக்கு பஸ் ஒன்றுக்கு 228 கி.மீற்றர் அளவில் செயலாற்றியுள்ளன.

2018 ஆண்டில்இ.போ.ச அதன் பிரதான வருவாய் வளமான வழிப்பட்டியல் வருவாயாக 29,169 மில்லியன் ரூபாவை ஈட்டியுள்ளது. செயலாற்றிய கி.மீற்றர் தொகையுடன் இதை ஒப்பிடும் போது ஒரு கிலோ மீற்றருக்கு ஏறத்தாழ ரூபா 65.36 வருவாயாக உள்ளது.

2018 ஆம் ஆண்டு இ.போ.ச பஸ்கள் மூலம் 993 மில்லியன் பயணிகள் ஏற்றிச் செல்லப்பட்டிருப்பதுடன் இதில் சாதாரண பயணச்சீட்டுடன் பயணித்தோர்தொகை 720 மில்லியனாகவும் பருவகாலச்சீட்டுடன் பயணஞ் செய்பவர்கள் 230 மில்லியனாகவும், இலவச செல்கைச் சீட்டுடன் பயணஞ் செய்பவர்கள் 41 மில்லியனாகவும் காணப்படுகிறது.

## 3.3. சமூகநன்மைக்காகஇ.போ.சவின்பங்களிப்பு

- **விடியற்காலை முதல் பிந்திய இரவு கடைசி பயணங்கள் செயலாற்றல்.**

இலங்கையின் பிரதேசங்கள் யாவும் அடங்கலாக விடியற்காலை முதல் பிந்திய இரவு கடைசிப் பயணங்களையும் சேவையாற்றுவதன்மூலம் நாட்டின் பொருளாதார பங்களிப்பிற்கு முதுகெலும்பாக

விளங்குகிற பணியாளர்களின் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றுவதில் இ.போ.ச ஆற்றும் சேவைகளினால் கடந்த காலங்களிலிருந்து அதற்கு ஏற்பட்ட நட்டம் சொல்லுந்தரமன்று. ஆயினும் இ.போ.ச சமூக பொறுப்பெனக் கருதி தொடர்ச்சியாக இச் சேவைகளையாற்றி வருகிறது.

- **கிராமிய பஸ் சேவை செயலாற்றல்**

கிராம பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக கிராமங்களையும் நகரங்களையும் இணைக்கும் போக்குவரத்து ஊடகமாக செயற்படும் இ.போ. சபையின் சேவைகள் நட்டத்திலேயே இயங்குகின்றன. இதனால் சிறிய பஸ்களைப் பயன்படுத்தி கிராமிய வழிகளைப் பலப்படுத்தி இச் சேவைகளை இயக்குவதற்கு நடவடிக்கை எடுப்பது இந் நாட்டின் கிராமிய பொருளாதார சுதந்திரத்திற்கு தேவையான சேவையாகும்.

- **பாடசாலை சேவை பஸ் செயலாற்றல்**

இ.போ.சபையிடமுள்ள வரையறுக்கப்பட்ட வளங்களின் மூலம் எதிர்கால பரம்பரைக்கு இடமளிப்பதற்காக பாடசாலைக்குப் பிள்ளைகளை குறித்த நேரத்திற்கு ஏற்றிச் செல்வதன் மூலமும், மீண்டும் வீட்டுக்குக் கொண்டு செல்வதன் மூலமும் தேசிய செயலாற்றலில் இ.போ.ச ஈடுபட்டுள்ளது.

இந்நோக்கத்திற்காக நாடுபூராவும் அண்ணளவாக 3000 பஸ்கள் இச்சேவையில் ஈடுபடுகின்றன.இதற்கு மேலதிகமாக சிசு சறிய திட்டத்தின் கீழ் இ,போ.ச 744 பஸ்களை செயலாற்றலுக்கு ஒதுக்கியுள்ளது.

- **பருவகாலச்சீட்டு இலவசபயணச்சீட்டுசேவை**

பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்கள், வளரந்தோர் ஆகிய பல்வேறு மட்டத்தினரினதும் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு இ.போ.ச மேற்கொள்ளும் நடவடிக்கை மூலம் நாட்டிலுள்ள பயணம் செய்யும் பொது மக்கட்கு பொருளாதார ரீதியாக நிவாரணம் கிட்டுகிறது. அதனடிப்படையில் 2018ஆம் ஆண்டில் இந்த வசதிகளை பயன்படுத்தி 230 மில்லியன் பயணிகள் இ.போ.ச பஸ்களில் பயணித்துள்ளனர்.

- **தேசிய விழாக் காலங்களிலும் விசேட நிலைமைகளின்போதும் நடைபெறுகின்ற பஸ் சேவைகள்**

2018 ஆம்ஆண்டில் சிங்கள, தமிழ், புத்தாண்டு விழா, வெசாக், பொசோன் விழா, கண்டி, கதிர்காம அசல பெரகெர விழா, சிவனொளிபாத மலை சேவை ஆகிய சமய முக்கியத்துவம் வாய்ந்த விழாக்களுக்கும் விசேட பஸ் சேவைகள் செயற்படுகின்றன. இதற்கு மேலதிகமாக பாராளுமன்ற ஊழியர்களின் பிரயாணத் தேவைகளை பூர்த்தி செய்தல், பல்கலைக்கழக மாணவர்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்கல், மஹரகம புற்று நோய் வைத்தியசாலையை மையமாக வைத்து போக்குவரத்து வசதிகளை வழங்கல், முப்படையினருக்கான போக்குவரத்து சேவைகளை வழங்கல், தேசிய இளைஞர் முன்னணிக்கான போக்குவரத்து வசதிகளை வழங்கல், அலுவலக சேவைகளுடன் தொடர்புடைய போக்குவரத்துச் சேவைகளை வழங்கல், தேசிய விழாக்களின் போது அவசிய போக்குவரத்துசேவை வழங்கல் போன்ற சேவைகள் இ.போ.ச மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

- **அதிவேக நெடுஞ்சாலைகளில் போக்குவரத்துச் சேவை**

இலங்கையின் வீதி முறையில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அதிவேக நெடுஞ்சாலை முறைக்குள் செயலாற்றுவதற்கு விதந்துரைக்கப்பட்ட பஸ்களை ஈடுபடுத்துவதன் மூலம் பயணிப் போக்குவரத்து நடவடிக்கைகளில் இ.போ.ச ஈடுபடக்கூடியதாயிற்று. அதற்கேற்ப தற்போது இலங்கையில் அதிவேக நெடுஞ்சாலை முறையூடாக செயலாற்றும் எமது உல்லாச பஸ்கள் நவீன உலகிற்கேற்றவாறு அமைந்துள்ளன. அதற்கேற்ப தெற்கு வழியில்

மேலதிகமாகச்செயலாற்றப்படும் 15பஸ்களுடன் 63 பஸ்களும், கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை வழியில் மேலதிகமாகசெயலாற்றப்படும் 7 பஸ்களுடன் 31 பஸ்களும் செயலாற்றப்படுகின்றன.

- **இ.போ.ச புகையிரதஇணைந்தசேவை**

தூர இடங்களில் இருந்து புகையிரதம் மூலம் வரும் பயணிகட்கும் அலுவலகம் முடிந்து புகையிரத மூலம் வீடுசெல்லும் ஊழியர்கட்கும் தமது சேரிடங்கட்கு செல்லக்கூடியவாறு கொழும்பு நகரை மையப்படுத்தி புகையிரத நிலையங்களில் இ.போ.ச-புகையிரத இணைப்பு சேவையை நடாத்துவதற்கான சகல ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளதுடன்இதற்காக 55 பஸ்கள்செயலாற்றப்படுகின்றன.

- **இ.போ.சவும்தனியார்துறையும் ஒன்றிணைந்த சேவை**

பயணங்களை செயலாற்றும் போது இ.போ.ச, தனியார்துறையுடன் இணைந்து போக்குவரத்து சேவைகளை மேற்கொள்வதுடன் தற்போது 11 பின்வரும் பிரதேசங்களில் 770 ஒருங்கிணைந்த சேவைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- **சமாந்தரமான போக்குவரத்துச் சேவைகள் செயலிழக்கும் போது இ.போ.ச அளிக்கும் சேவை**

சமாந்திரமான போக்குவரத்துச் சேவைகளில் அடிக்கடி ஏற்படுகின்ற செயலிழப்பினால் நிர்க்கதிக்கு உள்ளாகும் எமது மக்களுக்கு விசேட நிவாரண சேவை வழங்குவது இ.போ. சவாகும். இ.போ.சஅதனிடமுள்ளபஸ்வண்டிகளைப்பயன்படுத்தி கிராமங்களிலும் நகரங்களிலும் செயலாற்றும் பல்வேறு சந்தரப்பங்களில் இடருறும் மக்களுக்கு போக்குவரத்துவசதிகளை இ.போ.ச அளித்துள்ளது.

### 3.4 செயற்பாட்டு நிலை

2018 ஆம் ஆண்டுத் தொடக்க முதல் தற்போது வரை இ.போ.ச அதன் பஸ் செயலாற்றலின் போது பல சவால்களையும் தடைகளையும் எதிர்கொண்டது.ஆயினும் தன் வசமுள்ள பஸ் அணியைக் கொண்டு இலங்கை பூராவும் கிராமங்களிலும் நகரங்களிலும் பரந்து வாழும் பயணஞ் செய்யும் பொது மக்களுக்கு அதி உயர் சேவையை அளிக்க முடிந்தது. அதற்கேற்ப கடந்த சில மாதங்களின் செயலாற்று நிலை கீழ் வருமாறு.

| 2018 ஆம் ஆண்டு ஜனவரி - டிசம்பர் | | | |
|---|---|---|---|
| நாளொன்றுக்குசேவைக்களிக்கப்பட்டப ஸ்கள்தொகை | 5,963 | | |
| நாளொன்றுக்குசெயலாற்றப்பட்டபஸ்கள தொகை | 5,242 | | |
| செயலாற்றியகி.மீதொகை | 446,287,644 | | |
| | **மொத்தம் (ரூ.மில்)** | **மாதாந்தம் (ரூ.மில்)** | **கி.மீ ஒன்றுக்கு (ரூ.மில்)** |
| வழிப்பட்டியல் வருவாய் (ரூ.மில்) | 29,169 | 2,431 | 65.36 |
| மொத்த வருவாய் (ரூ.மில்) | 44,103 | 3,675 | 98.82 |

### 3.5 2018 ஆம் ஆண்டில் சேவை வழங்கல் வளர்த்திக்காக கையாளப்பட்ட புதிய கொள்கைகளும் செயற்பாடுகளும்.

- **2200 பஸ்செயற்திட்டம்**

2014ஆம் ஆண்டில் பஸ் அணியைநிலையாக மேம்படுத்தும் நோக்கில் தவணைக்கட்டணங்களில் பணம் செலுத்தும் அடிப்படையில் 2200 புதியபஸ்கள்கொள்வனவுசெய்யப்பட்டன.இதற்காக

2014 முதல் 2018 டிசம்பர் மாதம் வரை மொத்தம் 9,414.00மில்லியன்ரூபா செலுத்தப்பட்டது. இத்தொகையில் 3,994.05மில்லியன்'ரூபாதிறைசேரிநிதியிலிருந்தும் 5,419.95மில்லியன்ரூபாஇ.போ. சவருவாயிலிருந்தும்செலுத்தப்பட்டது.

### 3.6 நிதிமுன்னேற்றம்

2018 ஆம் ஆண்டுத் தொடக்க முதல் டிசம்பர் மாத வரை இ.போ..ச ஈட்டிய மொத்த வருவாய் 44,103 மில்லியன் ரூபாவாகும். இதில் பிரதான வளமான வழிப்பட்டியல் வருவாய் 29,169 மில்லியன் ரூபாவாகும். இத் தொகை மொத்த வருவாயில்ஏறத்தாழ 66% ஆகும். கிலோ மீற்றரொன்றுக்கு மொத்த வருவாய் ரூபா 98.82 ஆகவிருப்பதுடன் அதனுள் வழிப்பட்டியல் வருவாய் ரூபா 65.36 மட்டத்தில்பேணப்பட்டுள்ளது. வழிப்பட்டியலை அடுத்து பிரதான வருவாய் வளமான பருவகாலச் சீட்டு விற்பனை மூலம் 1048 மில்லியன் ரூபா ஈட்டப்பட்டிருப்பதுடன், அதற்கான பருவகாலச் சீட்டு மீள நிரப்பலாக 5000 மில்லியன் ரூபா பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விசேட வாடகை வருவாயாக 290 மில்லியன் ரூபா கிட்டியது. இத்தொகை மொத்த வருவாயில் உள்ளக்கப்பட்டுள்ளது. கடந்த 12 மாத காலத்தில் செயலாற்றல் செலவு 22,899 மில்லியன் ரூபாவாகும். இதில்கூடியதொகைஎரிபொருளுக்கு 14,238 மில்லியன்ரூபாசெலவிடப்பட்டுள்ளது. கடந்த 12 மாதத்திற்குள் எரிபொருள் விலை பல்வேறு சந்தரப்பங்களில் உயர்ந்தமையால், கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது இவ்வாண்டில் எரிபொருள் செலவு 1,608 மில்லியன் ரூபா மேலதிகமாக ஏற்பட்டுள்ளது.

இருப்பினும் செயலாற்றற் செலவைக் கழித்த பின்னர் 6,269 மில்லியன் ரூபா மீந்துள்ளதுடன் சாலை அடிப்படையில் பார்க்கும் போது தற்போதுள்ள சாலைகள் யாவும் நிதிப் பங்களிப்பு மட்டத்தைப் பேணக்கூடியதாயிருந்தது மகிழச்சிக்குரிய விடயமாகம். நிலையான செலவுகளை நோக்கும் போது மொத்த நிலையான செலவு 17,057 மில்லியன் ரூபாவாகும். இத்தொகையில் மிகக் கூடிய செலவான ஊழியர்களின் சம்பளங்கள் போன்ற செலவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதற்கான செலவு 13,242 மில்லியன் ரூபாவாகும். கடந்த 12 மாத காலத்தில் தேய்மானம் கழிப்பதற்கு முந்திய இலாபம் 4,146 மில்லியன் ரூபா ஈட்டப்பட்டுள்ளது. தேய்மானக் கழிவிற்குப் பிந்திய இலாபம் 2167 மில்லியன் ரூபாவாகும்.

12 பிராந்தியங்களிலும சகலசாலை களிலுமுள்ள தொடக்க நிலை தரங்களிலுள்ள 24,300 ஊழியர்களின் புதிய சம்பள அமைப்பை இனங்காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன் ஒக்டோபர் மாதத்தில் அவர்களின் சம்பளங்கள் மேலதிக நேர வேலையுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக செயலாற்றல் செலவு கடந்த மாதங்களுடன் ஒப்பிடும்போது ஒக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் ஒப்பியலாக உயர்ந்துள்ளது.சில சாலைகள் தற்போது நட்டத்தில் இயங்குகின்றன.

- **இ.போ.சஊழியர்களின்ஊழியர்சேமலாபநிதியம்கொடுப்பனவுதொடர்பானதற்போதையநிலமை**

2010 முதல் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் அளவில் இ.போ.ச உழியர்களின் சேமலாப நிதி முறையாக செலுத்தப்படாதிருந்ததுடன், 2015 செப்டம்பர் மாதத்திலுள்ளவாறாக 10,752 மில்லியன் ரூபா ஊழியர் சேமலாப நிதிக்கு செலுத்த வேண்டியிருந்தது. 2015 செப்டம்பர் மாதம் முதல் இத்தொகையைச் செலுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.இதன் விளைவாக 2018 செப்தம்பர் மாதத்திலுள்ளவாறாகஇ.போ.ச உழியர்சேமலாப நிதிக்கு செலுத்தவேண்டியநிலுவை 1,894 மில்லியன் ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது. இதில் 1000 மில்லியன் ரூபாவை 2019 சனவரி மாத்தில் செலுத்தும் நோக்கில் திறைசேரியிடமிருந்து நிதிகோரப்பட்டுள்ளது.மீதி 894 மில்லியன் ரூபாவை 2019 மார்ச் மாதத்திற்கு முன்னர் செலுத்துவதற்கான நடவடிக்கைகைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

- **இ.போ.ச ஊழியர்களுக்கு பணிக்கொடை கொடுப்பனவு தொடர்பான தற்போதைய நிலமை**

2015 செப்டம்பர் மாதத்தில் நிலுவையிலிருந்த பணிக்கொடைத் தொகை 2,409 மில்லியன் ரூபாவாகும். 2018 டிசெம்பர் மாதத்தில் செலுத்த வேண்டியிருந்த நிலுவை 150 மில்லியன் 'ரூபா தற்போது செலுத்தி முடிக்கப்பட்டுள்ளது.

**3.7 2018 ஆம் ஆண்டில் பஸ் அணியை மேம்படுத்தலும் பஸ் புனருத்தாரணமும்**

நாள் ஒன்றுக்கு பஸ் ஒன்று ஏறத்தாழ 228 கி.மீ செயலாற்றுகின்றது. இந்த பஸ்களில் உள்ள எஞ்சின் மற்றும் கியர் பெட்டி சராசரி 200,000 கிலோ மீற்றர் செயலாற்றியதும் பழுதுபார்த்தல் மேற்கொள்ள வேண்டிய நிலமைக்கு உள்ளாகின்றன. அதனடிப்படையில் நாள் ஒன்றுக்கு எஞ்சின் கூறுகள் 6 ம் கியர் பெட்டி 6ம் பழுதுபார்க்க வேண்டிய நிலமைக்கு உள்ளாகின்றன.

இப்படியானதொரு நிலைமையின் கீழ் ஆண்டுதோறும் 960 எஞ்சினும், 960 கியர் பெட்டியும் 360 பஸ் உடற்கோப்புகளும் தேவைப்படும். இத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக சாலை மற்றும் பிராந்திய வேலைக்களங்கள் வாரியாக எஞ்சின், கியர்பெட்டிகள் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் இதற்கு மேலதிகமாக தற்போதுள்ள பஸ் அணியைப் பேணுவதற்கும் புனருத்தாரணம் செய்வதற்கும் 2018 ஆம்ஆண்டின் தேசிய வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக திறைசேரி 1350 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்தது. 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் அளவில் இவ்வாறு பழுதுபார்த்தலுக்காக ஏற்பட்ட செலவு 1,397.46 மில்லியன் ரூபா ஆகும். நிறைவேற்றப்பட்ட பழுதுபார்த்தல் விவரங்கள்வருமாறு

| வருடாந்த பஸ் புனருத்தாரண செய்திட்டம் (முழுமையானதும் சாதாரணமானதும் - சனவரி முதல் டிசெம்பர் வரை) | | |
|---|---|---|
| | எதிர்பார்த்த | உண்மையான |
| எஞ்சின் | 960 | 815 |
| கியர்பெட்டி | 960 | 1080 |
| உடற்கோப்பு | 960 | 422 |

**3.8 உட்கட்டமைப்பு வசதிகள்**

இலங்கை போக்குவரத்துச்சபை சாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகட்காக 60 மில்லியன்ரூபா ஒதுக்கப்பட்டது. சிவில் பொறியியல் பகுதி தற்போது அதற்கான நடவடிக்கைகளைமேற்கொள்கிறது.

- **இ.போ.ச உடல் நலக் காப்பு சார்ந்தவைகளையும் இதரவசதிகளையும் பேணும் செய்திட்டம்.**

கடந்த பல ஆண்டுகளாக வேலையிடங்களிலுள்ளஊழியர்ஓய்வறைகள், மலசலகூடங்கள், கழிவறைகள், கட்டடங்கள், கூரைகள், சாலைவளவுகள், அலுவலகங்கள், கழிவுநீர்வடிகாலமைப்பு, குப்பை கூழம் அகற்றும் இடங்கள், புகைப்பரீட்சை நிலையங்கள் ஆகியவற்றுக்கான அபிவிருத்திதிட்டங்கள் செயற்படுத்தப்படாமையினால் அவற்றை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் 2018 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. அதற்கான நிதி கிடைக்கப் பெற்றிருப்பினும் திட்டங்களை நிறைவேற்றும் போதுஇ.போ.ச சிவில் பொறியியல் பகுதியில் நிலவும் ஊழியர் தட்டுப்பாடு பெரும் பிரச்சினையாக உருவெடுத்தது. எனினும் தற்போது 32 சாலைகளில் பணிகள் ஆரம்பமாகிவிட்டன.

- **ஊறுகொடவத்தை எரிபொருள் நிரப்பும் நிலையங்களை நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகள்**

எமக்கு மேலதிக வருவாய் வளமாக எரிபொருள் நிரப்பும் நிலையங்களை நடாத்துவது தொடர்பாகக் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளதுடன், அதற்கேற்ப ஊறுகொடவத்தை எரிபொருள் நிரப்பும்

நிலையத்தை மீளக்கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. இத்திட்டத்திற்கென 61.10 மில்லியன் ரூபாஅனுமதிக்கப்பட்டுள்ளது.

- **வெளிக்களபயிற்சிமத்தியநிலையம்அமைத்தல்**

இ.போ.சவிற்கானவெளிக்களப் பயிற்சி மத்திய நிலையம் களுத்துறையிலுள்ள சாரதிப் பயிற்சிப்பாடசாலையில் கட்டியெழுப்பப்படுகிறது. இந்நிலையம் 2018.05.04 ஆந் திகதியன்று திறந்து வைக்கப்பட்டு தற்போது ஆளுமைப்பயிற்சி நடவடிக்கைகள் நடைபெறுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் தற்போதுள்ள வசதிகளுக்கு மேலதிகமாக பயிற்சி போதனாசிரியர்கட்கும் இதர அதிதிகட்கும் நவீனபாணியில் அறை வசதிகளுடன் கூடிய விடுதியகங்களை போக்குவரத்து அமைச்சின் செயலாளர் 2018.10.16 ஆந் திகதி திறந்துவைத்தார்.

தற்போது பிரதான விடுதிக்குள் உள்ள சாரதிப் பயிற்சி பாடசாலை அலுவல்கள் முறையாக தொடர்ந்தும் நடைபெற வேண்டியிருப்பதால் அதற்கான புதிய கட்டடமொன்றை நிர்மாணிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அத்துடன் அதற்குள் ஒரே தடவையில் 100 பேர் தங்கியிருந்து பயிற்சிபெறுவதற்கு தேவையான வசதிகளுடன் இரண்டு மாடிக்கட்டடமொன்றை தயாரிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

வெளிக்கள பயிற்சிக்கு ஒரு ஆளுக்கு இ.போ.சபைக்கு 4,300 ரூபா செலவாகிறது. இதில் 02 நாட்களுக்கான சகல உணவு, குளிர்பானங்கள் ஆகியவற்றுக்கான மொத்தச்செலவும்,ரீசேட்,களிசான் ஆகியவற்றுக்கான செலவும் அடங்குகிறது. இப் பயிற்சியை சகல பயணியாளர்கட்கும் அளித்து அவர்களின் உளச்சார்பை மாற்றி அவர்கள் சபைக்கு வளமுள்ள சேவையை அளிப்பரென எதிர்பார்க்கப்படுகிறது. 2018 ஆம் ஆண்டில் 4,628 ஊழியர்கள் இப்பயிற்சியைப் பெற்றுள்ளனர்.

## 3.9 இதர அபிவிருத்திக்கொள்கைகள்

- **பதவியணியையம் அமைப்பையும் தயாரித்தல்**

சுயவிருப்பில் இளைப்பாறும் திட்டத்தின் (VRS) கீழ்மேலதிகமாகவுள்ள ஊழியர்கள் (சாரதிகள், நடாத்துநர்கள், பொறிவலர்கள்தவிர) தமது சுயவிருப்பில் இளைப்பாற்றுவதற்குச் சந்தரப்பம் வழங்கப்பட்டது.

2015.12.01 ஆம் திகதியன்றுள்ளவாறு இ.போ.சபையில் 35,952 உழியர்கள் கடமையாற்றினார்கள்.இத்தொகை இ.போ.ச தாங்கமுடியாத அளவு தொகையானதால் அமைச்சினதும் திறைசேரியினதும் இணக்கத்துடன் விரும்புகின்ற ஊழியர்கள் சுயவிருப்பில் இளைப்பாற ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்கேற்ப சுயவிருப்பில் இளைப்பாறும் திட்டம் செயற்படுத்தப்பட்டதுடன், அதன்கீழ் 4,005 விண்ணப்பங்கள் சமரப்பிக்கப்பட்டன. 2018.03.15 அன்றுள்ளவாறு 3,747 ஊழியர்கள் சுயவிருப்பில் இளைப்பாற சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதுடன் ,அதற்கேற்ப 2018.09.30 ஆந் திகதி அன்றுள்ளவாறு இ.போ.சவிலுள்ள நிரந்தர ஊழியர் தொகையை 30,405ஆகக்குறைப்பதற்குமுடிந்தது.

இச்செய்திட்டத்திற்குச் சமாந்திரமாக இ.போ. சபையை மீளக்கட்டமைக்கும் மற்றுமோர் செய்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. அதன்கீழ், புதிய உழியர் பதவியணித்திட்டம், ஆட்சேர்ப்புத்திட்டம் ஆகியன தவறின்றித் தயாரிக்கப்பட்டு இலங்கை போக்குவரத்துச்சபையில் இதர அரச கூட்டுத்தாபனங்களினதும் சபைகளினதும் சம்பள அளவுத்திட்டத்தைச்செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- **புதியசம்பளஅமைப்புஅறிமுகம்**

அரச கூட்டுத்தாபனங்கட்கும் நியதிச்சட்ட முறையான சபைகளுக்கும் பொருத்தமான (30/2006, 30(i)/2006, 02/2016) இலக்க சுற்றறிக்கைகளை இ.போ.சபைஊழியர்கட்கும் ஏற்புடையதாக்கி

அதற்கேற்ப ஆரம்பதரங்களிலுள்ள 24,300 ஊழியர்களின் சம்பளங்கள் 2018.10.01 முதல் தயார்செய்யப்பட்டது.

6,183 இதர அலுவலக பணியாளர்களின் சம்பளங்கள் தயாரிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் 2019 ஆம் ஆண்டில் இவர்களின் சம்பளங்கள் மீளவாயப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

- **கணனி அறிவும், வியாபார முகாமைத்துவம் சான்றிதழ் பாடபயிற்சிநெறி**

இதற்கு மேலதிகமாக இ.போ.ச தலைமையலுவலகத்திலும் சகல சாலைகளிலும் புதிய தொழில்நுட்பத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளும் நோக்கில் கணனிக் கொள்வனவும் அதனுடன் தொடர்புடைய சகல தொழினுட்ப வசதிகளையும் தாபிக்கும் பணிநடைபெறுகிறது.

இ.போ.ச ஊழியர்களின் கணனி அறிவையும் வியாபார முகாமைத்துவ அறிவையும் உயர்த்தும் நோக்குடன் இப்பயிற்சிநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்போது இ.போ.சவிலுள்ள உயர்மத்திய பணியாளர்கள் I ஆம் தரத்திலிருந்து VIII ஆம் தரத்திலுள்ள 5000 ஊழியர்கட்கு நாடு பூராவுமுள்ள மத்திய நிலையங்களில் தொழிற்பயிற்சி அதிகாரசபை மூலம் கணனி அறிவு , வியாபார முகாமைத்துவ சான்றிதழ் ஆறுமாத கால பயிற்சி அளிப்பதற்கு எதிர்பாக்கப்படுகிறது. ஒரு நபருக்கு பயிற்சியளிப்பதற்கு 15,000 ரூபா செலவிடப்படுகிறது.

தற்போது இ.போ.சஊழியர்கட்கு கணனி விஞ்ஞானம், வியாபார முகாமைத்துவ சான்றிதழ் பயிற்சி நெறிகள் அளிக்கப்பட்டு வருவதுடன் முதல் கட்டமாக 1,554 உழியர்கள் இ.போ.ச செலவில் தொழிற்பயிற்சி அதிகாரசபையின் கூட்டுழைப்புடன் 63 மத்திய நிலையங்களில் பயிற்சியளிக்கப்பட்டுத்தற்போது இவர்கள் இப்பயிற்சிநெறியை வெற்றிகரமாகப் பூரணப்படுத்தியுள்ளனர். இரண்டாம் கட்டமாக 58 மத்திய நிலையங்களில் 1,233 பயிற்சியாளர்கள் பயிற்சிக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

- **இலங்கை-ஜேர்மன் தொழினுட்ப பயிற்சி நிலையத்தில் இ.போ.ச பொறியியல் ஊழியர்களைப் பயிற்றுவிக்கும் செய்திட்டம்**

இ.போ.சபையில் பயணியாற்றுகின்ற பொறியியல் பகுதியில் பணிபுரியும் திறனுள்ள ஆனால் பயிற்சிபெற்றிறுக்காத பொறிவலர்களுக்கு இலங்கை-ஜேர்மன்தொழினுட்பபயிற்சிநிலையத்தில் 150 மணித்தியாலங்கள் பயிற்சியளித்து அதன்பின்னர் தகுதியானசான்றிதழ்களை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறான 40 ஊழியர்கர்கள் பயிற்சியைமுடிவு செய்துள்ளனர். இத்தகைய பயிற்சியொன்றுக்கு ஒருநபருக்கு 18750/= ரூபா செலவாகிறது.இதில் 50% தொழிற்பயிற்சி அதிகாரசபையாலும் மீதி 50% இ.போ.சபையாலும் செலவிடப்படுகிறது.

- **நிதிப் பகுதிக்கு புதிய மென்பொருள் தொகுப்பு அறிமுகம்**

இ.போ.ச நிதிப்பகுதி நடவடிக்கைளை வினைத்திறனுடனும் முறையாகவும் நிறைவேற்றுமுகமாக புதிய மொன்பொருள் தொகுப்பு (Acc Pac) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது இ.போ.ச சகலசாலைகளும் இத்தொகுப்பு மூலமே தமதுகணக்கு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. இலங்கை போக்குவரத்துச்சபைக்கு புதியஇணையத்தளமொன்று 2018.11.01 ஆம் திகதி தொடங்கிவைக்கப்பட்டது.

**3.10 2018 ஆம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டிலும் 2019 ஆம் ஆண்டிலும் உத்தேச நிகழ்ச்சித்திட்டங்கள்**

- GPS **வசதிபொருத்தும்செய்திட்டம்**

125 உல்லாசபஸ்களில் GPS Tracking & Video System பொருத்துவதற்காக கூறுவிலைகள்கோரப்பட்டு இச்செய்திட்டம் கையளிக்கப்பட்டுள்ளதுடன் இதற்காக 33.63மில்லியன் ரூபாசெலவிடவும்எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அங்ஙனமே 2014/2015 ஆண்டுகளில்கொள்வனவுசெய்த 2200 புதியபஸ்களில் GPS வசதிகள் முறையாகப் பேணப்படுகின்றதா வென்ற செய்திட்டத்தைச்

செயற்படுத்துவதற்கு தேவையான உபகரணங்களின் செலவுதொடர்பானம திப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- **தொழினுட்பஉபகரணங்கொள்வனவுசெய்திட்டம்**

இ.போ.சநடவடிக்கைகளைமேலும்வினைத்திறனுடனும்முறையாகவும்நிறைவேற்றும்பொருட்டுபுதியதொழினுட்பத்தைஈடுபடுத்துவதற்காகப்பின்வரும்பொறிக்கோப்புகொள்வனவுசெய்யப்பட்டுள்ளது.

**தொழினுட்ப உபகரணங்கள் கொள்வனவு செய்திட்டம் - 01**

| வகை | தொகை | | ரூபா (மில்) |
|---|---|---|---|
| கணினி | | 200 | 27.49 |
| யூ.பீ.எஸ் | | 200 | 0.70 |
| அச்சடிக்கும் இயந்திரம் | | 100 | 2.94 |
| தொலைநகல் | | 50 | 0.74 |
| மடிக்கணினி | | | 7.75 |
| ஒளிப்படப்பிரதி இயந்திரம் | N | 50 | 4.10 |
| | H/D | 10 | 2.85 |
| **மொத்தம்** | | | **46.57** |

**தொழினுட்ப உபகரணங்கள் கொள்வனவு செய்திட்டம் - 02**

| உபகரணவகை | அளவு | ரூ.மில் |
|---|---|---|
| பயணச்சீட்டுஇயந்திரம் | 2000 | 75.9 |
| காசுகணக்கிடும்இயந்திரம் | 100 | 19.32 |
| கணனி | 500 | 81.73 |
| யூ.பீ.எஸ் | 500 | 0.81 |
| அச்சிடும்இயந்திரம் | 100 | 3.02 |
| **மொத்தம்** | | **180.79** |

02ஆம் செய்திட்டத்திற்கான பெறுகை நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டு கூறுவிலைகள் கோறப்பட்டுள்ளன.

- **புகைப் பரீட்சை நிலையம் அமைக்கும் செய்திட்டம்**

இ.போ.ச சாலைகளை மையமாகக் கொண்டு 9 மாகாணங்களில் 09 புகைப் பரீட்சைநிலையங்களை நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் சாலைகளில் ஆரம்ப சிவில் பொறியியல் வேலைகள் தொடங்கப்பட்டு நடவடிக்கைகட்குத் தேவையான இடத்தை அமைப்பதற்கான ஒப்பந்தம் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

- **சூழல் பாதுகாப்பு உத்தரவுச் சீட்டு பெறும் செய்திட்டம்**

இ.போ.ச 30 சாலைகட்குதற்போது வரை சூழல் பாதுகாப்பு உத்தரவுச்சீட்டு பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது இவ்வுத்தரவுச்சீட்டு பெறுவதற்கான சகல நடவடிக்கைகட்குமான மதிப்பீடுசெய்யப்பட்டு கூறுவிலைகள் கோரப்பட்டுள்ளன.

- **இலத்திரனியல் பஸ்களைக் கொள்வனவு செய்யும் செய்திட்டம்**

இவ்வகையான பஸ்களைக் கொள்வனவு செய்வதற்காக தொழினுட்ப மதிப்பீட்டுக் குழுனவின் இறுதி அலுவல்கள் பூர்த்தியாக்கப்பட்டு 2018.09.25 ஆந் திகதி அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகை கொள்வனவுக் குழுக்கூட்டம் நடைபெற்றது.அக்செல் இன்டநஷனலினும் சதோசவினதும் கூட்டுக்கூறுவிலையின்படி, பெறுகை நிறைவேற்றுக்குழுவின் அனுமதி BYD K9 இலத்திரனியல் பஸ்கள் 09 பெறுகைக்காகப் பெறப்பட்டாயிற்று. அமைச்சரவை அங்கீகாரம் பெற எதிர்பார்க்கப்படுகிறது.

- **இந்தியகடன் உதவித் திட்டத்தின் கீழ் 500 பஸ்கைளைக் கொள்வனவு செய்யும் செய்திட்டம்**

இச்செய்திட்டமூலம் 50 - 54 ஆசனங்கள்உள்ள 400 பஸ்களும் 32 - 35 ஆசனங்களுள்ள 100 பஸ்களும் கொள்வனவு செய்வதற்கு வெளிநாட்டு மூலவளத்திணைக்களத்தினதும் EXIM வங்கியினதும் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் தொழினுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்றும் இந்நோக்கத்திற்காக நியமிக்கப்பட்டுள்ளது.

- **இ.போ.ச ஏற்பாடு மூலம் பஸ்களைக் கொள்வனவு செய்யும் செய்திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் 32-35 ஆசனங்களுடைய 5 பஸ்களும், 42-54 ஆசனங்களுள்ள 14 பஸ்களும்கொள்வனவுசெய்யப்பட்டதுடன். 51 ஆசனங்களுடைய 9உல்லாச பஸ்களும், இடதுபக்கம்செலுத்தும் 02 பஸ்களும் கொள்வனவு செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அத்துடன்பணம்செலுத்தும்அடிப்படையில்கொள்வனவு செய்யும் திட்டத்தின் கீழ் 42-54 ஆசன 272 பஸ்களும், 32-35 ஆசன 53 பஸ்களும், 37 உல்லாசபஸ்களும் கொள்வனவு செய்யஎ திர்பார்க்கப்படுகிறது.

| முழுநிதிசெலுத்திஇ.போ.சமூலம்பஸ்கொள்வனவுசெய்யும்திட்டம் | |
|---|---|
| 42-54 ஆசனங்களுள்ள 272பஸ்கள்<br>32-35 ஆசனங்களுள்ள 53பஸ்கள் | கூறுவிலைகள் திறக்கப்பட்டு தொழினுட்ப மதிப்பீட்டுக்குழு நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்த பின்னர் அமைச்சரவை பெறுகை நிறைவேற்றுக் குழுவினால்தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரகாரரான அசோக் லேலன்ட் கம்பனியுடன் குத்தகை விலையைக் குறைப்பது பற்றிய பேச்சுவார்த்தகைள் நடைபெறுகின்றன. |
| 37உல்லாசபஸ்கள் | 51 ஆசனங்களுள்ளகிங்லோங் XMQ 6127 CY பஸ்கள் 37 ஐ பெற அமைச்சரவை பெறுகை நிறைவேற்றுக்குழு அங்கீகாரம்அளித்துள்ளதுடன்நிராகரிக்கப்பட்ட கேள்விப்பத்திரகார் கட்கும்நிராகரிப்பு தொடர்பாக அறிவித்தபின்னர் அவர்கள் மேன்முறையீடு செய்வதற்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. |

- **பொறியியல், தகவல்தொழினுட்பபிரிவுகட்குஉபகரணங்களைப்பெறும்செய்திட்டம்**

பொறியியல், தகவல் தொழினுட்ப பிரிவுகட்குத் தேவையான பொறிக் கோப்புகளையும் தொழினுட்ப உபகரணங்களையும் பெற்றுக் கொள்வதற்கான அமைச்சரவை விஞ்ஞாபனம் மீண்டும் தயாரிக்கப்பட்டு அனுமதிக்காக போக்குவரத்து அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சுடன் கலந்துரையாடல்கள் நடைபெற்றுத் தேவையான விவரங்கள் அளிக்கப்பட்டன.

- **குருணாகலை பிராந்திய வேலைக்களங்கட்கான பொறிக்கோப்பைப் பெறும் செய்திட்டம்**

குருணாகலை பிரந்திய வேலைக்களத்திற்கு 50 மில்லியன் ரூபா பெறுமதியுடைய பொறிக் கோப்பு அளிக்கப்பட்டு பொருத்தப்பட்டு நடவடிக்கைகள் தொடங்குவதற்கான அவசியசிவில் வேலை நடவடிக்கைகள் முற்றுப்பெற்றுள்ளன.

(4)

# தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

## 4.1 அறிமுகம்

1991,ன் இல 37 கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் மூலம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நிறுவப்பட்டது.

**நோக்கு**

"நாட்டினுள் சமூக-பொருளாதார அபிவிருத்தியினை ஏற்படுத்துவதற்காக தரமிக்க, ஆகுசெலவு விளைபயன்மிக்க மற்றும் பாதுகாப்புமிக்க ஒன்றிணைக்கப்பட்ட போக்குவரத்துக் கட்டமைப்பு மற்றும் சேவை ஆகியவற்றின் மூலம் இலங்கையின் எல்லா குடிமக்களினதும் பல்வேறுபட்ட போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்திசெய்தலை உறுதிப்படுத்துதல்."

**புணி**

"எல்லா போக்குவரத்து ஊடகங்கள் குறித்தும் அவதானத்துடன், பயணியின் திருப்தி மற்றும் சிறந்த சந்தை நடவடிக்கையினை உறுதிப்படுத்துவதுடன் வினைதிறன்மிக்கதும் விளைபயன்மிக்கதுமான பேருந்துப் பயணிகள் போக்குவரத்து கட்டமைப்பினை நிறுவும் பொருட்டு ஒழுங்குபடுத்தற் சட்டகத்தினைத் தயாரித்தல்"

## 4.2 தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிகள் மற்றும் அதன் முன்னேற்றம்

- **பாடசாலைச் சிறார்களுக்கு சலுகைக் கட்டண அடிப்படையில் போக்குவரத்துச் சேவைகளை வழங்கும் பாடசாலை பேருந்துச் சேவை செயற்றிட்டம் - "சிசு செரிய"**

பாடசாலை சிறார்களை ஏற்றி வரும் மோட்டார் வண்டிகள் மற்றும் பெரிய, சிறிய வேன் வண்டிகளின் காரணமாக நகரப்பகுதிகளில் ஏற்படும் வீதி நெருக்கடி,பெற்றோர்களால் சுமக்கவேண்டிய பெருஞ் சுமை, பிள்ளைகளின் பாதுகப்பு குறித்து சிக்கல்கள்,வசதிவாய்ப்புக்கள் குறித்து எவ்வித நியமமும் இல்லாமை போன்ற பிரச்சினைகள் காரணமாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்ட காலத்தின் தேவையான,முக்கியமான வழிமுறையாக பாடசாலை மாணவர்களுக்காகவே ஒதுக்கப்பட்ட பேருந்துச் சேவையான "சிசு செரிய" பாடசாலை பேருந்துச் செயற்றிட்டத்தினைக் குறிப்பிடலாம்.

இச்சேவையின் போது பாடசாலை சிறார்களின் சாதாரண கட்டணத்தில் 50% அளவே அறவிடப்படுவதுடன், ஓட்டுனரின் வருவாயில் ஏற்படக்கூடிய குறைப்பாட்டிற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் முன்கூட்டி இணங்கப்பட்ட கட்டண அளவின் படி பிறகு மீள்செலுததும் விதத்தில் சேவைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2018ஆம் ஆண்டாகையில் இது வரையில் சாதாரண பயணிகள் போக்குவரத்து பேருந்துக் கட்டண அதிகரிப்பினைக் கவனத்திற் கொண்டு "சிசு செரிய" சேவையின் பயணிக்கும் ஒரு கிலோ மீற்றருக்கு செலுத்தப்படும் கட்டணமும் 45.00 ரூபா முதல் 57.00 ரூபா வரை 12.00 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

செயற்றிட்டத்தின் கீழ் 2018 டிசெம்பர் மாதம் 31ஆந் திகதியில் செயற்பட்ட சிசு செரிய சேவை குறித்து விபரங்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| தொ.இல. | மாகாணம் | சிசு செரிய பேருந்துகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | 2017 வரை | 2018புதிய சேவை | மொத்த சேவைகளின் எண். |
| 1 | மேல் | 419 | 12 | 431 |
| 2 | தென் | 116 | 02 | 118 |
| 3 | வடமேல் | 274 | 12 | 286 |
| 4 | வடமத்திய | 148 | 07 | 155 |
| 5 | சப்பிரகமுவா | 126 | 01 | 127 |
| 6 | ஊவா | 82 | 10 | 92 |
| 7 | கிழக்கு | 111 | 04 | 115 |
| 8 | மத்திய | 47 | 04 | 51 |
| 9 | வட | 32 | 04 | 36 |
| 10 | மாகாணங்களுக்கு இடையில் | 07 | 00 | 07 |
| | **மொத்தம்** | **1362** | **56** | **1418** |

தற்போது செயற்பாட்டிலுள்ள "சிசு செரிய" பேருந்துச் சேவை மூலம் ஒரு நாளைக்கு நாடு முழுதும் உள்ள ஏறக்குறைய 87,000 பள்ளிச் சிறார்களுக்கு போக்குவரத்து வசதிகள் வழங்கப்படுகின்றன.

இச்சேவைக்காக 2018ஆம் ஆண்டில் 483.48 மி. ரூபா செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- **கிராமிய பேருந்துச் சேவை செயற்றிட்டம் "கெமி செரிய"**

போக்குவரத்து க்ஷடமிகு பிரதேசங்களில் வாழும் மக்களுக்காக,கிராமம் நகரத்தை விட்டும் தூரமாவதைத் தவிர்ப்பதற்காக "கெமி செரிய" என்ற பெயரில் கிராமப்புற பேருந்துச் சேவை செயற்றிட்டம் 2005 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை தொடர்ச்சியாக மேற்கொள்வதன் மூலம் நம்பகமாக மற்றும் இலாபகரமானதாக சேவையொன்றினை கிராமப்புற மக்களுக்கு வழங்குகின்றது.

கெமி செரிய பேருந்துச் சேவைக்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் சேவையினை ஆரம்பித்து 3 வருடங்கள் வரை மாத்திரமே ஏற்பாடுகள் வழங்கப்படும். கெமி செரிய சேவையினை 3 வருடங்களின் பிறகு சுய வருமானத்தில் மேற்கொண்டுச் செல்ல முடியுமான மட்டத்தினை எட்டும் என்ற ஊகத்தின் பேரில் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளதுடன், குறிப்பிட்ட சேவைக்காக வழங்கப்பட்ட ஏற்பாட்டினை வேறொரு கெமிசெரிய சேவை ஒன்றினை ஆரம்பிப்பதற்காக வழங்குவதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கும். அதன்படி, 2018தெசம்பர் 31 ஆந் திகதியாகையில் உதவித்தொகை பெறும் சேவைகளின் எண்ணிக்கை 8ஆக இருப்பினும், தொடக்கத்தில் இருந்து இது வரை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் அறிமுகப்படுத்தப்பட்ட கெமி செரிய பேருந்துச் சேவைகளில் பெரும் எண்ணிக்கையானவை தற்போது பிரபலமான பேருந்துச் சேவைகளாக மாறியுள்ளன.

| தொ.இல. | மாகாணம் | கெமி செரிய பேருந்துகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | 2017 வரை | 2018புதிய சேவை | மொத்த சேவைகளின் எண். |
| 1 | கிழக்கு | 03 | 00 | 03 |
| 2 | வடமேல் | 01 | 03 | 04 |
| 3 | மத்திய | 01 | 00 | 01 |
| | **மொத்தம்** | **05** | **03** | **08** |

**2018 ஆம் ஆண்டினுள் இச்சேவைக்காக 2.9 மி.ரூபா செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

- **இரவு நேர பேருந்துச் சேவை செயற்றிட்டம் "நிசி செரிய"**

இலங்கையின் பல பிரதேசங்களில், இரவு வேளையில் மற்றும் அதிகாலையில் பிரதான பாதைகள் தவிர்ந்த பல உட்பாதைகளில் பொதுப் பேருந்துச் சேவைகளை வழங்குகை மிகவும் கீழ் மட்டத்தில் காணப்படுகின்றது. அதனால்,கிராமப்புறங்களிலிருந்து நாட்டின் அபிவிருத்திக்காக தமது உடல் உழைப்பினைப் பெற்றுக் கொடுக்கும் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் தொகையினர்அதிகாலையில் வீட்டிலிருந்து புறப்பட்டு இரவு வேளையில் விடு திரும்புவர். அவர்களது அடிப்படைத் தேவையாக மாறியுள்ள போக்குவரத்துச் சேவை உரிய நேரத்தில் கிடைக்காமை அவர்கள் தைரியம் இழப்பதற்கு ஏதுவாக அமையலாம்.அதனால் அப்பயணிக்கும் மக்கள் முகங்கொடுக்க வேண்டிய கடும் ,டைஞ்சலைத் தீர்க்கும் நோக்கில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் "நிசி செரிய" செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

| தொ.இல. | மாகாணம் | நிசி செரிய பேருந்துகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | 2017 வரை | 2018புதிய சேவை | மொத்த சேவைகளின் எண். |
| 1 | மேல் | 54 | 08 | 62 |
| 2 | தென் | 16 | 17 | 33 |
| 3 | வட | 00 | 05 | 05 |
| 4 | வடமேல் | 14 | 06 | 20 |
| 5 | வடமத்திய | 11 | 00 | 11 |
| 6 | சப்பிரகமுவா | 03 | 00 | 03 |
| 7 | ஊவா | 09 | 00 | 09 |
| 8 | கிழக்கு | 03 | 00 | 03 |
| 9 | மத்திய | 20 | 07 | 27 |
| | **மொத்தம்** | **130** | **43** | **173** |

இச்செயற்றிட்டத்திற்காக 2018ஆம் ஆண்டினுள் 12.79 மி.ரூபா செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

➢ **பொதுப் பயணிகள் போக்குவரத்து தொடர்பில் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல்**

- **பேருந்துத் தரிப்பிடங்களை அமைத்தல் மற்றும் நவீனமயப்படுத்ததல்**

பெரும்பான்மையான மக்களை பொதுப் போக்குவரத்துச் சேவையின் பால் எவ்வாறெனினும் ஈர்த்துக் கொள்ளும் நோக்கில் பொதுவாக பயணிகளினதும் பேருந்து ஓட்டுனர்களினதும் வசதி கருதி தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால்பேருந்துத் தரிப்பிடங்களை அமைத்தல் மற்றும் நவீனமயப்படுத்தும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

அதன் படி, 2015ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தில் கிண்ணியா நகரசபைக்கு உரிய 225 சதுர மீற்றர் பரப்பளவு கொண்ட நிலத்தில் பேருந்துத் தரிப்பிடத்தினை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இலங்கை பொறியியற் கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்ட திட்டத்தின் படி மற்றும் அதன் முழுக் கண்காணிப்பின் கீழ்நிர்மாணிக்கப்பட்டுள்ள இப்பேருந்து நிலையம் 2017ஆம் வருட இறுதியாகையில் அனைத்து பணிகளும் முடிவுற்று 2018 ஜூலை மாதம் 22ஆம் திகதி கௌரவ போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை அமைச்சர், நிமல் சிறிபால டி சில்வா அவர்களால் மக்கள்மயப்படுத்தப்பட்டது.

அதன் படி,2018ஆம் ஆண்டில் இதுவரையில் 3 பேருந்துத் தரிப்பிடங்கள் மக்கள் மயப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக கிளிநொச்சி நகரத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் புதிய பேருந்துத் தரிப்பிடத்தின் பணிகள் இதுவரையில் 50% அளவில் முடிவுற்றுள்ளன.

பேருந்துத் தரிப்பிட நிர்மாணிப்புச் செயற்றிட்டத்திற்காக 2018ஆம் ஆண்டினுள் 25 மி. ரூபா அளவில் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்விதமாக,பொதுப் போக்குவரத்துச் சேவையின் உட்கட்டமைப்பு வசதிகளை நவீன அம்சங்களுடன் அபிவிருத்தி செய்வதன் மூலம் எல்லா மட்டங்களிலும் உள்ள மக்களில் விருப்பினையும் நம்பிக்கையினையும் ஏற்படுத்துவதுடன் அதன் மூலம் தனியார் போக்குவரத்து ஊடகங்களுக்குப் பதிலாக பொதுப் போக்குவரத்துச் சேவையின் பால் பயணிகளை ஈர்ப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

- **மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துச் சேவைகளை வழங்குதல்**

மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துச் சேவைகளை வழங்குவதற்கு தனியார் துறைக்கு பயணிகள் போக்குவரத்து அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் மற்றும் அவை சம்பந்தப்பட்ட விடயங்கள் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்படும். 2018ஆம் ஆண்டில் பிரதான வீதிகளுக்கு மேலதிகமாக அதிவேகப் பாதைகள் ஊடாக மாகாணங்களுக்கு இடையிலானஅதி சொகுசு பேருந்துகள் உட்பட பொதுமக்களின் போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு பயணிகள் கேள்விக்கு ஏற்ப இதுவரையில் வழங்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| தொடரிலக்கம் | சேவை வகை | பேருந்துகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | சாதாரண | 2004 |
| 2 | அரை சொகுசு | 452 |
| 3 | சொகுசு | 587 |
| 4 | அதி சொகுசு | 113 |
| | **மொத்தம்** | **3156** |

- **பயணிகள் தேவையின் பொருட்டு பேருந்துச் சேவையினை பேணிச்செல்வதற்கு அறிமுகப்படுத்தப்படடுள்ள செயற்றிட்டங்கள்**

- **நேர அட்டவணைகளைத் தயாரித்தல் மற்றும் திருத்தி அமைத்தல்**

நாடு முழுதும் மாகாணங்களுக்கு இடையிலான பொதுப் பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் வழங்கும் எல்லா பேருந்து ஓட்டுனர்களுக்கும் சம சந்தர்ப்பத்தினை வழங்கும் விதத்தில் பயண நேர அட்டவணைகளைத் தயாரித்தலும் அரச மற்றும் தனியார் பிரிவின் பேருந்து ஓட்டுனர்களுக்கு இடையிலான பாதகமான போட்டித் தன்மையினைக் குறைப்பதற்கும் அதன் மூலம் ஓட்டுனர்களின் வியாபார நிலைப்பாட்டினைப் பாதுகாப்பதற்கும் பயணிக்கும் மக்களுக்கு நம்பகமானதும் பாதுகாப்பானதுமான உயர் தரமிக்க பொதுப் பேருந்துச் சேவையினை

வழங்குவது இச்செயற்றிட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். இதற்கு மேலதிகமாக, பேருந்து ஒன்று சாதாரணமாக ஒரு நாளைக்கு ஓடும் கிலோ மீற்றர் அளவினை உச்சப்படுத்துவதும் இச்செயற்றிட்டத்தினால் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களில் முக்கியமானவையாகும். தேசிய ஒழுங்குபடுத்தற் நிறுவனமாக நிறைவேற்ற வேண்டிய முக்கிய பணியாக இதனைக் குறிப்பிடலாம்.

- **பேருந்துக் கட்டணங்களைநிர்ணயித்தல்/ திருத்தியமைத்தல்**

2002 ஆம் ஆண்டில் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட பேருந்துக் கட்டணக் கொள்கையின் பிரகாரமே பொதுப் பயணிகள் போக்குவரத்து பேருந்துகளில் கட்டணங்களை நிர்ணயித்தல் மேற்கொள்ளப்படுகின்றது. இக்கட்டணக் கொள்கையின் படி ஒவ்வொரு வருடமும ஜுலை மாதம் 01ஆந் திகதியன்று பேருந்துக் கட்டணத் திருத்தியமைத்தல் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், எரிபொருள் விலை மொத்த பேருந்துக்கட்டண ஆகுசெலவில் 4%,ற்கும் மேல் அதிகரிக்கும் சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட பேருந்துக் கட்டணம் திருத்தி அமைக்கப்படும்.

எனினும், தற்காலத்தில் செயற்படுத்தப்படும் இக்கட்டணக் கொள்கையினை இற்றைப்படுத்துவதற்கு இல 17/1789/709/066 கொண்ட போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை அமைச்சரின் 2017.08.11ஆந் திகதிய அமைச்சரவை நிருபத்தின் படி அறிஞர் கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. அவ்வறிஞர் கமிட்டி மூலம் ஏற்கனவே 2002 பேருந்துக் கட்டணக் கொள்கையினை இற்றைப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

2018 மே 12.5% ஆல் அதிகரிக்கப்பட்டது.
2018.09.21 ஆந் திகதி 4% ஆல் அதிகரிக்கப்பட்டது.
2018.11.09 2% ஆல் குறைக்கப்பட்டது.
2018.12.26 4% ஆல் குறைக்கப்பட்டது.

- **பேருந்துஊழியர்களைப் பதிவு செய்தல் மற்றும் பயிற்றுவித்தல்**

மாகாணங்களுக்கு இடையிலான தனியார் பேருந்துகளில் பணியில் ஈடுபட்டிருக்கும் சாரதிகளினதும் நடத்துனர்களினதும் பணியினை தொழில்வாண்மை மிக்கதாக ஆக்குதல் மற்றும் ஒழுக்கமிகு தொழிலபுரிவோராக சமூகத்துடன் ஒன்றிணைப்பதும் பயணிகள் மனதில் அவர்களைக் குறித்து சிறந்த மனப்பாங்கினை ஏற்படுத்துவதற்கும் விசேட பயிற்சி நிகழ்ச்சிகள் இதன் கீழ் செயற்படுகின்றன.பேருந்துகளில் பயணிக்கும் பயணிகளின் நம்பிக்கை மற்றும் மதிப்பினைப் பெற்றுக் கொண்டு மகிழ்ச்சிகரமான சேவையொன்றினைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் இச்செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது. மேலும், இப்பயிற்சி நிகழ்ச்சிகள் நாட்டில் உள்ள போதனாசிரியர்களால் மேற்கொள்ளப்படுவதுடன், பாடநெறியினை வெற்றிகரமாக நிறைவு செய்பவர்களுக்கு விசேட சாரதி/ நடத்துனர் அடையாள அட்டை ஒன்றை வழங்குவதும் இச்செயற்றிட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது.

இதற்கு மேலதிகமாக, மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தினால் இரு வருடங்களுக்கு மேல் அனுபவங் கொண்ட பேருந்துச் சாரதிகளுக்கான “பயணிகள் சேவை சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கல் (Passenger Transport Training) - என்ற பெயரில் விசேட பயிற்சி நிகழ்ச்சி ஒன்று 2017 யூலை மாதம் முதல் செயற்படுத்தப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டில் திசெம்பர்31ஆந் திகதி நடாத்தப்பட்ட சாரதி பேருந்து நடத்துனர் பயிற்சி நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை 46ஆவதுடன்,அதன் மூலம் 3,417 சாரதிகள் நடத்துனர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

- **போக்குவரத்துக் கொள்கையினைத் தயாரித்தல்**

2009ஆம் ஆண்டில் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட தற்போது காணப்படும் போக்குவரத்துக் கொள்கை தற்காலத்திற்குப் பொருந்தும் வகையில் திருத்தியமைப்பதற்கு

இலங்கைப் பாராளுமன்றத்தின் போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் தொடர்பிலான துறைசார் கண்காணிப்புக் கமிட்டியால் அறிவுறுத்தப்பட்டது. அதன் படி இலங்கையில் போக்குவரத்துக்கு உரிய பங்குதாரர் நிறுவனங்களில் விசேட நிபுணத்துவம் பெற்றவர்கள் உட்பட அறிஞர் கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டதுடன் அக்கமிட்டியினால் வரையப்பட்ட போக்குவரத்துக் கொள்கையினை பொதுமக்கள் கருத்தினைப் பெறுவதற்காகவெளியிடப்பட்டது.பெற்ற பொதுமக்கள் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளைக் கருத்திற் கொண்டு தயாரிக்கப்பட்ட போக்குவரத்து கொள்கையின் இறுதி அறிக்கை போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் குறித்து துறைசார் கண்காணிப்புப் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின் வி'ேட ஆலோசனையாளரிடம் ஆலோசனை பெற்று மீண்டும் இறுதி அறிக்கை தயாரிக்கப்படும் என அறியத்தருகிறோம். அதன்படி குறிப்பிட்ட ஆலோசனையாளரை தேர்வு செய்வதற்கான கொள்முதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- **ஆய்வுகள்**

இதன் கீழ் பிரதானமாக மாகாணங்களுக்கு இடையிலான பேருந்து இயக்கத்திற்குரிய பயணிகள் கேள்வி ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதுடன், அதன் மூலம் வழங்கப்படும் சரியான தரவுகள் அட்டவணைகளைத் தயாரிக்கும் போது மற்றும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு ஏற்படும் பிரச்சினைகளைத் குறைத்துக் கொள்வதற்கு மிகவும் பயனுள்ளதாக அமையும். இதற்கு மேலதிகமாக,மாகாணங்களுக்கு இடையிலான பயணிகள் போக்குவரத்து தொடர்பில் முக்கியமான தீர்மானங்களை எடுக்கும் போது, கொள்கைகளைத் தயாரிக்கும் போது, திட்டங்களைத் தீட்டும் போது காணப்படும் நிலைமையினை ஆராய்தல் முதலில் நடைபெறும். தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் அவ்வாறான பணிகளை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களில் தேவையான தரவுகளை வழங்குதல் ஆய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்படும். அதன் படி பொதுப் போக்குவரத்துச் சேவையினைப் பயன்படுத்துவோர் மற்றும் பேருந்து ஓட்டுனர்கள் ஆகிய இரு தரப்பினர்களுக்கும் நியாயமான முறையில் கேள்வி மற்றும் நிரம்பலை மிகச் சிறப்பாகக் கையாள்வதற்கு தேவையான தரவுகளைத் தொகுத்தல் ஆய்வுப் பிரிவின் முக்கியமான பணியாகும்.

2018 டிசெம்பர் மாதம் இறுதியாகையில் 32 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன்,பயணிகள் கேள்வி தொடர்பில் பிரதானமாக கவனஞ் செலுத்தப்பட்டது.

இதற்கு மேலதிகமாக பெருநகர் மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சின் கீழ் கட்டுநாயக்க 18ம் கல் அருகில் நிர்மாணிக்க உள்ள பல்லூடக போக்குவரத்து பரிமாற்ற மத்திய நிலையம் தொடர்பில் பொதுப் போக்குவரத்துக் கேள்வியினை மதிப்பீடு செய்வதற்காக ஆய்வுகளை மேற்கொள்வதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் ஆலோசனையொன்று முன்வைக்கப்பட்டுள்ளதுடன், அவ்வாலோசனைபெருநகர் மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு பயணிகள் கேள்வி மதிப்பீடு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

- **ஜீ.பீ.எஸ். (GPS) தொழில்நுட்பம் மூலம் தொலைவில் இருந்தவாறே மாகாணங்களுக்கு இடையிலான தனியார் பேருந்துகளை ஒழுங்குபடுத்துதல்**

பொதுப் பயணிகள் போக்குவரத்துச் சேவையின் தரத்தினை விருத்தி செய்வதற்கும் வினைத்திறன்மிக்க போக்குவரத்துச் சேவையொன்றினை வழங்குவதற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினைப் (ICT)பொதுப் போக்குவரத்துத் துறையில் ஈடுபடுத்தும் வகையில் ஜீ.பீ.எஸ். தொழில்நுட்பத்தினைப் (GPS Technology) பயன்படுத்தி தொலைவில் இருந்தவாறு மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துகளை ஒழுங்குபடுத்தல் அறிமுகப்படுத்தலாம். இதன் கீழ் குறிப்பிட்ட பேருந்தினுள் ஜீ.பீ.எஸ். உபகரணத்துடன் இருவழி தொடர்பாடல் தொகுதியொன்று மற்றும் வேக எல்லையை மீறும் போது ஒலிப்பதற்காக SpeedAlarm Buzzer ஒன்றும் பொருத்தப்படும். இந்நடவடிக்கைக்காக

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் புதிய தொழில்நுட்பத்தினைக் கொண்ட கட்டுப்பாட்டுக் கூடம் ஒன்று தாபிக்கப்பட்டுள்ளதுடன் அதன் செயற்பாட்டு நடவடிக்கைகள் உடனடி தொலைபேசி அலகொன்றுடன் தொடர்புபட்டு 24 மணி நேரமும் இடையறா சேவையொன்றாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

- **பேருந்துக் கட்டண பிரீபெய்ட் அட்டை முறைமையினை அறிமுகப்படுத்தல்**

பொதுப் போக்குவரத்துச் சேவையினைப் பயன்படுத்தும் பயணிகளுக்கு நம்பிக்கைமிகு மற்றும் வினைத்திறன் மிக்க சேவை ஒன்றினை உறுதிப்படுத்துவதற்கும், பயணிகளின் முறைப்பாடுகளைக் குறைப்பதற்கும் பேருந்து ஊழியர்களால் ஏற்படும் நிபந்தனை மீறல்களைக் குறைத்து, வருமானத்தினை உச்சப்படுத்துவதும் நோக்காகக் கொண்டு போக்குவரத்துக் கட்டணங்களைச் செலுத்துவதற்காக பிரீபெய்ட்ட அட்டையொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு முதனிலைப்படுத்தி நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை அமைச்சில், இலங்கை மத்திய வங்கியின் மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகளுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களைத் தொடர்ந்து கௌரவ அமைச்சர் அவர்களின் அறிவுரையின் பிரகாரம் இதற்காக ஆரம்ப அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை நிருபத்திற்கு ஏற்கனவே அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி தற்போது இலங்கை மத்திய வங்கியினால் மாகாண போக்குவரத்து அதிகாரசபைகளின் மூலம் பயணசீட்டு பிரசூரிக்கும் இயந்திரங்கள் தொடர்பான அவசியமான தகவல்கள் சேகரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

- **போக்குவரத்து தொடர்பிலான தரப்பினரை அறிவூட்டும் நிகழ்ச்சி**

மாகாணங்களுக்கு இடையிலான பயணிகள் போக்குவரத்துச் சேவைகளை வழங்குவதற்கு பங்களிப்பை வழங்கும் தனியார் பிரிவின் பேருந்து உரிமையாளர்கள், வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையில் பணி புரியும் உரிய அலுவலர்கள் மற்றும் சேவைப்பெறுவோராகிய ஆசிரியர்கள் மற்றும் பாடசாலைச் சிறார்கள் ஆகிய தரப்பினர்களைக் கருத்திற் கொண்டு இந்நிகழ்ச்சி செயற்படுத்தப்படும். பேருந்து உரிமையாளர்கள் மற்றும் போக்குவரத்து அதிகாரசபையில் பணி புரியும் உரிய அலுவலர்களுக்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் பணிகள் குறித்து அறிவுட்டுதல் மற்றும் ஆசிரியர்கள் மற்றும் பாடசாலைச் சிறார்களுக்கு பாதுகாப்பாக பாதையினைப் பயன்படுத்துவதற்கு அவசியமான அறிவுரைகள் மற்றும் தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல், பல்வேறு விரிவுரைகள் மற்றும் செயற்பாடுகள், சித்திரப் போட்டிகளை நடாத்துதல் போன்றன இச்செயற்றிட்டத்தின் கீழ் ஒழுங்குபடுத்தப்படும்.

அதன்படி, 2018 தெசம்பர் 31ஆந் திகதியாகையில் நாடு பூராகவும் பயணிகள் போக்குவரத்து துறையில் சேவையில் ஈடுபட்டிருக்கும் உயர் மட்ட நிர்வாகிகளுக்கு விசேட பயிற்ச்சி பட்டறையும்,தனியார் பிரிவில் மாகாணங்களுக்கு இடையிலான பேருந்து உரிமையாளர்களுக்காக22 செயலமர்வுகளுமாக 29 செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

➢ **பேருந்துச் சேவை மீளாய்வு**

- **பொதுமக்கள் முறைப்பாட்டு விசாரணை**

இலங்கையில் தனியார் பேருந்துச் சேவை தொடர்பில் அச்சேவையினைப் பயன்படுத்தும் பொதுப் பயணிகளிடமிருந்து அடிக்கடி எழும் பல்வேறுபட்ட முறைபாடுகள் காரணமாக அச்சேவையினை முன்னேற்றமிகு மட்டத்திற்கு கொண்டு செல்வது மிகவும் கடினமாக உள்ளது. மாகாணங்களுக்கு இடையிலான தூரப்பயண சேவைப் பேருந்துகளில் மக்கள் முகங்கொடுக்க் உரிமைகள் மீறப்படல் போன்ற விடயங்கள் தொடர்பாக முன்வைக்கப்படும் முறைப்பாடுகளை விசாரித்தல் பொதுமக்கள் முறைப்பாட்டு விசாரணை அலகின் பொறுப்பாகும். நாள் முழுதும்

24 மணி நேரமும் செயற்படும் விசேட குறி இலக்கதத்துடன் (1955) உடனடித் தொலைபேசி அழைப்பு (0112595555) மூலமாகவும் தொலைநகல், மின் அஞ்சல் மற்றும் கடிதம் மூலமாகவும், ஆணைக்குழுவிற்கு வருகைத் தந்தும் முறைபாடுகளை முன்வைக்கலாம்.

2018ஆம் ஆண்டில் தெசம்பர் 31ஆந் திகதியாகையில் 3235 பொதுமக்கள் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், அவற்றுள் 2714 விசாரிக்கப்பட்டு தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

- **நடமாடும் சோதனையிடல்கள் மற்றும் விசாரணை**

1991 இல 37ஐக் கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின பிரகாரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படிமாகாணங்களுக்கு இடையிலான பயணிகள் போக்குவரத்திற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட பேருந்திற்காக பிறப்பிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள்உரிய முறையில் பின்பற்றப்படுகின்றனவா எனச் சோதனையிடல் நடமாடும் சோதனைப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும். ஓடிக்கொண்டிருக்கும் பேருந்துகளை இடையில் நிறுத்தி பரிசோதனை செய்வதுடன், நிபந்தனைகளை மீறி மாகாணங்களுக்கு இடையிலான பாதைகளில் ஓடும் பேருந்துகள் குறித்து அறிக்கைகளைப் பெற்று விசாரணைப் பிரிவிற்கு அறிவிப்பதும், பயணிகள் சேவை அனுமதிப்பத்திரமின்றி மாகாணங்களுக்கு இடையிலான பாதைகளில் ஓடும் பேருந்துகள் தொடர்பில் சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு உதவிசெய்தலும் மூலம் தரம்மிக்க பயணிகள் சேவையினை வழங்குவதற்கான பங்களிப்பை வழங்குவதும் நடமாடும் சோதனையிடல் அலகினால் நிறைவேற்றப்படுகின்றது.

அதன் படி, 2018ஆம் ஆண்டு தெசம்பர் 31ஆந் திகதியாகையில் நடமாடும் சோதனைப் பிரிவினால் 19587 மாகாணங்களுக்கு இடையலான பேருந்துகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

- **தேசிய போக்குவரத்து புள்ளிவிபர அறிக்கை**

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட மிகவும் காலத்தின் தேவையான நடவடிக்கையொன்றாக “தேசிய போக்குவரத்து புள்ளிவிபர அறிக்கை” யினை வெளியிட்டமைமையைக் குறிப்பிடலாம். தரை மார்க்கம், நீர் மார்க்கம், ஆகாய மார்க்கம் ஆகிய மூன்று ஊடகங்களினூடாக மேற்கொள்ளப்படும் போக்குவரத்து நடவடிக்கைகள் தொடர்பிலான தகவல்களை ஒரே இடத்திலிருந்து பெற்றுக் கொள்ளும் முறைமையொன்றாக “தேசிய போக்குவரத்து புள்ளிவிபர அறிக்கை” போக்குவரத்துத் துறையில் உள்ள எல்லா நிபுணர்களினதும் பாராட்டுதல்களைப் பெறும் பெரும் நூலொன்றாக ஆகியுள்ளது. இலங்கைப் போக்குவரத்துச் சபை, இலங்கைப் புகையிரதத் திணைக்களம்,மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம், இலங்கை துறைமுக அதிகாரசபை,தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம் உட்பட தொடர்புடைய நிறுவனங்களிடமிருந்து தகவல்கள் மற்றும் தரவுகளை ஒன்றுசேர்த்து அத்தரவுகளைப் பல்வேறு கோணங்களிலும் பகுப்பாய்வு செய்து மிகவும் கவர்ச்சிகரமாகத் தயாரிக்கப்படும் இந்த “தேசிய போக்குவரத்து புள்ளிவிபரவியல் அறிக்கை” தொடர்ந்தும் ஒவ்வொரு வருடமும் அச்சிடப்பட்ட நூலாக மும்மொழிகளிலும் வெளியிடப்படுகின்றது.

2018.12.31 திகதியாகையில் 2017ம் ஆண்டுக்கான “தேசிய போக்குவரத்து புள்ளிவிபரவியல் அறிக்கை” அச்சீட்டு நடவடிக்கைகள் நிறைவுற்று நாடு பூராகவும் உள்ள அரச நிறுவகங்கள், பிரதான நூலகங்கள், போக்குவரத்து சம்மந்தமான நிறுவகங்களுக்கு விநயோகிக்கபட்டு வருகிறது.

- **உள்ளகத் தகவல் தொழில்நுட்பத் தொகுதி**

நிறுவனத்தின் பணிகளின் விளைப்பயனை விருத்தி செய்வதற்காக நிறுவனத்தினுள் காணப்படும் அனைத்து செயற்பாடுகளையும் இனங்கண்டு, அச்செய்றபாடுகளை ஒன்றோடொன்று தொடர்புமாறு மையப்படுத்தப்பட்ட தரவுகள் தொகுதியொன்றினை ஏற்படும் நோக்கில் நிறுவனத்தின் எல்லா செயற்பாடுகளும் தானியங்கச் செய்யும் தொகுதியொன்றினை நிறுவுதல் (ProcessAutomation

System), ICTA நிறுவனம், மொறட்டுவைப் பல்கலைக்கழகம் மற்றும் கொழும்புப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் அறிவுரைகளின் கீழ் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் கீழ், 03 கட்டங்களைக் கொண்ட செயற்றிட்டத்தின் முதலாவது கட்டம் ஏற்கனவே முடிவடைந்து இரண்டாவது கட்டமும் இறுதிப் பகுதியில் காணப்படுகிறன்றது.

இதற்கு மேலதிகமாக, ஆசனங்களை முன்பதிவுசெய்தல் செயற்றிட்டமொன்று (Online Bus Ticket Reservation System) மொறட்டுவைப் பல்கலைக்கழத்தின் மூலம் உரிய மென்பொருள் விருத்தி செய்யப்படுவதுடன், அது தற்போது செயற்படும் நிலையில் உள்ளது. மேலும், பன்முகப் போக்குவரத்துச் சேவைகள் குறித்து தகவல்களை வழங்கும் தொகுதியொன்று கூகுள் வரைபடம் ஊடாக அறிமுகப்படுத்துவதற்கு மொறட்டுவைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து உரிய தரவுகளைச் சேகரித்தல் மற்றும் மெனபொருளினை விருத்தி செய்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 4.3 2018 ஆம் ஆண்டில் செயற்றிட்டங்களை செயற்படுத்தும் போது முகங் கொடுத்த சவால்கள்

2018ஆம் ஆண்டிற்கான செயற்படு திட்டத்தின் பிரகாரம் செயற்படும் போது பிரதானமாக பல சவால்களுக்கு முகங் கொடுக்க நேரிட்டது.

கெமிசெரிய சேவைக்குரிய புதிய சேவைகளை ஆரம்பிப்பதற்கான ஆலோசனைகள் மாகாணப் போக்குவரத்து அதிகாரசபைகளிடமிருந்து போதியளவு கிடைக்காமை மற்றும் விலைமனு கோரப்பட்ட வீதிகளுக்கு விண்ணப்பதாரிகள் முன்வராமையால் குறிப்பிட்ட இலக்கினை அடைய முடியாமல் இருப்பதும் ஒன்றிணைக்கப்பட்ட அட்டவணையைத் தயாரிப்பதற்கு இலங்கை போக்குவரத்துச் சபை மூலம் தகவல்கள் பெற்றுக் கொடுக்காமை மற்றும் ஒன்றிணைக்கப்பட்ட அட்டவணையைச் செயற்படுத்தவதற்கு இலங்கை போக்குவரத்துச் சபை,ணக்கத்தினை தெரிவிக்காமல் இருப்பதும் முக்கியமான சவால்களாகும். முற்கொடுப்பனவு (பிரீபெய்ட்) அட்டை அறிமுகஞ் செய்யும் செயற்றிட்டம் 2017ஆம் ஆண்டில் ICTA நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டு, செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் இடைநடுவில் எழும்பிய பிரச்சினையொன்றின் காரணமாக செயற்றிட்டம் தாமதமாகியதுடன், அதனைப் பூர்த்தி செய்வதற்காக ஏலவெ கௌரவ போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரினால் அமைச்சரவை நிருபமொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

ஊவா மற்றும் சப்பிரகமுவா பேருந்துக் கட்டண முரண்பாடுகளை நீக்குவதற்கு, உரிய போக்குவரத்து அதிகாரசபை மற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிரதான அலுவலகம் மற்றும் உரிய டிப்போ அதிகாரிகளுடன் கலந்துரையாடலொன்று மேற்கொள்ளப்பட்டது. விசேடமாக, பேருந்துக் கட்டண முரண்பாடுகளை நீக்குவதுடன், சில வீதிகளில் பேருந்துக் கட்டணம் குறைவதனால் இலங்கைப் போக்குவரத்துச சபை அதற்கு இணங்காமையால் கட்டண முரண்பாடுகளை நீக்குவதற்கு முடியவில்லை.

இதற்கு மேலதிகமாக, பயணிகள் போக்குவரத்திற்கு மாகாணங்களுக்கு இடையிலான தூ ரப்பயண சேவைப் பேருந்துகளுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் விலைமனு கோரல் படிமுறைப்படி மேற்கொள்ளப்படும் போது அவ்வாறு விலைமனு கோரலுக்கு எதிராக சில ஓட்டுனர்கள் சட்டரீதியான நடவடிக்கை எடுத்தமையால் அப்பணியும் இடைநிறுத்தப்பட்டது.

பேருந்துத் தரிப்பிடங்களை நிர்மாணிக்கும் செயற்றிட்டத்தின் கீழ், 2017ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கிளிநொச்சி பேருந்துத் தரிப்பிடம் உரிய ஒப்பந்தகாரர்களால் ஒப்பந்தத்தின் பிரகாரம் குறிப்பிட்ட காலத்தினுள் முடிவுறுத்தாமை மற்றும் தாமதப்படுத்தல் காரணமாக மீண்டும் விலைமனு கோரப்பட்டுள்ளது. மேலும் பக்கமூண பிரதேசத்தில் நிர்மாணிப்பதற்கு

உத்தேசித்துள்ள பேருந்துத் தரிப்பிட நிர்மாணிப்புச் செயற்றிட்டத்தினையும் காணிப் பிரச்சினை தீர்வு ஆண்டு இறுதியில் எட்டப்பட்டமையால் வேலை ஆரம்பிக்க முடியாதுள்ளது.

### 4.4 2019 ஆம் ஆண்டிற்கான எதிர்பார்ப்புக்கள்

1. 1991 இல 37 கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத் திருத்தத்தினை அனுமதித்துக் கொள்ளுதல் மற்றும் திருத்தப்பட்ட சட்டத்தின் பிரகாரம் பயணிகளுக்கு மற்றும் பேருந்து ஓட்டுனர்களுக்கு தரம் மிக்கதும் மற்றும் நிலையான பேருந்துச் சேவையொன்றினை வழங்குவதற்கும் நெறிப்படுத்துகையை வலுவூட்டுதல்.

2. ஏற்கனவே தயாரித்தல் முடிவுறும் நிலையில் உள்ள தேசிய போக்குவரத்துக் கொள்கையின் பிரகாரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிகளைத் தழுவுதல் மற்றும் அதன் பிரகாரம் உபாய வழிகளைத் தயாரித்து 2019ஆம் ஆண்டில் செயற்றிட்டங்களைச் செயற்படுத்துதல்.

3. தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள அனைத்து மாகாணங்களுக்கு இடையிலான பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களின் கீழ் ஓடும் பேருந்துகளில் GPS தொகுதியினைப் பொருத்துதல்,GPS மூலம் மீளாய்வு செய்வதன் மூலம் பொது மக்களுக்கு பாதுகாப்புமிகு மற்றும் நம்பிக்கைமிகு பேருந்துச் சேவையினை வழங்குதல்.

4. மாகாணங்களுக்கு இடையிலான வீதிகளை வகைப்படுத்தி இனங்கண்டு பயணிகள் கேள்விகளை (இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு ஒன்றிணைந்து) ஆய்வு செய்து, அதன் மூலம் இனங்காணப்படும் பயணிகள் கேள்விகள் படி ஒன்றிணைந்த நேர அட்டவணைகளை விஞ்ஞானரீதியாகத் தயாரித்துச் செயற்படுத்துதல்.

5. தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அலுவலக நடவடிக்கைகளை மிகவும் வினைத்திறன் மிக்கதாக மற்றும் விளைபயன் மிக்கதாக நிறைவேற்றுவதற்கு ERPதொகுதியினை 2019ஆம் ஆண்டு முதல் செயற்படுத்துதல் மற்றும் எவரும் இணையத்தினூடாகத் தாம் இருக்கும் இடத்திலிருந்தே அண்மையிலுள்ள பேருந்துத் தரிப்பிடம் /புகையிரத நிலையம் மற்றும் பயணவழி இலக்கத்துடன் கூடிய போக்குவரத்து வசதிகள் குறித்து விபரமான தகவல்களை கூகுள் வரைபடம் மூலமாகப் பெற்றுக் கொள்ளும் "GEO Reference data feed" வசதிகளை செயற்படுத்துதல்.

6. மாகும்புர பன்முகப் போக்குவரத்து பரிமாற்ற மத்தியநிலையிலிருந்து அதிவேகப் பாதையில் தற்போது செயற்படுத்தப்படும் (மஹரகமையிலிருந்து ஆரம்பமாகும்) எல்லா பேருந்துச் சேவைகளும் பயணத்தினை ஆரம்பிக்கச் செய்தல்

7. மாகாணங்களுக்கு இடையிலான தனியார் பேருந்துகளில் பணிபுரியும் சாரதிகள், நடத்துனர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சிகளை இபோசவுடன் இணைந்து நவீன முறைப்படி மனப்பாங்கு மற்றும் திறன்களை விருத்தி செய்வதற்கான செயற்பாடுகளுடன் நடாத்துதல்.

# (5)

# தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம்

## 5.1 அறிமுகம்

அரச நியதிச் சட்டமுறை நிறுவகமொன்றாக 1997 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகச் சட்டத்திற்கு அமைவாகத் தொழிற்படுகின்ற இந்த நிறுவகத்தின் அடிப்படை நோக்கம், இலங்கையில் இருக்கின்ற கனரக வாகனங்கள் மற்றும் அதேபோன்று மென்ரக வாகனங்களின் சாரதிகளின் ஆரோக்கிய நிலைமை பற்றி உயர்தர மற்றும் தரமான வைத்திய பரிசோதனையொன்றை மேற்கொண்டு, அதற்கு அமைவாக மருத்துவச் சான்றிதழை வழங்குவதாகும். இதற்காக தலைமையகம் மற்றும் 25 கிளை அலுவலகங்கள் நாடுபூராவும் தாபிக்கப்பட்டுள்ளன.

### நோக்கம்

"ஒவ்வொரு வழிச்செலுத்துகைக்குப் பின்னாலும் ஆரோக்கியமான சாரதியொருவரை உருவாக்குதல்."

### செயற்பணி

"இலங்கையினுள் போக்குவரத்து மருத்துவத் துறையில் முன்னோடியாக இருந்து சகல சாரதி அனுமதிப்பத்திர விண்ணப்பதாரர்களுக்கும் தரமான மருத்துவ பரிசோதனை மேற்கொண்டு உடல், உள தகுதி பற்றி சான்றுப்படுத்துதல்."

## 5.2 குறிக்கோள்

- சகல சாரதி அனுமதிப்பத்திர விண்ணப்பதாரிகளினதும் உடல், உள தகுதியைப் பரிசோதனை செய்தல்.
- வழங்கப்படுகின்ற மருத்துவச் சான்றிதழின் தரத்தையும் பாதுகாப்பு உபாயத் திட்டத்தையும் மேம்படுத்துதல்.
- சிறந்த மனிதவள முகாமைத்துவத்தினூடாக சேவையின் தரத்தை அடைந்துகொள்ளுதல்.

## 5.3 நிறுவனத்தின் பணிகள்

(அ) கனரக வாகனங்கள் உட்பட சகல வாகனங்களையும் செலுத்துகின்ற மற்றும் செயற்படுத்துகின்ற தரப்பினருக்கு மருத்துவ சேவைகளை வழங்குல்.

(ஆ) கனரக வாகனங்கள் உட்பட சகல வகையான மோட்டார் வாகனங்களதும் சாரதிகளையும் செயற்படுத்துனர்களையும் பரிசோதனைசெய்து அந்த சாரதிகளுக்கும் செயற்படுத்துனர்களுக்கும் உடல், உள தகுதி பற்றிய சான்றிதழை வழங்குதல்.

(இ) கனரக வாகனங்கள் உட்பட சகலவகை வாகனங்களினதும் சாரதிகளையும் அதனைச் செலுத்துபவர்களையும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தி அவர்களின் தகைமையையும் தகுதியையும் பற்றிய பரிந்துரைகளையும் வழங்குதல்.

(ஈ) எந்தவொரு வகையான மோட்டார் வாகனங்களுக்கும் தொடர்புடைய விபத்து சம்பந்தமான சந்தர்ப்பங்களின் போது மருத்துவச் சேவையை வழங்குதல்.

(உ) சகல வகையையும் சேர்ந்த மோட்டார் வாகனங்கள், உடல், உள தகுதியைக்கொண்டுள்ள நபர்களினால் மாத்திரம் செலுத்தப்படுகின்றது அல்லது ஓட்டிச் செல்லப்படுகின்றது என்பதை நிறுவனத்தினாலேயே மேற்கொள்வதில் கவனஞ்செலுத்துதல்

(ஊ) தொழிநுட்பச் சுகாதாரம் மற்றும் தொழிநுட்ப விபத்துகள் பற்றிய மருத்துவ ஆலோசனையையும் பரிந்துரையையும் வழங்குதல்.

(எ) தொடர்புடைய செயற்படுத்தும் அதிகாரிகளினால் ஏற்றுக்கொள்ளக் வேண்டியதும் நடைமுறைப்படுத்த வேண்டியதுமான போக்குவரத்து மருத்துவ நடவடிக்கைகளுக்கு தரங்களைத் தயாரித்தலும் எல்லைகளை விதித்தலும்

### 5.4 தற்போதைய செயலாற்றுகை


இந்த ஆண்டின் டிசம்பர் மாத இறுதி வரை சாரதி அனுமதிப்பத்திர விண்ணப்பதாரிகளின் மருத்துவ பரிசோதனைகளை மேற்கொண்டு மருத்துவ சான்றிதழ் வழங்குவது பற்றிய பகுப்பாய்வுகள் பின்வருமாறு.

**2018 டிசம்பர் 31 ஆம் திகதி வரை**

| மேற்கொள்ளப்பட்ட மொத்த மருத்துவப் பரிசோதனைகளின் எண்ணிக்கை | | சுகாதாரக் காரணிகளின் அடிப்படையில் மருத்துவப் பரிசோதனையில் தற்காலிகமாக சித்தியடையாத சாரதிகள் மற்றும் சாரதி அனுமதிப் பத்திர விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை | | தற்காலிகமாக சித்தியடையாத சாரதிகள் மற்றும் சாரதி அனுமதிப் பத்திர விண்ணப்பதாரர்களின் சதவீதம் % | |
|---|---|---|---|---|---|
| 2018 | 2017 | 2018 | 2017 | 2018 | 2017 |
| 878,668 | 751,786 | 100,638 | 74,104 | 11.45 | 9.86 |

2018 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட மொத்த மருத்துவ பரிசோதனைகளின் எண்ணிக்கை 878,668 ஆகும். அதன் மூலம் 2018 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை சுகாதரார ரீதியான காரணிகளின் அடிப்படையில் சாரதிளை தொழிலில் ஈடுபடுத்துவதற்குத் தகுதியற்றவர்கள் என மருத்துவர்களினால் தீர்மானிக்கப்பட்டுள்ளவர்களின் அளவு 11.47% ஆகும். அதாவது பரிசோதானைக்காக முன்வந்துள்ள விண்ணப்பதாரர்களின் ஒவ்வொரு 100 நபர்களுக்கும் 11 இற்கும் 12 இற்கும் இடையிலான எண்ணிக்கையிலானோர் சுகாதார காரணிகளின் அடிப்படையில் வாகனங்களைச் செலுத்துவதற்குத் தகுதியற்றவர்கள் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர்.

தற்காலிக மருத்துவப் பரிசோதனைகள் வெற்றிபெறாதிருப்பதற்கு காரணமாக அமைந்த நோய்கள் பின்வருமாறு.




- ➢ அடையாளங் காணப்பட்ட நோய்களில் கூடுதலான சதவீதத்திற்கு காரணம் கண் பார்வைக் குறைபாடாகும்.
- ➢ தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்திற்கு பொலிஸ் திணைக்களத்தின் மூலமும் நீதிமன்றத்தின் மூலமும் அனுப்பப்பட்ட சாரதிகளில் 11% இற்கும் 12% இற்கும் இடையிலான சதவீதத்தினர் வாகனம் செலுத்துவதற்கு தகுதியான உடல், உள தகுதியைக் கொண்டவர்களல்ல என அடையாளங் காணப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் சுகாதார ரீதியில் தகுதியற்ற சாரதிகள் வாகனம் செலுத்தாதிருப்பதனை சான்றுப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுவதன் மூலம் வீதி விபத்துக்களைக் குறைப்பதற்குப் பங்களிப்புச் செய்யப்பட்டுள்ளது.

| 2017 டிசம்பர் 31ஆம் திகதி வரை | | | 2018 டிசம்பர் 31ஆம் திகதி வரை | | |
|---|---|---|---|---|---|
| சேவை நாடிகளின் எண்ணிக்கை | மருத்துவ பரிசோதனைக்காக தோற்றுகின்ற சந்தர்ப்பத்தில் வெற்றி அடையாத வர்களின் எண்ணிக்கை | வெற்றி அடையாத சேவை நாடிகளின் சதவீதம் % | சேவை நாடிகளின் எண்ணிக்கை | மருத்துவ பரிசோதனைக்காக தோற்றுகின்ற சந்தர்ப்பத்தில் வெற்றி அடையாத வர்களின் எண்ணிக்கை | வெற்றி அடையாத சேவை நாடிகளின் சதவீதம் % |
| 4,191 | 479 | 11.43 | 4,720 | 501 | 10.61 |

## 5.5 ஏனைய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்

- **நடமாடும் சேவைகளை நடைமுறைப்படுத்துதல்.**
  - **குருணாகல் மாவட்டம்**

குருணாகல் மாவட்டத்தில் நடமாடும் சேவை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2018.03.09 ஆம் திகதி முதல் 2018.06.16 ஆம் திகதி வரை 06 நாட்கள் சாரதி அனுமதிப்பத்திர விண்ணப்பதாரர்களுக்கு மருத்துவ பரிசோதனை சான்றிதழ்களை வழங்கும் வேலைத்திட்டமொன்று முறையேபி ங்கிரியமல்லவபிட்டியகுருநாகல் கிரிபாவ பொல்கஹவல மற்றும் தம்புல்ல ஆகிய பிரதேச செயலகங்களில் நடாத்தப்பட்ட அதேவேளையில் அதில் 1,501 சேவைநாடிகள் சேவையைப் பெற்றுக்கொண்டுள்ளனர்

  - **அநுராதபுர மாவட்டம்**

அநுராதபுர மாவட்டத்தில் நடமாடும் சேவை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2018.05.20 ஆம் திகதி முதல் 2018.05.27 ஆம் திகதி வரை 03 நாட்கள் சாரதி அனுமதிப்பத்திர விண்ணப்பதாரர்களுக்கு மருத்துவ பரிசோதனை சான்றிதழ்களை வழங்கும் வேலைத்திட்டமொன்றுமுறையே ஹொரவப்பொத்தானகெபதிகொல்லாவ ஆகிய பிரதேச செயலகங்களில் நடாத்தப்பட்டது.

  - **யாழ்ப்பாண மாவட்டம்**

யாழ்ப்பாண மாவட்டத்தில் நடமாடும் சேவை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 16 பிரதேச செயலகங்களில் 2018.07.29 ஆம் ஆம் திகதி முதல் 2018.10.14 ஆம் திகதி வரை 19 நாட்கள் சாரதி அனுமதிப்பத்திர விண்ணப்பதாரர்களுக்கு மருத்துவ பரிசோதனை சான்றிதழ்களை வழங்கும் வேலைத்திட்டமொன்று நடாத்தப்பட்ட அதேவேளையில் அதில் 5,134 சேவைநாடிகளுக்கு சேவை வழங்கப்பட்டுள்ளது.

- **தலைமை அலுவலகத்தைநவீனமயப்படுத்தல்**

தலைமை அலுவலகத்தின் இரண்டாம் மாடியில் நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு 2018.07.12 ஆம் திகதியன்று திறந்துவைக்கப்பட்டஅதேவேளையில் தலைமை அலுவலகத்தின் கீழ் மாடியிலும் முதலாம் மாடியிலும் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12ஆம் திகதியன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள்தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2019 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் இந்தநடவடிக்கைகள் முடிவுறுத்தப்படவுள்ளன.

- கூடுதலான எண்ணிக்கையிலான சேவைநாடிகள் வருகைதருகின்ற கிளை அலுவலகங்களான கம்பஹா, மாத்தறை, இரத்தினபுரி, குருணாகல், ஸ்ரீஅம்பாறை,பொலனறுவை, மொனராகலை மற்றும் பதுளை ஆகிய அலுவலகங்களுக்கு மின்பிரப்பாக்கி இயந்திரங்களைக் (ஜெனரேட்டர்) கொள்வனவு செய்தல்.

### 5.6 நிறுவனத்தின் நிதிமுன்னேற்றம் (2018)

| வருமானம் (ரூபா) | மீண்டுவரும் செலவு (ரூபா) | மூலதனச் செலவு(ரூபா) |
|---|---|---|
| 762,452,582.62 | 416,532,273.08 | 59,686,972.92 |

### 5.7 2018 ஆம் ஆண்டில் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது முகங்கொடுத்த சவால்கள்

- வேரஹர கிளை அலுவலகம் அமைந்துள்ள மோட்டார்வாகன போக்குவரத்து திணைக்களத்தின் வளவிலுள்ள காணியின் ஒரு பகுதியை ஒதுக்கிக் கொள்ளுவதற்கு இலங்கை போக்குவரத்துச் சபையின் உடன்பாடு பெறப்பட்டுள்ளது. இருப்பினும் கிடைக்கின்ற காணியின் அளவையும் எல்லையையும் தீர்மானிப்பது இதுவரை தாதமடைந்திருப்பது பிரச்சினைக்குரிய விடயமாகும்.

### 5.8 2019 ஆம் ஆண்டின் எதிர்கார்ப்புகள்

- **மருத்துவ தகுதிறன்களை இற்றைப்படுத்துதலும் சட்டமுறைப்படுத்துதலும்.**

பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ தகுதிறன்கள் இது வரையில் செயற்பட்டது. அதேபோன்று இற்றைப்படுத்துவதும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த இற்றைப்படுத்தல் சுகாதார அமைச்சின் கீழ் தொழிற்படுகின்ற விசேட பாடசாலை அதாவது கண்,அவயவ குறைபாடுகள், போன்றபாடசாலைகளின் உடன்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு அனுப்பப்பட்டுள்ளது. மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களமும் அந்த விசேட பாடசாலையுடன் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளுக்கு தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்துடன் கலந்துகொண்டுள்ளது. தற்போது கண் சம்பந்தமான சட்டத் தொகுதிக்கு கண் விசேட மருத்துவப் பாடசாலையின் உடன்பாடு கிடைத்ததன் பின்னர் பணிப்பாளர் சபையினால் நடைமுறைப்படுத்துவதற்கு அங்கீகாரமளிக்கப்பட்டுள்ளது. அது சம்பந்தமாக கண் விசேட மருத்துவப் பாடசாலையின் விசேட மருத்துவ உத்தியோகத்தர்களின் தலைமையில் நிறுவனத்தின் சகல மருத்துவர்களுக்கும் விளக்கமளிக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று 2018.10.12 ஆம் திகதியன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. ஏனைய விசேட மருத்துவப் பாடசாலைகளிலும் சட்டத் திருத்த உடன்பாடுகளையும் பெற்றுக்கொண்டதன் பின்னர் சட்டமுறைப்படுத்தும் நடவடிக்கை களையும் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- **MT31A மருத்து படிவத்திற்குப் பதிலாக தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தினால் வழங்கப்படுகின்ற பாதுகாப்பு உபாயத்திற்காக மருத்துவப் படிவத்தினைப் பயன்படுத்துவதனை சட்டமுறைப்படுத்துதல்.**

2012.09.01 ஆம் திகதியின் பின்னர் MT31A மருத்துவ படிவத்திற்குப் பதிலாக தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தினால் அச்சிடப்படுகின்ற பாதுகாப்பு உபாயத்தைக்கொண்ட மருத்துவப் படிவத்தினைப் பயன்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 2013.03.21 ஆம் திகதியின் பின்னர் எமது நிறுவனத்தின் கிளை அலுவலகங்கள் இல்லாத மாவட்டங்கள் தவிர்ந்த சாரதி அனுமதிப் பத்திரத்திற்குரிய மருத்துவ சான்றிதழை வழங்குவது எமது நிறுவனத்தின் மூலம் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டது. தற்போது சகல மாவட்டங்களுக்காகவும் கிளை அலுவலகங்கள் தாபிக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் அடுத்த வருடத்தினுள் MT31A மருத்துவ படிவத்திற்குப் பதிலாக தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுகத்தினால் அச்சிடப்படுகின்ற பாதுகாப்பு உபாயத்தைக்கொண்ட மருத்துவப் படிவத்தைப் பயன்படுத்துவதனை சட்டமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- **கணனி வலையமைப்புச் செய்தல்**

2019 ஆம் ஆண்டில் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துடனும் ஆட்பதிவுத் திணைக்களத்துடனும் தகவல்களைப் பரிமாற்றிக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளையில், அதன் மூலம் ஆட்களின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல், போலியான மருத்துவச் சான்றிதழ் வழங்குவதனைத் தடுப்பதன் மூலம் பொது மக்களுக்கு சிரமம் ஏற்படாத விதத்தில் மிகவும் வினைத்திறன்மிக்க சேவையொன்றை வழங்கவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- **கிளை அலுவலகங்களுக்காக கட்டடங்களை நிர்மாணித்தல்.**

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமாகவுள்ள மோட்டார்வாகன போக்குவரத்து திணைக்களத்தின் அலுவலகமொன்றை நடாத்திவருகின்ற காணியிலிருந்து வேரஹர கிளையைத் தாபிப்பதற்கான இடவசதிகளை ஒதுக்கிக்கொள்ளுதல்.

# (6)

# இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை

## 6.1 அறிமுகம்

சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்பு (ICAO) வினால் அங்கீகரிக்கப்பட்ட உரிய சர்வதேச தரங்கள் மற்றும் பரிந்துரை செய்த ஒப்பளவுகளுக்கமைய 2002 இலக்கம் 34 கொண்ட சிவில் விமான சேவை அதிகார சபைச் சட்டத்தின் மூலம் மற்றும் 2010 இலக்கம் 14 கொண்ட சிவில் விமான சேவைச் சட்டத்தில் உள்ளடங்கும் பிரமாணக் குறிப்பு ஏற்பாடுகளின் கீழ் உள்நாட்டு சிவில் விமான சேவை கைத்தொழிலை மேற்பார்வை செய்தல் இலங்கை சிவில் விமான சேவை அதிகாரசபையின் அடிப்படை பணியாகும்.

**நோக்கு**

“நிபுனத்துவ மற்றும் நம்பிக்கைமிக்க முன்னோடியாகச் செயற்படுவதன் மூலம் சகலருக்கும் பாதுகாப்பு மிகுந்த வான்பரப்பினை உறுதிப்படுத்தல்.”

**பணிக்கூற்று**

“மூலஉபாயத் திட்டங்கள் மற்றும் உற்பத்தித்திறன் மிக்க மேற்பார்வைகள் ஊடாக சர்வதேச தரங்கள் மற்றும் பரிந்துரைகளுக்கு அமையவும் தேசிய சட்ட ரீதியிலான ஒழுங்கு விதிமுறைத் தேவைகளுக்கு இணங்கவும் பாதுகாப்பு, தற்காப்பு, வினைத்திறன் மற்றும் சூழலுக்கு உகந்த முறையில் தேசிய விமான முறைமையினை முன்னெடுத்தல் மற்றும் பயன்மிக்க மேற்பார்வையின் ஊடாக வசதிகளை வழங்குதல்.”

**மாதிரி வாசகம்**

“அணைவருக்கும் பாதுகாப்பு மற்றும் வினைத்திறன்மிக்க விமானத் தளம்”

**நோக்கம்**

சமூக பொருளாதார அபிவிருத்திக்காக பாரிய இயலுமையுடன் கொண்ட எமக்கு அப்பால் உயரத்தில் உள்ள வான்பரப்பு நாட்டின் முன்னேற்றங்கள் மற்றும் சுபீட்சத்தைப் போன்று தேசிய எதிர்காலப் பரம்பரைக்காக முகாமைத்துவத்திற்கு உட்படுத்துவது தேவையான பொதுச் சொத்தாகும்.

## 6.2 செயற்சாதனைகள் (2018)

06 தொழில்நுட்பப் பிரிவுகள், 05 தொழில்நுட்பமல்லாத பிரிவுகள் மற்றும் 03 அலகுகள் இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையில் காணப்படுகின்றது.

### 6.2.1 இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் தொழில்நுட்பப் பிரிவு

**1. விமான நிலையப் பிரிவு**

- **மேற்பார்வை அபிவிருத்தி**
  - விமான வகைப்படுத்தல் ஒழுங்கு விதிமுறைகள் பூரணப்படுத்தப் பட்டுள்ளதுடன், வர்த்தமாணி அறிவித்தல் 2018 ஆம் ஆண்டில் வெளிப்படுத்தப்பட்டது. நீர் சார்ந்த விமானத் தளங்களை மேற்பார்வை செய்வது தொடர்பிலான முதலாவது வரைவு சட்ட வரைஞரினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் தேவையான மறுசீரமைப்புக்களை உள்ளடக்கி சட்ட வரைஞருக்கு மீளச் சமர்ப்பிக்கப்பட்டது.

- விமான நிலையத்திற்குரியதான ICAO இணைப்பு 14 இன் முதலாவது காண்டத்துடன் தொடர்புபட்ட 31 வது அமுல்படுத்தும் தரம் மற்றும் ஹெலிகப்டர் விமானத் தளத்திற்குரியதான ICAO இணைப்பு 14 இல் இரண்டாவது பிரிவுடன் தொடர்புபடுத்தி 41 வது அமுல்படுத்தும் தரம் இணைப்பிற்காக மேற்கொள்ளப்பட்ட மறுசீரமைப்புக்களுக்கு அமைவாக திருத்தியமைக்கப்பட்டுள்ளது.
- இணைப்பு 09 இற்குரியதாக 60 வது அமுல்படுத்தும் தரம் மற்றும் வசதிகளை வழங்குவது தொடர்பில் விமான நிலையச் செயற்பாட்டாளர்களின் பொறுப்புக்கள் பகிரங்கப்படுத்தப்பட்டன.
- விமானப் போக்குவரத்து கற்கை/ பாதுகாப்பு அவதான மதிப்பீடு SLCAP 2150 - விமான ஓடுபாதை பாதுகாப்பு வேலைத்திட்டத்தை நடாத்துவது தொடர்பில் விமான நிலையச் செயற்பாட்டாளர்கள் SLCAP 2900 - வழிகாட்டல் ஆலோசனை ஆவணங்கள் வெளியிடப்பட்டன.
- SLCAP 2100 - விமான நிலையச் செயற்பாட்டு பாதுகாப்பு ஒழுங்குக் கோவை சமகாலப்படுத்தப்பட்டதுடன், SLCAP 2950 விமானக் கற்கைக்காக மதிப்பீட்டு ஒழுங்கு விதிமுறைகளைத் தயாரித்து வெளியிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

➢ **கண்காணிப்புப் பணிகள்**

- இலங்கை தேசிய மற்றும் சர்வதேச விமான நிலையங்களின் கண்காணிப்பு செயற்பாடுகளை மேற்கொள்ளல், அறிக்கைகளை சமர்ப்பித்தல் மற்றும் மேற்பார்வை.
- நீர் சார்ந்த விமானத் தளங்கள் மற்றும் உலங்கு வானூர்தி விமானத் தளங்களை சோதனைக்குட்படுத்தல் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குதல்.
- பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கவசத்திலிருந்து எரிபொருள் கசிவு ஏற்படுவதைப் பாதுகாப்பதற்கு முன்னர் கவசத்தின் செயற்பாடுகளை முன்னெடுப்பதைப் போன்று E கவசத்தை விரிவுபடுத்த II வது கட்டத்தின் 2 வது செயற்பாட்டின் போது விமான நிலையப் பிரிவினால் நிபுனத்துவ உதவிகள் வழங்கப்பட்டன.
- பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் தளச் செயற்பாட்டுப் பணிகள் தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அது தொடர்பிலான அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டது.

➢ **உள்நாட்டு விமான நிலையங்களை அபிவிருத்தி செய்தல்**

- பண்டாரவெல பிரதேசத்தில் உள்நாட்டு விமான நிலையத்தை நிர்மானிப்பதற்காக சுற்றாடல் அழுத்த மதிப்பீடு (EIA) பெற்றுக் கொண்டு எதிர்காலச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- சிவில் விமான சேவை செயற்பாட்டுப் பணிகளுக்காக ஹிங்குரன்கொட விமான நிலையத்தை அபிவிருத்தி செய்யும் செயற்பாடுகள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் மேற்கொள்ளப்படுவதுடன் மதிப்பீடுகளை தயாரிக்கும் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன.
- பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்கான செலவின மதிப்பீடுகளைத் தயாரிக்க வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவை (இலங்கை) லிமிட்டட் மூலம் உதவிகள் கோரப்பட்டன. செலவின மதிப்பீடு ரூபா 1950 மில்லியனாகும். இந் நிதியத்தில் சிவில் விமான சேவை அதிகார சபையினால் ரூபா 950 மில்லியன் மற்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் ரூபா 1000 மில்லியன் செலவிடப்படுவதுடன் நிர்மானப் பணிகள் இலங்கை விமானப் படையினால் மேற்கொள்ளப்படவுள்ளன.
- பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இரண்டாவது விமான ஓடுபாதையின் நிர்மானப் பணிகளுக்காக தேவையான உள்ளீடுகள் மெகாபொலிஸ் அமைச்சிற்கு வழங்கப்பட்டது.

## 2. விமானப் போக்குவரத்துச் சேவை செயற்பாட்டுப் பிரிவு

கருத்திற் கொள்ளப்பட்ட கால எல்லைக்குள் சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பு (ICAO) இனால் அனுப்பப்பட்ட அரச ஆவணங்களின் கோரிக்கைகளை அமுல்படுத்துவதைப் போன்று அவ் ஆவணங்களுக்காக வழங்க வேண்டிய வரவேற்புக்கள் தொடர்பிலும் விமானப் போக்குவரத்து சேவைப் பிரிவினால் (ANS) செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

➢ **மேற்பார்வை அபிவிருத்தி**

2010 இலக்கம் 14 கொண்ட சிவில் விமான சேவைச் சட்டத்திற்கமைய விசேடமாக சட்டத்தின் 120 வது வாசகத்திற்கமைய 2018 ஆம் ஆண்டில் செயற்சாதனை மீளாய்விற்குட்படுத்தப்பட்ட கால எல்லைக்குள் விமானப் போக்குவரத்து சேவை விநியோகஸ்தர் சான்றுப்படுத்துவதற்காக திருப்தியடைய வேண்டிய தேவைகள் தொடர்பான ஒழுங்குக் கோவை (அமுல்படுத்தும் தரம் 087 அடிப்படை வெளியீடு மற்றும் மறுசீரமைப்பு 1) மற்றும் விமானப் போக்குவரத்து சேவையினை முறைப்படுத்துவதற்காக விமான ஒழுங்கு முறைகள் தொடர்பான மறுசீரமைப்பு கோவை (அமுல்படுத்தும் தரம் 026) வெளியிடுவதற்கு விமானப் போக்குவரத்து சேவைப் பிரிவிற்கு முடிந்தது.

➢ **சான்றுப்படுத்தல்கள்**

மேலும் பாதுகாப்பு மிகுந்த விமானப் போக்குவரத்துச் செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்ட விமானப் போக்குவரத்து தகவல் வெளிப்பாடு (AIP) சமகாலப்படுத்துவதற்காக மீளாய்விற்குட்படுத்தப்பட்ட கால எல்லைக்குள் 2 மறுசீரமைப்புக்களை வெளியிடல், விமான செயற்பாட்டுப் பணிகளின் பாதுகாப்பினை முறைப்படுத்துவதற்காக விமானப் பணியாளர்களுக்கு அறிவித்தல் (NOTAM) 295 இனை வெளியிடல் மற்றும் உப ஆவணப்படுத்தப்படாத 641 விமானங்களுக்கு இலங்கை வான் தேசத்தின் வான் பரப்பில் பறப்பதற்கான அனுமதி மற்றும் உபஆவணப்படுத்தப்படாத 498 விமானங்களுக்கு இலங்கை விமானத் தளத்தில் தறையிறங்குவதற்காக அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

➢ **கண்காணிப்புப் பணிகள்**

சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட விமானப் போக்குவரத்து சேவை கண்காணிப்புத் திட்டம் 2018 இற்கமைய இப்பிரிவு தொடர்ச்சியாக தேடுதல்களை மேற்கொண்டது. இலங்கையில் பாதுகாப்பு மேற்பார்வை முறைமையின் பயன்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காக பண்டாரநாயக்க சர்வதேவ விமான நிலையம் (இரத்மலானை மற்றும் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் செயற்பாட்டு மத்திய நிலையங்களிலும் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் இரத்மலானை விமான நிலையத்தில் விமானப் போக்குவரத்து தகவல் சேவை (AIS) மத்திய நிலையங்களிலும் இரத்மலானை, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் அத்திரிய, பீதுறுதாலகால மற்றும் கந்தபொலையில் அமைந்துள்ள விமான செயற்பாட்டு அசைவு மற்றும் கண்காணிப்பு (CNS) மத்திய நிலையங்களிலும், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், இரத்மலானை மற்றும் மத்தள ராஜபக்ஷ விமான நிலையத்தில் MET மத்திய நிலையங்களிலும் விமானப் போக்குவரத்து சேவை ஒழுங்கு விதிமுறைகள் - விமான செயற்பாட்டுப் பிரிவிலும் ஆவணப்படுத்தப்பட்ட முறையான 107 பரிசோதனைகளில் 104 மேற்கொள்ளப்பட்டன.

## 3. விமான செயற்பாட்டுப் பிரிவு

➢ **மேற்பார்வை அபிவிருத்தி**

2018 ஆம் ஆண்டில் செயற்பாட்டுப் பிரிவினால் கைத்தொழிலுக்கு அமைவாக ஒழுங்குக் கோவை, அமுல்படுத்தும் தரம், கட்டளைகள் மற்றும் வழிகாட்டல் ஆலோசனைகளை வெளியிடல் / மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- **வெளிநாட்டு விமானச் செயற்பாடுகள்**

செயற்பாட்டுப் பிரிவினால் கீழ்க் குறிப்பிட்ட விமான சேவைக் கம்பனிக்காக அடிப்படை வெளிநாட்டு விமானச் செயற்பாடு தொடர்பான 6 சான்றுப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

- என்டர் எயார்
- எடல்வைஸ்
- எரோப்லொட்
- ரொஸ்யா
- தாய் எயார் ஏசியா
- தாய் லைன்

செயற்பாட்டுப் பிரிவின் மூலம் இலங்கைக்கு தற்போது செயற்படுத்தப்படும் விமான சேவை கம்பனிக்காக வழங்கப்பட்ட வெளிநாட்டு விமானச் செயற்பாட்டாளர் சான்றிதழ்கள் 28 புதுப்பிக்கப்பட்டன.

- **அபாயகரப் பொருட்களைக் கொண்டு செல்லல்**

2018 ஆம் ஆண்டில் இப்பிரிவினால் அபாயகரப் பொருள் ஒழுங்கு கோவைகள் தொடர்பான 13 அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்பட்டன.

- **பெயரிடப்பட்ட பரிசோதனை முன்னோடிகள் (DCP) மேற்பார்வையினை மேற்கொள்ளல் மற்றும் முன்னோடி தேர்ச்சி பரிசோதனை (PPC) (அங்கீகாரம்)**

பிரதானமாக பெயரிடப்பட்ட பரிசோதனை முன்னோடி (DCP) அங்கீகரிக்கும் விமான செயற்பாட்டுப் பணியாளர் சபை ஏழு அங்கத்தவர்களுக்காக வழங்கப்பட்டதுடன், அதில் இருபத்துநான்கு புதுப்பிக்கப்பட்டன. விமானி தேர்ச்சி பரிசோதனைகள் முப்பத்துஏழு நடாத்தப்பட்டன.

- **கண்காணிப்புக்கள்**

இலங்கையில் பயன்மிக்க பாதுகாப்பு மேற்பார்வை முறைமை காணப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக அங்கீகரிக்கப்பட்ட தேடல் திட்டங்களுக்கு அமைவாக இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் மேற்பார்வை தேவைகளுக்கு இணங்க செயற்படுவதற்காக செயற்பாட்டுப் பிரிவின் மூலம் தொடர்ந்தும் உள்நாடு மற்றும் வெளிநாட்டு விமானச் செயற்பாட்டாளர்கள் தொடர்பில் கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ளும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன.

இதன் கீழ் பரிசோதனை உள்ளிட்ட முழுமையாக தேடுதல் செயற்பாடுகள் 206 செயற்பாட்டுப் பிரிவின் மூலம் 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.

- **சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பின் (ICAO) உலகளாவிய பாதுகாப்பு மேற்பார்வை ஆய்வு வேலைத்திட்டம் (USOAP)**

2018 ஜூன் மாதத்தில் சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பு (ICAO) மூலம் உலகாளவிய பாதுகாப்பு மேற்பார்வை ஆய்வு வேலைத்திட்டம் (USOAP) இன் கீழ் செயற்பாட்டுப் பிரிவு ஆய்வுக்குட்படுத்தப்பட்டது. முழுமையாக மூல நெறிமுறை தொடர்பான 462 கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டியதுடன் இதில் 146 மூல நெறிமுறை தொடர்பான கேள்விகளுக்கு செயற்பாட்டுப் பிரிவு விடைகளை வழங்குவதுடன் அதன் மூலம் பயன்மிக்க அமுல்படுத்தலுக்காக 89.13% பொறுப்பேற்க செயற்பாட்டுப் பிரிவிற்கு முடிந்தது. 2010 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மூல ஆய்வுகளுக்கு இணைவாக இது 4.83% வளர்ச்சியாகும்.

## 4. விமானங்களைப் பதிவு செய்தல் மற்றும் விமானத் தகைமைப் பிரிவு

சிவில் விமான சேவை அதிகார சபையின் விமானங்களை பதிவு செய்தல் மற்றும் விமான தகைமைப் பிரிவு சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பின் பணிக்கப்பட்டுள்ள தரங்கள் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட ஒப்பளவுகளுக்கமைய இலங்கையில் சிவில் விமானங்களைப்

பதிவு செய்தல் உட்பட இலங்கையில் பதிவு செய்யப்பட்ட விமானங்களின் விமானத் தகைமை மேற்பார்வைகளுக்காக சட்ட ஒழுங்கு விதிமுறைகளை பரிமாறிக் கொள்வதற்காக பிரதானமாக பொறுப்புக்கூற வேண்டும். விமானப் பராமரிப்பு அமைப்பிற்காக அங்கீகாரங்களை வழங்குதல் மற்றும் அவற்றின் செயற்பாடுகளை மேற்கொள்வது இதில் அடங்குகின்றது.

➢ **விமானத் தகைமைச் சான்றிதழ்**

மேலும் 2018 ஜனவரி தொடக்கம் 2018 டிசம்பர் வரையான கால எல்லைக்காக அங்கீகாரத்தை வழங்குவது தொடர்பில் கிடைக்கப் பெற்றுள்ள விண்ணப்பப்படிவம் மற்றும் ஏனைய உரிய ஆவணங்கள் மதிப்பீடுகளைத் தொடர்ந்து கீழ்க் குறிப்பிட்டவாறு அங்கீகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

| | | மூல | புதுப்பித்தல் |
|---|---|---|---|
| 1 | விமானங்களில் விமானத் தகைமை | 06 | 69 |
| 2 | பராமரிப்பு பயிற்சி அமைப்பு | | 05 |
| 3 | தொடர்ச்சியான விமானத் தகைமை முகாமைத்துவ அமைப்பு | | 03 |
| 4 | விமானங்களைப் பதிவு செய்தல் | 04 | 67 |
| 5 | அங்கீகாரப் பராமரிப்பு நிறுவனங்கள் | | 71 |

➢ **பாதுகாப்பு மேற்பார்வை**

முழுமையாக 93 ரம் பரிசோதனைகள் மற்றும் 40 இரவு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. கைத்தொழில் மூலம் முழுமையான சம்பவங்கள் தொடர்பில் 138 அறிக்கைகள் கிடைக்கப் பெற்றதுடன் பாதுகாப்பு மேற்பார்வை வேலைத்திட்டத்தின் பகுதியாக அவை பகுப்பாய்விற்குட்படுத்தப்பட்டன.

➢ **ஏனைய பணிகள்**

வீசா வழங்குவதற்காக பரிந்துரைகளை வழங்குதல் மேலதிக பகுதிகளுக்காக அங்கீகாரங்களை வழங்குதல் இதன் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**5. விமான சேவைப் பாதுகாப்புப் பிரிவு**

➢ **மேற்பார்வை அபிவிருத்தி**

2018 ஆம் ஆண்டில் விமான சேவைப் பாதுகாப்பு பிரிவு சிவில் விமான சேவை ஒழுங்கு விதிகளை விதிக்கும் செயற்பாட்டில் பிரதானமாக ஈடுபட்டுள்ளதுடன் இந்நோக்கங்களை எட்டுவதற்காக சட்டமா அதிபர் திணைக்கள உத்தியோகத்தர்களுடன் தொடர்ச்சியான கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன.

➢ **சான்றுப்படுத்தும் செயற்பாடுகள்**

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் விமான சேவை பாதுகாப்பு சேவை விநியோகஸ்தர்களைச் சான்றுப்படுத்தல் விமான சேவைப் பாதுகாப்புப் பிரிவினால் உறுதிப்படுத்தல், விமான சேவை பாதுகாப்பு ஆய்வு உபகரணங்களை சான்றுப்படுத்தல், விமான சேவை வழங்குனர் சான்றுப்படுத்தல்கள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன.

➢ **கண்காணிப்புச் செயற்பாடுகள்**

2018 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட செயற்பாட்டு திட்டங்களுக்கமைய பிரிவின் பரிசோதகர்களினால் கண்கானிப்பு - 39, பரிசோதனை - 04, கணக்காய்வு - 01 மேற்கொள்ளப்பட்டதுடன் மத்தள ராஜபக்‘ விமான நிலையத்தில் விரிவான பரிசோதனைகள் நடாத்தப்பட்டது.

- **ஏனைய தகவல்கள்**
  - **தேசிய சிவில் விமான சேவைப் பாதுகாப்புக் குழு**

விமான சேவை பாதுகாப்புச் செயற்பாட்டு இணைப்புக்களுக்காக பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் தலைமை வகிக்கப்பட்ட தேசிய சிவில் விமான சேவைப் பாதுகாப்புக் குழு (NCASC) இரண்டு கூட்டங்கள் 2018 பெப்ரவரி மற்றும் ஒக்டோபர் மாதங்களில் நடாத்தப்பட்டன.

- **சர்வதேச சிவில் விமான சேவை அமைப்புக்கள் (ICAO) தேர்ச்சியை வழங்கல்**

சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பின் (ICAO) அழைப்பிற்கமைய விமான சேவைப் பாதுகாப்பு பணிப்பாளர் திரு. பி.ஏ. ஜயகாந்த அவர்கள் சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பின் விமான சேவைப் பாதுகாப்பு கணக்காய்வாளராக (ICAO) 2018 மே மற்றும் நவம்பர் மாதங்களில் மியன்மார் ஒருங்கிணைந்த இராட்சிய மற்றும் பங்களாதேர்' மக்கள் குடியரசு ஆகிய நாடுகள் சர்வதேச சிவில் விமான சேவையின் (ICAO) உலகளாவிய ஆய்வு தொடர்பான இரு தூதுப் பணிகளில் பங்கேற்றார்.

- **இலங்கையில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஆசிய பசுபிக் ஒத்துழைப்பு விமான சேவைப் பாதுகாப்பு வேலைத்திட்டம் (CASP-AP) செயற்பாடுகள்**

நாட்டின் சிவில் விமான சேவையின் மானிட வளம் தொடர்பில் விமான சேவை பாதுகாப்பு அவதான முகாமைத்துவ இயலுமைகளை மேம்படுத்தும் நோக்குடன் இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபைக்காக விமான சேவை பாதுகாப்பு பிரிவின் பங்களிப்பின் மூலம் 2018 ஒக்டோபர் மாதம் 09 ஆம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதி வரை சர்வதேச சிவில் விமான போக்குவரத்து சேவை அமைப்பின் (ICAO) அபாய முகாமைத்துவ செயலமர்விற்காகவும் 2018 ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரை ஆசிய பசுபிக் ஒத்துழைப்பு விமான சேவைப் பாதுகாப்பு வேலைத்திட்டத்தின் (CASP-AP) தேசிய அபாய சந்தர்ப்ப வெளிபாட்டு செயலமர்விற்காகவும் அனுசரனைகள் வழங்குவதன் மூலம் வசதிகள் வழங்கப்பட்டன. இச் செயலமர்வுகளின் பெறுபேறாக இலங்கைக்காக அபாய சந்தர்ப்ப வெளிப்பாடுகளை வகுப்பதற்காக உள்நாட்டு பங்கேற்பாளர்களுடன் குழு தாபிக்கப்பட்டது.

- **சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பின் (ICAO) சர்வதேச பயிற்சி / கூட்டங்கள் / செயலமர்வுகளில் பங்கேற்றல்.**

விமான சேவைப் பாதுகாப்புப் பிரிவிற்கு இணைப்புச் செய்யப்பட்ட ஊழியர்களுக்கு உரிய விடயப் பரப்புத் தொடர்பில் விரிவான அறிவு மற்றும் அனுபவத்தைப் பெற்றுக் கொள்வதற்காக வெளிநாடுகளில் நடாத்தப்பட்ட பயிற்சி, கருத்தரங்கு மற்றும் கூட்டங்களுக்காக பங்கேற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

- **விமானத்தில் ஆயுதங்கள் முகாமைத்துவ அமைப்பு / விமானப் பொருட்களை கொண்டு செல்வதற்காக அங்கீகாரத்தை வழங்குதல்.**

இலங்கை வான்பரப்பில் இலங்கைக்குள் அமைந்துள்ள விமான நிலையங்களுக்கு / விமான நிலையங்களிலிருந்து யுத்த உபகரணங்களைக் கொண்டு செல்வதற்காக அங்கீகாரத்தை வழங்குவது சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பு என்பதுடன் இது தொடர்பான கோரிக்கையினை அரச மற்றும் தனியார் நிறுவனங்களைப் போன்று தனிநபர்களினாலும் மேற்கொள்ளப்படுகின்றது. இந்நிலைமையில் விமானத்தின் ஊடாக விமான சரக்குப் பொருட்கள் கொண்டு செல்லும் இடங்களில் யுத்த உபகரணங்களை கொண்டு செல்வதற்காக 163 அங்கீகாரங்களும் விமானத்தின் மூலம் யுத்த உபகரணங்களை கொண்டு செல்வதற்காக 53 அங்கீகாரங்களும் வழங்கப்பட்டன.

**6. பயிற்சி நிறுவனம் மற்றும் ஆளணி அனுமதிப்பத்திரப் பிரிவு**

உரிய சர்வதேச தரங்கள் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட ஒப்பளவுகளுக்கமைய சிவில் விமான சேவை சார்ந்த பாதுகாப்பு தொடர்பான உணர்வ பூர்வமாக செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள பயிற்சி அமைப்புக்கள் மற்றும் நபர்கள் தொடர்பில் சான்றுப்படுத்தல் உட்பட கண்காணிப்புக்களை மேற்கொள்வதற்கு உரியதான ஒழுங்கு விதிமுறைகள் மற்றும் சட்டக் கோவைகளை விருத்தி செய்வது தொடர்பிலும் பயிற்சி நிறுவனம் மற்றும் ஆளணி அனுமதிப்பத்திரப் பிரிவினால் அமுல்படுத்தப்படுகின்றது. இதன் கீழ் மேற்பார்வை பணிகள், சான்றுப்படுத்தல் மற்றும் தேடுதல்கள் இடம்பெறுவதுடன் முதலுதவி பயிற்சி தொடர்பாக அறிவுறுத்தும் வேலைத்திட்டம் மற்றும் பணியாளர் சபைக்கான அறிவு சார்ந்த பரீட்சைகள் நடாத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

**6.2.2 இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் தொழில்நுட்பமல்லாத பிரிவு**

**1. விமானப் போக்குவரத்து மற்றும் பொருளாதார மேற்பார்வைப் பிரிவு**

விமான போக்குவரத்து மற்றும் பொருளாதார மேற்பார்வை பிரிவு இலங்கை விமான சேவைக் கைத்தொழிலை மேற்பார்வை செய்யும் பொறுப்புக் கொண்ட சிவில் விமான சேவை அதிகார சபையின் நிறுவனப் பிரிவினால் பிரதான பணிகள் ஆற்றப்படுகின்றன. இப்பிரிவில் வியூக நோக்கங்களை எட்டுவதற்காக விமான போக்குவரத்து வழங்குனர்களை பயன்மிக்கதாக முறையில் மேற்பார்வை செய்தல் மற்றும் பொருளாதார செயற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பில் இப்பிரிவு கவனம் செலுத்தியுள்ளது. விமான சேவைக் கலந்துரையாடல்கள் மற்றும் உடன்படிக்கை, விமான போக்குவரத்து நேர அட்டவணையினை அங்கீகரித்தல், விமான சேவைக் கம்பனிகளில் சேவையாற்றும் வெளிநாட்டவர்களுக்காக வீசா பரிந்துரை செய்தல், விமானப் போக்குவரத்து சேவை வழங்குனர்களுக்காக அனுமதிப்பத்திரத்தை வழங்குதல், நுகர்வோர் பாதுகாப்பு இவ் வியூக நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக மேற்கொள்ளும் பிரதான செயற்பாடாகும்.

- **விமானக் கம்பனிகளின் செயற்பாட்டுப் பணிகள்**

உரிய ஆண்டுக்குள் ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் விமானக் கம்பனி உட்பட பட்டியல்படுத்தப்பட்ட 35 விமானக் கம்பனிகள் இலங்கைக்கு/ இலங்கைக்கு வெளியே விமானச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்திகோ எயார்லைன்ஸ், ஏரோபுளொட், எடல்வீஸ், தாய் எயார் ஏசியா, சொங்கிங் விமான கம்பனியினால் இவ்வாண்டுக்குள் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

- **சாசனம், சமயோசன தேவைகள் மற்றும் வர்த்தகச் செயற்பாட்டாளர்கள்**

2018 IATA குளிர்காலம் தொடக்கம் 06 குத்தகை விமானக் கம்பனிகள் அவர்களின் செயற்பாட்டுப் பணிகளை தொடர்ச்சியாக மேற்கொண்டதுடன் அக்குத்தகை விமானக் கம்பனி அசர் எயார் (ரஷயா), என்டர் எயார் (போலாந்து), ரோயல் பிளைட் (ரஷயா), தோமஸ் குக் எயார்லைன்ஸ் (ஐக்கிய இராட்சியம்), ரவல் சேர்விஸ் பொல்ஸ்கா (ஐக்கிய அரபு எமிர் இராட்சியத்தின் ராஸ் அல் கைமாஹ் சர்வதேச விமான நிலையம்) மற்றும் TUI எயார்லைன்ஸ் (ஐக்கிய இராட்சியம்)

- **லக்ஸ்சம்போர்க் நகரின் பொறுப்பாளர்களுடனான இருதரப்பு விமான சேவை சந்திப்பு**

போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை அமைச்சின் செயலாளரின் தலைமையில் 2018 ஜுலை மாதம் 25 மற்றும் 26 ஆகிய தினங்களில் லக்ஸ்சம்பேர்க் நகரின் பொறுப்பாளர்களுடன் இடம்பெற்ற கூட்டத்தின் மூலம் கீழ்க் குறிப்பிட்ட பணிகளை மேற்கொள்ள முடியும்.

1. லக்ஸ்சம்பேர்க் உடன் முதற் தடவையாக விமான சேவை உடன்படிக்கையினை ஆரம்பித்தல் மற்றும் பயணிகள் உட்பட பொருட்களுக்காக வரையறை அற்ற 3 வது மற்றும் 4 வது இலவச விமானப் போக்குவரத்து உரிமையினை பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் புரிந்துணர்வு உடன்படிக்கையினைக் கைச்சாத்திடல்.

2. புரிந்துணர்வு உடன்படிக்கை மூலம் இரு தரப்பிற்காக விமானப் பொருட்களுக்காக மாத்திரம் வரையறுக்கப்பட்டுள்ள 5 வது இலவச விமானப் போக்குவரத்து உரிமை வழங்கப்பட்டுள்ளது.

3. இலங்கையிலிருந்து ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் விமானக் கம்பனி மற்றும் லக்ஸ்சம்பேர்க்கிற்காக கார்லெக்ஸ் மற்றும் லூப்எயார் லக்ஸ்சம்பேர்க் பயணக் கேந்திர நிலையம் வரை பயணித்தல்.

➢ ICAN **2018**

ஆபிரிக்கக் கண்டத்தில் நடாத்தவுள்ள 2 வது ICAN மாநாடு கென்யாவின் ஜனாதிபதி அதிமேன்மை தங்கிய உகுரு கென்யாட்டா அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ICAO கௌன்சலின் தலைவர் மற்றும் ICAO இன் விமானப் போக்குவரத்து பணியகத்தின் பணியாளர் பங்கேற்றார். பணிப்பாளர் (விமான போக்குவரத்து மற்றும் பொருளாதார மேற்பார்வை) இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்கேற்றார்.

➢ **சிவில் விமானப் போக்குவரத்து வழங்குனர்கள் (பயணிகள்) அனுமதிப் பத்திரம் (சுற்றுலா முகவர் நிறுவன அனுமதிப்பத்திரம்)**

1992 இலக்கம் 55 கொண்ட விமானப் போக்குவரத்துச் சட்டத்தின் ஒழுங்கு விதிகள் மூலம் மற்றும் 2010 இலக்கம் 14 கொண்ட சிவில் விமான சேவைச் சட்டத்தின் மூலம் விமானப் பயணிகள், பொருட்கள் மற்றும் விமானத் தபாலை கொண்டு செல்வதற்காக அனுமதிப் பத்திரத்தாரர்களுக்கு அனுமதி வழங்கப்படுகின்றது. 2018 ஆம் ஆண்டில் A குழுவின் முகவர்களுக்காக 24 அனுமதிப்பத்திரங்களும், B குழுவின் பிரதிநிதிகளுக்காக 26 அனுமதிப்பத்திரங்களும் வழங்கப்பட்டதுடன், அதற்கமைய புதிதாக 50 அனுமதிப்பத்திரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

➢ **செல்லுபடியாகும் காலம் காலாவதியாகிய அனுமதிப் பத்திரதாரர்களின் வர்த்தக செயற்பாடுகளை முடிவுறுத்தல்**

GDS வழங்குனர்களை அறிவுறுத்துவதன் மூலம் காலாவதியான அனுமதிப்பத்திர உரிமையாளர்களின் GDS வசதிகளை துண்டிப்பதற்கு இப்பிரிவினால் நவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

➢ **வெளிநாட்டவர்களுக்கான வீசா பரிந்துரை (மாணவர்களைத் தவிர)**

இப்பிரிவின் மூலம் புதிதாக 54 வீசா அனுமதிப்பத்திரங்களுக்கு கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் துணைவர் மற்றும் பிள்ளைகள் உட்பட வீசா புதுப்பிப்பதற்காக 48 கோரிக்கைளும் கைத்தொழிலுக்காக 102 பரிந்துரைகளும் வெளியிடப்பட்டுள்ளன. மேற்கூறப்பட்ட பரிந்துரைகளில் 36 வெளிநாட்டவர்களுக்கு தொழில்நுட்பப் பணியாளர் சபையாக 40 வெளிநாட்டவர்களுக்கு தொழில்நுட்பமல்லாத பணியாளர் சபைக்காகவும் பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது.

➢ **சுற்றுலா முகவர்கள் மற்றும் விமானக் கம்பனிகளுக்கு எதிராக வாடிக்கையாளர்களின் முறைப்பாடுகள்**

மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டில் பயணிகளின் 52 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், ஆண்டு இறுதியில் 15 முறைப்பாடுகளை தீர்த்து சமாதானப்படுத்துவதற்கு இப்பிரிவிற்கு முடிந்தது. ஏனைய முறைப்பாடுகள் விசாரனைக்குட்படுப்பட்டுள்ளதுடன் அம்முறைப்பாடுகளை திருப்திகரமான மட்டத்தில் தீர்க்க எதிர்பார்க்கப்படுகின்றது.

➢ **தள உதவியாளர் சேவை அனுமதிப்பத்திரம் - (நிலையான தொலைபேசி செயற்பாட்டாளர் அனுமதிப்பத்திரம்**

மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டான உரிய ஆண்டுக்குள் செயற்பட்டாளர் களுக்காக தள உதவி சேவை தொடர்பான 04 அனுமதிப்பத்திரரம் வழங்கப்பட்டதுடன் மேலும் 04 புதுப்பிக்கப்பட்டன.

- **விமானக் கம்பனி அனுமதிப்பத்திரம்**

ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ், சினமன் எயார், ஹெலி டுவர்ஸ் மற்றும் பிட்ஸ் எவியேசன் விமானக் கம்பனி அவர்களின் விமான கம்பனி அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்துள்ளதுடன், இக்கால எல்லைக்குள் புதிய விமானக் கம்பனி அனுமதிப்பத்திரங்கள் வெளியிடப்படவில்லை.

வரையறுக்கப்பட்ட ஏ.டப்.எஸ். அவியேசன் தனியார் கம்பனிக்கு 2018 ஆம் ஆண்டில் புதிய வாடகை விமானப் போக்குவரத்து அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், பிட்ஸ் எவியேசன், தயா எவியேசன், எப் எயார், பினை சதேன் எவியேசன், மிலேனியம் எவியேசன், ஸ்கைலாக் எவியேசன், சகுராய் எவியேசன் மற்றும் எயார் சொனொக் ஆகிய விமானக் கம்பனிகள் அவர்களின் குத்தகை விமான பயண அனுமதிப்பத்திரங்களை 2018 ஆம் ஆண்டில் புதுப்பிக்க நடவடிக்கை எடுத்தனர்.

தனியார் விமான போக்குவரத்துச் செயற்பாடுகளுக்காக அதிகாரம் வழங்கப்பட்டுள்ள ஒரேயொரு விமானக் கம்பனியாக அமைவது தயா எவியேசன் விமானக் கம்பனியாகும். அவ் விமான சேவைக் கம்பனிக்காக வழங்கப்பட்டுள்ள அதிகாரம் இவ்வாண்டுக்குள் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

- **விமானப் போக்குவரத்து இணைப்புக்கள்**

2018 IATA வறட்சி மற்றும் 2018/19 IATA குளிர்காலத்திற்காக பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் (BIA) மற்றும் மத்தள ராஜபக் சர்வதேச விமான நிலையத்தில் (MRIA) விமானப் போக்குவரத்து தடவைகளின் இணைப்பிற்காக இரண்டு கூட்டங்கள் நடாத்தப்பட்டன. பல்வேறுபட்ட வரையறைகளை அடிப்படையாகக் கொண்டு மணிக்கு தவணைகளை ஒதுக்கும் முறையாக அமைவது விமான வருகை 10 மற்றும் புறப்படுகை 12 ஆகும். இது எவ்வாறாக இருப்பினும் எந்த மணித்தியாலத்திற்குள்ளும் மொத்த அசைவுகளின் அளவு 15 க்கு வரையறுக்கப்பட்டுள்ளது. சட்ட ரீதியில் மேற்கொள்ளப்படும் விமான ஓடுபாதை பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக விமானச் செயற்பாடுகளுக்காக புதன் கிழமை (3 வது தினம்) 1430 மணித்தியாலம் தொடக்கம் 1700 வரை வாய்ப்பு வழங்கப்படவில்லை.

- **புதிய ஒழுங்குக் கோவைகள் மற்றும் ஆலோசனைகளை அறிமுகப்படுத்தல்**

விமானங்களில் ஆசனங்களை ஒதுக்கும் செயற்பாட்டுப் பணிகளுக்காக தகைமைகளை பெற்றுக் கொள்வதற்கு பயன்மிக்க IATA செயற்பாட்டு ஆய்வு அறிக்கையினை பேணுவதற்காக சிவில் விமான சேவை பணிப்பாளர் நாயகத்தினால் "விமானங்களில் ஆசனங்களை ஒதுக்கும் பங்காளர்களுக்காக IATA செயற்பாட்டு ஆய்வு அறிக்கை வரவேற்பு வேலைத்திட்டம்" தொடர்பாக இலங்கை விமான செயற்பாட்டாளர்களை செயற்பாட்டு சான்றுப் பத்திரம் கொண்டவர்களைப் போன்று சகல வெளிநாட்டு விமானக் கம்பனிகளுக்கும் ஆசனங்களை ஒதுக்கும் பங்காளர்களுக்காக இலக்கம் AT/01/2018 கொண்ட 2018 மே மாதம் 10 ஆம் திகதி கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

- **தேசிய சிவில் விமான சேவைக் கொள்கை**

தேசிய சிவில் விமான சேவைக் கொள்கையின் வரைபினைத் தயாரித்தல் மற்றும் ஆலோசனைச் செயற்பாடுகள் தொடர்பில் இப்பிரிவு சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகம் (DGCA) மற்றும் பிரதி பணிப்பாளர் நாயகம் (CAER) உடன் இணைந்து செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாண்டுக்குள் உரிய தரப்பினர்களினால் இறுதியில் இணங்கியுள்ள வரைவு அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டது.

**2. ஆராய்ச்சி, அபிவிருத்தித் திட்டமிடல் மற்றும் விசேட வேலைத்திட்டப் பிரிவு**

- **இலங்கையின் தேசிய பொருளாதாரத்திற்காக சிவில் விமான சேவைத் துறையின் பங்களிப்பு தொடர்பான ஆராய்ச்சி**

2017 ஆம் ஆண்டில் இவ்அதிகார சபையினால் "இலங்கையில் தேசிய பொருளாதாரத்திற்காக சிவில் விமான சேவைப் பிரிவின் பங்களிப்பினைத் தீர்மானித்தல்" என்ற தொனிப்பொருளில்

ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை (CAASL) இனால் ஆராய்ச்சிக்காக மிகவும் பொருத்தமான ஆராய்ச்சி நிறுவனத்தை தேர்ந்தெடுப்பதற்காக யோசனைகளை சமர்ப்பிக்குமாறு கோரிக்கை (RFP) தயாரிக்கும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டன.

யோசனைகளை சமர்ப்பிக்குமாறு மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளுக்கமைய இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை (CAASL) இற்கு யோசனை கிடைக்கப் பெற்றது. இந்த யோசனை தொழில்நுட்ப மற்றும் நிதி அடிப்படையில் மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட்டதுடன் ஏற்கனவே வரையறுக்கப்பட்ட மாஸ்டர்கேலிஸ் எஞ்சினியரிங் கன்ஸ்லாட்டன் தனியார் கம்பனி ஆராய்ச்சி ஆலோசனை நிறுவனமாக தேர்ந்தெடுக்கப்பட்டது.

- **இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை ஆவணங்கள், அறிக்கைகள் மற்றும் சஞ்சிகைகளை வெளியிடல்**

நிலையியற் திட்டங்களை விருத்தி செய்யும் செயற்பாடுகள் மற்றும் சிவில் விமான சேவை அதிகார சபையின் வருடாந்த அறிக்கையினைத் தயாரிக்கும் பணிகளும் இவ் அறிக்கையினை வெளியிட்டு இலங்கை பாராளுமன்றம், உரிய அரச நிறுவனங்கள் மற்றும் கைத்தொழிலின் ஏனைய வாடிக்கையாளர் தரப்பினர்களுக்கு இவ் அறிக்கையினை சமர்ப்பிக்கும் பணிகளும் இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை (CAASL) மூலம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

- **புள்ளிவிபரங்கள் மற்றும் எதிர்வுகூறல்கள்**

இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் சகல பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தி முன்னெடுக்கப்படும் பிரதான புள்ளிவிபர அடிப்படை 2018 ஜனவரி தொடக்கம் டிசம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்காக சமகாலப்படுத்தி முன்னெடுக்கப்படுகின்றது.

ரூபா 803 மில்லியன் செலவினத்தை மேற்கொண்டு இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் பிரதான அலுவலகக் கட்டடத்தை நிர்மானிக்கும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டன கட்டுநாயக்க நைக்கந்த பிரதேசத்தில் நிர்மானிக்கப்பட்ட இக்கட்டடம் 2018 மார்ச் மாதம் 29 ஆம் திகதி திறக்கப்பட்டது.

- **இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் ஊடகச் செயற்பாடுகள் மற்றும் ஊக்குவிப்பு**

ஜனவரி மாதம் தொடக்கம் டிசம்பர் வரையான காலத்திற்குள் பாடசாலைகளில் 8 நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டதுடன், 2018 டிசம்பர் மாதத்தின் இறுதியளவில் "குவன்சர" விமான சேவை தொடர்பான 2 சஞ்சிகைகள் வெளியிடப்பட்டதுடன் அவை 3100 பாடசாலைகளுக்கிடையே இலவசமாக விநியோகிக்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக சகல சனிக்கிழமை தினங்களிலும் "குவன் சரிசர" தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒலிபரப்பட்டது.

- **தர மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு**

இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் தர முகாமைத்துவத்தை விருத்தி செய்தல் தர மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினை தாபிப்பதற்கான பிரதான நோக்கமாகும். கருத்திற் கொள்ளப்பட்ட கால எல்லைக்குள் வாசகத்தில் 103 பல்வகையான ஒழுக்காற்று விசாரனைகள் நடாத்தப்பட்டன.

**3. மானிட வள மற்றும் அலுவலக முகாமைத்துவப் பிரிவு**

- **ஒழுங்கமைப்பு மறுசீரமைப்பு மற்றும் பணியாளர் சபைக் கடன்**

இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை இலங்கையின் சிவில் விமான சேவைப் பாதுகாப்பு மேற்பார்வையாளராக செயற்படும் போது அதிகார சபையின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக மானிட வள மற்றும் ஏனைய வளத்தை முகாமைத்துவத்திற்குட்படுத்தும் போது மானிட வள மற்றும் ஏனைய வள முகாமைத்துவத்தின் போது மானிட வளம் உட்பட

அலுவலக முகாமைத்துவப் பிரிவு அதிகார சபைக்கு தமது ஒத்துழைப்பை வழங்குகின்றது. அதிகார சபையின் பணிகளை முன்னெடுப்பதற்காக அதிகார சபைக்கு பயிற்சி பெற்ற திறமைமிக்க ஊழியர் அணியினை வழங்குவதற்காக மானிட வள முகாமைத்துவப் பிரிவினால் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இவ் மறுசீரமைக்கப்பட்ட நிறுவனக் கட்டமைப்பை பின்பற்றி வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டதுடன் இதன் மூலம் பணியாளர் சபையில் 181 அங்கத்தவர் வரை அதிகரிக்க முடிந்தது. மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டுக்குள் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பு கட்டமைப்புக்களுக்கமைய பணியாளர் சபைக்காக புதியதாக 14 ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டது.

- **பயிற்றுவிப்புக்கள், மாநாடு, செயலமர்வு, கூட்டம் மற்றும் கருத்தரங்குகள்**

இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் தொழில் சார்ந்த செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக தேவையான பணியாளர் சபை பயிற்சி மற்றும் அபிவிருத்தி தொடர்பாக எல்லை வதிக்கப்பட்டுள்ள வேளையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் மானிட வள விருத்திச் செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்டுள்ள நிதி 16,769,615.05 ஆகும்.

### 6.2.3 இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் அலகு

**1. விமான விபத்து விசாரனைப் பிரிவு**

சட்டமா அதிபரினால் சான்றுப்படுத்தப்பட்ட விமான விபத்து விசாரனைப் பணியகம் தொடர்பாக பூர்த்தி செய்யப்பட்ட இறுதி சட்ட வரைவு பாராளுமன்றத்தில் சமா்ப்பிக்கப்படவுள்ளது.

ஆளில்லா விமானத் தொகுதியின் செயற்பாடுகள் தொடர்பிலான கோவைகள் மற்றும் விமான சேவை அனர்த்த குடும்ப உதவி தொடர்பான கோவை தயாரிக்கப்பட்டது.

2018 ஆம் ஆண்டில; ICAO-USOAP தொடர்பில் அவசர விபத்து விசாரனை துறையின் கீழ் தேவையான பணிகள் பூர்த்தி செய்யப்பட்டன. இது தொடர்பில் அரச விமான சேவை கணக்காய்வு வினாக்கொத்து, ஒப்பீட்டு ஆய்வுப் பட்டியல் திருத்தியமைக்கும் செயற்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திடீர் விபத்து விசாரனை (AIG) கணக்காய்வுத் துறையின் சுய மதிப்பீடுகளுடன் இணைப்பு வினாக்கள் பூர்த்தி செய்யப்பட்டன.

இலங்கை விமானப் போக்குவரத்து தகவல் வெளியீடு (AIP) வரை “விமான அவசர விபத்து மற்றும் சம்பவங்கள்” தொடர்பான விமான தகவல் சுற்றறிக்கை (AIC) இலங்கை விமான போக்குவரத்து தகவல் வெளியீடு (AIP) வரை குறிப்பிடப்பட்டுள்ளவாறு “விமான செயற்பாட்டாளர்கள், விமான நிலைய செயற்பாட்டு மற்றும் விமான போக்குவரத்து சேவை வழங்குனர்களின் விமான அவசர விபத்து மற்றும் பாரிய சம்பவங்கள் தொடர்பான ஒப்பீட்டுத் தேவைகள் குறித்து விமான தகவல் சுற்றறிக்கை (AIC) என மறுசீரமைக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

2012 ஆம் ஆண்டில் சிங்கப்பூர் விமான அவசர விபத்து விசாரனை பணியகத்துடன் கையொப்பம் இடப்பட்ட உறுதி மொழி மறுசீரமைக்கப்பட்டதுடன், இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து சேவை அதிகார சபை மற்றும் சிங்கப்பூர் போக்குவரத்து பாதுகாப்பு விசாரணை பணியகம் ஆகிய இரு தரப்பினர்களினாலும் 2018 ஏப்ரல் மாதத்தில் சிங்கப்பூரில் கைச்சாத்திடப்பட்டது.

AIU கொள்கை வெளிப்பாடுகள் தொடர்பாக SLCAP 9990, விமான அவசர விபத்து விசாரனைச் செயற்பாடுகள் தொடர்பாக SLCAP 9990 மற்றும் அவசர விபத்து விசாரணை முகாமைத்துவ முறைமை தொடர்பாக SLCAP 9990-10 ஆகிய பிரிவுகள் மூலம் வெளியிடப்பட்ட இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் கையேடு மீளாய்விற்குட்படுத்தப்பட்டதன் அதற்கமைய அவை மறுசீமைக்கப்பட்டன.

கடந்த ஆண்டில் இலங்கையில் ஆளில்லா விமானச் செயற்பாடுகளுக்காக 390 அங்கீகாரங்கள் வழங்கப்பட்டதுடன் ஆளில்லா விமானங்கள் (drones) 503 இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டு இலங்கையில் பதிவு செய்யப்பட்ட விமானங்கள் மற்றும் வெளிநாடுகளில் பதிவு செய்யப்பட்ட விமானங்களுக்குரியதாக இலங்கையில் விமான 295 சம்பவங்கள் பதிவாகியன. இதில் 293 சம்பவங்கள் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட விமானம் சார்ந்த நிகழ்வுகள் என்பதுடன் எஞ்சிய 2 சம்பவங்கள் வெளிநாடுகளில் பதிவு செய்யப்பட்ட விமானங்கள் மூலம் இலங்கை எல்லைக்குள் இடம்பெற்ற சம்பவங்களாகும்.

இச் சம்பவங்களில் ஒரு குழுவினால் அறிக்கைப்படுத்தப்பட்டுள்ள கூடுதலான சம்பவ எண்ணிக்கையாக ATM/ தொடர்புசாதனம் சார்ந்த 85 சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டன. பறவைகள் மோதுண்டமை தொடர்பில 83 சம்பவங்கள் உட்பட முறைமை / உள்ளீட்ட வீழ்ச்சி அல்லது முறையாக செயற்படாமை தொடர்பாக 41 சம்பவங்கள் பதிவாகின. பதிவு செய்யப்பட்டவாறு பறவைகள் மோதுண்டமை தொடர்பான 42 சம்பவங்கள் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இடம்பெற்றன.

ATM/ தொடர்புசாதன சம்பவங்கள் 85 இல் 84 சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டிருப்பது விமான போக்குவரத்து சேவை அலகு (ATS units) தொடர்பு படுத்தாமையினால் என்பதுடன் அச்சம்பவங்களில் கூடுதலான நிகழ்வுகளின் எண்ணிக்கை மும்பாய் விமான தகவல் வலயம் (FIR) உடன் தொடர்புகள் இன்மையினால் ஏற்பட்ட சம்பவங்களாகும்.

முறைமை வீழ்ச்சி / உள்ளீடுகள் செயற்படாமை அல்லது முறையாக செயற்பாடுகள் இடம்பெறாமை தொடர்பில் 38 சம்பவங்கள் இலங்கை எயார்லைன்ஸ் விமானக் கம்பனிக்குரிய விமானங்கள் தொடர்பில் பதிவாகின.

**2. சட்டச் செயற்பாடுகள் மற்றும் அமுல்படுத்தும் பிரிவு**

2018 ஆம் ஆண்டில் சட்டச் செயற்பாடுகளை அமுல்படுத்தும் பிரிவு கீழ்க் குறிப்பிடப்பட்ட வெற்றிகள் எட்டப்பட்டுள்ளன.

- 2010 இலக்கம் 14 கொண்ட சிவில் விமான சேவைச் சட்டத்தை மறுசீரமைத்தல்.
- 2018 இலக்கம் 29 கொண்ட விமானம் மூலம் போக்குவரத்து செய்வதற்கான சட்டத்தை வகுத்து அங்கீகரித்தல்.
- 2010 பேஜிங் சாசன மற்றும் 2010 கேப்டவுன் சாசனத்தை அமுல்படுத்துவதற்காக சட்ட வரைஞருக்கு முடியுமான வகையில் சட்ட வரைஞருக்கு சர்வதேச இரண்டு சாசனங்களை சமர்ப்பித்தல்.
- விமான திடீர் விபத்து விசாரனை பணியகத்தின் (AAIB) இறுதி சட்ட வரைவு மூன்று மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு சட்ட வரைஞர் திணைக்களத்தினால் பெற்றுக் கொள்ள மற்றும் அதனைத் தொடர்ந்து இச்சட்ட வரைபிற்காக சட்டமா அதிபரின் சான்றுப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளல்.
- 2018 பாதுகாப்பு முகாமைத்துவ ஒழுங்குக் கோவையினை வெளியிடல்.
- 2018 தனிநபர் அனுமதிப்பத்திர ஒழுங்குக் கோவையினை வெளியிடல்.
- 2018 ஆம் ஆண்டின் விமான நிலைய வகைப்படுத்த ஒழுங்குக் கோவையினை வெளியிடல்.
- நீரியல் சார்ந்த விமானத் தள ஒழுங்குக் கோவை வரைபிற்காக சட்ட வரைஞர் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளல்.
- இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் (CAASL) மேற்பார்வையை

சமர்ப்பிப்பதற்காக விமான சேவை விநியோகஸ்தர் அனுமதிப்பத்திர ஒழுங்கக் கோவை தொடர்பில் இறுதி வரைவு சட்ட வரைஞர் திணைக்களத்தினால் பெற்றுக் கொள்ளல்.

- விமான சேவை போக்குவரத்துப் பாதுகாப்பு ஒழுங்குக் கோவை தொடர்பிலான வரைவு சட்ட வரைஞர் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்.
- விமானத்திற்குரிய உள்நாடு மற்றும் பொது அடையாள ஒழுங்கு கோவைகள் தொடர்பிலான வரைவு சட்ட வரைஞர் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்.

### 3. தகவல் தொழில்நுட்பப் பிரிவு

உரிய கால எல்லைக்குள் தகவல் தொழில்நுட்பப் பிரிவின் மூலம் கீழ்க் குறிப்பிட்ட செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்கள்

- ஒன்லைன் கொடுப்பனவு முறைகள்
- இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை (CAASL) உடன் விமான பஸ் உலக தொழில்நுட்ப வெளியீட்டு முறைமையினை கூட்டிணைத்தல்.
- கங்காராம அலுவலக வலையமைப்பு மற்றும் சேவை நாடுனர்களை கட்டுநாயக்க புதிய கட்டடத்திற்கு அழைத்துச் செல்லல்.
- பரீட்சை மத்திய நிலையங்களை தாபிப்பதைப் பூர்த்தி செய்தல்.
- ஒன்லைன் ஆளில்லா விமானங்களை பதிவு செய்யும் முறைமை
- UCSC பயன்பாட்டில் இல்லாமையினால் PEL முறைமையினை சமகாலப்படுத்துவது பூர்த்தி செய்யப்பட்டது.

### 6.3 தற்போதைய நலன்புரிப் பணிகள்

வைத்தியக் காப்புறுதி யோசனைத் திட்டம் ஊழியர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தின் நெருங்கிய அங்கத்தவர்களுக்காக வழங்கப்படும் உயரிய பிரதிலாபம் வழங்கும் நலன்புரி வசதியாக மாற்றம் பெற்றுள்ளது.


மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டில் வெளி நோயாளர் பிரிவின் கீழ் 2018 ஜனவரி மாதம் தொடக்கம் 2018 டிசம்பர் மாதம் வரையான கால எல்லைக்குள் ரூபா 5,522,218.54 பெறுமதியான பிரதிலாபம் மொத்த பிரதிலாப உரிமைக் கோரல்கள் 1688 அளவிற்காக வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் வைத்திய காப்புறுதி தங்கி சிகிச்சை பெறுவதற்கான வசதிகளும் இக்கால எல்லைக்குள் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டன.

ஊழியர் கடன் நிவாரனம் வழங்குதல் உட்பட பிரதான நலன்புரி வசதிகளுக்கு மேலதிகமாக வீரவில சுற்றுலா விடுதியின் செயற்பாட்டு அங்கத்தவர்களுக்காக நலன்புரி வசதிகளுக்குரியதாக வழங்கப்பட்டது.


6.4 நிதி வெளிப்பாட்டு மீளாய்வுகளை மேற்கொள்ளல்.

2018 ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரை


வெளிநாட்டு விற்பனைக்கான மிகைக் கட்டணம் (OSS) - 2017 மற்றும் 2018 (ரூபா. மில்லியன்)




ஏனைய வருமானம் - 2017 மற்றும் 2018 (ரூபா. மில்லியன்)




செலவினங்கள் - 2017 மற்றும் 2018 (ரூபா. மில்லியன்)



(7)

# வரையறுக்கப்பட்ட விமானநிலையம ற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி

## 7.1 அறிமுகம்

**செயல்நோக்கு**

"ஆசிய பிராந்தியத்திற்குள் செயற்திறனுடனும், சிறந்த நட்புணர்வுடனும் முதல் நிலை விமானசேவைமயமாகத்திகழ்தல்."

**செயற்பணி**

"நாம் அயரா உழைப்புடன் அனைத்து தொழிற்பாடுகளினூடாக போட்டியடிப்படையிலான வான்போக்குவரத்து வசதிகள் மற்றும் சேவைகளை வழங்குவதும், எமது தாபனத்தின் மீது அக்கறை காட்டும் தரப்பினர்களின் மனநிறைவினை உறுதிசெய்வதேயாகும்."

## 7.2 தாபனத்தின்தொழிற்பாடுகள்/செயல்பாடுகள்

கொழும்பு வான் பயண தகவல் பிராந்தியத்திற்குள் விண்ணிலும், தரையிலும் விமானங்கள் மற்றும் விமானப் பயணிகளின் பாதுகாப்பு உறுதிபடுத்தும் பொருட்டு வானோடல் சேவைகள், தீயணைப்பு சேவைகள்மற்றும் பாதுகாப்பு சேவைகள் முனையமற்றும் அதனுடன்ச ம்ந்தப்பட்டப யணிகளுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்துதல், அதன் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் உள்ளிட்ட ஏனைய விமானநிலைய சேவைகள் வழங்குவதும், அரசநியதிச்சட்ட சேவை வழங்குநராக கம்பனியின் நிதி மற்றும் இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்படுகின்றவெளிநாட்டு கடன் மற்றும் நிதி உதவிகள் பயன்படுத்துவதன் மூலம் விமானநிலைய உட்கட்டமைப்புவசதிகள் அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறைவேற்றுவதும் பிரதான தொழிற்பாடுகளாகும்.

## 7.3 2018 வருடத்துக்குள் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி பௌதீக மற்றும் நிதிநிலை முன்னேற்றம்

### 7.3.1. பௌதீகவளர்ச்சி

#### 7.3.1.1 பண்டாரநாயக்கசர்வதேசவிமானநிலையத்தின் (ப.ச.வி) விமானஅசைவுகள் (விமானங்கள், பயணிகள்மற்றும்வான்சரக்கு)

2018 வருடத்துக்குள் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தினால் (ப.ச.வி.) 74,512 விமான அசைவுகள் கையாளப்பட்டதுடன், 66,974 சர்வதேச விமானங்கள் மற்றும்7,538 உள்நாட்டு விமானங்கள் அதற்குட்படுத்தப்பட்டுள்ளது. வருகை மற்றும் புறப்பாடு மற்றும் இடைநிற்பயணிகள் உள்ளிட்ட வருடத்துக்குள் 10,890,646 விமானப்பயணிகள் விமானநிலையத்தை உபயோகித்து இருப்பதுடன் அதில் 9,636 பேர் உள்நாட்டு பயணிகளாவர். இந்தகாலப்பகுதிக்குள் பண்டாரநாயக்க சர்வதேசவிமான நிலையத்தினால் கையாளப்பட்ட மொத்தசரக்குகள் அளவு281,605 மெ.தொன்களாகும். கடந்தகாலத்துடன் ஒப்பிடுகையில் விமானசேவைகள் வரலாற்றில் பண்டாரநாயக்க சர்வதேசவிமான நிலையத்தின் அதக விமானப்பபயண தொழிற்பாடுகளின் எண்ணிக்கை கடந்த வருடத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் 2017 வருடத்துடன் ஒப்பிடுகையில் விமானங்களின் அசைவுகள் , பயணிகள் அசைவுகள் மற்றும் சரக்குப்போக்குவரத்தில் சதவீத வளர்ச்சி முறையே 9.7%, 9.7% மற்றும்1.3% ஆகஇருந்தது.

#### 7.3.1.2. மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் (ம.இ.ச.வி) விமானஅசைவுகள்

2017 ஆம் ஆண்டில் மறுசீரமைப்பு பணிகளுக்காக பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் விமான ஓடுபாதை தற்காலிகமாக மூடியமைக்காரணமாக, மத்தளை இராஜபக்' சர்வதேச

விமானநிலைய தொழிற்பாடுகளில் தற்காலிகமாக வளர்ச்சி காணக்கூடியதாக இருந்தது, 2018 முதல் அரைவருடத்தில் அங்கு குறையும் போக்கு காணக்கூடியதாக இருந்தது.

2018 வருடத்துக்குள் மத்தளை இராஜபக்‘ சர்வதேச விமானநிலையத்தின் மூலம் 709 விமானங்கள் மாத்திரம் கையாளப்பட்டுள்ளது. (சர்வதேச 334 விமானங்கள் மற்றும் தேசிய 375) அது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் அது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 50% ஆன குறைவைக் காட்டுகின்றது. மேற்குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் மத்தளை இராஜபக்சர்வதேச விமானநிலையத்தினால் 3,403 ஆன பயணிகளின் எண்ணிக்கை மற்றும் 450 மெ.தொன் சரக்குகள் அளவிகையாளப்பட்டிருப்பதுடன் அது 2017 வருடத்துடன்ஒப்பிடுகையில், முறையே 85% ஆன 99% ஆன சரிவை பதிவு செய்கின்றது.

எவ்வாறாயினும், 2018 விமான தரவுகள் எண்ணிக்கை 2017 மற்றும் ஒப்பிடுகையில், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய விமான ஓடுபாதைமறு சீரமைப்பு பணிகள் இடையேக ருதக் கூடிவாறான விமானங்களின் எண்ணிக்கை மத்தளை இராஜபக்‘ சர்வதேச விமான நிலையத்திற்கு அனுப்புவதற்கு ஏற்பட்டதனால், 2017 ஆம் ஆண்டின் மூன்று மாதகாலப்பகுதிக்குள் அதன்தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் தற்காலிக திடீர் வளர்ச்சி காணப்பட்டது.

**7.3.1.3 மட்டக்களப்புவிமானநிலையத்தைமீண்டும்**

2018 மார்ச் 25, ஆந் திகதி மட்டக்களப்பு விமானநிலையம் கௌரவ போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரால் பொதுமக்களுக்கு பயன்பாடு குறித்து மீண்டும் திறக்கப்பட்டது. எமது கம்பனி விமான நிலையத்தின் விமான சேவை வழங்குநராக பொறுப்பேற்றது.அதன்படி, எமது ஊழியர்கள் தேவையானவாறு தினசரி மற்றும் அழைப்பு வேலை முறையேட்டின்படி மட்டக்களப்பு விமானநிலையத்தில் சேவைக்காக இணைக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு விமானநிலையத்தை மீண்டும் திறந்தபின், 2018 ஆம்ஆண்டில்1,176 விமானஅசைவுகள் 3,854 பயணிகள் நகர்வுகள் மற்றும் 47.8மெ.தொன் விமானசரக்குகள் ஆகியவை கையாளப்பட்டது. இந்த விமானங்கள் மற்றும் பயணிகள் அசைவுகள் அதிகரித்து வரும் போக்கு காட்டுகின்றன.

**7.3.1.4 வானோடல் பொறியியல் கருத்திட்டங்கள்**

கொழும்பு - பறக்கும் தகவல் பிராந்திற்குள் (Colombo FIR) பயணம் செய்யும் விமானங்களின் பாதுகாப்பினை உறுதிசெய்யும் பொருட்டு,, துரிதமாக காலத்துக்கேற்றவாறு மாற்றமடையும் வானுர்தி இயக்கங்களின் தொழில்நுட்பத்திற்கு இணைவாக உயரந்த சேவையை வழங்கும் பொருட்டு தேவைப்படுகின்ற தொழில்நுட்ப மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு உரிய சிலகருத்திட்டங்கள் 2018 ஆம்ஆண்டில்ஆரம்பிக்கப்பட்டதுடன் அவற்றின் வேலைகள் அடுத்து வரும் சில காலங்களுக்குள் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

| கருத்திட்டம் | | மொத்த மதிப்பிடப்பட்டசெலவு (ரூ.மி) | 2018 வருடத்துக்குரிய வரவுசெலவு கொள்முதல் (ரூ.மி) |
|---|---|---|---|
| 1. | வான்செலவு சார்ந்த தகவல்கள் முகாமைத்துவம் அமைப்பு (AIM) | 711 | 154 |
| 2. | வான் போக்குவரத்து முகமைத்துவ அமைப்பு (ATM) | 665 | 144 |

| கருத்திட்டம் | | மொத்த மதிப்பிடப்பட்டசெலவு (ரூ.மி) | 2018 வருடத்துக்குரிய வரவுசெலவு கொள்முதல் (ரூ.மி) |
|---|---|---|---|
| 3. | தன்னியக்க காலநிலை அவதானிப்பு அமைப்பு (AWOS) மற்றும் விமானநிலைய முனைய தகவல்கள் அமைப்பு (ATIS) | 200 | 60 |
| 4. | தரையிறங்குகருவிஅமைப்பு (ILS) | 240 | 65 |
| 5. | இரண்டாம்நிலைநுணங்குமேற்பார்வைஇரா டர்கருவி (SSR) பிதுறுதலாகளை | 1,000 | 10 |
| 6. | ஏரோ-மொபைல மையத்தின்நவீனமயமாக் கல் (HF தகவல்தொடர்பு) | 100 | 80 |
| 7. | ப.ச.விமற்றும் இரத்மலானைவிமான நிலையத்தின்தகவல்தொடர்புஅமைப்பு மேம்படுத்துதல். | 420 | 210 |

இந்தகருத்திட்டங்கள்எமதுநிறுவனத்தினால்நிதியீட்டம்செய்யப்படுகிறது.

### 7.3.1.5 2030 வரை இரத்மலானை விமானநி லையத்தின் பிரதான திட்டம்

2017 ஒக்டோபர் மாதத்தில் கம்பனியின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட இரத்மலானை விமானநிலையத்தினை அபிவிருத்திசெய்யும் பெருந்திட்டத்துக்கு, 2030 ஆம் காலப்பகுதிக்குள் விமானசேவைக் கைத்தொழில்துறைக்குள் ஏற்பட முடியுமான வியாபார வாய்ப்புகளை பயன்பாட்டிற்கெடுப்பதற்காக தயார்படுத்தப்பட்ட நிலதிட்டத்தைப் போன்று தொழில்வாரியான திட்டமொன்றும் உட்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, இக்காரணம் தொடர்பில் 2018 பெப்ருவரு மாதம் 14 ஆந் திகதி எம்மால் சமர்ப்பித்த அமைச்சரவை விஞ்ஞாபனத்துக்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, இரத்மலானை விமானப்படை முகாம், விமான ஓடுபாதையின் வடபக்கமாக இடமாற்றம் செய்தமைத் தொடர்பில் சிவில் விமான சேவைகள் அதிகாரசபையினால் சமர்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்துக்காக அங்கீகாரம் வழங்கப்பட்டது. இப்போதாகும் போது இரத்மலானை விமானநிலையத்தின் பெருந்திட்டம் செயறைப்படுத்தல் இடம் பெற்றுவருகின்றது.

2018 திசெம்பர் மாதமாகும் போது இந்த கருத்திட்டத்தின் முன்னேற்றமாக, விமான நிலையத்திற்கான சான்றிதழைப் பெறுவதற்கு அதன் அடிப்படைத் திட்டத்துடனான வரையுள் சிவில் விமானசேவைகள் அதிகார சபைக்கு சமர்பித்திருப்பதுடன் விமான நிலைய கட்டிடத் தொகுதி நிர்மாணிக்கும் பொறியியல் திட்டங்களை நிர்மாணித்து வருகின்றன.. மேலும், பயணிகள் முனைய வசதிகள்க ட்டுமானம், நடைப்பாதைகளை நிர்மாணித்தல் மற்றும் ஏற்றிடமேல் விரிப்பு, விமான கூடாரங்களின் கட்டுமானப் பணிகளின் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக வானூர்தி தளசேவை வசதிகள் வழங்கும் கருவிகள் நவீனமயப்படுத்தும் பொருட்டு சாத்தியவள ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

### 7.3.1.6 பயணிகளுக்கான உடனடி பின்னூட்டல் முறை மற்றும் முறைப்பாட்டு முகாமைத்துவ முறைமை

வாடிக்கையாளர் (பயணிகள்) திருப்தியின் முக்கியத்துவத்தை இனம் கண்ட எமது கம்பனி உடனடி பயணிகள் பின்னூட்டல் முறைமை (Instant Feedback System) மற்றும் முறைப்பாட்டு முகாமைத்துவ முறைமை (Complaint Management System) ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

பயணிகளிடமிருந்து உடனடிப் பதிலைப் பெற்றுக்கொள்வதன் மூலமாக எமது கம்பனியின் பல்வேறு துறைகள் மூலம் வழங்கப்படும் சேவைகளின் குறைபாடுகளை இனம் கண்டு அதற்குப் பயனுள்ள தீர்வினை வழங்குவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். அதன் பிரகாரம் பயணிகளிடமிருந்து உடனடிப் பதிலைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான கருவிகளைப் பொருத்துவதற்குப் பொருத்தமான சுமார் 50 இடங்கள் ப.ச.வி நிலையத்தில் தற்போது இனம் காணப்பட்டுள்ளது. அதற்குத் தேவையான மென்பொருள் எமது கம்பனியின் தகவல் தொழில்நுட்ப பிரிவினால் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதுடன் தற்போது அது பரீட்சார்த்த நிலையில் காணப்படுகிறது. வெகு விரைவில் பின்னூட்டல்களைச் சேகரிக்கும் மென்பொருட்களைப் பயன்படுத்துவதற்குத் தேவையான வன்பொருட்கள் தாபிக்கப்படும்.

முறைப்பாட்டு முகாமைத்துவ முறைமை மூலம் விமான நிலையத்தைப் பயன்படுத்தும் அனைவருக்கும் முறைப்பாடுகளைச் சமர்ப்பிப்பதற்கும் இயன்றளவு விரைவாக பின்னூட்டலை வழங்குவதற்குமான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. கம்பனியின் தகவல் தொழில்நுட்ப பிரிவினால் உருவாக்கப்பட்டுள்ள இந்த முறைப்பாட்டு முகாமைத்துவ முறைமையினை 2018 நவம்பர் மாதம் முதல் பயன்படுத்துவதற்குத் தேவையான வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதனை நடைமுறைப்படுத்தியதன் பின்னர் எமக்கு கிடைக்கப் பெறும் முறைப்பாடுகள் தொடர்பில் பயனுள்ள வகையில் தீர்வு காணல் மற்றும் பயணிகளின் எதிர்பார்ப்புக்களை இனம் கண்டு அதற்கு உரிய முறையில் பதில் தெரிவித்தல் ஆகியவற்றை மேற்கொள்ள முடியும்.

### 7.3.1.7சர்வதேச சிவில் விமான சேவைகள் நிறுவனத்தின் (ICAO) பாதுகாப்பு மேற்பார்வை கணக்காய்வு

சர்வதேச சிவில் விமான சேவைகள் சங்கம் (ICAO) தனது அங்கத்துவ நாடுகளின் விமான சேவைகள் பாதுகாப்பு ஆற்றலை நிர்ணயித்தல், விமான சேவைகள் பாதுகாப்பின் உற்பத்தி திறன் மற்றும் அதனது அபிவிருத்தி பற்றிய பூரணமானதொரு பகுப்பாய்வை மேற்கொள்ளல், வான் பாதுகாப்பு தொடர்பான கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்களை உரிய வேளையில் மேற்கொள்ளல் ஆகியவற்றை மேற்கொள்கிறது. 2010 ஆம் ஆண்டுக்குப் பின்னர் சர்வதேச சிவில் விமாக சேவைகள் நிறுவனமானது இந்த ஆண்டு அதாவது 2018 ஆம் ஆண்டு எமது கம்பனி மற்றும் இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையினை இலக்காக கொண்டு மேற்குறித்த கணக்காய்வை மேற்கொண்டது. அதன் பிரகாரம் சங்கத்தின் விசேட கணக்காய்வுக் குழுவொன்று இரத்மலானை பிரதேச கட்டுப்பாட்டு மையம், ப.ச.வி.நி வான் பிரிவு மற்றும் விமான சேவைகள் கட்டிடத் தொகுதியில் காணப்படும் வசதிகள் சர்வதேச தரத்திற்கு ஏற்ற வகையில் உள்ளதா என மதிப்பீடு செய்வதற்கு வருகை தந்தது. இக் கணக்காய்வின் இறுதியில் வழங்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் இலங்கை, பிராந்தியத்தின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் வான் பாதுகாப்பில் முன்னணியில் உள்ளதென்பது உறுதி செய்யப்பட்டது.

### 7.3.1.8 வான் போக்குவரத்து கட்டுப்பாட்டுப் பயிற்சி வசதிகளை விருத்தி செய்தல்

இரத்மலானையில் அமைந்துள்ள சிவில் விமான சேவைப் பயிற்சி நிலையத்தினால் அங்கு காணப்பட்ட பழைய பயிற்சி பாவனையாக்கிக்குப் (Simulator) பதிலாக புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய புதிய விமானப் பயண கட்டுப்பாட்டுப் பயிற்சி பாவனையாக்கி ஒன்று 2018 யூன் மாதம் தாபிக்கப்பட்டது. அதற்காக 321 மில்லியன் ‘ரூபாய் செலவு செய்யப்பட்டதுடன் அதன்

மூலம் விமான நிலைய மற்றும் விமான சேவைக் கம்பனியின் மூலமாக மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்படும் விமானப் பயணக் கட்டுப்பாட்டாளர்களுக்குத் தேவையான பயிற்சிகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

**7.3.1.9 விமா நிலைய மற்றும் விமான சேவைக் கம்பனியின் 35 ஆம் ஆண்டு நிறைவு விழா**

விமா நிலைய மற்றும் விமான சேவைக் கம்பனியின் 35 ஆம் ஆண்டு நிறைவு விழா 2018 மார்ச் 24 ஆ திகதி பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலைய வளாகத்தில் நடைபெற்றது. மேல்மட்ட முகாமை மற்றும் ஊழியர்களின் பங்கேற்பில் பல்சமய அனுட்டானங்களுடன் ஆண்டு நிறைவு நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் இதன் போது பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்திற்கான தொனிப்பொருள் ஒன்று உருவாக்கப்பட்டது.

**7.3.1.10 புதிய விமானக் கம்பனிகளின் சேவைகளை ஆரம்பித்தல்**

- **இண்டிகோ விமானசேவையினை ஆரம்பித்தல்**

இந்தியாவின் மிகப் பெரிய விமானக் கம்பனியான இண்டிகோ விமான சேவை சென்னை, பெங்களூர் மற்றும் கொழும்பு ஆகியவற்றுக்கிடையே 2018 ஜனவரி 20 ஆம் திகதி முதல் விமான சேவைகளை ஆரம்பித்தது.

- **எரோப்லொட் ரஷயா விமானக் கம்பனி மொஸ்கோவிற்கும் கொழும்பிற்கும் இடையே விமான சேவைகளை மீண்டும் ஆரம்பித்தல்.**

இலங்கைக்கும் ரஷ்யாவிற்கும் இடயிலான உறவுகளை வலுவடையச் செய்து எரோப்லொட் தனது நேரடி விமான சேவைகளை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் வரை 2018 ஏப்ரல் 29 ஆம் திகதி மீண்டும் ஆரம்பித்தது. அதன் பிரகாரம் கொழும்பிற்கும் மொஸ்கோவிற்கும் இடையில் வாரம் ஒன்றிற்கு ஐந்து (5) நேரடி விமான சேவைகளை நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய விமானங்களான எயார்பஸ் A330 ஐப் பயன்பத்தி புதன் மற்றும் வியாழக் கிழமைகளில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- **எட்வைஸ் விமானக் கம்பனி நேரடி தொடர்ச்சியான விமானப் பயணங்களை இலங்கைக்கும் சுவீடனுக்கும் இடையில் ஆரம்பித்தல்.**

இதன் கீழ் கொழும்பிற்கும் சூரிச்சுக்கும் இடையில் வெள்ளி மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களில் வாரம் ஒன்றுக்கு இரண்டு விமானப் பயணங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்காக அண்மையில் பரிமாற்றம் செய்யப்பட்ட 314 ஆசனங்ளை உள்ளடக்கிய A340 விமானங்கள் பயன்படுத்தப்படுகிறது.

- **சொக்வின் விமான சேவை கொழும்பு வரை தொடர்ச்சியான விமானப் பயணங்களை ஆரம்பித்தல்**

2018 டிசம்பர் 28 ஆம் திகதி முதல் சொக்வின் விமான சேவை மூலம் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கும் சொக்வின் ஜயெங்பி சர்வதேச விமான நிலையத்திற்கும் (Chongqing Jiangbei International Airport) இடையில் வாரம் ஒன்றிற்கு மூன்று விமானப் பயணங்கள் வீதம் விமான சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன. இவ் விமானப் பயணங்கள் திங்கள், புதன் மற்றும் வெள்ளி ஆகிய தினங்களில் மேற்கொள்ளப்பட உள்ளதுடன் இதற்காக எயார்பஸ் 320 வகை விமானங்கள் பயன்படுத்தப்படும்.

**7.3.1.11 பிரதானமல்லாத தொழில் முயற்சிகளை வெளிவாரியாக்குதல்.**

விமான நிலையங்களைப் பயன்படுத்தும் அனைவருக்கும் மிகவும் செயற்திறன் வாய்ந்த ஒரு சேவையினை வழங்குதல் மற்றும் கம்பனியின் வளங்களை உற்பத்தி திறனுடன் பயன்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாக கொண்டு ப.ச.வி நிலையத்தினால் பேணப்பட்டு வந்த 3 வாகனத் தரிப்பிடங்களின் செயற்பாடுகளை வேறு ஒரு தனியார் நிறுவனத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்குவதற்கு விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின்

முகாமைத்துவத்தினால் தீர்மானிக்கப்பட்டது. இதன் மூலம் கம்பனியின் வாகனத் தரிப்பிடங்கள் மூலம் கிடைக்கப் பெறும் வருமானம் எதிர்வரும் மூன்று ஆண்டுகளில் சுமார் 100 மில்லியன் ரூபாவினால் உயர்வடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதற்காக அமைச்சு பெறுகை குழுவின் அங்கீகாரம் ஏற்கனவே கிடைக்கப்பெற்றுள்ளதுடன் தெரிவு செய்யப்பட்ட தரப்பினர்களினால் வாகனத் தரிப்பிட செயற்பாட்டுப் பணிகள் ஆகஸ்ட் மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டது.

### 7.3.1.12பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் உள்ள சுற்றுலா தகவல் நிலையத்தைப் புனரமைத்தல்

சுற்றுலாப் பயணிகளுக்கு மிகவும் விரைவானதும் உற்பத்தி திறன் வாய்ந்ததுமான சேவையினை வழங்குவதற்காக 20 ஆண்டுகள் பழைமை வாய்ந்த பண்டாரநாயக்க விமான நிலையத்தில் அமைந்துள்ள இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தினால் நடாத்தப்பட்டு வந்த சுற்றுலாத் தகவல் நிலையம் புனரமைக்கப்பட்டு பொதுமக்களுக்காக திறந்து வைக்கப்பட்டது.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் உள்வருகை முனையத்தில் அமைந்துள்ள சுற்றுலா தகவல் கரும பீடமானது இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் சேவையினைப் பெற்றுக் கொள்வதற்காக முதலாவதாக நாடுகின்ற இடமாக உள்ளது.இச் சுற்றுலா தகவல் கரும பீடத்தில் இலங்கையில் மேற்கொள்ள முடியுமானவை, இலங்கைக்கே உரித்தான உற்பத்திகள் மற்றும் சேவைகள், அவற்றைப் பெற்றுக் கொள்ளக் கூடிய பிரதேசங்கள் போன்ற தகவல்களை வினவி அறிந்து கொள்ள முடியும். மேலும் இப் புனரமைப்பினைத் தொடர்ந்து இங்கு உள்ள உத்தியோகத்தர்களால் இலங்கையின் வரலாறு பற்றிய தகவல்கள் மற்றும் வரலாற்றுக் கதைகள், ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள விசேட தன்மைகள், கைத்தொழில், கவர்ச்சிகரமான விடயங்கள் மற்றும் மனிதர்களிடம் காணப்படும் திறமைகள் தொடர்பான தகவல்களை மிகவும் பயனுள்ளவாறு வழங்குவதற்கு முடிந்துள்ளது.

### 7.3.1.13 2018ஆம் ஆண்டு தேசிய தொழில் முயற்சி திறமைக்கான வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுக் கொள்ளல்

2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஐந்தாம் திகதி விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) தனியார் வரையறுக்கப்பட்ட கம்பனிக்கு அண்மையில் நடாத்தப்பட்ட தேசிய தொழில் முயற்சி வெற்றியாளர் விருது - 2018 வழங்கும் விழாவின் போது அரச சேவைத் துறையில் இரண்டாம் இடம் கிடைக்கப் பெற்றது. இங்கு தலைமைத்துவத் திறமை, நிறுவன ரீதியான நல்லாட்சி தொடர்பான திறமை, சாத்தியக் கூற்றினைக் கட்டியெழுப்பும் திறமை, செயலாற்றுகை முகாமைத்துவம் தொடர்பான திறமை, உள்நாட்டு மற்றும் பூகோள சந்தையில் திறமை, நிறுவனம் சார் சமூகப் பொறுப்பு மற்றும் சூழல் நிலைபேறான தன்மை தொடர்பான திறமை, தொழில் முயற்சி மற்றும் நிதி விளைவுகளின் திறமை ஆகிய ஏழு துறைகள் (7) தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு ஒட்டுமொத்த தொழில் முயற்சி பற்றிய திறமை நிர்ணயிக்கப்படும்.

## 7.4 2018ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள்.

### 7.4.1 பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் இரண்டாவது விமானப் பயணிகள் முனையக் கருத்திட்டம்

2018 ஆம் ஆண்டு பணிகளை ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் இரண்டாவது விமானப் பயணிகள் முனையக் கருத்திட்டம் தொடர்ந்தும் தாமதமாகி உள்ளது. ஒப்பந்தக்காரர்களிடம் கிடைக்கப்பெற்ற கூறு விலைகள் பொறியியல் மதிப்பீட்டுச் செலவுத் தொகையினை விட அதிகமாக உள்ளமையே இதற்கான காரணமாக அமைந்தது. கிடைக்கப் பெற்ற ஆகக் குறைந்த கூறு விலைகளும் பொறியியல் மதிப்பீட்டை விடவும் சுமார் 43% அதிகமாக காணப்பட்டது. இக் கூறுவிலைகளைக் குறைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்கள் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து ஏற்புடைய

கேள்விப் பத்திரத்தை ரத்துச் செய்வதற்காக அமைச்சரவை பெறுகை குழுவின் அனுமதியுடன் போக்கு வரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சினால் அமைச்சரவைப் பத்திரம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது. அதன் பிரகாரம் அமைச்சரவையினால் 2018 மே மாதம் 15 ஆம் திகதி விலைமனு கோரும் செயன்முறையினை ரத்துச் செய்வதற்கும் அமைச்சரவைப் பெறுகை குழுவின் அங்கீகாரம் மற்றும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிலையத்தின் (JICA) இணக்கப்பாட்டிற்கு இணைவாக ஒட்டுமொத்த பெக்கேஜ் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு திதாக விலைமனுக்கள் கோருவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

எவ்வாறாயினும் வெளிப்புறமாக அமையப் பெற்றுள்ள விமானத் தரிப்பிடம் மற்றும் ஓடுபாதை உள்ளிட்ட "B"பெக்கேஜ் வேலைகள் இடம்பெற்று வருவதுடன் 2018 டிசம்பர் 31ஆம் திகதி அளவில் அ 17% வீத முன்னேற்றத்தைக் காட்டியது. இவ் ஒப்பந்தம் "ஹசாமா அன்ட் கோப்பரே'ன்" (Hazama Ando Corporation) எனும் ஒப்பந்தக் கம்பனியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் அதன் மொத்தப் பெறுமதி 1,152,273,761 ஜப்பான் யென்கள் ஆவதுடன் அது இலங்கை ரூபா படி 4,456,377,248 ரூபாவாகும். ஒப்பந்த காலம் 30 மாதங்கள் ஆகும். ஒப்பந்த வேலைகள் 2017 ஏப்ரல் 25ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன் 2019 ஒக்டோபர் மாதமளவில் அதனைப் பூர்த்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 7.4.2 விமான நிலைய ஹோட்டல்

வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியினால் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு முன்பாக அமைந்துள்ள வளவில் விமான நிலையத்திற்குச் சொந்தமான சுமார் மூன்று ஏக்கர் விஸ்தீரணமுள்ள காணி பயன்படுத்தப்பட்டு 4 நட்சத்திர ஹோட்டல் ஒன்றை நிர்மாணித்தல் தொடர்பான ஆரம்ப பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ் விமான நிலைய ஹோட்டல், ஆகக் குறைந்தது 100 அறைகளைக் கொண்டதுடன் அங்கீகரிக்கப்பட்ட தரங்களுக்கு ஏற்ப வர்த்தக நிலையங்கள், பொழுதுபோக்கு மற்றும் விளையாட்டு வசதிகளுடன் கூடிய கருத்தரங்கு/ மாநாட்டு வசதிகள் உள்ளடங்கிய கடைத் தொகுதிகள் மற்றும் ஏனைய வசதிகளுடன் இலங்கையின் சுற்றுலா ஒழுங்கு விதிகள் மற்'ம் வழிகாட்டல்களுக்கு அமைவாக இது நிர்மாணிக்கப்படவுள்ளது. இந்த ஹோட்டலை நிர்மாணிப்பதற்கான காணி 40 ஆண்டு கால குத்தகை அடிப்படையில் மீண்டும் புதுப்பிக்கத்தக்க வகையில் வழங்கப்படுகிறது.

### 7.4.3 பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் காணப்படும் விமானப் பயணிகள் முனையக் கட்டிடத்தை (PBT)மீள்கட்டமைத்தல் மற்றும் அதன் மாதிரியை மீண்டும் சீர்செய்தல்

தற்போது பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தினால் கையாளப்படும் விமானப் பயணிகளின் எண்ணிக்கை, அதன் திட்டமிடப்பட்ட கொள்ளளவை விட அதிகமாக உள்ளமையால் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் காணப்படும் விமானப் பயணிகள் முனையக் கட்டிடத்தை தடையின்றி உயர்ந்தபட்சமாக பயன்படுத்துவதற்கு நேர்ந்துள்ளது. ஆகவே தற்போதுள்ள விமானப் பயணிகள் முனையக் கட்டிடத்தின் மாதிரியை மீண்டும் சீர்செய்து மீள்கட்டமைக்கும் கத்திட்டப் பணிகள் தற்போது இடம்பெற்று வருகிறது.

**2018 ஆம் ஆண்டு இறுதியில் இக் கருத்திட்டத்தின் முன்னேற்றம் பின்வருமாறு அமைந்தது.**

- விமான நிலையத்தின் உள்வருகை முனையத்தின் குடிவரவு பிரதேசத்தில் "L" மாதிரிப் பகுதியை மீண்டும் சீர்செய்து "குடிவரவு மண்டபம்" எனும் எண்ணக்கருவை நடைமுறைப்படுத்தி அங்கு மின்சார மற்றும் இலத்திரனியல் கருவிகள் உள்ளடங்கிய கடைத் தொகுதி ஒன்றை நிர்மாணித்தல் - 43% (மதிப்பிடப்பட்ட செலவினம் 374 மி.'ரூ)

- வெளிச் செல்லும் முனையத்தின் பொதுமக்கள் விறாந்தையை விஸ்தரித்தல் - 86% (ஒபந்தத்தின் மொத்தப் பெறுமதி 238 மி.'ரூ)

**7.5 2018 சனவரி மாதத்திலிருந்து திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதிக்காக தாபனத்தின் நிதிக்கூற்றுகள்**

| விபரம் | 2017 (ரூ.மி.) | 2018 (ரூ.மி.) |
|---|---|---|
| மொத்தவருமானங்கள் | 23,377 | 28,186 |
| மொத்த செலவுகள் | 12,558 | 16,626 |
| வரிக்குபிந்தியஇலாபம் | 8,715 | 9,330 |

# (8)

## வரையறுக்கப்பட்ட லக்திவ எஞ்சினியரிங் (தனியார்) கம்பனி

### 8.1 அறிமுகம்

இந்நிறுவகத்தின் முக்கிய நோக்கம் யாதெனில் இ.போ.சபஸ்களை குறைந்தசெலவில் உயர்தரத்தில் பழுதுபார்த்து மக்கள் சேவைக்காக அணியிற்சேர்த்தல்.

**நோக்கு**

"இலங்கைமக்களுக்குநல்லகவர்ச்சிகரமானபோக்குவரத்துச்சேவைக்குஉதவுதல்"

**பணி**

"இலங்கைபோக்குவரத்துச்சபையினதும்தனியார்பஸ்உடைமையாளர்களினதும்பழுதடைந்தபஸ்களைசலுகை செலவில்உயர்தரத்தில்பழுதுபார்த்துசேவைக்குச்சேர்த்தல்"

### 8.2 2018 ஆம் ஆண்டில் சாதித்தமுன்னேற்றம் (பௌதீக, நிதி)

| நிறுவகம் | பழுதுபார்க்கப்பட்ட பஸ் தொகை | பெற்றுக் கொண்ட நிதி(ரூ) | உற்பத்திச் செலவு | நிறுவகத்திற்கான இலாபம் |
|---|---|---|---|---|
| **இலங்கை போக்குவரத்துச் சபை** | | | | |
| | 87 | 127,330,487 | 91,702,431 | 35,628,055 |
| **தேசிய போக்குவரத்துஆணைக்குழு** | | | | |
| | 01 | 178,349 | 149,126 | 29,223 |
| **வ/ப விமானநிலைய, விமானசேவைகள் கம்பனி** | 01 | 1,232,554 | 852,283 | 380,271 |
| **மொத்தம்** | 89 | 128,741,390 | 92,703,840 | 36,037,549 |

### 8.3 உட்கட்டமைப்புவசதிகள்

லக்திவ எஞ்சினியரிங் கம்பனியின் காணி அளவு ஏறத்தாழ 24 ஏக்கர்களாகும். இதற்குள் பல வேலைக்களங்கள் உள்ளன.

தொடக்கத்தில் இலங்கை போக்குவரத்துச்சபைக்குச் சொந்தமான சகல பஸ் உடற்கோப்புகளும்(எஞ்சின்தவிர்ந்த) இவ்வேலைக்களங்களுள் பழுதுபார்க்கப்பட்டன. தற்போது பாவிக்கப்படாத பல கட்டடங்கள் உள்ளன. அவற்றை பழுதுபார்த்து பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

2018ஆம் ஆண்டில் பலகட்டடங்கள் பழுதுபார்க்கப்பட்டு பஸ் உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்டன.

கடந்த ஆண்டு 05-06பஸ்கள் மாதமொன்றுக்கு பழுதுபார்க்கப்பட்டன. ஆனால் 2018ஆம் ஆண்டில் இத்தொகை மாதமொன்றுக்கு 08-10ஆக அதிகரித்தது.

இவ்வாண்டில் கடந்த ஆண்டைக் காட்டிலும் விரைவாக பழுதுபார்த்தல்களை மேற்கொண்டு பஸ்களை சாலைகட்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**8.4 முன்னேற்றம்**

- 35 ஆண்டுகள் பழைமைவாய்ந்த இயந்திரங்களுக்குப் பதில் புதிய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு பழுதுபார்த்தல் விரைவாகவும் வினைத்திறனுடனும் நடைபெறுகிறது.
- பாதுகாப்பற்ற வேலிகட்கு பதில் புதிய பாதுகாப்பான மதில்கள் நிறுவக வளவுக்குள் அமைக்கப்பட்டதுடன் பாதுகாப்பற்றவேலிகள் உள்ள ஏனைய இடங்களிலும் பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டன.
- பழுது நிலையிலிருந்த கழிவறைகளைப் புதுப்பித்து அவற்றை பாவனைக்கு விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- இலங்கை போக்குவரத்துச்சபைக்கு சொந்தமான பஸ்களையும் அமைச்சிற்கு சொந்தமான, இதர நிறுவகங்களின் வாகனங்களையும் பழுதுபார்த்தல்.
- 2018 ஆம் ஆண்டிலிருந்து சம்பளத்திற்கும் வேதனத்திற்கும் இதர செலவுகட்குமெனபொதுத் திறைசேரி அளித்து வந்த நிதி நிறுத்தப்பட்டு,தற்போது சம்பளங்கள்வேதனங்கள்,இதர செலவுகள்யாவற்றுக்குமான செலவு பஸ்பழுதுபார்த்தல் மூலம் நிறுவகம் ஈட்டும் வருவாயிலிருந்தே செய்யப்படுகின்றது.
- நிறுவகத்தின் சகல ஊழியர்களினதும் செயல் நோக்ககுறித்தலை உயர்த்துமுகமாக விசேட பயிற்சி ஆலோசகர் மூலம் பயிற்சி வேலைக்களங்களை நடாத்தி அதன் மூலம் ஊழியர்களே நிறுவகத்தினை வளர்க்கும் வேலைத்திட்டங்களை உருவாக்கக்கூடிய நிலையை ஏற்படுத்தல்.
- நிறுவக ஊழியர்கட்காக இதுவரைகாலமும் இல்லாதிருந்த உண்டிச்சாலையொன்றும் மாநாட்டு மண்டபமும்அமைக்கப்பட்டுள்ளன.

**8.5 2019 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட எதிர்பார்க்கப்படும் திட்டங்கள்**

- அதிவேக நெடுஞ்சாலையில் செயலாற்றுகின்ற பஸ்களையும், இரட்டைத் தட்டு பஸ்களையும் பழுதுபார்த்தல்.
- நிறுவகத்தில் உள்ள இதர கட்டடங்கள் உட்பட பழுதடைந்து போயுள்ள பிரதான வேலைக்களத்திலுள்ள கட்டடங்களை அகற்றி புதிய கட்டடங்களை அமைத்தல்.
- பஸ் பழுதுபார்த்தலுக்குத் தேவையானத கட்டை வளைக்கும் உபகரணத்தை வேலைக்களத்தில் அமைத்து நிறுவகத்தின் உழியர்கட்கு அவ்வியந்திரத்தினை உபயோகிக்க பயிற்சியளித்தல்.

# (9)

## வீதிப் பாதுகாப்புத்தொடர்பிலான தேசிய சபை

1998 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க மோட்டார் வாகனத் திருத்தப்பட்ட சட்டத்தினூடாக போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் கீழ் வீதிப் பாதுகாப்பு தொடர்பிலான தேசிய சபை செயற்படுத்தப்படுகின்றது. அனைவருக்கும் பாதுகாப்பான வீதித் திட்டத்தினை ஏற்படுத்துதல் என்ற தொனிப்பொருளினை அடிப்படையாகக் கொண்டு அமுற்படுத்தப்பட்டு வருகின்ற ஒரேயொரு அரச நிறுவனமாக வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபை விளங்குகின்றது.

**தொலைநோக்கு**

“அனைவருக்கும் பாதுகாப்பான வீதித் திட்டம்

**பணிக்கூற்று**

“நிலைபேறான அபிவிருத்திக்கான வீதி விபத்துக்களற்ற சமுதாயமொன்றை உருவாக்குதல்”

### 9.1 வீதிப் பாதுகாப்புத் தொடர்பிலான தேசிய சபையின் நோக்கங்கள்

- ஒழுக்காற்றுடனான சட்டத்திற்குக் கீழ்ப்படியும் சாரதிகளை உருவாக்குவதனூடாக உயர் தரத்தினைக் கொண்ட சாரதி சேவையொன்றினை உருவாக்குவதற்குத் தேவையான பின்னணியினைத் தயாரித்தல்
- மோதிவிட்டுத் தப்பிச் செல்லுவதால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிதியுதவிகளை வழங்குதல் மற்றும் அவ்வாறான விபத்துக்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- வீதி, அதில் பாவிக்கப்படும் வாகனங்கள் மற்றும் பயணஞ் செய்யும் பயணிகள் உட்பட பாதசாரிகளைப் பாதுகாப்பதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை இனங்காணுதல் மற்றும் செயற்படுத்துதல்.
- வீதிப் பாதுகாப்புத் தொடர்பிலான தரவுகளை ஒன்றுதிரட்டுதல், ஆய்வுகள், ஆராய்ச்சிகளை நடாத்துதல் மற்றும் சர்வதேச ஒருங்கிணைப்பினை மேம்படுத்துதல்.
- அரச துறை, அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் பிரத்தியேக நிறுவனங்களுடன் இணைந்து தேசிய வீதிப் பாதுகாப்புக் கொள்கைகளை செயற்படுத்துதல் மற்றும் எழும் பலவீனங்களைக் குறைத்து கொள்ளுதல்.
- வீதி விபத்துக்களின் காரணமாக அங்கவீனமாகும் நபர்களைப் புனர்வாழ்வளிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல்
- பொருளாதாரத் தொழில்நுட்பம், சமூக ரீதியில் அமுற்படுத்தக்கூடிய செயற்பாடுகள் மற்றும் சிநேகபூர்வமான சூழலினைப் பாதுகாக்கும் செயற்பாடுகளைப் பின்பற்றுவதற்கு நிதிசார் உதவிகள் மற்றும் ஆலோசனைகளை வழங்குதல்.
- தேசியப் போக்குவரத்துக் கொள்கையினைத் தயாரிப்பதற்கும் மற்றும் அதன் செயற்பாட்டிற்கும் பங்களிப்பினை வழங்குதல்.
- வீதிப் பாதுகாப்புத் தொடர்பிலான சட்டங்களைத் தயாரித்தல், திருத்தஞ் செய்தல் போன்ற செயற்பாடுகளுக்குத் தேவையான பங்களிப்பினை வழங்குதல்.

### 9.2 வீதிப் பாதுகாப்பு தொடர்பிலான தேசிய சபையின் பணிகள் மற்றும் அதிகாரங்கள்.

மோட்டார் வாகனச் சட்டத்தின் 213 அ பிரிவின் கீழ் அமைக்கப்பட்டுள்ள வீதிப் பாதுகாப்புத் தொடர்பிலான தேசிய சபையின் பணிகள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

(அ) பின்வரும் விடயங்கள் தொடர்பில் கணனி தரவுக் கழஞ்சியமொன்றினை அமைத்தல் மற்றும் நாளதுவரைப்படுத்தல்.

- வாகனங்களின் எண்ணிக்கை, அதன் வடிவ அமைப்புக்கள்
- வீதி விபத்துக்கள்/மரணங்கள்
- வீதிப் பாதுகாப்புத் தொடர்பிலான தேசிய மற்றும் சர்வதேச புள்ளி விபரங்கள்.

(ஆ) வீதிப் பாதுகாப்பு விடயம் தொடர்பில் கணனி வலையமைப்பு வசதிகளுடனான நூலகமொன்றினை முன்னெடுத்துச் செல்லுதல்.

(இ) தொடர்பான விடயங்கள் தொடர்பில் ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சிகளுக்கு உதவிகள் வழங்குதல்.

(ஈ) ஒத்த சர்வதேச நிறுவனங்களுடன் தொடர்புகளை முன்னெடுத்தல், அவர்களின் அனுபவங்கள் மற்றும் அறிவினை பரிமாறிக் கொள்ளுதல்.

(உ) வீதிப் பாதுகாப்புத் தொடர்பான விடயக் கருத்திட்டங்களின் மீது பொறுப்பு வகிக்கும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு அறிவு மற்றும் தகவல்களை வழங்குதல்.

(ஊ) வீதிப் பாதுகாப்புத் தொடர்பிலான கருத்திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் செயற்படுத்தல்.

(எ) அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களில் வீதிப் பாதுகாப்புடன் தொடர்புட்ட செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல்

(ஏ) அடையாளங் காணப்படாத வாகனங்களினால் விபத்துக்கு உட்பட்ட நபர்களுக்கு இழப்பீட்டுக் கொடுப்பனவுகளை வழங்குதல்.

(ஐ) வீதிப் பாதுகாப்புத் தொடர்பிலான செயற்பாடுகளுக்கு நிதிசார் மற்றும் வேறு உதவியினைப் பெற்றுக் கொள்ளுதல்.

(ஒ) வீதிப் பாதுகாப்புடன் தொடர்பான கொள்கைகள் மற்றும் கருத்திட்டங்கள் தொடர்பில் அரசுக்கு ஆலோசனைகள் வழங்குதல்.

**9.3 2018 ஆம் ஆண்டில் வீதிப் பாதுகாப்புத் தொடர்பிலான தேசிய சபையின் செயற்பாடுகள.**

➢ **பாடசாலை மாணவர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டம்**

- பாடசாலை வாகனக் கட்டுப்பாட்டுச் சேவையினை மிகவும் விரிவான முறைமையில் முன்வைத்து வாகன விபத்துக்களைத் தடுத்தல் தொடர்பில் பாடசாலை மாணவர்களை விழிப்புணர்வூட்டும் போதனைகளை நடாத்தி விபத்துக்கள் தொடர்பில் வீடியோக் காட்சிகளைக் காட்சிப்படுத்தி துண்டுப் பிரசுரங்களை பகிர்ந்தளித்தல் மற்றும் மாணவர் வாகனக் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் அருகில் சூழவுள்ள 10 பாடசாலைகளின் மாணவர்கள் மாணவிகளின் பங்குகொள்ளலுடன் 2018.01.11 ஆந் திகதி கொழும்பு ஆனந்த வித்தியாலயத்தில் நடாத்தப்பட்டது. அவ் வைபவத்தின் சிறப்பு விருந்தினர் உரை வீதிப் பாதுகாப்புத் தொடர்பிலான தேசிய சபையின் தவிசாளர் மருத்துவர் திரு. சிசிர கோதகொட அவர்களினால் முன்னெடுக்கப்பட்டது.

- அதேபோல பொரளை யசோதரா மகளில் கல்லூரி முன்றலில் சோளர் வெளியே எரியும் மின் விளக்குகள் கம்பம் அமைக்கப்பட்டு, பாடசாலை மாணவர்களை விழிப்புணர்வூட்டுதல், விபத்துக்கள் தொடர்பில் வீடியோக் காட்சிகளைக் காட்சிப்படுத்துதல் மற்றும் துண்டுப் பிரசுரங்களைப் பகிர்ந்தளித்தலுடன், தேசிய பாடசாலைகள் மாணவர் வாகனக் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம், அருகே சூழவுள்ள சில பாடசாலைகளின் மாணவ மாணவிகளின் கலந்துகொள்ளலுடன், 2018.06.08 ஆந் திகதி யசோதரா மகளிர் கல்லூரியில் நடாத்தப்பட்டது.
- 2018.04.04 ஆந் திகதி தொடக்கம் மூன்றுநாள் வரை மத்துகம கம்புறாவல மகா வித்தியாலயத்தில், வீதிப் பாதுகாப்புத் தொடர்பிலான கல்விசார் கண்காட்சியொன்று நடாத்தப்பட்டதுடன், அதில், பாடசாலை மாணர்களின் அறிவினை விருத்தி செய்வதற்கென பல நிகழ்ச்சித் திட்டங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. மேலும், 2018.07.07 ஆந் திகதி மொரட்டுவ பல்கலைக்கழகத்துடன் இணைந்து வீதிப் பாதுகாப்புத் தொடர்பில் பாடசாலை மாணவர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டமொன்று நடாத்தப்பட்டது.
- 2018.09.13 ஆந் திகதி குருணாகல் மாவட்டத்தின் கொத்தலாவல மகா வித்தியாலயத்திலும் மற்றும் 2018.09.14 ஆந்திகதி வெல்லவ மத்திய மகா வித்தியாலயத்திலும் பாடசாலை மாணவர்களை விழிப்புணர்வூட்டுதல் இடம்பெற்றுள்ளதுடன், இதில் விபத்துக்கள் தொடர்பில் வீடியோக் கண்காட்சி மற்றும் துண்டுப் பிரசுரங்களைப் பகரிந்தளித்தலும் இடம்பெற்றன. பாடசாலை நுழைவாயில் சுற்றுப்புறத்தில் சமிக்ஞை பலகைகளைப் பொருத்துதலும் இடம்பெற்றுள்ளது.

➢ **பாடசாலைகளில் பயிற்சியினைப் பெறும் தாதியர்களை விழிப்புணர்வூட்டுதல்.**

2018.07.12 ஆந் திகதி வீதிப் பாதுகாப்புத் தொடர்பில் தாதி மாணவ மாணவிகளை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டம் கந்தான தாதியர் பாடசாலையிலும் மற்றும் 2018.12.03 ஆந் திகதி களுத்துறை தாதியர் பாடசாலையிலும் நடாத்தப்பட்டது.

- **ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் பயிற்சியினைப் பெறும் மாணவ மாணவிகளை விழிப்புணர்வூட்டுதல்.**

2018.07.21 ஆந் திகதி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் பயிற்சியினைப் பெறும் மாணவ மாணவிகளை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டமொன்று, மகரகம ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் நடாத்தப்பட்டது. இது தொடர்பில் வீதிப் பாதுகாப்புத் தொடர்பிலான தேசிய சபையினால் ரூபா. 21,630 நிதி செலவு செய்யப்பட்டது.

➢ **பிரத்தியேக நிறுவனங்களின் சாரதிகளை விழிப்புணர்வூட்டுதல்.**

பிரத்தியேக நிறுவனங்களின் சாரதிகளின் கரங்களினால் இடம்பெறும் விபத்துக்களைக் குறைத்துக் கொள்ளுவதை பிரதான நோக்காகக் கொண்டு அது தொடர்பிலான விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள், 2018.02.26, 2018.02.28 மற்றும் 2018.03.09 ஆகிய மூன்று தினங்களில் மீரிகம, கட்டுநாயக்க மற்றும் அவிசாவளை பிரன்டிக்ஸ் நிறுவனத்தில் நடாத்தப்பட்டது.

➢ **அரச நிறுவனங்களின் சாரதிகளை விழிப்புணர்வூட்டுதல்**

2018.01.12 ஆந் திகதி “செய்த தவறினை மீளவும் செய்யாமலிப்பதற்கு உளத்தினைப் பலப்படுத்துவோம்” என்ற தொனிப்பொருளில் சாரதி புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டமொன்று, இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சாரதிகளுக்கு நாராஹென்பிட்டி இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிரதான அலுவலகத்தில் நடாத்தப்பட்டது. மேலும், 2018.07.13 ஆந் திகதி வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் சிவில் விமான சேவைகள் கம்பனியின் சாரதிகள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு வீதிப் பாதுகாப்புத் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டமொன்று வீதிப் பாதுகாப்புத் தொடர்பிலான தேசிய சபையின் தவிசாளரின் தலைமையில் நடாத்தப்பட்டது.

- **முச்சக்கர வண்டிச் சாரதிகள் மற்றும் ஏனைய புதிய சாரதி அனுமதிப் பத்திர விண்ணப்பதாரர்களை விழிப்புணர்வூட்டுதல்.**

2018 ஆம் ஆண்டின் ஆகஸ்டு மாதம் வரை வீதிப் பாதுகாப்புத் தொடர்பிலான தேசிய சபையினால் 10 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், அது தொடர்பில் ரூபா. 74,570.00 செலவு செய்யப்பட்டுள்ளது. வாரத்தின் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் இந்த விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தினை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- **மொனராகல வைத்தியசாலையின் மருத்துவர்கள் மற்றும் தாதிச் சேவை உத்தியோகத்தர்களை விழிப்புணர்வூட்டும் தேசிய நிகழ்ச்சித் திட்டம்**

மொனராகல வைத்தியசாலையின் மருத்துவர்கள் மற்றும் தாதிச் சேவை உத்தியோகத்தர்களை விழிப்புணர்வூட்டும் தேசிய நிகழ்ச்சித் திட்டம் வைத்தியசாலை பணிப்பாளரினை உள்ளடக்கி மருத்துவர்கள், தாதியர்கள், அம்புலன்ஸ் சாரதிகளை உள்ளடக்கிய உழியர்களின் பங்குகொள்ளலுடன் 2018.01.09 ஆந் திகதி நடாத்தப்பட்டதுடன், அத்தினம் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்களுக்கு வைத்திசாலையினூடாக எதிரொளி ஸ்ரிக்கர்களை வழங்குவதும் இடம்பெற்றது.

மொனராகல மாவட்ட அலுவலகத்தில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்களின் வாழ்க்கையினைப் பாதுகாக்கும் நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன், இருட்டில் மோட்டார் சைக்கிள் விபத்து ஏற்படுதல் அதிகம் என்பதால் அவ்விபத்துக்களைக் குறைப்பதற்கு நாடுபூராவும் மோட்டார் சைக்கிள்களில் எதிரொளி ஸ்ரிக்கர்களை ஒட்டும் நிகழ்ச்சித் திட்டம் இடம்பெற்றது. இது தொடர்பில் ரூபா. 25,160.00 நிதி, வீதிப் பாதுகாப்புத் தொடர்பிலான தேசிய சபையினால் செலவு செய்யப்பட்டது.

தேசிய நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ், 2018 ஆகஸ்டு மாதம் 29,30,31 ஆகிய தினங்களில் மொனராகல என்டபிரய்சஸ் இலங்கை கண்காட்சியில் வீதிப் பாதுகாப்புத் தொடர்பிலான தேசிய சபையினூடாக கண்காட்சிக் கூடமொன்று அமைக்கப்பட்டிருந்ததுடன், அதில், அரச ஊழியர்கள், பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு வீதிப் பாதுகாப்புத் தொடர்பில் விழிப்புணர்வூட்டுதல் இடம்பெற்றுள்ளது. இதில் விபத்துக்கள் தொடர்பில் வீடியோக் காட்சிகள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் பகிர்ந்தளித்தல் இடம்பெற்றுள்ளது.

“இன்று ஓய்வெடுப்போம் நாளை மகிழ்ச்சியுடன் இருப்போம்” என்ற தொனிப்பொருளின் கீழ் என்டபிரய்சஸ் இலங்கை தேசிய நிகழ்ச்சித் திட்டத்திற்கு இணையாக நாடுபூராவும் நடாத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட மாவட்ட வீதிப் பாதுகாப்பு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்ச்சித் திட்டம், மாத்தறை மாவட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கௌரவ மங்கள சமரவீர அவர்களின் தலைமையிலும் மற்றும் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் திரு. ஜி.எஸ். வித்தானகே அவர்களின் பங்குகொள்ளலுடனும் சனத் ஜயசூரிய விளையாட்டரங்கில் 2018.09.29 ஆந் திகதி நடாத்தப்பட்டது. அதில் பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

- வாகன விபத்துக்களுக்கு உள்ளாகி அங்கவீனமான பாடசாலை மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்குதல்.
- மோதிவிட்டுத் தப்பிச் செல்லும் வாகங்களினால் காயங்களுக்கு உட்பட்ட மற்றும் அங்கவீனராக்கப்பட்ட பாதிப்புக்குள்ளானவர்களுக்கு இழப்பீடுகளை வழங்குதல்.
- முச்சக்கர வண்டிச் சாரதிகளின் குடும்ப பொருளாதார மட்டத்தினை மேம்படுத்துதற்கு அவர்களின் வாழ்க்கைத் துணைக்கு சுய தொழில்கள் தொடர்பில் பயிற்சி நிகழ்ச்சி திட்டங்களை நடாத்துதல்.

- தொழிலற்ற இளைஞர், யுவதிகளை வாழ்க்கைத் தொழிற் பயிற்சிக்கு அனுப்புவதனூடாக தொழிற் படையினை வலுவூட்டுவதனூடாக இனிவருங் காலங்களில் சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்கும் வயதினை 35 வரை உயர்த்தி ஏற்படக்கூடிய சிக்கலான பிரச்சினைகளைக் குறைத்தல்.

➢ **புகையிரத விபத்துக்களைக் குறைத்தல் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் தேசிய நிகழ்ச்சித் திட்டம்**

புகையிரதத்தினூடாக விபத்துக்கு உட்படுவதைக் குறைத்துக் கொள்ளுவதற்கு இலங்கைப் புகையிரதத் திணைக்களத்துடன் இணைந்து முன்னெடுக்கப்பட்ட இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், 2018.04.02 மற்றும் 2018.06.26 ஆகிய இரு தினங்களில், இராகம, மொரட்டுவ மற்றும் பயாகல புகையிரத நிலையங்களிலும், 2018.09.13 ஆந் திகதி முத்தெட்டுகல புகையிரத நிலையத்திலும், 2018.09.14 ஆந் திகதி குருனாகல் வெல்லவ புகையிரத நிலையத்திலும் மற்றும் 2018.09.29 ஆந் திகதி மாத்தறை புகையிரத நிலையத்திலும் விழிப்புணர்வூட்டும் பலகைகள் பொருத்தப்பட்டுள்ளன. அது தொடர்பில் அனுசரணை வழங்கிய நிறுவனங்களினால் செலவு ஈடு செய்யப்பட்டுள்ளது.

➢ **பொதுப் பயணிகளை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள்**

2018.02.20 ஆந் திகதி கஸ்பாவ சம்புத்தாலோக விஹாரையின் பிரதான வீதிகளை விரிவுபடுத்தும்போது வீதியின் இரு மருங்கிலும் பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களைக் குறைப்பதற்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டத்துடன், பாணந்துறை - கஸ்பாவ வீதியினை, அதிவேக வீதி வரை விரிவுபடுத்துதல் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டமொன்று மாகா நிறுவனத்தின் அனுசரணையுடன் நடாத்தப்பட்டது. அதே போல 2018.02.24 ஆந் திகதி மாளிகாகொடல்ல பொதுசன சமூக நிலையத்திலும் அவ்வாறான விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டமொன்று மாகாக நிறுவனத்தின் அனுசரணையுடன் நடாத்தப்பட்டது.

▪ **சுற்றுலாத் துறையினை மேம்படுத்துவதற்கு தகுந்த முச்சக்கர வண்டிச் சாரதிகளுக்குப் பயிற்சியளித்தல்.**

2018.03.10 ஆந் திகதி உல்லாசப் பயணிகளுக்கு மிகவும் உயர் தரத்துடன்கூடிய சேவையொன்றினை வழங்குவதற்கு பத்தாயிரம் சாரதிகளைப் பயிற்சியளிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிதி அமைச்சுடன் இணைந்து முச்சக்கர வண்டிச் சாரதிகளைப் பயிற்சியளித்தல் இற்றை வரை ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

▪ **தொழில்நுட்ப சாரதிகள் பயிற்சி அலகினை ஸ்தாபித்தல்.**

2018.12.12 ஆந் திகதி ஜப்பானின் NTK நிறுவனத்தின் நன்கொடையொன்றாக வீதிப் பாதுகாப்புத் தொடர்பிலான தேசிய சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டுள்ள ரூபா 150 இலட்சம் பெறுமதியான இலத்திரனியல் தொழில்நுட்ப சாரதிகள் பயிற்சி பொறித்தொகுதிகளைக் கொண்ட அலகினை, அந்நிறுவனத்தின் தவிசாளரினால் அங்குரார்ப்பணஞ் செய்யும் ஆரம்ப வைபவம் மருதானை போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு வளாகத்தில் நடாத்தப்பட்டது.

▪ **முச்சக்கர வண்டிகளுக்கு மீற்றரினைக் கட்டாயமாக்குதல்.**

2018.04.20 ஆந் திகதி முச்சக்கர வண்டிகளுக்கு மீற்றரினைக் கட்டாயமாக்குதல் தொடர்பில் ஊடகங்களை விழிப்புணர்வூட்டுதல், வீதிப் பாதுகாப்புத் தொடர்பிலான தேசிய சபையின் தவிசாளரினால் மருதானையிலுள்ள அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. அதேபோல சில மீற்றர் உரிமையாளர்கள் மற்றும் இறக்குமதி செய்யும் நிறுவனங்களை விழிப்புணர்வூட்டுவதற்கு 2018.04.26 ஆந் திகதி மீற்றரினைக் கட்டாயமாக்குதல் தொடர்பில் சில மீற்றர் உரிமையாளர்கள் மற்றும் இறக்குமதி செய்யும் நிறுவனங்களை விழிப்புணர்வூட்டுதல் இடம்பெற்றுள்ளது.

- **CCTV கமராவினைப் பொருத்துதல் தொடர்பில் சீனப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுதல்.**

2018.05.02 ஆந் திகதி வாகன விபத்துக்கள் அதிகமான பகுதிகளில் CCTV கமராவினைப் பொருத்துதல் தொடர்பில் சீனப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடலொன்று வீதிப் பாதுகாப்புத் தொடர்பிலான தேசிய சபையின் தவிசாளரினால் இடம்பெற்றுள்ளது.

- **வீதிப் பாதுகாப்பிற்கு புதிய அணுகுமுறை என்ற தலைப்பில் நடாத்தப்பட்ட நிபுணர்கள் மகாநாடு**

உலக சுகாதார அமைப்பின் அனுசரணையுடன், “சட்டத்தினை வலுவூட்டுவதனூடாக வீதிகள் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல்” என்ற தலைப்பில் 2018.05.08 ஆந் திகதி “வாகன நெரிசலினை குறைப்பதற்கு விஞ்ஞானம்சார் முகாமைத்துவமொன்று”, 2018.05.09 ஆந் திகதி இரண்டு குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், “வீதிப் பாதுகாப்புக்கான புதிய அணுகுமுறை” என்ற தலைப்பில் 2018.05.10 மற்றும் 11 ஆகிய இரு தினங்கள் பிரதான மகாநாடு தேசிய மற்றும் சர்வதேச நிபுணர்களின் பங்குபற்றுதலுடன் கொழும்பு கிங்ஸ்பரி விடுதியில் நடாத்தப்பட்டது. இது தொடர்பில் வீதிப் பாதுகாப்புத் தொடர்பிலான தேசிய சபையினால் ‘ரூபா. 61,460/- செலவு செய்யப்பட்டது.

- **வீதிப் பாதுகாப்பு அலகினை நிறுவும் நிகழ்ச்சித் திட்டம்**

2018.05.15 ஆந் திகதி சப்பிரகமுவ மாகாண வீதிப் பாதுகாப்பு அலகினை நிறுவுதல் சப்பிரகமுவ மாகாண ஆளுநர் கௌரவ. நிலுகா ஏக்கநாயக்க அவர்களின் தலைமையிலும் மற்றும் மாகாண பிரதமச் செயலாளர் உட்பட களத்துறைக்கான மாகாண நிறுவன உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் நடாத்தப்பட்டது.

2018.05.15 ஆந் திகதி சப்பிரகமுவ மாகாண வீதிப் பாதுகாப்பு அலகும் மற்றும் 2018.11.29 ஆந் திகதி கிழக்கு மாகாண வீதிப் பாதுகாப்பு அலகும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

- **மோதிவிட்டுத் தப்பிச் செல்லும் வாகனங்களின் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடுகளை வழங்குதல்.**

2018.10.01 ஆந் திகதி பத்தரமுல்ல போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்டதுடன், இதில் பாதிக்கப்பட்ட 12 பேருக்கு இழப்பீடுகளை வழங்குதல் இடம்பெற்றுள்ளது.